வரு. 75 இல. 52 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 டிசம்பர் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 31 Sunday, 2023





/ Thinakaran.lk / ThinakaranLK













# மஹவ – அநுராதபுரம் ரயில் பாதை ரூ. 3,000 கோடி செலவில் புனரமைப்பு

## வடக்கு ரயில் சேவைகள் ஜன. 07 முதல் 05 மாதங்கள் நிறுத்தம்



வடக்கு ரயில் பாதையின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணி 3,000 கோடி ரூபா செலவில் எதிர்வரும் ஜனவரி 07ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. மஹவ தொடக்கம் அநுராதபுரம் வரையான ரயில் பாதையே இரண்டாவது கட்டமாக புனரமைக்கப்படவுள்ளதாக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (29) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் புனரமைப்புப் பணி காரணமாக கொழும்பிலிருந்து அநுராதபுரம் செல்லும் ரயில் சேவைகளை நிறுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில், கொழும்பிலிருந்து மஹவ மற்றும் அதற்கப்பால் அநுராதபுரம் அல்லது யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளின் வசதிக்காக 05 மாதங்களுக்கு 20 அதிவேக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த இலங்கை போக்குவரத்துச்

06

# பொலிஸ் சுற்றிவளைப்பில் இதுவரை 17, 837 பேர் கைது!

## சுமார் 450 kg போதைப்பொருள் பறிமுதல்

Ministry of Defence

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை ஒடுக்கும் 'யுக்திய' பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரின் விசேட சுற்றிவளைப்புகளில் இதுவரை நாடளாவிய ரீதியில் 17 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது ஹெரோயின், ஐஸ் உட்பட 450 கிலோகிராமுக்கும் அதிகமான போதைப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் 'யுக்திய' பொலிஸ் விசேட வேலைத்திட்டம் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கமைய, முப்படையினரின் ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் கடந்த 17ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

06

### இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கு கௌரவம்

# 'மலையகம் 200' நினைவு அஞ்சல் முத்திரை புதுடில்லியில் வெளியீடு

## முதலாவது முத்திரை இ.தொ.கா. தலைவர் செந்திலிடம் கையளிப்பு



மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு அவர்களின் "உழைப்பை" அங்கீகரிக்கும் வகையிலும் அவர்களை கௌரவிக்கும் வகையிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலில் நினைவு அஞ்சல் முத்திரை நேற்று புதுடில்லியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

06




### 2023 டிசம்பர் 19ஆம் திகதி வரையிலான

# ஒய்வூதிய பணிக்கொடை நிலுவை கொடுப்பனவு அனைத்தும் விடுவிப்பு

## 2023 இல் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான நிதியும் விடுவிப்பு

2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதமாகும் போது அதற்கு முந்தைய 18 மாதங்களுக்கும் மேலாக சேர்ந்திருந்த மற்றும் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடையின் நிலுவைத் தொகை உட்பட 2023ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதிவரை அன்றைய திகதியில் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளுக்கு ஓய்வூதிய பணிக்கொடையை முறையாக செலுத்துவதற்கு தேவையான நிதியை திறைசேரி விடுவித்துள்ளது.

அத்துடன் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2023 வரவு செலவுத் திட்ட விதிகளுக்குட்பட்டு, 2023ஆம் ஆண்டு டிசம்பர் 15 வரையில் அனைத்து அரச நிறுவனங்களால் சான்றளிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளுக்கும் அவசியமான நிதியை விடுவிக்கவும் திறைசேரி தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படியே ஓய்வூதிய பணிக்கொடை நிலுவைத் தொகை உட்பட 2023ஆம் ஆண்டு டிசம்பர் 19வரை,

06

## நிதி அமைச்சு நேற்று அறிவித்தது




25 ஆண்டுகளில் ஒரு வருடத்துக்குள் இந்த ஆண்டுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்பட்ட ஒரே ஆண்டாக 2023 அமைவதாக தெரிவிப்பு

### 05 பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி

# கொழும்பு நகரில் இன்று விசேட போக்குவரத்து திட்டம் அமுல்



கொழும்பு நகரிலுள்ள 05 பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் இன்று விசேட போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை, கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி உள்ளிட்ட 05 பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி இந்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

06



06

இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்த

## 65 இலட்சம் ரூபா பெறுமதியான பெருந்தொகை பொருட்கள் மீட்பு






06

## பயணச்சீட்டு இன்றி ரயில்களில் பயணித்தால் ரூ. 10,000 அபராதம்

25 சதவீதமானோர் பயணச்சீட்டின்றி பயணம்




## எங்கள் கருத்து...

# உறுதியான நம்பிக்கையுடன் புத்தாண்டை வரவேற்போம்!

நாம் கடந்து வந்த 2023 ஆம் ஆண்டுக்கு இன்று நள்ளிரவுடன் விடைகொடுக்கப் போகின்றோம். இன்று நள்ளிரவு புதிய ஆண்டான 2024 இற்குள் நாம் பிரவேசிக்கப் போகின்றோம். கடந்து வந்த கரடுமுரடான பாதையின் அவல நினைவுகளை மறந்து ஒதுக்கிவிட்டு, புதிய நம்பிக்கைகளுடன் புத்தாண்டை வரவேற்க நாம் தயாராக உள்ளோம்.

உலக மக்களுக்கு கடந்த இரண்டொரு வருடங்கள் சிறப்பானதாக அமையவில்லையென்பது உண்மை. உலக நாடுகளையெல்லாம் கொவிட் பெருந்தொற்று ஓரிரு வருடங்களாக வாட்டிவதைத்தது. மில்லியன்கணக்கான மனித உயிர்களை உலகம் பறிகொடுத்தது. அதேசமயம் கொவிட் தொற்றின் மறைமுகமான பாதிப்புகள் உலகை விட்டு இன்னுமே நீங்கவில்லை.

பொருளாதார வீழ்ச்சி, தொழில்வாய்ப்பின்மை, ஆரோக்கியக் குறைபாடு, கல்விப்பாதிப்பு என்றெல்லாம் பல்வேறு பாதிப்புகள் உலகநாடுகளில் இன்னும் நீங்காதுள்ளன. இவ் வீழ்ச்சியிலிருந்து உலகம் மீள்வதென்பது இலகுவானதல்ல.

உலக மக்களுடன் ஒப்பிடுகையில், கடந்த காலப்பகுதியில் இலங்கை மக்கள் எதிர்கொண்ட பாதிப்புகள் சற்று அதிகமென்றே கூற வேண்டியுள்ளது. கொவிட் தொற்றிலிருந்து மீண்டெழுந்ததும், பொருளாதார நெருக்கடியானது இலங்கையைச் சூழ்ந்து கொண்டது.

06

# இந்திய யாத்திரை செல்ல திட்டமா?

## முகக்கவசம் அணிவது சிறந்தது

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்தியாவில் சபரிமலை யாத்திரை மற்றும் புத்தகாயா போன்ற யாத்திரைகளை மேற்கொள்ளும் இலங்கையர்கள் உரிய சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது அவசியமென சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் விசேட மருத்துவர்

06

### 2023ஆம் ஆண்டில் இதுவரை

# அரசின் உர நிறுவனங்கள் இரண்டும் ரூ. 480 மில். நிகர இலாபம் ஈட்டின

## 420 ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பனவு




அரசாங்க உர நிறுவனங்களான லங்கா உர நிறுவனம் (Ceylon Fertilizer Company Ltd) மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் (Colombo Commercial Fertilizers LTD) ஆகிய இரண்டு உர நிறுவனங்களும் 2023ஆம் ஆண்டில் 480 மில்லியன்

06

# இந்தியாவிலிருந்து 06 மில்லியன் முட்டைகளுடன் கப்பல் வருகை

## இன்று துறைமுகத்தை வந்தடையும்



இந்தியாவிலிருந்து மேலும் 06 மில்லியன் முட்டைகளுடன் கப்பல் இன்று நாட்டை வந்தடையவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த முட்டைகள் எதிர்வரும் வியாழக்கிழமை முதல் நாடளாவிய ரீதியாக உள்ள சதொச வர்த்தக நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர்

06

# விக்னேஸ்வரன் போன்று கொள்கை மாறுபவர் நாமல்ல



## இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி.

யாழ். விசேட நிருபர்

"விக்னேஸ்வரனை போன்று நாம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொள்கை மாறுபவர்களல்ல. தொடர்ச்சியாக மக்களுக்காக ஒரே பாதையில் பயணிப்போம்" என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற ஊடக

06

# கஜேந்திரகுமார் களமிறங்கினால் அவருக்கே நான் வாக்களிப்பேன்



## தமிழர் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துரைக்க தமிழ் பொதுவேட்பாளர் களமிறங்குவது அவசியம்

"தமிழ் மக்கள் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொது வேட்பாளராக களமிறங்கினால், நான் அவருக்கே

06

### ஜனவரி முதலாம் திகதி முதல்

# மதுபான வகைகளின் விலை அதிகரிப்பு

ஜனவரி முதலாம் திகதி முதல் மதுபானங்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளமை கலால் திணைக்களத்தின் தலையீட்டினால் அல்லவென கலால் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு ஏற்படும் செலவுகளை நிர்வகிப்பதற்கும்

06




ஆன்மிக, கலை, இலக்கிய சுற்றுலாவை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த டில்லி கலை இலக்கிய பேரவையைச் சேர்ந்த எஸ்.டி. கலையமுதன், சி.பி. கண்ணன் ஆகிய இருவரையும் யாழ்பாண இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் வரவேற்று பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து கௌரவித்தார். டில்லி கலை இலக்கிய பேரவை ராகேஷ் நடராஜுக்கு நினைவுப் பரிசும் வழங்கியது.





Zee Tamil தொலைக்காட்சியின் ரியாலிட்டி ஷோவான "சரிகமபா லிற்றில் சாம்ஸ் 2023" இல் பங்கேற்று பட்டத்தை வென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 வயதுடைய கில்மிஷா உதயசீலனை சென்னையிலுள்ள இலங்கைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரன் தனது இல்லத்துக்கு அழைத்து வாழ்த்துத் தெரிவித்ததோடு, அவரது எதிர்கால முயற்சிகளில் மேலும் பல வெற்றிகளைப் பெறவும் வாழ்த்தினார்.

# விடைபெற்ற ஆபத்பாந்தவன் கேப்டன் விஜயகாந்த்

## பொய்த்துப்போன எதிர்பார்ப்பு



**விஜயகாந்த் மறைந்துவிட்டார் என்கிற செய்தி வெளியான கணத்தில், 'சத்ரியன்' திரைப்பட த்தில் அவர் நடித்த ஒரு காட் சிதான் நினைவுக்கு வந்தது. தலையில் காயத்துடன் மருத் துவ மனைப் படுக்கையில் படுத் திருக்கும் அவரது மகன், "முடியும் உன்னால முடியும்" என்று சொன்னவுடன், விஜயகாந்த் உத்வேகமும் உணர்வுப் பெருக்குமாக சிலிர்த்தெழுந்து உடற் பயிற்சியில் ஈடுபடத் தொடங்கும் காட்சித் தொகுப்பு அது.**

சிறார் குற்றவாளியாக வாழ்க்கையைத் தொடங்கி, காவல் துறை அதிகாரியாக உயர்ந்து, இழப்புகளைச் சந்தித்து, இறுதியில் வெல்லும் ஏசிபி பன்னீர்செல்வமாக மிளிர்ந்திருப்பார் விஜ யகாந்த். திரைத் துறையில் கோலோச்சி, அரசிய லிலும் கால் பதித்த விஜயகாந்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அவரது உடல்நிலையே முடிவுரை எழுதிவிட்டது. 'பன்னீர்செல்வம்' மீண்டுவருவார் என்கிற எதிர்பார்ப்பு விஜயகாந்தின் மரணத்தின் மூலம் பொய்த்துவிட்டது.

**கண்ணியமான கதாபாத்திரங்கள்:** சமரசமற்ற நேர்மை யும் உள்ளார்ந்த ஆற்றலும் சக மனிதர் மீதான பரிவும் கண் ணியமும் கொண்ட கதாபாத்திரம் என்றால் விஜயகாந்த் எனக் கண்ணை மூடிக்கொண்டு சொல்லிவிடலாம். இவை அனைத் தையும் தனது தொடக்கக் காலப் படங்களில் ஒன்றான, 'தூரத்து இடிமுழக்க'த்திலேயே அவர் வெளிப்படுத்தியிருப்பார்.

அப்படத்தில் மீனவர் பொன்னனாக வரும் விஜயகாந்த், கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது காணாமல் போய்விடுவார். பொன்னன் இறந்துவிட்டதாகக் கருதி, அவரது காதலி செல்லி இன்னொருவரைத் திருமணம் செய்துகொள்வாள். நீண்ட காலத்துக்குப் பின் மீண்டு வரும் பொன்னன், தன் நேசத்துக் குரிய செல்லியின் குழந்தையை ஆபத்திலிருந்து காப்பாற்றி உயிரை விடுவார்.

திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட அப்படத்தில் விஜ யகாந்தின் நடிப்பு அத்தனை இயல்பாக இருக்கும். "நான் உயிரோட இருக்கிறது செல்லிக்குத் தெரியவே கூடாது மூப்பா" என்று ஊர்த் தலைவரிடம் கண்ணீருடன் கெஞ்சும் காட்சியைப் பார்த்தவர்கள், விஜயகாந்தை இரண்டாம் வரிசை நடிகர்களில் ஒருவராக வைக்கத் தயங்குவார்கள்.

தன் உயிரையும் பொருட்படுத்தாமல் பிறருக்கு உதவுகின்ற, அன்புக்குரியவர்களைக் காப்பாற்ற பெரும் பழியைத் தன்மீதே சுமத்திக்கொள்ளும் பண்பு கொண்டவராகப் பின்னாட்களில் பல படங்களில் நடித்த விஜயகாந்துக்கு, 'தூரத்து இடிமுழக்கம்' ஒரு தொடக்கப்புள்ளியாக அமைந்தது.

நியாயத்துக்காகப் போராடும் 'கோபக்கார இளைஞன்' கதா பாத்திரங்களுக்கு ரஜினிகாந்துக்குப் பிறகு விஜயகாந்த் எனும் பெயரை 'சட்டம் ஒரு இருட்டறை' பெற்றுத் தந்தது. அதன் இந்தி மறுஆக்கமான 'அந்தா கானூன்' திரைப்படத்தில் விஜய காந்த் நடித்த கதாபாத்திரத்தில் ரஜினி நடித்தது சுவாரஸ்யமான பொருத்தம். தொழிற்சங்கப் பின்னணியில் உருவான 'சிவப்பு மல்லி' படத்தில் தீவிர கம்யூனிஸ்ட்டாக நடித்தார். அறச்சீற்றமும் ஆவேசமும் கொண்ட அந்தக் கதாபாத்திரத்தைத் தனது இயல் பான நடிப்பால் துலங்கச் செய்தார் விஜயகாந்த்.

**காதலர்களின் காவலர்:** சாதி, மதப் பிரிவினைகளுக்கு எதி ரானவராக, காதல் திருமணங்களுக்கு ஆதரவானவராக விஜய காந்த் நடித்த பல கதாபாத்திரங்கள் ஒடுக்கப்பட்டவர்களிடமும் பெண்களிடமும் அவர் மீதான பரிவை, மதிப்பை உருவாக்கின. 'வைதேகி காத்திருந்தாள்' அதற்கான தொடக்கம் எனலாம்.

அப்படத்தில், இழப்பதற்கு உயிரைத் தவிர வேறேதும் இல்லாத வெள்ளைச்சாமியாகக் காதலர்களைச் சேர்த்துவைக்கும் கதா பாத்திரத்தில் நடித்த விஜயகாந்த், பின்னாள்களில் ஆதரவாளர்க ளும் செல்வாக்கும் கொண்ட ஆளுமையாக காதலர்களுக்கான காவலராக, 'பூந்தோட்டக் காவல்காரன்', 'செந் தூரப் பூவே', 'செந்தூரப் பாண்டி', 'பெரி யண்ணா' போன்ற படங்களில் கம்பீரம் காட்டினார்.

குறிப்பாக, திருமணத்துக்கு முன்பே, நரைத்த முடியுடன் 'பூந் தோட்டக் காவல்காரன்' ஆண்டனி யாக, 'செந்தூரப் பூவே' கேப்டன் சௌந்தர பாண்டியனாக விஜயகாந்த் நடித்த கதாபாத்திரங்கள் அவரது கம்பீர பிம் பத்துக்கு வலுச் சேர்த்தன. திரைத்துறையில் வளர்ந் துவந்த நடிகர்களின் படங்களில் கௌரவ வேடத்தில் விஜ யகாந்த் நடித்த கதாபாத்திரங்களின் பட்டியல் மிக நீளமானது.

தமிழ்த் திரையுலகின் தவிர்க்க முடியாத நடிகராக விஜயகாந்த் உயரவும் இந்தக் கதாபாத்திரங்கள் துணை நின்றன. அதிகார வர்க்கத்துக்கு அடிபணியாத காவல் துறை அதிகாரியாக, 'ஊமை விழிகள்' படத்தில் விஜயகாந்த் நடித்த டிஎஸ்பி தீனதயா ளன் கதாபாத்திரம் அவரது ஆபத்பாந்தவன் பிம்பக் கட்டமைப் புக்குப் பெரிதும் உதவியது.

திரைப்படக் கல்லூரி மாணவர்களால் உருவாக்கப்பட்ட அப்ப டத்தில் முன்னணி நடிகரான விஜயகாந்தின் பங்களிப்பு, புதிய திறமைகளுக்கும் ஊக்கமளித்தது. பின்னாள்களில், 'புலன் விசாரணை', 'மாநகரக் காவல்' 'சேதுபதி ஐபிஎஸ்', 'ஹானஸ்ட் ராஜ்' போன்ற படங்களில் துணிச்சலான காவல் துறை அதிகா ரியாக நடித்தார். பாகிஸ்தான் பயங்கரவாதிகளைக் களையெ டுக்கும் தேசப்பற்று மிக்க இராணுவ அதிகாரியாகவும் நடித்துப் புகழ்பெற்றார்.

**அரசியல் அஸ்திவாரம்:** பண பலமும் செல்வாக்கும் இருந்தாலும் மூத்தவர்களின் சொல்லுக்கும் பொது நியாயத்துக் கும் கட்டுப்பட்டு தனது ஆற்றலை வெளிப்படுத்தாமல் அமைதி காக்கும் கதாபாத்திரங்கள், பின்னாட்களில் விஜயகாந்தின் அர சியல் பிம்பத்துக்கு அஸ்திவாரமாக அமைந்தன. 'பாட்டுக்கு ஒரு தலைவன்', 'பொன்மனச் செல்வன்' போன்ற படங்களில் செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்த பாந்தமான இளைஞராக நடித்த விஜயகாந்த், 'சின்ன கவுண்டர்' படத்தில் மிகப் பெரிய உயரத்தை அடைந்தார்.

ஊழல்வாதிகளைக் களையெடுக்கும் பேராசிரியராக 'ரமணா' படத்தில் விஜயகாந்த் நடித்த கதாபாத்திரம் மிகவும் சக்திவாய்ந் தது. முழுநேர அரசியல்வாதியாக அவர் உருவெடுக்க அப்படம் அஸ்திவாரமாக அமைந்தது. நாடகத்தன்மை நிறைந்த காட்சி என்றாலும் இறுதியில் பொதுவெளியில் அவர் தூக்கிலிடப்படுவ தற்கு முன்னர் உரையாற்றும் காட்சி ஓர் உதாரணம்.

அதிரடி நாயகன் என்கிற பிம்பம் இருந்தாலும் இசையை மையமாகக் கொண்ட படங்களிலும் விஜயகாந்த் பரிமளித் தார். 'அம்மன் கோவில் கிழக்காலே', 'வசந்த ராகம்', 'பாட்டுக்கு ஒரு தலைவன்' போன்றவற்றை உதாரண மாகச் சொல்லலாம்.

தமிழைத் தவிர பிற மொழிப் படங்களில் நடிப்பதில் ஆர்வம் காட்டாத விஜயகாந்த், 'தி மே டே' என்கிற ஆங்கிலப் படத்தில் நடிக்கத் திட்டமிட்டார். ஆனால், அது கைவிடப்பட்டது. விஜய் ஆண்டனி நடிக்கும் 'மழை பிடிக்காத மனிதன்' படத்தில் விஜயகாந்த் நடிப்பதாகச் செய்திகள் வெளியானபோது, வேறொரு பரிமாணத்தில் விஜயகாந்தைப் பார்க்க வாய்ப்பு கிடைக்குமா எனும் எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், 'விருதகிரி', 'சகாப்தம்' ஆகிய படங்களுடன் அவரது திரைவாழ்க்கை முற்றுப்பெற்று விட்டது.





# வரலாற்றில் எந்த ஒரு தலைவருக்கும் கிடைக்காத ஒரு மிகப்பெரிய பெயர்

## 02 நாட்களில் 15 இலட்சத்திற்கும் மேலான மக்கள் இறுதி அஞ்சலி

## நல்லடக்கத்தின் பின் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேட்டி

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

தமிழக அரசியல் வரலாற்றில் எந்த ஒரு தலைவருக்கும் கிடைக்காத ஒரு மிகப்பெரிய பெயர் நமது கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கு கிடைத்துள் ளது. நமக்கு கிடைத்த புள்ளிவிவரங்களின் படி 2 நாட்களில் 15 லட்சத்திற்கும் மேலான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜய காந்த் தெரிவித்தார்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி காலமானார். சென்னை தீவுத்திட லில் வைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் உடலுக்கு பல்வேறு தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்ச்சிக்கு பிறகு வெள்ளிக்கிழமை பிற்பகல் விஜயகாந்த் உடல் ஊர்வலமாக கோயம் பேட்டில் உள்ள விஜயகாந்தின் கட்சி அலுவல கத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு 72 குண்டுகள் முழங்க முதல்அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் முன்னிலையில் அரசு மரியாதையுடன் அவரது உடல் அடக் கம் செய்யப்பட்டது.

அதன்பின்னர் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்க ளுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது : 'தேமுதிக தலைவர் விஜயகாந்தின் இறுதிச் சடங் குக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்த தமிழக அரசுக்கும், மாநகராட் சிக்கும், காவல்துறைக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் எனது நன்றி. தீவுத்தி டலில் இருந்து கோயம்பேடு தலைமை அலு வலகம் வரை 14 கி.மீ தூரம் நடந்த இறுதி ஊர்வலத்தில், வழிநெடுக விஜயகாந் துக்கு அஞ்சலி செலுத்திய அத்தனை தொண்டர்களுக்கும், நிர்வாகிகளுக் கும், பொதுமக்களுக்கும் என் நன்றி.

ஒரே நாளில் இடங்களை ஏற்பாடு செய்த மாநகராட்சி ஆணையர் ராதா கிருஷ்ணன் அவர்களுக்கும், அமைச் சர் வேலு அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கேப்ட னின் இறுதி ஊர்வலம் நடைபெற உறுதுணையாக இருந்த போலீசா ருக்கு ராயல் சல்யூட். அதேபோல வழி நெடுக கேப்டனுக்கு வரவேற்பு கொடுத்த அனைத்து தொண்டர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன்.

தமிழக அரசியல் வரலாற்றில் எந்த ஒரு தலைவருக்கும் கிடைக்காத ஒரு மிகப்பெரிய பெயர் நமது கேப்டன் அவர் களுக்கு கிடைத்துள்ளது. நமக்கு கிடைத்த புள்ளிவிவரங்க ளின் படி 2 நாட்களில் 15 லட்சத்திற்கும் மேலான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. அதற்கு நமது கேப்டன் செய்த தர்மமும் அவரின் நல்ல எண்ணமும், மக்களுக்கு உதவும் குணமும் தான் காரணம். அதேபோல் கேப்டன் மறைவிற்கு இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து நேரில் மற்றும் போனில் தொடர்பு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.



தலைமை அலுவலகம் சிறியதாக இருந்ததால் அனை வரையும் உள்ளே அனுமதிக்க முடியவில்லை. இறுதி அஞ்சலி செலுத்தவந்த அனைத்து தலைவர்களுக்கும் தேமுதிக சார்பாக நன்றி. ராகுல் காந்தி அவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வருத்தம் தெரி வித்தார். கேப்டன் கையில் அணிந்திருந்த கட்சி மோதி ரத்தை அவருடனே வைத்து நல்லடக்கம் செய்திருக்கி றோம். அரசு மரியாதையுடன் விஜயகாந்தின் உடல், சந்தனப் பேழையில் வைத்து நல்லடக்கம் செய்யப்பட்டுள் ளது. விஜயகாந்தின் கைவிரலில் இருக்கும் கட்சி மோதிரம் அகற்றப்படவில்லை. இன்று நாம், நம் தலைவரை இழந் திருக்கிறோம். இந்நாளில் நம் தலைவரின் கனவை அனைவரும் ஒன்று சேர்ந்து நிச்சயமாக வெற்றிபெறச் செய்து, அந்த வெற்றிக்கனியை அவரது பாதத்தில் சமர்ப் பிக்கும் நாள்தான் தேமுதிகவுக்கு உண்மையான வெற்றி நாள் என்பதை சூளுரைப் போம்.

எப்படி மெரினாவில் தலைவர்களுக்கு சமாதி அமைத்தி ருக்கிறார்களோ அதேபோல தலைவருக்கும் இங்கு சமாதி அமைக்கப்படும். அவர் நம்மில் ஒருவராக நம்முடன் தான் இருக்கிறார். அவர் சொர்க்கத்தில் இருந்து நம்மை வாழ்த்திக் கொண்டுதான் இருப்பார்'.

ஒட்டுமொத்த தொண்டர்களும் வந்து வழிபடக்கூடிய கோயிலாக அது இருக்கும் என்று தெரிவித்தார்.








# மியன்மாரில் சைபர் அடிமைகளாக இலங்கை இளைஞர்கள்!

## விடுதலைக்காக ஏங்கி நிற்போரை விடுவிப்பதில் காணப்படும் சிக்கல்கள்

**அருள் சத்தியநாதன்**

நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்துக்காக ஏங்கும் அரசாங்கம், அதை நேரிடையாகப் பெறக்கூடிய இரண்டு வழிகளாக சுற்றுலாத்துறையையும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளையும் கருதுகிறது. உள்நாட்டில் பொருத்தமான, திறமைக்கேற்ற தொழில் வாய்ப்புகள் கிடைக்காமை, கிடைத்தாலும் வாய்க்கும் வயிறுக்குமே அல்லாட வேண்டிய பொருத்தமற்ற சம்பளம், குடும்பத்தை ஈடேற்ற வேண்டிய அவசியம் போன்ற பல்வேறு காரணங்களினால் இந் நாட்டு இளைஞர்களும் யுவதிகளும் வெளிநாடுகளில் கிடைக்கும் தொழில்களைப் பெறுவதற்காக போட்டி போடுகின்றனர்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் கடவுச்சீட்டு காரியாலயத்துக்கு முன்பாக ஆயிரக்கணக்கானோர் முண்டியத்ததை நாம் பார்த்தோம். எப்படியாவது இந் நாட்டில் இருந்து வெளியேறினால் போதும் என்பது போலவே கருதி ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டுப் பறந்தனர். வெளிநாட்டில் இருந்து உறவினர்கள் பணம் அனுப்பினால் மட்டுமே குடும்பத்தை சீராக கொண்டு செல்லலாம் என்று ஏராளமான குடும்பங்கள் கருதுகின்றன. இது உண்மையும் கூட.

எந்த ஒரு துறையோ அல்லது வர்த்தகமோ பரபரப்பாக நடைபெறும்போது அங்கே ஊழல் மோசடிகளும், தில்லுமுல்லுகாரர்களும் தோன்றி பிழைக்க முயல்வது இயற்கை. இருப்பினும் வெளிநாடுகளில் தொழில் பெறுவதற்காக அல்லது நாட்டை விட்டே வெளியேறுவதற்காக பல லட்சங்களை செலவு செய்து இன்றைக்கும் அவுஸ்திரேலியா போன்ற தூர தேசங்களுக்கு படகுகளில் பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஐரோப்பாவுக்கு கொண்டு விடுகிறோம் என்று சொல்லி பல லட்சங்களை வாங்கிக் கொண்டு உக்ரேனிலோ அல்லது மொஸ்கோவிலோ அவர்களை விட்டு விட்டு மாயமாகிவிடும் ஏஜன்சிகாரர்களை நாம் அறிவோம். இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக பயணிக்க விரும்பினால் அதற்கான சட்ட ரீதியான வழிமுறைகள், இந்நாட்டில் நீண்டகாலமாகவே நடைமுறையில் உள்ளன. இதன் பொருட்டு வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகம் உள்ளது. கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அரசாங்கமே தகுதியானவர்களை அனுப்பி வைக்கிறது.

ஆனாலும் போலி முகவர் நிலையங்களின் ஊடாகவும் கணிசமானோர் வெளிநாடுகளுக்கு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு தெரியாமல், பயணித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். சுற்றுலா விசாவில் நாடொன்றுக்கு சென்று தொழில் பெற்றுக் கொள்வது குதிரைக் கொம்பு என்பது தெரிந்து தெரிந்தே செல்கிறார்கள். இவர்களை விமானத்தில் ஏற்றியதோடு இப்போலி முகவர்கள் கைகளை கழுவிக் கொள்வார்கள். செல்பவர்கள் தான் தொழில் கிடைக்காமல், உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகளின்றி தெருவில் அல்லாட வேண்டியிருக்கும். இவ்வாறு, இந்த வெளிநாடுகள் பச்சைப் பசேல் என்றிருக்கும் எனக் கருதி அந்நாடுகளில் கடும் கஷ்டங்களை அனுபவித்து வெறுங் கையுடன் நாடு திரும்புவோர் பற்றி நாம் நிறையவே கதைகளைக் கேட்டிருக்கிறோம்.

எங்கே கூட்டமும் பரபரப்பும் அதிகமோ அங்கே கில்லாடிகளும் சுற்றி வருவார்கள் என்பது யதார்த்தம். அவ்வாறானவர்களிடம் சிக்கி திக்குத் தெரியாமல் பரிதவிக்கும் இலங்கையர் தொடர்பாகக் கடந்த வாரம் வெளியான தகவல்கள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. ஏனெனில் பல்வேறு வகையான மோசடிகளைக் கேள்விப்பட்டிருக்கும் நமக்கு, இணைய வெளி பயங்கரவாதிகளிடம் சிக்கிக் கொண்டு சித்திரவதை அனுபவிக்கும் இளைஞர் யுவதிகள் தொடர்பான தகவல்கள் புதியவை. இப்படியெல்லாம் நடக்குமா என்ற பிரம்மிப்பை ஏற்படுத்துகின்றன.

- கொடுமைகள் நடந்திருப்பதை இக் காயங்கள் வெளிப்படுத்துகின்றன.
- தேடப்படும் சைபர் கிரிமினல்கள்
- மியாவடியை குறித்துக் காட்டும் வரைபடம்

கம்பஹாவைச் சேர்ந்த, சீனர்களை முதன்மையாகக் கொண்ட ஒரு குழுவே, படித்த, உயர்கல்வி கற்ற, கணினி அறிவியலில் அறிவும் அனுபவமும் பெற்ற இளைஞர்களை தாய்லாந்தில் நல்ல சம்பளத்தில் தரவு பதிவேற்றுதல் (Data Entry) துறையில் வேலை வாய்ப்புகள் காணப்படுவதாக சொல்லி இளைஞர், யுவதிகளைத் திரட்டியிருக்கிறது. நல்ல சம்பளத்துடன் தாய்லாந்தில் வேலை என்றதும் கிஞ்சித்தும் சந்தேகமின்றி இவர்கள் புறப்பட்டுச் சென்றுள்ளனர். தாய்லாந்து சென்ற பின்னரேயே, இளைஞர்களின் விருப்பத்துக்கு இணங்கவோ அல்லது மாறாகவோ அங்கிருந்து மியன்மாருக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். சில இலங்கை இளைஞர்கள் சுய விருப்பத்தின் பேரில் மியன்மாருக்கு செல்வதாகவும், தரவேற்றும் பணியில் விருப்பத்துடன் ஈடுபடுவதாகவும் மியன்மாருக்கான எமது தூதுவர் ஜனக பிரியந்த பண்டார தெரிவித்துள்ளார்.

பர்மா என முன்னர் அழைக்கப்பட்ட நாடே மியன்மார் என தற்போது அறியப்படுகிறது. இந்தியா, சீனா, தாய்லாந்து, லாவோஸ் ஆகிய நாடுகளுடன் அதன் எல்லைகள் அமைந்துள்ளன. முன்னர் ரங்கோன் என அழைக்கப்பட்ட அதன் தலைநகரின் இன்றைய பெயர் யங்கொன் என்பதாகும். பர்மா சுதந்திரம் பெற்றதும் அங்கு வாழ்ந்து வந்த ஏராளமான இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள், அந்நாட்டில் இருந்து துரத்தி அடிக்கப்பட்டார்கள்.

அவர்கள் அனைத்தையும் இழந்தவர்களாக, பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அடர்ந்த கானகத்தைக் கடந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்தனர். அவர்கள் வாழ்வதற்காக சென்னையில் கடைகள் அமைத்து கொடுக்கப்பட்ட இடமே இன்றைக்கும் பர்மா பஜார் என அழைக்கப்படுகிறது. இம்மக்களை மையமாக வைத்தே அறிஞர் அண்ணாதுரை 'ரங்கோன் ராதா' என்ற பெயரில் ஒரு நாவலை எழுதினார். இவ்வாறு அகதியாக வந்த ஒரு குடும்பத்தை பின்னணியாகக் கொண்டதே பராசக்தி திரைப்படம்.

மியன்மாரில் ஜனநாயக ஆட்சி, பாகிஸ்தானைப் போலவே நிலவுவது அபூர்வம். அங்கு பலம் பொருந்தியதாக இராணுவமே திகழ்கிறது. அங்கு இப்போது ஒரு புரட்சி இராணுவக் குழு ஆட்சி செய்து வருகிறது. ஆட்சியை இராணுவம் கையில் வைத்திருந்தாலும் அந்நாட்டின் சில பகுதிகள் ஆயுதம் தாங்கிய தனிநாடு கோரும் புரட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்நாட்டில் 12க்கும் மேற்பட்ட புரட்சிக் குழுக்கள் உள்ளன. தவிர, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 135 பூர்வீக இனக் குழுக்கள் அங்கு வசித்து வருகின்றன. பில்.ஏ, பி.என்.ஏ., பி.என்.எல்.ஏ., ஆர்.எஸ்.ஓ., எனச் சுருக்கமாக அழைக்கப்படும் தீவிரவாத அமைப்புகள் தமது சமூக மக்கள் வாழும் பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. மியன்மார் அரசின் சட்டம், ஒழுங்கு செல்வாக்கெல்லாம் இப் பகுதிகளில் செல்லுபடியாவதில்லை.

மியாவடி என்ற இடம் தாய்லாந்து – மியன்மார் எல்லையோரமாக அமைந்திருக்கும் வனப்பான காடு சார்ந்த ஒரு நகரம். எல்லையைத் தாண்டி ஐந்து கி.மீ பயணித்தால் தாய்லாந்தின் எல்லை நகரமான மாசொட்டை அடையலாம். இப்பிரதேசம் கரன் தேசிய விடுதலை இராணுவம் என்ற தீவிரவாத அமைப்பின் ஆட்சிக்குட்பட்டது. சீன, தாய்லாந்து மற்றும் லாவோஸ் எல்லையோரமாக இந்த தீவிரவாத குழுக்கள் மியன்மாரில் இருந்து செயல்பட்டு வருகின்றன. காடு, மலை, சதுப்புக் காடுகள், இனம் சார்ந்த ரீதியாக மக்களிடம் கிடைக்கும் ஆதரவு என்பனவற்றை மையப்படுத்தி இவை அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றன.

நமது இலங்கை இளைஞர்கள் நூறுபேர் வரை மியாவடி பகுதியில் பணிபுரிவதாக நம்பப்படுகிறது. எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம். தாய்லாந்தில் இருந்து மியன்மாரின் மியாவடிக்கு அனுப்பப்படுபவர்கள் கரன் தேசிய விடுதலை இயக்கத்தின் பொருளாதார பிரிவில் சேர்க்கப்பட்டு விடுவதாக அறிய முடிகிறது. இணையவெளி குற்றவாளிகள் என அழைக்கப்படுவோர் உலகம் முழுவதும் உள்ளனர். இணையத்தில் உலாவரும் செல்வந்த ஆனால் அப்பாவிகளை லாவகமாக வளைத்துப் பிடித்து அவர்களின் பணத்தை சூறையாடுவது, அவர்களது இரகசியங்களைத் திருடுவது, மிரட்டி பணம் பறிப்பது இவர்கள் வேலை.

இத்தகைய மியாபடி சைபர் கிரிமினல்களிடம் இந்த இளைஞர்கள், யுவதிகள் ஒப்படைக்கப்படுகின்றனர். இந்த 'டேட்டா ஒபரேட்டர்'கள் செய்ய வேண்டிய வேலை எல்லாம், ஐரோப்பிய, ஸ்கெண்டிநேவிய, இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில் வசிக்கும் பசையுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுடன் மிக அன்பான ஒரு தொடர்பை வளர்த்துக் கொள்வதுதான். கொஞ்சலாக பேச வேண்டும். காதலிப்பதாக சொல்ல வேண்டும். அவர்களை உணர்ச்சிப் பிரவாகத்துக்குள் தள்ளி தமது வங்கிக் கணக்குகளில் பணம் வைப்புச் செய்ய அவர்களைத் தூண்ட வேண்டும்.

நேர்மை உள்ளம் கொண்டோர் தொழில் என்ற அடிப்படையில் ஒருவரை மயக்கி, பொய் பித்தலாட்டம் செய்து அவரிடமிருந்து பணம் பறிக்க முற்பட மாட்டார்கள் என்பதால் தான், படித்துவிட்டு போதிய வருமானத்துக்காக முயற்சிக்கும் இலங்கை போன்ற நாடுகளின் இளைஞர்களை இத்தீவிரவாதக் குழு தன் பக்கம் வஞ்சகமாக ஈர்த்து வருகிறது. உண்மையில் இது ஆள்கடத்தல்தான். இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோரும் இத் தொழிலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

17 ஆம் பக்கம் பார்க்க...


# குளியாபிட்டிய நகர சபை

## புதிய பொதுச் சந்தை மற்றும் பல்பொருள் அங்காடி கட்டிடத்தில் வணிக வளாகத்தை பிணை உறுதிப் பண முறையில் (KEY MONEY METHOD) நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்



குளியாபிட்டிய நகர சபைக்கு சொந்தமான நான்கு மாடிகள் புதிய பொது சந்தை வணிக வளாகம்

- ஒரு தனிப்பட்ட முதலீட்டாளருக்கு அல்லது
- பல முதலீட்டாளர்களுக்கு நிலைகளில் அல்லது
- பின்வரும் வணிக இடங்கள் தனித்தனியாக அல்லது முதலீட்டாளர்களுக்கு

பிணை உறுதிப் பண முறையின் கீழ் (KEY MONEY METHOD) 30 வருட காலத்திற்கு வரி செலுத்துவதில் ஆர்வம் காட்டும் விற்பனையாளர்களிடமிருந்து 2024.01.08 ஆம் திகதி முதல் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | மாடி | வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 01. | கீழ்மாடி | 51 கடை அறைகள் |
| 02. | முதலாம் மாடி | 17 கடை அறைகள் |
| 03. | இரண்டாம் மாடி | விசாலமான 02 பொது வணிக வளாகம் (ஜவுளி வணிகங்கள் / நசீன வீடுகளுக்காக) |
| 04. | மூன்றாம் மாடி | 3D திரையரங்கம் 01, 9D திரையரங்கம் 01, அழகு நிலையங்கள், Large commercial Area 02, Child Play Area 01, துரித உணவு விற்பனை நிலையம் 08, (Food court) |
| 05. | நான்காம் மாடி | துரித உணவு விற்பனை நிலையம் 03 உடன், (Food court) Game Zone 01, Rentable space 01, உடற்பயிற்சி நிலையம் 01, Commercial Area 01, Digital Screen வசதி |
| 06. | மேல் மாடி | திறந்தவெளியுடன் கூடிய 02 உணவகங்கள், (Bar Area, Restaurant, Food Court, Kitchen) |

புதிய பொதுச் சந்தை வணிக வளாகத்தில் குத்தகைக்கு விடப்படும் வணிக வளாகம் தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய கொள்முதல் ஆவணத்தை குளியாப்பிட்டிய நகரசபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ரூ.1,000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| I. மனு விண்ணப்பம் வழங்குதல் | – | 2024.01.08 முதல் 2024.01.30 வரை வார நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை |
| II. கட்டணம் வசூலிக்கப்படுகிறது | – | கொள்முதல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீள்ச்செலுத்தப்படாத ரூ.1,000.00 விண்ணப்பக் கட்டணம் மற்றும் மீள்ச்செலுத்தப்படும் மனுப் பிணை உத்தரவாதமொன்று. |
| III. மனு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளல் | – | 2024.01.09 முதல் 2024.01.31 வரை வார நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 02.00 மணி வரை |
| IV. மனு திறக்கப்படுவது | – | 2024.01.31 பி.ப. 02.30 மணிக்கு குளியாபிட்டிய நகரசபை அலுவலகத்தில் (விண்ணப்பதாரர் அல்லது அவரால் எழுத்துப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நபர் அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்கலாம்) |
| V. செலுத்தவேண்டிய மனுக் கட்டணம் | – | குறைந்தபட்ச மனுத் தொகை அல்லது அதற்கு மேல் அதிகமான தொகையாக இருத்தல் வேண்டும், குறைந்தபட்ச மனுத் தொகைக்கு குறைவான மனுக்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். |
| VI. மனு தொடர்பான விபரம் | – | அலுவலக நேரத்தில் வருவாய் மேம்பாட்டு அலுவலரிடமிருந்து தேவையான விபரங்களை பெற்றுகொள்ளலாம். (தொ.பே.இல. 037-494 7798 / 037-494 7853) |

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள :
அலுவலகம் - 037 228 1275 / 037 494 7798
பெக்ஸ் - 037 228 1114 | ஈ மெயில் - kuliyauc@gmail.com | இணையம் - www.kuliyapitiya.uc.gov.lk

* விலைமனுக்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் குளியாபிட்டிய நகர சபைக்கு உள்ளது.

செயலாளர், குளியாபிட்டிய, நகர சபை.

SELACINE MEDIA SOLUTIONS

# புனரமைக்கப்படும் மாகோ ஓமந்தை ரயில்பாதை

## ஜனவரி 7ஆம் திகதி பணிகள் ஆரம்பம்



சுமார் 3000 கோடி ரூபாய் செலவில் நவீனமயப்படுத்தப்படும் வடக்கு ரயில்பாதையின் மாகோ தொடக்கம் அநுராதபுரம் வரையான பகுதியின் புனரமைப்புப் பணிகள் 2024 ஜனவரி 07ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அறிவித்தார். நேற்று முன்தினம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்காரணமாக கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை பயணிக்கும் புகையிரத சேவையினை நிறுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், கொழும்பில் இருந்து மாகோ வரைக்கும் புகையிரதம் செல்லும் என்றும் அதற்கப்பால் அநுராதபுரம் அல்லது யாழ்ப்பாணம் வரைக்கும் செல்லும் பயணிகளின் வசதிக்காக ஐந்து மாதங்களுக்கு 20 இ.போ.ச பஸ்களை சேவையில் ஈடுபடுத்த இலங்கை போக்குவரத்து சபை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். சுமார் 5 மாதங்களுக்கு புகையிரத பயணிகள் சிரமத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதனடிப்படையில் கொழும்பிலிருந்து அநுராதபுரம் ஊடாக யாழ்ப்பாணம் வரையிலும், மாகோவிலிருந்து அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் வரையிலும் விசேட பஸ் சேவையினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் கூறியதாவது,

“எமது நாட்டின் வரலாற்றில் நீண்ட கால சேவையினை வழங்கிய வடக்கு ரயில் பாதையின் மாகோ தொடக்கம் ஓமந்தை வரையான பகுதி பல நூறு ஆண்டுகளாக புனரமைப்புச் செய்யப்படவில்லை. எனவே, 2014ஆம் ஆண்டு இலங்கையின் ரயில் பாதைக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தும் இந்திய கடன் திட்டத்தின் கீழ் கடனுதவி அங்கீகரிக்கப்பட்ட போதிலும், வடக்கு ரயில் பாதையை புனரமைப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த கடன் தொகை சுமார் 3,000 கோடி ரூபாவாகும்.

2014ஆம் ஆண்டில் இந்தக் கடன் திட்டத்திற்கான ஒப்பந்தத்தை ஆரம்பித்தாலும், 2019ஆம் ஆண்டில் மாகோவிலிருந்து ஓமந்தை வரையான 128 கிலோ மீற்றர் தொலைவுக்கு கேள்வி மனுக்கள் கோரப்பட்டிருந்தன. இதில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போட்டித் தன்மையுடனான கேள்விப் பத்திரங்களுக்கு அமைய இந்தியாவின் 100 வீத அரச நிறுவனமான எல்கோன் என்ற நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரையிலும் இந்தப் பணிகள் செயற்படவில்லை.

நான் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த வேலைத் திட்டத்தை எவ்வாறாவது துரிதமாக முன்னெடுப்பதற்கு இந்தியாவுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டேன். இதற்கு தாக்கத்தைச் செலுத்திய காரணிகளுக்கு அமைய அந்தக் காலப்பகுதியினுள் மக்கள் பிரதிநிதிகள் இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு விருப்பப்படவில்லை.

அந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தோம். இதற்கு அனுமதி கிடைத்திருந்த போதிலும், பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் இந்த ரயில் பாதை அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரைக்கும் ஆறு மாத காலத்திற்கு மூடப்பட்டது.

அநுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க எட்டு பீடங்களிலிருந்து இந்தப் பணியை ஆரம்பிக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு மாகோவிலிருந்து ஓமந்தை வரையிலான 128 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட இந்த பாதை மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அநுராதபுரத்திலிருந்து மாகோ வரையான பகுதியைப் புனரமைப்புச் செய்வதற்கான பணிகளை எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன்காரணமாக கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரையான புகையிரதப் பயணம் நிறுத்தப்படவுள்ளது.

அந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கும், மக்களுக்கு நலன் வேண்டியும் புகையிரத திணைக்களத்தினால் இன்று டிசம்பர் 31ம் திகதி இரவு முதல் ஜனவரி முதலாம் திகதி வரை ஸ்ரீ மஹா போதியில் தர்ம போதனை நடைபெறவுள்ளது. ஜனவரி 01ஆம் திகதி முதல் 06ம் திகதி வரை விசேட புகையிரத சேவையை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம். நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ள இத்திட்டத்தை ஆரம்பித்து பொசன் பௌர்ணமி தினத்திற்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை ரயில் பாதை முழுமையாகச் சீர்செய்யப்பட்டு மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடிய சிறந்த ரயில் பாதையாக மாற்றப்படும். இதன் மூலம் தற்போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு எடுக்கும் சுமார் 7 மணி வரையான பயண நேரத்தை 5 மணித்தியாலங்களாக மாற்ற முடியும். இதனடிப்படையில் இரண்டு மணி நேரம் மீதப்படுத்தப்படும். இது மிகப்பெரிய புகையிரத அபிவிருத்தி வேலைத் திட்டமாகும்.

இது நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கும் மக்களின் நலனுக்கும் காரணமாக அமையும். வரவு செலவு திட்ட முன்மொழிவாக இரண்டு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து மிகச் சிறப்பான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம், நஷ்டத்தைக் குறைத்துக் கொண்டு ரயில் வேக்குச் சொந்தமான காணிகளில் செயற்படும் வணிகத் திட்டங்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் அக்காணிகள் வழங்கப்படும்.

அந்த வகையில் அடுத்த ஆண்டு நாமும் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். அநுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை வரையிலான புதிய ரயில் பாதைக்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரிய அநுராதபுர நகர திட்டத்தின் கீழ் மிஹிந்தலையை பரிமாற்ற மையமாக மாற்றுவதற்கும் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிஹிந்தலை புகையிரத நிலையத்துக்கு அருகில் காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு கொண்டு செல்வதற்காக மிஹிந்தலை களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்த முடியும். புகையிரத கட்டணத்துக்கும் பஸ் கட்டணத்துக்கும் இடையில் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது. இப்போது செய்யப்படும் இந்த குறுகிய கால தியாகம் அடுத்த 50 ஆண்டுகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். புகையிரத திணைக்களத்தின் ஊழியர்கள் சிறப்பான சேவையை வழங்குகின்றனர். சில என்ஜின்கள் 60 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை. அவ்வாறானவை 60 எஞ்சின்களே எங்களிடம் உள்ளன. எனினும் புதிதாகக் கொள்வனவு செய்வதற்குப் பணம் இல்லை. நீண்ட காலமாக புகையிரத சேவை நஷ்டத்தில் இயங்கி வருகிறது. இப்போதும் இந்தப் பணிகள் அனைத்தும் கடனில்தான் செய்யப்படுகின்றன.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் மட்டுமே இதற்கான பணம் கிடைக்கப்பெற்றுள்ளது. கடன் மறுசீரமைப்பிற்குப் பிறகு, எதிர்காலத்தில் அதிக கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். 2024ஆம் ஆண்டில் புகையிரத சேவையில் ஏற்பட்டுள்ள பாரியளவிலான பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தினால் தீர்வை வழங்க முடியும் என போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

புகையிரத பொது முகாமையாளர் எச். எம். கே. டப்ளிவ். பண்டார இங்கு கருத்து தெரிவிக்கும் போது கூறியதாவது,

“மாகோவிலிருந்து அநுராதபுரம் வரைக்கும் இந்த அபிவிருத்திப் பணிகள் இடம்பெறும். இதனடிப்படையில் இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்காக எதிர்வரும் 07ஆம் திகதியிலிருந்து இந்த ரயில் பாதை மூடப்படும். இதனிடையே அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணத்திற்கிடையிலான இரண்டு புகையிரதப் பயணங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரை பெலியத்தையிலிருந்து பயணிக்கும் புகையிரதத்தை மாகோ வரைக்கும் பயணிப்பதற்கும் மீண்டும் பெலியத்தை வரை செல்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோன்று அநுராதபுரம் மற்றும் மாகோ இடையிலான பஸ் சேவையும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. யாழ்ப்பாணம் வரைக்கும் பயணிக்கும் புகையிரத திருகோணமலை வரைக்கும் பயணிக்க ஏற்பாடு செய்யப்படும். 07ஆம் திகதி வரைக்கும் அநுராதபுரத்திற்கு விசேட ரயிலை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

மார்ச் மாத இறுதிக்குள் மிஹிந்தலை ரயில் பாதையின் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்ய முடியும். வடக்கு ரயில் பாதையின் அபிவிருத்திப் பணிகளை அடுத்து 50 வருடங்ளுக்கு மீண்டும் அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்கான தேவை இருக்காது. இது வடக்கு மக்களைப் போன்று மன்னார் மக்களுக்கும் மிகப் பெரும் ஆறுதலாக இருக்கும்.

இது சுற்றுலாத்துறைக்கு சாதகமானதொரு சூழ்நிலையாகும். புகையிரதத்தில் பயணிக்கும் 20 முதல் 25 வீதமானோர் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்கின்றனர். அவ்வாறனவர்களுக்கு அபராதம் விதிக்க எதிர்பார்க்கின்றோம். இந்த அபராத தொகையை 10,000 ரூபாவாக அதிகரிக்கவும் எதிர்பார்க்கின்றோம்.

இழக்கப்பட்ட வருமானத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த ஊடகச் சந்திப்பில் புகையிரத பிரதி பொது முகாமையாளர் (போக்குவரத்து) என். ஜே. இதிபொலகே மற்றும் வடக்கு ரயில்பாதை புனரமைப்புத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் அசோக முணசிங்க ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

சுபாஷினி சேனாநாயக்க மற்றும் மஹிந்த அளுத்கெதர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# கிழக்கில் பெரு வெள்ளம் போக்குவரத்தும் துண்டிப்பு



வ.சக்திவேல்

மட்டக்களப்பு மாவட்டம் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை பெய்துவருகின்றது. பலத்த மழை காரணமாக தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பெரும்பாலான கிராமிய வீதிகள் வெள்ளநீரால் மூழ்கடிக்கப்பட்டுள்ளதனால் பொதுமக்கள் உள்ளூரில் போக்குவரத்துச் செய்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் தாழ் நிலங்கள் அனைத்தும் வெள்ளக்காடாய் காட்சிதருவதையும் அவதானிக்க முடிகின்றது.

போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தினால் 123 குடும்பங்களைச் சேர்ந்த 434பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 109 குடும்பங்களைச் சேர்ந்த 380பேர் நண்பர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



இது இவ்வாறிருக்க படுவான்கரைப் பிரதேச மக்களின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக அமைந்துள்ள வெல்லாவெளி, மண்டூர் பிரதான வீதியில் இரு இடங்களை ஊடறுத்து வெள்ள நீர் மிக வேகமாக பாய்ந்து வருவதனால் அவ்வீதியுடனான தரை வழிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன், தற்காலிகமாக அவ்வீதியைக் கடப்பதற்கு போரதீவுப்பற்றுப் பிரதேச சபையினால் உழவு இயந்திரங்களுடாக பயணிகளை ஏற்றி இறக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டதிலுள்ள சிறிய குளங்கள் நிரம்பி வழிவதுடன் பெரிய குளங்களின் வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நவகிரி குளத்தின் நீர் மட்டம் உயர்ந்ததன் காரணமாக அதன் 2 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக போரதீவுப் பற்றுப் பிரதேச செயலக பிரிவின் வேத்துச்சேனை கிராம மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் மேலும் கிரான் பிரதேச செயலக பிரிவின் புலிபாஞ்சகல் பகுதியில் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுவதனால் அங்கு போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் மக்களின் போக்குவரத்துக்காக உழவு இயந்திரம் சேவையில் ஈடுபட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தின் ஏனைய இடங்களில் இதுவரை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. மாவட்டத்தில் ஆற்றினை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் மழை வெள்ளம் தொடர்பில் அதிக அவதானத்துடன் இருப்பதுடன் கடல், ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளில் நீராடுவதை தவிர்ப்பதுடன் மீன்பிடி நடவடிக்கைகளில் மிக மிக அவதானத்துடன் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்வதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.ரியாஸ் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் பலத்த மழை பெய்து வருவதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள சிறிய குளங்கள் நிரம்பி வழிவதோடு பிரதான பெரிய குளங்களும் வான்பாய்கின்றன.

வெள்ளிக்கிழமை(29.12.2023) வரையில் நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 31அடி வரை உயர்ந்துள்ளதுடன், 8அங்குலம் அளவில் வான்பாய்ந்து வருகின்றது. இந்நிலையில் அக்குளத்தில் 2வான்கதவுகள் 5அடி 6அங்குலம் வரை திறந்து விடப்பட்டுள்ளன. அப்பகுதியில் அன்றையதினம் 98மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 17அடி 3அங்குலமாகும், அக்குளத்தில் 2அங்குலம் வான்பாய்ந்து வருவதோடு, அப்பகுதியில் 60மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 32அடியாக உயர்ந்துள்ளதுடன், அப்பகுதியில் 68மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 17அடி 2அங்குலம், அக்குளத்தில் 18அங்குலம் அளவில் மேலதிக நீர் வெளியேறுகின்றது. அத்தோடு அப்பகுதியில் 97.5மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வாகனேரிக்குளத்தின் நீர்மட்டம் 17அடி 6அங்குலமாகும், அப்பகுதியில் அப்பகுதியில் 119.3மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11அடி 8அங்குலம், அக்குளத்தில் 2அங்குலமளவில் மேலதிக நீர் வெளியேறுகின்றது. அப்பகுதியில் 32 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

சித்துள்வெவக்குளத்தின் நீர்மட்டம் 7அடி 8அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 15அடி 6அங்குலம். அக்குளத்தில் ஒரு அங்குலமளவில் மேலதிக நீர் வெளியேறுகின்றது.

வடமுனைக்குளத்தின் நீர்மட்டம் 13அடியாகவும், புணானை அணைக்கட்டு 7அடி 6அங்குலமாகவும், உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(17 ஆம் பார்க்க)







# ஜனாதிபதி தலைமையில் 2024 இல் வலுவானதொரு எதிர்காலம் உதயமாகும்






## நாட்டை பொருளாதார சவாலில் இருந்து மீட்டு, சரியான பாதைக்குக் கொண்டுசெல்வதற்கு அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன அழைப்பு

**நாட்டைப் பொருளாதார சவாலில் இருந்து மீட்டு, சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்கு அனைத்துத் தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவ–ர்தன அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் அடுத்தவருடம் நடைபெறக் கூடிய தேர்தலுக்கான தயார்படுத்தல்கள் தொடர்பாக எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங்கைக்கு வழ–ங்கப்படும் இரண்டாவது கடன் தவ–ணையான 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிவசதியை வழங்குவத–ற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இதுவரை மேற்கொண்ட கடினமான பயணம் பற்றி விளக்க முடியுமா?**

பதில்: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வங்குரோத்து நிலையை அடைந்த நாடொன்றின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். கிராமத்து மக்களுக்குப் புரியும் மொழியில் சொல்வதென்றால், 'சிறுதொழிலுக்குப் பயன்படுத்திய வங்கிக் கடனைச் செலுத்த முடியாமல் தொழிலதிபர் ஒருவர் கடனில் மூழ்கிவிடுகின்றார். அந்த சூழ்நிலையின் அடிப்படையில் அவருக்கு மீண்டும் எந்த வங்கியிலும் கடன் கிடைக்காது. குறைந்த பட்சம் கடனாளியாவது கடன் கொடுக்க மாட்டார்'. இதுபோன்றதொரு நிலைமையே எமது நாட்டுக்கும் ஏற்பட்டது.

ஒரு நாடு உலகின் முன்பாக, தான் பெற்ற கடன்களை மீளச்செலுத்த முடியாத தேசமாக மாறும் போது, அந்த நாடு கருத்தில் கொள்ளத் தகுதியற்றது. அதனால்தான் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்த நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர், எமது இளைஞர்கள் விமான நிலையத்தை விட்டு வெளியேறிய போது எமது கடவுச்சீட்டுகளும் வங்குரோத்து நிலையை அடைந்த அரசாங்கத்தின் கடவுச்சீட்டுக்களாக மாறின. ஆனால் இன்றைய நிலைவரப்படி மீண்டும் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டைப் பெற்றுள்ளோம்.

உலக நாடுகள் வங்குரோத்து நிலையை அடைந்த பின்னர் 6 முதல் 8 ஆண்டுகளுக்குப் பிறகும் மீள்வது கடினம். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன் கடமையை குறுகிய காலத்தில், ஒன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றி நாட்டை சரியான பாதைக்குக் கொண்டுவந்துள்ளார். கடன் ஒப்புதல் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், 2021, 2022, 2023 உலக உதவியின் கீழ் நிறுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கான நிதிகளும் தற்பொழுது படிப்படியாக வழங்கப்படுவதால் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்கியுள்ளது.

**கே: நாடு இருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீ–ள்வதற்கு வேறு வழியில்லை என்கி–றீர்கள். இதே பாதையில் நாம் தொடர வேண்டுமா?**

பதில்: எதிர்காலத்தில் பல திட்டங்கள் செயற்படுத்தப் பட வேண்டும். நமது பொருளாதாரம் மீண்டும் வலுப்பெற வேண்டும். இதன் மூலம் மின்கட்டணம் குறைக்கப்பட்டு, பொருட்களின் விலைகள் மட்டுமன்றி, மக்களைப் பாதித்துள்ள வங்கி வட்டி வீதங்களையும் குறைத்து முன்னேற வேண்டும். ஆனால் இந்நிலை சீர்குலைந்தால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. கடினமானதாக இருந்தாலும் வேறு வழியின்றி நாம் இந்தப் பாதையில் சற்றுத் தூரம் பயணித்துத்தான் ஆக வேண்டும். சொந்த அரசியல் இயக்கங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தேசிய வேலைத்திட்டத்திற்கு அனைவரும் உடன்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் வேண்டுகோள் ஆகும். ஒரு நாடு உலகில் முதல் இடத்தைப் பெறுவதற்கு மக்கள் தொகையோ, நாட்டின் அளவுகளோ பொருந்தாது. புதிய தொழில்நுட்பத்தை இணைத்துக்கொண்டு முன்னேறுவது தான் பொருத்தமானது. இந்தப் பயணத்தில், சிறிய நாடுகள் பொருளாதார ரீதியாகப் பலம் பெறுகின்றன. உலக வல்லரசாக மாற இந்தப் பயணத்தை நாம் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

**கே: பாராளுமன்றத்தில் வரவுசெ–லவு அலுவலகம் அமைப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கூற முடியுமா ?**

பதில்: அரசியலமைப்பின் 27, 28 மற்றும் 29 ஆகிய பிரிவுகள் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதைக் கூறுகின்றன. அதில் 29 ஆவது பிரிவு மேற்கூறிய விடயங்கள் நிறைவேற்றப்பட்டாலும் இல்லாவிட்டாலும் எந்த நீதிமன்றமும் செயல்படுத்த முடியாது என்று கூறுகிறது. எந்த நீதிமன்றமும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாது. இது ஜனநாயகத்தை பாதுகாக்கப் பயன்படும் சரத்து. இந்திய அரசியலமைப்பின்படி, பிரிவு 37 இதையே குறிப்பிடுகிறது. ஜப்பானின் அரசியலமைப்பிலும் இதுவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலை தற்போதைய தலைமையைப் பலப்படுத்தியுள்ளது. பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட அலுவலகம் உள்ளது. வரவுசெலவுத்திட்ட அலுவலகம் பொருளாதார நிபுணர்களை நியமிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்களுக்கு நிதிக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். இந்த நிதிக் கட்டுப்பாட்டின் தோல்வியால் ஒரு நாடு வங்குரோத்து நிலையை அடையும்.

**கே: நமது அரசியலமைப்புச் சட்ட–த்தை காலத்திற்கு ஏற்றவாறு திருத்த வேண்டும் என்கிறீர்கள். அப்படியாயின் அந்த மாற்றம் எவ்வா–றானதாக இருக்க வேண்டும்?**

பதில்: கொவிட் தொற்றுநோய் நெருக்கடி காரணமாக உலகின் பல நாடுகளில் 2022, 2023 ஆம் ஆண்டுகளில் மக்கள் ஆணைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. நமது நாட்டின் அரசியலமைப்பில் 100 திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இதை உலகிற்கு எடுத்துச் செல்ல சுமார் 500 முறை மாற்ற வேண்டும். 2023 இற்குள், நமக்கு நெருக்கமான இந்திய அரசியலமைப்பு 116 முறை திருத்தப்பட்டது. ஆனால் நமது அரசியல் சாசனம் 18 முறை திருத்தப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். நிச்சயமாக, அந்தத் தொகை போதாது. உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நமது அரசியலமைப்பு ஒவ்வொரு ஆண்டும் மாற்றப்பட வேண்டும். அரசியலமைப்பு ஒரு மாற்றமுடியாத ஆவணம் அல்ல. இது உலகத்துடன் போட்டியிடும் வகையில் மாற்றப்பட வேண்டும்.

**கே: தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு இன்னும் விடுபடவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தும்போது, இந்தப் பொருளாதார நெருக்கடி–யிலிருந்து மீள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு தலைமை இல்லை என்று கூறுகிறீர்களா?**

பதில்: ஜனாதிபதிக்கு சிறப்புத் தகுதிகள் உள்ளன. அவரிடம் உள்ள அறிவும் அனுபவமும் உலகில் வேறு எந்தத் தலைவருக்கும் இல்லை. இவர் 60 ஆண்டுகளாக அரசியல்வாதியாக இருந்து வருகிறார். 60 ஆண்டுகளாக தொழில் ரீதியாக பொருளாதார நிபுணராகவும் இருந்துள்ளார். நாடு பாதிக்கப்பட்ட நேரத்தில் அந்நாட்டை மீட்டெடுத்த இவ்வாறான தேசிய தலைமையை மக்கள் நல்ல ஜனாதிபதி என அழைக்கின்றனர். அந்தத் தகுதி வாய்ந்த ஜனாதிபதியின் காரணமாக, இலங்கை மக்கள் பிச்சை எடுப்பதை நிறுத்தினர். அன்று ஒரு எண்ணெய் பவுசர் பெட்ரோல் நிலையத்துக்கு வந்தபோது, அவர்கள் கைதட்டினர். ஒரு சமையல் எரிவாயு லொறியைக் கண்டதும் அதன் பின்னால் ஓடினர். உணவைப் பார்த்ததும் கைதட்டினர். இன்று வாங்குவதற்கு பொருட்கள் உள்ளன. ஆனால் அதற்கான செலவு அதிகமாகத்தான் இருக்கின்றது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற தேசியத் தலைமைக்கு மற்றையோர் இடையூறு செய்யாவிட்டால் நாடு முன்னேற்றமடையும் என்று நான் கூறுகிறேன். 50 இலட்சம் சுற்றுலா வணிகம் கிடைத்தால் இந்தப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என்றார் அவர். ஆனால் சிலர் இவற்றைச் சொல்லும்போது அவமானப்படுத்துகிறார்கள். நாம் கடன் வழங்கும் நாடாக மாறலாம். கடனை அடைத்து விட்டு வலுவான பொருளாதாரம் கொண்ட நாடாக மாறலாம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இன்னும் 12 வருடங்களுக்கு ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை வழிநடத்துவோம். அப்போது தான் அவரால் இலங்கையை ஆசியாவில் பலம் வாய்ந்த நாடாக மாற்ற முடியும்.



**இன்னும் 12 வருடங்களுக்கு ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை வழிநடத்துவோம். அப்போதுதான் அவரால் இலங்கையை ஆசியாவில் பலம் வாய்ந்த நாடாக மாற்ற முடியும்!**

**கே: அடுத்த வருடம் தேர்தல் வருடம். இதற்கான தயார்படு–த்தல்கள் எப்படி இருக்கின்றன?**

பதில்: ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து நாட்டு மக்கள் சிந்திக்க வேண்டும். ஒரு நாட்டை உருவாக்க முடியாதவர்கள் இதற்கு முன்வருவதை நான் தவறாகவே பார்க்கிறேன். எதிர்வரும் 2024 இல் நம் அனைவருக்கும் ஒரு பெரிய பொறுப்பு உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் தேசியத் தலைமை ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு 35 வருடங்களாக அந்நிய சக்திகள் அனுமதிக்கவில்லை. இந்த நாட்டின் ஆட்சியாளர் பலமான ஆட்சியாளராக மாறினால் அது சர்வதேசத்திற்கு இடையூறாக அமையும். ரணில் விக்கிரமசிங்கவை 35 வருடங்களாக இந்தக் கதிரைக்கு வரவிடாமல் அந்நிய சக்திகள் தடுத்தன. நாம் அதற்கு எதிராக செயல்பட்டு வருகிறோம். ஒவ்வொரு அரசியல் சக்திக்கும் இந்த நேரத்தில் தேசிய ஒருமித்த கருத்து தேவை. அதை அலட்சியப்படுத்தினால், நம் குழந்தைகள் உலகின் முன் பிச்சைக்காரர்களாக மாறிவிடுவார்கள். ஏழையின் நண்பன் ஏழை அல்ல. ஏழையின் நண்பன் கற்றவன். ரணில் விக்கிரமசிங்கவின் தேசியத் தலைமையானது 2024 ஆம் ஆண்டில் வலுவான எதிர்காலத்தை உருவாக்குவது தவிர்க்க முடியாதது.

**கே: உங்கள் கருத்துப்படி, 2024 ஆம் வருடம் ஒரு மாற்றமான ஆண்டாக இருக்குமா?**

பதில்: 2024 பற்றி எந்தச் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. 2024ஆம் ஆண்டில் முன்னேறுவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவை. அரசியல் வேறுபாடுகளை வைத்துக்கொண்டு தேசிய உடன்படிக்கைக்கு செல்ல வேண்டியுள்ளது. வேறு வழியில்லை. உண்மையை ஏற்காததால் மக்கள் சிரமத்திற்கு ஆளாகினர். தோற்றாலும் உண்மையைச் சொன்னோம். நாங்கள் சொன்னதை மக்கள் ஏற்கவில்லை. தவறை மீண்டும் செய்து எங்களை குற்றம் சாட்டாதீர்கள்.

# அமுலாக்கப் பிரிவு விசாரணையில் சிக்கிய பிரியங்கா!

## கணவர் வதேரா மீதான குற்றச்சாட்டையடுத்து, மனைவியும் குற்றவாளியாகிறாரா?



இந்திய அமுலாக்கப் பிரிவு தாக்கல் செய்திருக்கும் குற்றப் பத்திரத்தில், பிரியங்கா காந்தியின் பெயர் இடம்பெற்றுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தியின் மருமகனும், பிரியங்கா காந்தியின் கணவருமான ரொபர்ட் வதேரா ஹரியானா மற்றும் லண்டனில் சொத்து வாங்கியது தொடர்பாக அமுலாக்கப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது. ஏற்கனவே அமுலாக்கப் பிரிவு தாக்கல் செய்த குற்றப்பத்திரத்தில் ரொபர்ட் வதேராவின் பெயர் இடம்பெற்றிருக்கிறது. இப்போது அமுலாக்கப் பிரிவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் அறிக்கையில், பிரியங்கா காந்தியின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது.

அமுலாக்கப் பிரிவு தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகை அறிக்கையில், "முழுமையாக நடத்தப்பட்ட விசாரணையில் ஆயுத வியாபாரி சஞ்சய் பண்டாரிக்கு மிகவும் நெருக்கமான வெளிநாட்டு வாழ் இந்தியரான சி.சி.தம்பி என்பவருக்கும், ரொபர்ட் வதேராவிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இருவருக்கும் இடையே தொழில்ரீதியிலான தொடர்பும் இருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டெல்லியைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் முகவர் எச்.எல்.பஹ்வா என்பவர் ரொபர்ட் வதேரா மற்றும் தம்பிக்கு ஹரியானாவில் நிலம் வாங்கிக் கொடுத்துள்ளார். ரொபர்ட் வதேரா 40 ஏக்கர் நிலம் வாங்கி இருக்கிறார். அந்த நிலத்திற்கான பணம் கணக்கில் வராத ரொக்கப் பணமாக் கொடுக்கப்பட்டது. இதற்குத் தேவையான முழுப் பணத்தையும் ரொபர்ட் வதேரா கொடுக்கவில்லை.

2006 ஆம் ஆண்டு ஹரியானாவில் பிரியங்கா காந்திக்கு பஹ்வா ஐந்து ஏக்கர் நிலம் விற்பனை செய்துள்ளார். ஆனால் கணவன், மனைவி இருவரும் வாங்கிய நிலத்தை 2010 ஆம் ஆண்டு மீண்டும் பஹ்வாவிற்கு திரும்ப விற்பனை செய்துள்ளனர். இருவருமே நிலம் வாங்குவதற்கு கணக்கில் வராத ரொக்கப் பணத்தையே கொடுத்துள்ளனர். சிக்கல் ஏற்படாமல் இருப்பதற்காக மீண்டும் இருவரும் நிலத்தை வாங்கியவரிடமே விற்பனை செய்து விட்டனர். இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

2020 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட தம்பியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவருக்கு 10 ஆண்டுகளாக ரொபர்ட் வதேராவை தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார். 'இருவரும் அடிக்கடி துபாய் மற்றும் டெல்லியில் சந்தித்துப் பேசியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தம்பிக்கும் ரொபர்ட் வதேராவுக்கும் இடையே நடந்த பணப்பரிவர்த்தனை தொடர்பான விபரங்களும் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றிருக்கின்றன.

லண்டனில் 2009 ஆம் ஆண்டு சஞ்சய் பண்டாரி வீடு ஒன்றை வாங்கினார். அந்த வீடு ரொபர்ட் வதேராவின் நிதியில் புதுப்பிக்கப்பட்டது. அந்த வீட்டில் ரொபர்ட் வதேரா பல முறை தங்கி இருக்கிறார் என்றும் அமுலாக்கப் பிரிவின் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லண்டன் வீடு ரொபர்ட் வதேராவிற்சொந்தமானது என்றும், அதனை வாங்குவதற்கு தம்பி உதவி செய்திருக்கிறார் என்றும் அமுலாக்கப் பிரிவு தெரிவித்துள்ளது. இதுவரை ரொபர்ட் வதேராவின் பெயரை மட்டுமே விசாரணைக்கு இழுத்து வந்த அமுலாக்கப் பிரிவு, முதன்முறையாக பிரியங்கா காந்தியின் பெயரையும் சேர்த்து இருப்பது, காந்தி குடும்பத்தை அமுலாக்கப் பிரிவு நெருங்கி இருப்பதாகவே தெரிகிறது.



ரொபர்ட் வதேரா இதற்கு முன்பும் பல்வேறு வழக்குகளில் அமுலாக்கத்துறையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளார். அதில் தன் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளார். ஆனால் இந்த வழக்கில் பிரியங்காவின் பெயர் இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும்.

இது ஒருபுறமிருக்க, அமுலாக்கத்துறை மத்திய அரசின் உத்தரவின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக செயல்படுவதாக அடிக்கடி குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில், பிரியங்கா காந்தி மீதான குற்றப் பத்திரிகை தேசிய அரசியல் புயலைக் கிளப்பி இருக்கிறது. அமுலாக்கத்துறையின் இந்த நடவடிக்கை தொடர்பாக பிரியங்கா காந்தி இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை.

அதேசமயம் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் இது பற்றி பேசி உள்ளார்கள். இமாச்சல பிரதேச முதலமைச்சர் சுக்விந்தர் சிங் தெரிவிக்கையில், "அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கின்ற மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக இந்தத் தலைவர்களின் பெயர்கள் குற்றப்பத்திரிகையில் வந்துள்ளன" என்றார்.

மகாராஷ்டிர மாநில காங்கிரஸ் தலைவர் படோலே பேசுகையில் "பா.ஜ.க எதிர்வரும் தேர்தலில் காங்கிரசுக்கு அஞ்சுகிறது. அன்று பிரிட்டிஷ் அரசு காந்தியைக் கண்டு பயந்தது. இன்று மத்திய அரசு காந்தி குடும்பத்திடம் பயப்படுகிறது. உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்ப பா.ஜ.க அரசு முயற்சிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் பவன் கெரா பேசுகையில், "இவ்விவகாரத்தில் இருந்து தான் 2024 மக்களவைத் தேர்தலுக்கான பிரசாரத்தை கட்சி தொடங்கவுள்ளது. தேர்தல் நெருங்கும் சமயத்தில் சதி செய்கிறார்கள். தேர்தலுக்கு முன் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள். இது தொடக்கம் மட்டுமே. இதை அவர்கள் முதன்முறையாகச் செய்வதில்லை. தேர்தல் நெருங்கும்போதுதான் இது போன்ற சதிகளை செய்கிறார்கள். அவர்கள் அதை செய்யட்டும். நாம் அதற்கெல்லாம் அஞ்சவில்லை" என்று கூறினார்.

**2024 தேர்தலில் காங்கிரஸைப் பார்த்து அஞ்சுகிறது பா.ஜ.க! எனவேதான் காங்கிரஸ் தலைவர்கள் மீது இந்த நடவடிக்கை என்கிறார்கள் எதிர்க்கட்சியினர்!**

வருமான வரி திணைக்களத்தில்

# 18 வயதுக்கு மேற்பட்டோர் பதிவு செய்வது அவசியம்

ஜனவரி முதல் அமுலாகுமென அறிவிப்பு

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව – ශ්‍රී ලංකාව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம் – இலங்கை
Inland Revenue Department – Sri Lanka

ஜனவரி மாதம் முதல் நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டோர் அனைவரும் தேசிய வருமான வரி திணைக்களத்தில் பதிவு செய்து இலக்கமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமென அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.எம்.நபீர் தெரிவித்தார்.

அந்த வகையில் நபர் ஒருவருக்கு வருமான வரி செலுத்தக்கூடிய வகையில் வருமானம் இருக்குமானால் மாத்திரம் அவர் வருமான வரி செலுத்த வேண்டுமென அறிவுறுத்தியுள்ள அவர், எவ்வாறெனினும் 18 வயதுக்கு மேற்பட்டோர் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின்படி இலக்கமொன்றை பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக இந்த இலக்கமும் கட்டாயமானதாகுமென குறிப்பிட்டுள்ள அவர், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தின்படி 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தேசிய வருமான வரி திணைக்களத்தில் பதிவு செய்து இலக்கமொன்றை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

எவரும் அது தொடர்பில் தவறான அர்த்தத்தை கொள்ள வேண்டாம். பதிவு இலக்கத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வரிக் கோவையை ஆரம்பித்தல் என்பது இரண்டும் இரண்டு விடயமாகும். அது தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை. அந்த வகையில் தேசிய அடையாள அட்டை வைத்துள்ள அனைவரும் தேசிய வருமான வரி திணைக்களத்தின் இலக்கத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வரி வருமானம் செலுத்தக்கூடிய வகையில் வருமானம் உள்ளோர் மட்டுமே வரியை செலுத்த வேண்டும். அப்போது அவர்களுக்காக வரிக் கோவை ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்த

# 65 இலட்சம் ரூபா பெறுமதியான பெருந்தொகை பொருட்கள் மீட்பு



இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சவர்க்காரம், எண்ணெய், வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட பொருட்களை சட்டவிரோதமாக கடத்த முற்பட்ட சம்பவத்தை தமிழ்நாட்டுக் கரையோர பொலிஸார் முறியடித்தனர்.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் அருகே புதுமடம் கடற்கரை பகுதியிலிருந்து நேற்று முன்தினம் (29) இலங்கைக்கு பொருட்கள் சிலவற்றை கடத்தவுள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து கரையோர பொலிஸார், புதுமடம் கடற்கரை பகுதிக்கு விரைந்து சென்று ரோந்துப் பணியில் ஈடுபட்ட போது, சந்தேகத்துக்கிடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாட்டா ஏசி வாகனத்தை சோதனையிட்டனர். அதிலிருந்து சவர்க்கார வகைகள், எண்ணெய், வாசனைத் திரவியங்கள் உள்ளிட்டவை இந்திய ரூபா பெறுமதியில் 16 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா எனும் (இலங்கை மதிப்பில் 64 இலட்சத்து 78 ஆயிரத்து 416 ரூபா) மதிப்பிலான பொருட்கள் மீட்கப்பட்டன.

இவை அனைத்தும் கடல் வழியாக இலங்கைக்கு கடத்த வாகனத்தில் ஏற்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிந்துகொண்டதுடன், இவை வள்ளங்களில் ஏற்றப்பட்டு சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவர திட்டமிட்டிருந்ததாகவும் இதையடுத்து பொருட்களை பொலிஸார் பறிமுதல் செய்து தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## பொலிஸ் சுற்றிவளைப்பில்...

கடந்த 17ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை ஒருவார காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 17,666 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருப்பினும், நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் இரண்டு நாட்களுக்கு 'யுக்திய' சுற்றிவளைப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், 'யுக்திய' பொலிஸ் சுற்றிவளைப்புகள் கடந்த புதன்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன்போது 2,889 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்புகளில் 17,837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட 850 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், 186 பேருக்கு எதிராக சட்டவிரோத சொத்துக் குவிப்பு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 1,187 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கனவே சந்தேக நபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 4,665 சந்தேக நபர்களில் 1,375 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## அரசின் உர நிறுவனங்கள்...

ரூபா நிகர இலாபத்தை ஈட்டியுள்ளன. கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் 360 மில்லியன் ரூபாவையும், லங்கா உர நிறுவனம் 120 மில்லியன் ரூபாவையும் இலாபமாக ஈட்டியுள்ளன.

அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் வருமானத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் ஊக்கத்தொகை (போனஸ்) வழங்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஊக்குவிப்புத்தொகை வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (28) விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அமைச்சில் நடைபெற்றது. இதற்காக 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவ்விரு நிறுவனங்களிலும் பணிபுரியும் 420 ஊழியர்களுக்கும் இரண்டு மாத அடிப்படை சம்பளத்துக்கு சமமான ஊக்கத்தொகையை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது இவ்விரு உர நிறுவனங்களும் விவசாயத்துக்கான உர வகைகளை வழங்கி வருவதுடன், இந்த நிறுவனங்களின் சேவைகளை மேலும் விரிவுபடுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர, இவ்விரு நிறுவனங்களின் தலைவரான கலாநிதி ஜகத் பெரேராவுக்கு பணிப்புரை விடுத்தார்.

சட்டங்களில் திருத்தம் தேவையென்றால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆதரவளிக்கும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். எதிர்காலத்தில் உர விநியோக நடவடிக்கையிலிருந்து அரசு விலகும் என்பதால், இவ்விரு நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தனியாருக்கு போட்டியாக உர விநியோகத்தை முன்னெடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

தற்போது தனியார் நிறுவனங்கள் பூச்சிகொல்லி மற்றும் களைகொல்லிகளை அதிக விலைக்கு விற்பனை செய்து விவசாயிகளை சுரண்டுவதாகவும், எனவே இந்த வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை ஒழிக்க அரசாங்கத்தின் தலையீட்டில் போட்டியை உருவாக்க வேண்டுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## கஜேந்திரகுமார் களமிறங்கினால்...

வாக்களிப்பேன். ஆனால், அதற்கு அவர் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிங்கள மக்களை அறிவூட்டக்கூடிய விதத்தில் தொலைக்காட்சியில் சிங்களமொழியில் உரையொன்றை நிகழ்த்த வேண்டும்" என தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழர்களின் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துரைப்பதற்கும், சிங்கள வேட்பாளருக்கு 50 சதவீத வாக்குகள் கிடைக்கப்பெறாமல் தடுப்பதற்கும் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டுமென நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். இருப்பினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கூறியிருக்கின்றார். இது பற்றிய உங்களது கருத்து என்ன?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை போன்று மும்மொழிகளையும் அறிந்த ஒரு பொது வேட்பாளரால் தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்ற முடியும். வாக்காளர்கள் மத்தியில் இடம்பெறக்கூடிய ஆள் மாறாட்டத்தையும் குறைக்க முடியும். போதியளவான வாக்குப்பதிவு இடம்பெறுவதை உறுதிசெய்ய முடியும்.

மேலும், மும்மொழிகளையும் அறிந்த பொது வேட்பாளரொருவரை களமிறக்குவதன் மூலம் தொலைக்காட்சிகளில் வேட்பாளர் ஒருவருக்காக ஒதுக்கப்படக்கூடிய நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். இன்றளவிலே சிங்களமொழி மூலமான எந்தவொரு ஊடகமும் குறிப்பாக வட, கிழக்கு தமிழர் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதில்லை என்றார்.

## எங்கள் கருத்து...

# உறுதியான நம்பிக்கையுடன் புத்தாண்டை வரவேற்போம்!

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கையில், அரசியல் நெருக்கடியானது பூதாகரமாக உருவெடுத்தது.

ஆட்சித் தலைமையையே புரட்டிப் போட்டு விட்டது அரசியல் நெருக்கடி!

அன்றைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணவும், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்கவும் கூடிய ஒரேயொரு தலைவராக நாட்டைப் பொறுப்பேற்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது பதவியேற்பின் பின்னரே நாட்டை மீட்டெடுக்க முடியுமென்ற நம்பிக்கையும் உருவானது. 'இலங்கையானது வங்குரோத்து அடைந்த நாடு' என்ற கறைபடிந்த முத்திரையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அகற்றியுள்ளார். அவரது ஆளுமை, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றினாலேயே இது சாத்தியமானது.

உலக அரங்கில் இலங்கை தலைநிமிர்ந்து நிற்கும் நிலைமையை குறுகிய காலப்பகுதியில் ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

அதன் காரணமாகவே புதிய நம்பிக்கைகளுடன் 2024 இற்குள் பிரவேசிப்பதற்கு இலங்கை மக்களால் முடிகின்றது. கடந்த இரண்டொரு வருடங்களாக களையிழந்து போயிருந்த புத்தாண்டுக் கொண்டாட்டம் இம்முறை கோலாகலம் நிறைந்ததாக மாறியிருப்பதற்குக் காரணம் மக்களின் உள்ளத்தில் பிறந்த நம்பிக்கையாகும்.

இந்நிலையில் இன்று நள்ளிரவு பிறக்கப் போகின்ற புத்தாண்டை அனைவரும் நம்பிக்கைகளுடன் வரவேற்போம். பொருளாதாரத்திலும், இன ஐக்கியத்திலும் மேலோங்கிய தேசமாக எனது தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் கைகொடுப்போம்.

நாளை பிறக்கவிருக்கும் புத்தாண்டையொட்டி எமது வாசக நேயர்கள் அனைவருக்கும் தினகரன் வாரமஞ்சரியின் இதயபூர்வமான வாழ்த்துகள் உரித்தாகட்டும்!

## இந்தியாவிலிருந்து 06 மில்லி...

ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார். இதேவேளை, வற் வரி அதிகரிப்பினூடாக தங்களது உற்பத்தி செலவு அதிகரிக்கா விட்டால் எதிர்வரும் மாதங்களில் முட்டை ஒன்றை 30 ரூபா முதல் 35 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்ய முடியுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட சங்கத்தின் தலைவர் சரத் ரத்னாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## ஓய்வூதிய பணிக்கொடை...

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவுகளை முறையாக செலுத்துவதற்கு தேவையான நிதியை திறைசேரி விடுவித்துள்ளதாக நிதி அமைச்சு மேலும் குறிப்பிடுகிறது.

கடந்த 25 ஆண்டுகளில் ஒரு வருடத்துக்குள் இந்த ஆண்டுக்கான அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்பட்ட ஒரே ஆண்டாக 2023ஆம் ஆண்டு அமைவதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## மஹவ – அநுராதபுரம் ரயில் ...

சபை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனால் ரயில் பயணிகள் சுமார் 05 மாதங்களுக்கு சிரமப்பட நேரிடலாமெனவும் அவர் தெரிவித்தார். அதன்படி கொழும்பிலிருந்து அநுராதபுரம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கும் மஹவவிலிருந்து அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணத்துக்கும் விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொழும்பு நகரில் இன்று...

நிஹால் தல்துவ தெரிவித்தார். பண்டிகைக் காலத்தில் கொழும்பு நகருக்குள் வருகை தரும் மக்களின் தொகை அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இவ்விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இப்பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# பயணச்சீட்டு இன்றி ரயில்களில் பயணித்தால் ரூ. 10,000 அபராதம்

25 சதவீதமானோர் பயணச்சீட்டின்றி பயணம்



பயணச்சீட்டின்றி ரயில்களில் பயணிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் அபராதத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் எச்.எம்.சி.பண்டார தெரிவித்தார்.

ரயில்களில் பயணிப்பவர்களில் 25 சதவீதமானோர் பயணச்சீட்டு பெறாமல் பயணம் செய்வதாலேயே இந்த அபராத அதிகரிப்பை செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

அடுத்தாண்டு முதல் தனியார் துறையினரது ஒத்துழைப்புடன் ரயில் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும். ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு புதிய வழிமுறை ஒன்று செயற்படுத்தப்படும்.

ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளில் 25 சதவீதமானோர் பயணச்சீட்டு பெறாமல் திருட்டுத்தனமான முறையில் பயணிக்கின்றனர். இதனால் ரயில்வே திணைக்களம் நாளாந்தம் சுமார் 30 மில்லியன் ரூபா வருமானத்தை இழக்கிறது. ஆகவே பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பவர்களிடமிருந்து அறவிடும் அபராதத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவிலிருந்து மேலதிகமாக 20 ரயில் என்ஜின்களை கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் ரயில் சேவையை வினைத்திறனான முறையில் முன்னெடுக்க முடியும்" என்றார்.



கொழும்பு புதுச்செட்டி தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் தத்தாத் ரேயர் ஜயந்தி தினம் ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது, ஆலய வளவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருஸ்தானுக்கு பிரதம அறங்காவலர் கலசாபிஷேகம் செய்து வைத்தார். பூஜை மற்றும் ஆகம கிரியைகளை பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த சிவாச்சாரியார் மேற்கொண்டிருந்தார். (படங்கள்: எஸ்.ராமதாஸ்)

## விக்னேஸ்வரன் போன்று...

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும் அவரை போல நாம் நேரத்துக்கு நேரம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொள்கை மாறுபவர்கள் கிடையாது. எடுத்த முடிவில் எமது கட்சி இறுதிவரை செயற்படும்.

இதேவேளை தமிழ் தரப்புகளுக்கு தீர்வை வழங்குவதாக கூறுகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொடர்ச்சியாக மார்ச் மாதம் தீர்வு திட்டத்தை வழங்குவதாக கூறியுள்ளார். இவ்வாறான நிலையில் பல ஏமாற்றங்கள் இருந்தாலும் நாம் சந்திப்புகளில் கலந்துகொள்கின்றோம். இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் பல விடயங்களை என்னால் முன்னெடுக்க முடிகின்றது.

தேர்தலை நடத்துவது தொடர்ச்சியாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் மூலம் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு தேர்தல் அரசியலை மேற்கொள்ளவுள்ளார். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதிகளில் கூட மோசடிகள் இடம்பெறுகின்றது" எனத் தெரிவித்தார்.

## இந்திய யாத்திரை...

சிந்தன பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் பல்வேறு திருத்தலங்களுக்கும் யாத்திரை செல்பவர்கள் முகக்கவசம் அணிந்து உரிய சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது அவசியமென்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்களின் போது சுகவீனம் ஏற்படுமானால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்வது முக்கியம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் மீண்டும் கொரோனா திரிபு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதால், நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களிலும் நபர்களிடம் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் வைரஸ் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ரோஹித முதுகல தெரிவித்துள்ளார். அதன் மூலம் நாட்டில் வைரஸ் திரிபு பரவல் தொடர்பில் அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா திரிபு, தற்போது சளி போன்ற சிறு நோய்களாகவே ஏற்படுகின்ற காரணத்தால் பரிசோதனை மேற்கொள்வதற்கான அவசியம் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மதுபான வகைகளின்...

வற் அதிகரிப்புடன் விலையை ஈடுகட்டுவதற்கும் அந்தந்த நிறுவனங்கள் எடுக்கும் நிதி முடிவுகளின் அடிப்படையில் தொடர்புடைய விலை தீர்மானிக்கப்படுமென்றும் கலால் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி விலை அதிகரிப்பு, நிறுவனத்துக்கு நிறுவனம் வேறுபடும் என்பதுடன், இந்த தயாரிப்புகளுக்கு ஏற்கனவே வற் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய சதவீதம் மட்டுமே அதிகரிக்கவுள்ளது. ஆனால், செயல்பாட்டு செலவு, மூலப்பொருட்கள் மற்றும் எரிசக்தி உள்ளிட்ட ஒட்டுமொத்த செலவின் மீதான உற்பத்தியின் அழுத்தத்துக்கு ஏற்ப விலை உயர்வை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முடிவு செய்யும்.

வரி அதிகரிப்பு ஏற்படும் போது, அதை மூன்று வழிகளில் வெளிப்படுத்தலாம். முழு அதிகரிப்பையும் நுகர்வோருக்கு கடத்துகிறது, பிந்தையது முழு அதிகரிப்பையும் உற்பத்தியாளருக்கு செலுத்துகிறது.

மூன்றாவது, அதிகரித்த செலவில் ஒரு பகுதியை மட்டும் நுகர்வோருக்கு வழங்குவது.

சந்தையின் பிரதான உற்பத்தியாளரான DCSL நிறுவனம் ஏற்கனவே 750 மில்லி, 375 மில்லி 50 ரூபாயும் மற்றும் 180 மில்லி மது வகைகளுக்கு 90 ரூபாயும், அதிக விற்பனையாகும் மது வகைகளின் விலை 20 ரூபாயும் அதிகரிக்கப்படுவதாக அறிவித்துள்ளது. அதிகரிக்கப்படவுள்ள வற் வரியுடன் சேர்த்து செய்யப்பட்ட விலை அதிகரிப்பே இது என்றும் கலால் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## 'மலையகம் 200'...

தமிழ்நாட்டு பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலையின் ஏற்பாட்டில் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா இந்த நினைவு அஞ்சல் முத்திரையை வெளியிட்டு வைத்தார்.

முதலாவது நினைவு அஞ்சல் முத்திரையை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் அந்த நிகழ்வின்போது பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவி அனுசியா சிவராஜா, பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதி தாவிசாளர் இராஜதுரை, தேசிய அமைப்பாளர் சக்திவேல், சிரேஷ்ட ஆலோசகர் மதியுகராஜா, இ.தொ.காவின் உப தலைவர்களான சிவஞானம், பிலிப்குமார், அசோக்குமார், பாஸ்கர், பிரதி பொதுச் செயலாளர் செல்லமுத்து உட்பட இ.தொ.காவின் பல முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# பாதாள கோஷ்டிகளின் கைவரிசைக்கு கைவிலங்கு!

சட்டம் ஒழுங்கை சீர்செய்து ஒழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்துவது வரவேற்புக்குரியது. இளைய தலைமுறையினரை சவால்மிக்க உலகுக்கு தயார்படுத்துவற்கு இந்த சட்ட ஒழுங்கும் சமூக ஒழுக்கமும் அவசியம். ஆட்கடத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் ஒப்பந்தக் கொலை என்பவற்றுக்கு சட்டச்சீர்குலைவுகளே காரணம். இதைக் குலைப்பதற்குப் பின்னாலுள்ள சக்திகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இது உலகையே உலுக்கியுள்ளது.

போதைவஸ்து மாபியாக்களின் பிடியில் சட்டம் சிக்கிவிட்டதா? இவ்வாறு எண்ணுமளவிலேயே நிலைமைகள் உள்ளன. நாளாந்தம் கைப்பற்றப்படும் கஞ்சா, அபின், சீஷ் மற்றும் கடலில் கைவிடப்பட்ட நிலையில் மிதக்கும் ஏஷ், கொகெய்ன் போன்ற போதைவஸ்துக்களின் விநியோகஸ்தர்கள் யார்? இவற்றின் வியாபாரத்தளமாக இலங்கை பயன்படுத்தப்படுகிறதா?

அரசியல் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்பு இந்த வியாபாரத்தில் இருக்கிறதா? இந்தக் கோணங்களில் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது அரசாங்கம். பிரான்ஸ் மற்றும் டுபாயிலிருந்து இந்த வியாபாரமும் போதைக்கடத்தலும் இயக்கப்படுகிறது. பாதாளக் கோஷ்டியினரின் முக்கிய புள்ளிகளை குறிவைக்கும் புலனாய்வு அதிகாரிகளைக் கூட கொல்லுமளவுக்கு, போதை மாபியாக்களின் பலம் நாட்டின் பல துறைகளுக்குள்ளும் புகுந்துள்ளது.



தனிப்பட்ட ரீதியில் பழி வாங்கப்படும் ஆபத்தை ஏற்படுத்தி, புலனாய்வு அதிகாரிகளை பின்வாங்கச் செய்யும் யுக்திகளை இந்த போதை மாபியாக்கள் பயன்படுத்துகின்றன. இதனால்தான், போதை ஒழிப்பு நடவடிக்கைகளில் புலனாய்வுப் பிரிவு பலவீனமடைவதாகவும் மக்கள் சந்தேகிக்கின்றனர். ஏன், அரசாங்கத்துக்கும் இந்த சந்தேகம் உள்ளது. இவ்வாறு சந்தேகத்திலுள்ள அரசாங்கம்தான், விசேட இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.



மாகந்துர மதுஷ், அங்கொட லொக்கா, பொடிலெஸ்ஸி மற்றும் கொஸ்கம சுஜி என்றெல்லாம் புனைப்பெயரில் பிரபல்யமாகியுள்ள இவர்களின் பூர்வீகத்தை புரிந்த பின்னர்தான், அரசாங்கம் இந்த "யுக்திய" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இந்நடவடிக்கையில், இதுவரை கைதானவர்கள், கைப்பற்றப்பட்டவைகள், பெறப்பட்டுள்ள தகவல்கள் அரசியல் வட்டாரத்தை கதிகலக்கியுள்ளது. போதைக் குற்றச்சாட்டுக்களில் கைதாகி சிறையிலுள்ளவர்களையும் தொடர்ந்து தூண்டுமளவுக்கு இவர்களின் தொடர்பாடல்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பாதாளக் கோஷ்டிகளின் பிரதான பொருளீட்டலாக இந்தப் போதை வியாபாரமுள்ளது. கோடிக்கணக்கில் குவியும் இந்தச் செல்வங்களை பங்கு பிரிப்பதில் ஏற்பட்ட பிளவுகளால்தான், பல குழுக்கள் ஏற்பட்டு உள்ளக மோதல்கள் உண்டாகியுள்ளன. இரகசிய தகவல்கள் கசிந்துவிடுவதை பாதுகாக்க முந்திக்கொள்ளும் இந்தக் குழுக்கள்தான், தனித் தனி நபர்களை கொன்றுவந்துள்ளன. சில கொலைகளை கண்டுகொள்ளாதிருக்க, உயர் அதிகாரிகளுக்கு கையூட்டுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்தாலி, டுபாய் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் வலையமைப்புள்ள இந்தப் போதைக் கோஷ்டிகளைக் கையாள்வதிலுள்ள கடினங்களை கச்சிதமாகக் கையாளவே "யுக்திய" விசேட இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பாகியுள்ளன. இளையோரின் எதிர்காலத்தை போதைக் கும்பலின் பிடியிலிருந்து விடுதலையாக்கும் அரசின் இத்திட்டம் பாகுபாடின்றி பாராட்டப்பட வேண்டும். பாராளுமன்றமே ஒன்றுகூடி தீர்மானித்த இவ்விடயம் வெற்றி பெற்று, சட்டம் ஒழுங்குள்ள சமூகம் உருவாக ஒவ்வொருவரது ஒத்துழைப்புகளும் அவசியம்.

**சுஐப்.எம்.காசிம்**



# குடும்பத்தோடு சிக்கிய 'குடு ரொஷான்'

போதைப்பொருள் வர்த்தகமும் பாதாள உலக செயற்பாடுகளும் இலங்கைக்கு மிகப்பெரிய சாபக்கேடாக மாறியுள்ளது. பாரியளவிலான போதைப்பொருள் வர்த்தகம் மூலமே பாதாள உலக குழுக்கள் பணபலம் படைத்தவர்களாக மாறுகின்றன.

பெரும்பாலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் டுபாய், இந்தியா போன்ற நாடுகளில் தலைமறைவாகியுள்ளனர். இத்தகைய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இந்தியாவுக்கும் பெரும் தலைவலியாக மாறிவருவதால் இவர்களை வலை விரித்து தேடும் நடவடிக்கைகள் மும்முரமாக தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

இதுதவிர இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளிலும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இவர்களது பணபலத்தினால் இந்நாடுகளில் சுதந்திரமாக சுற்றித் திரிகின்றனர். பிரான்ஸ் நாட்டில் இதுவரை 29 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இலங்கையில் அதிகரித்துள்ள போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றங்களை கட்டுப்பாட்டுக்குள்



கொண்டு வரும் நோக்கில் 'யுக்திய' என்ற பெயரில் விசேட சோதனை நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இடைக்கால பொலிஸ் மாஅதிபராக தேசபந்து தென்னக்கோன் பதவியேற்று, ஓரிரு தினங்களிலேயே இந்த சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாடு தழுவிய ரீதியில் பொலிஸார் 24 மணிநேர சோதனைகளை நடாத்தி வருகின்றனர்.

இதனால் சிறைச்சாலைகள் கைதிகளால் நிரம்பி வழிவதாக கூறப்படுகின்றது. இதுவரை 17,837 பேருக்கும் மேல் கைது செய்யப்பட்டுள்ளனர். 10 கிலோ 510 கிராம் ஹெரோயின், 06 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள், 288 கிலோகிராம் கஞ்சா, 118 கிலோ 50 கிராம் மாவா, 35 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. 850 சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன்,மேலும் 186 சந்தேகநபர்களிடம் சட்டவிரோத சொத்துகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதைக்கு அடிமையான 1187 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகம் பட்டியலிட்டுள்ள சந்தேகநபர்களில் 4,665 பேரில் 1,375 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். மொனராகலை – அம்பேகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடவலவ சரணாலயத்திற்கு உட்பட்ட வெஹெரகொல்ல பிரதேசத்தில் நான்கரை ஏக்கர் பரப்பளவில் வளர்ந்திருந்த கஞ்சா தோட்டமொன்றும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

**அவருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் சொத்துகள் பறிமுதல்**

இதனால் யுக்திய சுற்றிவளைப்புகளுக்கு அஞ்சி பலம்பொருந்திய பாதாள உலக குற்றவாளிகள் குடும்பத்துடன் தலைமறைவாகியுள்ளனர். சாதாரண மக்கள் சுற்றுலா மற்றும் ஓய்வெடுப்பதற்காக செல்லும் இடங்களான கதிர்காமம், எல்ல, நுவரெலியா, அநுராதபுரம் போன்ற பிரதேசங்களில் பாதாள உலகின் பிரபல்ய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தங்கியிருப்பதாக கூறப்படுகிறது. இவர்கள் சந்தேகம் வராத வகையில் குடும்பங்களுடன் இப்பகுதிகளில் தங்கியிருப்பதாக தெரியவருகின்றது. அந்தவகையில் குடும்பத்துடன் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணம் சென்று தங்கியிருந்த பலம் பொருந்திய பாதாள உலகக் குற்றவாளி ஒருவரை வரக்காபொல பொலிஸார் யுக்திய சுற்றிவளைப்பின் கீழ் கடந்த 26ஆம் திகதி கைது செய்தனர்.

இவர் வேறு யாருமல்ல கொழும்பு மட்டக்குளி பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் பிரதான பாதாள உலக குற்றவாளியான ' குடு ரொஷான்'. தெமட்டகொட பாதாள உலக போதைப்பொருள் கடத்தல் காரர்களின் உதவியுடனே குடு ரொஷான் செயற்பட்டு வருகின்றார். 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி மட்டக்குளியில் பிரபலமான போதைப்பொருள் வியாபாரியான சுட்டி உக்குன் உட்பட ஐவரை சுட்டுக் கொன்றதன் மூலம் குடு ரொஷான் மிகப்பெரிய பாதாள உலக நபராக மாறினார். 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் போதைப்பொருள் வர்த்தகத்தில் தனக்கு போட்டியாகவிருந்த இருவரை மாதம்பிட்டி மயானத்தில் வெட்டிக் கொலை செய்த குற்றத்துக்காக கைதுசெய்யப்பட்ட போதும் பணபலம், அரசியல் செல்வாக்கு காரணமாக அதிலிருந்து குடு ரொஷான் தப்பித்து சுதந்திரமாக நடமாடினார். பொலிஸ் கெடுபிடிகளிலிருந்து சூட்சுமமான முறையில் தப்பிக்கும் வித்தை தெரிந்தமையால் நாட்டிலிருந்து தப்பிச் செல்லாது இங்கிருந்தே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டார். மட்டக்குளியை மையமாக கொண்டு தனது போதைப்பொருள் சாம்ராஜ்ஜியத்தை கட்டியெழுப்பினார்.

இந்நிலையிலேயே 'யுக்திய' சுற்றிவளைப்பு ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து குடும்பத்தினருடன் சுற்றுலா செல்லும் பாணியில் கடந்த 20ஆம் திகதி நுவரெலியாவுக்கு செல்கின்றார். அங்கு ரூ. 30000 க்கு நட்சத்திர ஹோட்டலொன்றில் அறையை பெற்றுக் கொண்டு சில நாட்கள் தங்கியிருந்த குடு ரொஷான், கடந்த 26ஆம் திகதி மீண்டும் கொழும்பு நோக்கி பயணமானார். இந்நிலையில், இதுதொடர்பில் கேகாலை புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைக்கவே அவர்கள் வரக்காபொல பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அதன்படி துரிதமாக செயற்பட்ட வரக்காபொல பொலிஸார் கொழும்பு, கண்டி பிரதான வீதியின் அகுருவெல்ல என்ற இடத்தில் வீதித் தடையை ஏற்படுத்தி சந்தேகத்துக்கிடமான வாகனங்களை சோதனையிட்டனர். இதன்போதே அகுருவெல்ல சந்தியை குடு ரொஷான் பயணித்த கார் கடந்ததும் பொலிஸார் வாகன தடுப்பை பயன்படுத்தி வழக்கமான முறையில் காரை நிறுத்தினர். பொலிஸாரின் உத்தரவுக்கு இணங்க காரை நிறுத்திய போதே காரின் பின்னால் வந்த உடனடியாக வேனும் நிறுத்தப்பட்டது. காரில் இருப்பவர்களின் உறவினர்கள் தான் வேனிலும் இருக்கின்றனர் என்பது இதன்போது தெரியவந்தது.

பொலி ஸாருக்கு ஆரம்பத்தில் கிடைத்த தகவல்களில் இக்குழுவில் பாதாள உலக குற்றவாளி குடு ரொஷன் இருந்ததாக கூறப்படவில்லை. சந்தேகத்திற்கிடமான குழுவினர் இருப்பதாகவும் அவர்களிடம் போதைப்பொருள் இருப்பதாகவுமே தகவல் வழங்கப்பட்டது. அதன்படி, காரில் இருந்தவர்களை சோதனையிட்டபோது, அதில் வந்தவர்களில் ஒருவரிடம் ஹெரோயின் போதைப்பொரு ள் இருப்பது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து சந்தேகம் வலுக்கவே, வானில் இருந்தவர்களையும் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் சோதனையிட்டனர். அவர்களில் ஒருவரிடம் போதைப்பொருள் இருந்தது. அவர்கள் இருவரிடமும் கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருளின் அளவு 01 கிராம் 875 மில்லிகிராம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதன்படி 10 ஆண்கள், 05 பெண்கள் மற்றும் 08 சிறுவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

எனினும் கைதுசெய்யப்பட்டவர்களில் பாதாள உலக நபரான குடு ரொஷான் இருந்ததை வரக்காபொல பொலிஸ் அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை. இவர்களின் தேசிய அடையாள அட்டையின் பிரகாரம் அவர்கள் மட்டக்குளி சமித்புர பிரதேசத்தில் வசிப்பவர்கள் என தெரியவந்தமையால், பெயர்ப் பட்டியலை தயாரித்து அவர்களை அடையாளம் காண்பதற்காக மட்டக்குளி பொலிஸ் நிலையத்துக்கு வரக்காபொல பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

மட்டக்குளிய பொலிஸாரின் தகவல்களின் படியே குடு ரொஷான் கைது செய்யப்பட்டுள்ளமை தெரிய வருகிறது. மேலதிகாரிகளின் ஆலோசனையின் பேரிலும் நீதிமன்றத்தின் அனுமதியுடனும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போதே நுவரெலியா சுற்றுலாப் பயணம் பற்றிய தகவல்கள் கசிய தொடங்கின.

குடு ரொஷான் கைது செய்யப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் பொலிஸ் உயர் அதிகாரிகள் ஜாஎல மற்றும் மட்டக்குளியிலுள்ள அவருக்கு சொந்தமானதாக கூறப்படும் வீடுகள், சொத்துக்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கையில்



ஈடுபட்டனர். சொத்துக்களை தடை செய்வதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை ஏற்கனவே சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதுடன், சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது.



**வசந்தா அருள்ரட்டணம்**

**2022 ஆம் ஆண்டில் 'அரகலய' என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் பின்னர் நாடு எதிர்கொண்ட பாரியதொரு அச்சுறுத்தல் மிக்க சவாலாக போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழு–க்களின் நடவடிக்கைகள் காணப்பட்டன.**





# போதைப்பொருளை ஒழித்துக் கட்டுவதில் நாடெங்கும் தொடரும் தீவிரமான வேட்டை!

## மாணவர்களை இலக்கு வைக்கும் குற்றவாளிகளைக் கண்டறியுமாறு கண்டிப்பான உத்தரவு!



நாடு எதிர்கொண்ட பொருளாதாரப் பின்னடைவு மற்றும் அரசியல் ரீதியாக ஏற்பட்ட குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்ட பாதாள உலகக் குழுக்களும், போதைப்பொருள் வர்த்தகக் கும்பல்களும் இலங்கையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கின.

இதன் விளைவாக போதைப் பொருள் பாவனை அதிகரித்திருந்தது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். குறிப்பாக பாடசாலை செல்லும் பிள்ளைகள் மற்றும் இளைஞர், யுவதிகள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து விட்டது என்ற விமர்சனங்களும், இவற்றைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டுக்களும் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தன.

போதைப்பொருள் வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனப் பொலிஸார் மீது குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்பட்டன.

மறுபக்கத்தில், பொலிஸ்மா அதிபர் நியமனம் குறித்த அரசியல் தீர்மானங்களும் விமர்சனங்களுக்கு உள்ளாகின. முன்னாள் பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்னவுக்கு பதவி நீடிப்புக்கள் வழங்கப்பட்டு வந்ததுடன், புதியதொருவர் நியமிக்கப்படாமல் இருந்தார்.


இந்த நிர்வாக ரீதியான குழப்பங்களும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு சாதகமாகிப் போயிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே பல்வேறு இழுபறிக்குப் பின்னர் பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டார். அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான நியமனத்தை வழங்கினார்.

போதைப்பொருள் ஒழிப்பு என்ற பாரியதொரு பொறுப்பு பதில் பொலிஸ்மா அதிபரின் தோள்களில் சுமத்தப்பட்டது. விரைவில் இதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந்த அவர், அதனை நடைமுறையிலும் செயற்படுத்தத் தொடங்கினார்.

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக 'யுக்திய' என்ற நடவடிக்கையை அவர் ஆரம்பித்தார். போதைப்பொருள் பயன்பாடு, போதைப்பொருள் வியாபாரம், சட்டவிரோத செயற்பாடுகள் என பல்வேறு குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களை நாடு முழுவதிலும் தேடுதல் நடத்தி அவர்களைக் கைது செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

போதைப்பொருள் பாவனை பாடசாலை மாணவர்களைப் பாதித்திருப்பது தொடர்பில் அக்கறை காண்பித்துள்ள பதில் பொலிஸ்மா அதிபர் அதற்கான தடுப்பு நடவடிக்கையையும் அறிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் 500 மீட்டர் சுற்றளவில் எவ்வாறான போதைப்பொருள் செயற்பாடும் இருக்கக் கூடாது எனப் பொலிஸாருக்கு அவர் அறிவித்துள்ளார். பாடசாலை விடுமுறையை முடித்துக்கொண்டு பாடசாலை செல்லும் மாணவர்களுக்குப் போதையற்ற சுற்றுச்சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது அவருடைய கட்டளையாகும்.



### நாட்டின் பல பகுதிகளிலும் போதைவஸ்துக் குற்றங்களுடன் தொடர்புடைய ஏராளமானோர் கைது!

குழந்தைகளை இலக்காகக் கொண்ட போதைப்பொருட்கள் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் பல்வேறு தெற்காசிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வர ஆரம்பித்தன. இந்தப் பொருட்களை இறக்குமதி செய்வதில் சில உள்ளூர் அரசியல்வாதிகள் முக்கிய முகவர்கள் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டது.

அந்த நாடுகளில் அந்தப் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன, ஆனால் இலங்கை மற்றும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் 'தொழிற்சாலைகள்' உள்ளன.

இவ்வாறான பின்னணியில் யுக்திய நடவடிக்கையின் ஊடாக நாளாந்தம் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்படுவதுடன், போதைப்பொருள் வியாபாரிகளுக்குச் சொந்தமான இலட்சக்கணக்கான சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன.

கடந்த 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் இதுவரை 14 ஆயிரத்துக்கும் அதிகமான சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 2024 ஜூன் இறுதியில் நாட்டில் அனைத்து போதைப் பொருள் செயற்பாடுகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன என்ற செய்தியுடன் இந்த நடவடிக்கை முற்றுப்பெறும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அறிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்கால சந்தியின் அழிவுக்குக் காரணமாக அமையக்கூடிய இந்தப் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவதும் அவசியமாகும். அது மாத்திரமன்றி மிகவும் சிறியளவு தொகை போதைப்பொருளை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்களை விட பாரியளவில் போதைப்பொருளை நாட்டுக்கு கடத்தும் நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் கடத்தல் வலையமைப்புக்கள் முறியடிக்கப்படுவதே காலத்தின் தேவையாகும்.

இவ்வாறான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேநேரம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் சட்டத்திட்டங்கள் அமைக்கப்படுவதும் அவசியமாகும். போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் வியாபாரிகளின் செயற்பாடுகளினால் அனைத்து விதமான ஆபத்துக்களையும் எதிர்கொள்வோர் சாதாரண மக்கள் ஆவர். எனவே அவர்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டியது அவசியமாகும்.

போதைக்கு அடிமையானவர்களின் 'புனர்வாழ்வு' நேரத்தையும், பணத்தையும், வளங்களையும் விரயமாக்குவதாக பலர் கருதுகின்றனர், ஏனெனில் அவர்களில் 99 சதவீதம் பேர் மறுவாழ்வு மையங்களில் இருந்து திரும்பியவுடன் தங்கள் 'பழக்கத்தை' மீண்டும் தொடங்குகிறார்கள். கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள், பெரும்பாலான கைதிகள் இன்னமும் சமூகத்திற்கு மீளவிடுவிக்கப்படுவதற்கு போதுமான தகுதியுடையவர்களாக இல்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றன.

மறுவாழ்வு செயல்முறைக்குப் பிறகு அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து, இரண்டாவது மற்றும் மூன்றாவது முறை அதே குற்றத்திற்காக பிடிபட்டால் கடுமையான தண்டனைகளை விதிக்க ஒரு வழிமுறை இருக்க வேண்டும்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட போதைக்கு அடிமையான ஒவ்வொருவரின் நடத்தைக்கும் ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய உறவினர் பொறுப்பேற்க வேண்டும்.

**பி.ஹர்ஷன்...**

# தவிர்க்க இயலாத நிலையில் மற்றொரு யுத்தநிறுத்தத்துக்கான தீவிர முயற்சிகள்!



அழிவுகளை நிறுத்துவதில் உலகநாடுகள் பிரயத்தனம்!

**காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்துவரும் யுத்தம் 80 நாட்களுக்கும் மேலாக நீடித்துவரும் நிலையில், மற்றொரு யுத்தநிறுத்தத்தின் தேவையும் அவ–சியமும் பெரிதும் உணரப்பட்டிருக்கிறது. இஸ்ரேலின் ஜனாதிபதி ஐசாக் ஹேர்ஸொக் தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு தயார் என அறிவித்துள்ள நிலையில், அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் தொடர்பு கொண்டு இஸ்ரேல்–ஹமாஸ் யுத்தநிறுத்தத்திற்கான மத்தியஸ்தராக செயற்படும் கட்டார் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து கைதிகள் பரிமாற்றத்திற்கான மற்றொரு போர்நிறு–த்தத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.**



கட்டார் அமீர்

இந்த யுத்தத்தினால் இற்றைவரை 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காஸாவில் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பகுதியினர் சிறுவர்களும் பெண்களுமாவர். 56 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காஸாவே சாம்பல் மேடாகவே காட்சியளிக்கிறது.

சர்வதேசத்தினதும் பணயக் கைதிகளின் உறவினர்களதும் அழுத்தம் மற்றும் எகிப்தின் ஒத்துழைப்பின் ஊடாக கட்டார் முன்னெடுத்த கடும் முயற்சி என்பவற்றின் பயனாக கைதிகள் விடுவிப்புக்கான நான்கு நாட்கள் தற்காலிக யுத்தநிறுத்தம் இஸ்ரேலினதும் ஹமாஸினதும் இணக்கப்பாட்டுடன் ஒக்டோபர் 25 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. அது இரண்டு தடவை நீடிக்கப்பட்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை அமுலில் இருந்தது.

இக்காலப்பகுதியில் ஹமாஸ் பிடியிலிருந்த 81 இஸ்ரேலிய பிரஜைகளும் 23 தாய்லாந்து பிரஜைகளும், ஒரு பிலிப்பைன்ஸ் பிரஜையும் அடங்கலாக 105 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இவர்களுக்கு பதிலாக இஸ்ரேலிய சிறைகளில் சிறை வைக்கப்பட்டிருந்த பெண்களும் சிறுவர்களும் அடங்கலாக 240 பலஸ்தீன கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

இப்போர் நிறுத்தத்தை மேலும் நீடிக்கும் வகையில் கட்டாரில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம், 129 பணயக்கைதிகள் ஹமாஸ் பிடியில் எஞ்சியிருக்கும் நிலையில் இஸ்ரேல் நவம்பர் முதலாம் திகதி மீண்டும் கடும் யுத்தத்தை ஆரம்பித்தது.

இந்த யுத்தத்திற்கு எதிராக காஸாவில் ஹமாஸ் போராடும் நிலையில் இப்போரை உடனடியாக நிறுத்துமாறும் காஸாவுக்கு தங்குதடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் செல்ல இடமளிக்குமாறும் கோரி லெபனானின் ஹிஸ்புல்லா, யெமனின் கௌதிகள், ஈராக்கின் போராளிக் குழுக்களும் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை முன்னெடுத்துள்ளன.

இஸ்ரேல் யுத்தநிறுத்தத்தை முறித்துக்கொண்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து 7 வாரங்கள் கடந்து விட்டன. இற்றைவரையும் ஒரு பணயக் கைதியையும் இஸ்ரேல் விடுவிக்கவில்லை. ஆனால் ஹமாஸ் பிடியிலிருந்து தப்பித்த மூன்று பணயக்கைதிகளை காஸாவின் சுரஜயா பகுதியில் டிசம்பர் 16 ஆம் திகதி இஸ்ரேலியப் படையினரே சுட்டுக்கொன்றனர்.

'அவர்கள் சட்டையின்றி இருந்ததாகவும் ஒருவர் வெள்ளைக்கொடியைக் கையில் ஏந்திய வண்ணம் காணப்பட்டதாகவும் தெரிவித்த இஸ்ரேலிய இராணுவத்தினர், ஹமாஸ் போராளிகள் சிவில் உடையில் செயல்பட்டு ஏமாற்றும் தந்திரங்களைப் பயன்படுத்துகிறார்களோ எனக் கருதி சுட்டுக்கொன்றதாகவும், இது தவறுதலாக இடம்பெற்றுவிட்டது எனவும் குறிப்பிட்டு இஸ்ரேலிய மக்களிடம் மன்னிப்பும் கோரினர்.

இதேவேளை காஸாவின் ஜபாலியா பகுதியில் கடந்த 22 ஆம் திகதி இஸ்ரேல் மேற்கொண்ட கடும் தாக்குதல்களைத் தொடர்ந்து ஐந்து இஸ்ரேலியப் பணயக்கைதிகளுடனான தொடர்பை இழந்துள்ளதாகவும் அவர்கள் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஹமாஸ் அறிவித்தது.

அதனைத் தொடர்ந்த இரண்டு நாட்களில் குறித்த ஐந்து பணயக்கைதிகளின் பிரேதங்களையும் ஜபாலியா பிராந்தியத்திலுள்ள சுரங்கமொன்றில் இஸ்ரேலிய படையினர் கண்டெடுத்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் ஹமாஸ், யுத்தம் நீடிக்கும் வரையும் எந்தவொரு பணயக்கைதியையும் உயிருடன் மீட்க முடியாது என்றுள்ளது.

அதனால் ஹமாஸ் பிடியிலுள்ள பணயக்கைதிகளின் உறவினர்களும் நண்பர்களும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி கைதிகளை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

யுத்தநிறுத்தத்தில் இருந்து வெளியேறி போரைத் தொடங்கிய இஸ்ரேல், சில நாட்களுக்குள் யுத்தநிறுத்தத்தின் தேவையை மீண்டும் உணர்ந்து கொண்டது. அதனடிப்படையில் பணயக்கைதிகளை விடுவிக்கவென மற்றொரு யுத்தநிறுத்தத்திற்கான முயற்சிகளை கடந்த நவம்பர் நடுப்பகுதி முதல் ஆரம்பித்தது. இதன் நிமித்தம் இஸ்ரேலிய உளவு அமைப்பான மொஸாட்டின் தலைவர் டேவிட் பார்னே, அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு அமைப்பின் தலைவரையும், கட்டார் நாட்டு தலைவர்களையும் அவ்வப்போது சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தார்.

குறிப்பாக கடந்த 16 ஆம் திகதி நோர்வேக்கு விஜயம் செய்திருந்த கட்டார் பிரதமர் அப்துர் ரஹ்மான் அல் தானியை ஒஸ்லோவுக்கு சென்று சந்தித்த மொஸாட் தலைவர், கட்டார் பிரதமர் 18 ஆம் திகதி போலந்துக்கு விஜயம் செய்திருந்த போது அந்நாட்டு தலைநகர் வார்சோவுக்கு சென்றும் அவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

### எகிப்து உளவுப் பிரிவு தலைவருடன் ஹமாஸ் தலைவர் ஹனிய்யா சந்திப்பு; கட்டார் பிரதமருடன் மொஷாட் தலைவர் ஒஸ்லோவில் பேச்சு!



இஸ்ரேல் ஜனாதிபதி



மொசாட் தலைவர்



நெதன்யாகு

### தற்காலிக போர்நிறுத்தத்திற்கு தயார் என்கிறார் இஸ்ரேல் ஜனாதிபதி; மற்றொரு போர்நிறுத்த ஏற்பாடுகளை துரிதப்படுத்த பிரதமர் நெதன்யாகு கோரிக்கை

இந்தச் சூழலில் இஸ்ரேல் ஜனாதிபதி, பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான மற்றொரு தற்காலிக யுத்தநிறுத்தத்திற்கு தயாரென கடந்த 19 ஆம் திகதி அறிவித்தார். இந்நிலையில் ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயீல் ஹனிய்யா கடந்த 20 ஆம் திகதி இல் எகிப்துக்கு விஜயம் செய்து எகிப்தின் உளவுப் பிரிவு தலைவருடன் புதிய யுத்தநிறுத்தம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இவ்வாறான சூழலில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த ஞாயிறன்று (24ஆம் திகதி) அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு யுத்தநிறுத்தத்திற்கான முயற்சிகளில் முன்னேற்றங்கள் காணப்படாதுள்ளன. அதனால் கட்டார் மத்தியஸ்தர்கள் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து மீண்டும் கைதிகள் பரிமாற்றத்திற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஹமாஸ், கைதிகள் பரிமாற்றத்திற்கான யுத்தநிறுத்தத்திற்கு புதிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், 'காஸா மீதான யுத்தம் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும், காஸாவில் இருந்து இஸ்ரேலிய படையினர் திரும்பப் பெறப்பட வேண்டும். மூடப்பட்டுள்ள காஸாவுக்கான நுழைவாயில் பாதைகள் திறந்துவிடப்பட வேண்டும், மனிதாபிமான உதவிகள் காஸாவுக்குள் வந்து சேர இடமளிக்க வேண்டும்' என்பனவே அந்த நிபந்தனைகளாகும்.


இவை இவ்வாறிருக்க, நுவா அகர்மானி என்ற பணயக்கைதியை ஹமாஸ் பிடியிலிருந்து விடுவிக்க உதவுமாறு சீன ஜனாதிபதியிடம் பிரதமர் நெதன்யாகு கேட்டுள்ளார். இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் கட்டார் அமீர் ஷெய்க் தமீம் பின் ஹமட் அல் தானியுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு, 'அமெரிக்க குடிமக்கள் உட்பட ஹமாஸ் பிடியில் எஞ்சியிருக்கும் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதற்கான அவசர முயற்சிகள் குறித்தும் காஸாவுக்கான மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பதற்கான முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த அனைத்து முயற்சிகளையும் நோக்கும் போது விரைவான யுத்தநிறுத்தத்தின் தேவையும் முக்கியத்துவமும் உணரப்பட்டிருப்பது தெளிவாகிறது. 80 நாட்களுக்கும் மேலாக காஸா மீது யுத்தத்தை முன்னெடுத்தும் ஒரு பணயக்கைதியையும் யுத்தத்தின் ஊடாக விடுவிக்கக் கிடைக்கவில்லையெனில் இதன் பின்னரும் ஒரு யுத்தம் தேவையா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதனால் யுத்தத்தை நிறுத்தி அனைத்து கைதிகள் விடுவிக்க வேண்டும். அதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் விரைவாக வெற்றிபெற வேண்டும். அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.



**மர்லின் மரிக்கார்...**




# கடந்து போன துன்பங்களும் எதிர்கால நம்பிக்கைகளும்!

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**கடந்த 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியானது மக்கள் வரிசை, வீதியில் இறங்கிப் போராட்டம், 'அரகலய' எனக் குழப்பம் நிறைந்த ஆண்டாக அமைந்தாலும், 2023ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் அமைதியான ஆண்டாகவே அமைந்திருந்தது.**

இன்றுடன் எம்மைக் கடந்து செல்கின்ற 2023 ஆம் ஆண்டு ஓரளவு அமைதியான ஆண்டாக முடிவடைந்திருக்கின்றது. ஆனால் நாளை பிறக்கப் போகின்ற 2024ஆம் ஆண்டு இலங்கையைப் பொறுத்தவரையில் பரபரப்புமிக்க, குறிப்பாக அரசியல் ரீதியில் பரபரப்புமிக்க ஆண்டாக அமைவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.



**பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடும், அரசியல் வீழ்ச்சியிலிருந்து ஐ.தே.கவும் மீண்டெழுகின்றன. எதிர்காலத் தேர்தல்களை துணிச்சலுடன் சந்திக்க தயாராகின்றது ஐ.தே.க! பல்வேறு கட்சியினரும் ஐ.தே.கவுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம்!**

புதிய வருடமானது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் என்பன நடத்தப்படக் கூடிய ஆண்டாக இருப்பதால், நாட்டின் அரசியல் கட்சிகள் இரு தேர்தல்களிலும் மக்களை தம்பக்கம் ஈர்த்தெடுத்து, மேலாதிக்கத்தைப் பெறுவதற்கான முயற்சிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளன.

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒத்திவைத்தமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என அவர் அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்புகளும், பல்வேறு அரசியல் கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாடுகளும் ஏறக்குறைய அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை எதிர்பார்த்து ஒருவருக்கொருவர் கூட்டணி ஏற்படுத்தும் சூழ்நிலைக்கு வழிவகுத்துள்ளன.

ஒரு சில கட்சிகள் கூட்டணி அமைப்பதற்கான இணக்கப் பேச்சுக்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ள போதும், ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் மாத்திரம் தனித்துப் போட்டியிட விரும்புவதாகத் தெரியவருகிறது.

நாடு எதிர்கொண்டிருந்த நிலைமைகளிலிருந்து மீண்டு வந்து ஓரளவுக்கேனும் தலைதூக்கும் நிலைமைக்கு நாட்டைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடுமையான முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்.

இருந்தபோதும் வரிகளை அதிகரிப்பதற்கும். பணவீக்கத்தை அதிகரிப்பதற்கும் இடமளித்திருப்பதாக விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படுகின்றன. இருந்தபோதும், நாடு பொருளாதார ரீதியில் மேலும் பாதிப்புக்கு உள்ளாகாமல் தடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க அவரால் முடிந்தது.

அவருடைய இந்த முயற்சிகளின் காரணமாக 2022ஆம் ஆண்டில் நாட்டு மக்கள் அனைவரும் நீண்டநேரமாக வரிசையில் காத்திருந்த காட்சிகள் இப்போது தொலைதூர நினைவாக மாறியுள்ளன. அரசாங்கத்தின் முயற்சியின் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மாத்திரமன்றி ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் இந்தியா ஆகியவற்றிலிருந்தும் நிதி ஒத்துழைப்புக்களை எம்மால் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசெல்லும் அதேநேரத்தில், அரசியல் ரீதியாக மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த தனது கட்சியை மீளெழுச்சி பெறச் செய்யும் விடயத்திலும் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருப்பதையும் காண முடிகிறது.

பல தசாப்தங்களுக்கு மேலாக முதல் இரண்டு இடத்தில் காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கி 2020 ஆம் ஆண்டு இரண்டு சதவீதத்திற்குக் குறைந்தது. இந்தக் கட்சி தற்பொழுது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவை மாத்திரம் கொண்ட கட்சியாகக் காணப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தெரிவான அமைச்சர்கள் ஹரின் பெர்னாந்து மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரும் மீண்டும் தமது தாய்க் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர். இவ்வாறான நிலையிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த தேர்தலொன்றை எதிர்கொள்வதற்கான வியூகத்தை அக்கட்சி வளர்க்கத் தொடங்கியுள்ளது.

ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து தமது கட்சியை மீளக்கட்டியெழுப்பும் நோக்கிலான கூட்டங்களை ஆரம்பிக்கவிருப்பதாக அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். ஆனால் மற்றைய அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் மீளமைப்புப் பணிகள் மந்தகதியிலேயே காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான பின்னணியிலேயே கட்சியின் இயந்திரத்தை மீண்டும் செயற்படுத்தவும், மேலும் தாமதமின்றி தேசிய ரீதியாக நடத்தப்படக் கூடிய தேர்தலொன்றுக்குத் தயாராகுமாறும் தனது கட்சியின் பிரதானிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். இருந்தபோதும், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு அதிகார ரீதியிலான பதவிகள் இல்லாத நிலையில் மக்கள் மத்தியில் செல்ல முடியுமா என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கையின் தேர்தல் அரசியலை எடுத்து நோக்குகையில், அதிகாரத்தில் இருக்கும் கட்சியில் நபர்களாலேயே தேர்தலில் சிறப்பாக செயற்பட முடியும் என்ற தோற்றப்பாடு காணப்படுகிறது. கடந்த காலத் தேர்தல்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் பிரதமர் பதவியையும், பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிவினால் ஜனாதிபதி பதவியையும் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுன அமைச்சரவையுடன் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றி வருவதால், அந்தக் கட்சியின் ஆதரவையும் பெற்றுக் கொண்டு பொதுவேட்பாளராகத் தன்னை முன்னிலைப்படுத்துவதற்கு ஆர்வமாக இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் உறுப்பினர்களையும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. ஏற்கனவே ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இதற்கு சாதகமாகப் பதிலளிப்பார்கள் என்றே நம்பப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்களைப் பொறுத்தவரை இவ்வாறான தெரிவொன்றுக்குச் செல்லக் கூடியவர்கள் உள்ளனர் என்பது பகிரங்கமான விடயமாகும். இறுதியில் அவர்கள் ஜனாதிபதியுடன் இணைவார்களா என்பது, ஜனாதிபதித் தேர்தலில் அவரது வெற்றி வாய்ப்புகளை அவர்கள் எவ்வாறு மதிப்பிடுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அமையும்.



**எதிர்காலத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்நோக்கவிருக்கும் பாரிய சவால்! அதன் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், தம்மை முன்னிலைப்படுத்துவதில் அதிக ஆர்வம்! ஐக்கிய மக்கள் சக்திக் கூட்டணியைக் கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பது சிக்கலான விடயம்!**

இது ஒருபுறமிருக்க, தற்பொழுது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கு பாரியதொரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மீது ஏற்பட்டுள்ள மக்கள் ஆதரவு பிரதான எதிர்க்கட்சியாகத் தம்மை நிலைநிறுத்துவதில் ஐக்கிய மக்கள் சக்திக்கு பாரிய சவாலாகவே அமையும் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

அதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தன்னை தேசியத் தலைவராக நிலைநிறுத்திக் கொள்ள இயலாத நிலையில் உள்ளாரென்பதையும் மறுப்பதற்கில்லை. அவரால் முன்வைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் விடுக்கப்பட்ட அறிக்கைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமன்றி, அவரது கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வும் மிகவும் பலவீனமான மட்டத்திலேயே காணப்படுகிறது. அது மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணிக்குள் பல்வேறு தலைவர்களும் உள்ளனர். குறிப்பாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தன்னைத் தனித்துவமாக அடையாளப்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்திருந்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் அவர் தனக்கான பிரசாரங்களை தனியாக முன்னெடுத்திருந்தார். அவர் மாத்திரமன்றி பாட்டலி சம்பிக ரணவக்க போன்றவர்களும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒரு சில விடயங்களில் முரண்பாடான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். இருந்தபோதும், பொதுத் தேர்தல் என வரும்போது அவர்கள் அனைவரும் இணைந்து கூட்டணி அமைப்பார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவில் தெரிவாகி தற்பொழுது எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள டளஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, முன்னாள் வியத்மக உறுப்பினர்கள் எனப் பலரும் எதிர்க்கட்சித் தலைவருடன் கூட்டணி அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இவர்களில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ போன்ற குழுவினர் இணைவார்களா என்பது உறுதியாகாத போதும் ஏனையவர்கள் இணைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**அனைத்துக் கட்சிகளும் தத்தமக்குரிய பாதையை வகுத்துச் செல்வதால், தனித்துப் போட்டியிடுவதே ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் திட்டம்!**

இவ்வாறான அரசியல் நகர்வுகளின் இறுதியில் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் எந்தவொரு தரப்பினருடனும் கூட்டணி அமைக்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அனைத்துத் தரப்பினர் மீதும் விமர்சனங்களை முன்வைத்துள்ள அவர்கள், எவருடனும் கூட்டணி அமைக்க முடியாதுள்ளனர்.

அவ்வாறு கூட்டணி அமைத்தால் அவர்களுக்கு மக்கள் வாக்களிப்பார்களா என்ற ஐயப்பாடுகளும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மாற்றமொன்றுக்காக மக்கள் தமக்கு வாக்களிப்பார்கள் என்ற கணிப்பீடுகளை அவர்கள் மேற்கொண்டுள்ள நிலையில், கடந்தகால வரலாறுகள் அவர்கள் தொடர்பில் கசப்பான அனுபவங்களை வழங்கியிருப்பதால் மக்கள் மத்தியில் காணப்படும் சந்தேகப் பார்வை இன்னமும் அகலவில்லையென்றே கூற வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவை களமிறக்கப் போவதாக அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், பொதுத்தேர்தலில் எவ்வாறான முயற்சிகளை அவர்கள் முன்னெடுக்கப் போகின்றனர் என்பதும் தெளிவாக இல்லை.







இதுபோன்று, பல்வேறு அரசியல் காய்நகர்த்தல்கள் மற்றும் அரசியல் செயற்பாடுகள் நிறைந்த பரபரப்புச் சூழல் நிறைந்த ஆண்டாகவே பிறக்கவிருக்கும் 2024ஆம் ஆண்டு அமையப் போகின்றது என்பதே எதிர்பார்ப்பாகும்.

எவ்வாறான பரபரப்பு அரசியல் இருந்தாலும் பொருளாதார ரீதியில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் முன்முயற்சிகளே எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து முயற்சிகளும் தலைகீழாகச் சென்று நாடு மிகவும் மோசமாக நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்பதையும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.



# டெங்கு: மக்களின் பங்களிப்பின்றி கட்டுப்படுத்த முடியாத நோய்

மர்லின் மரிக்கார்

இலங்கையில் கடந்த சில மாதங்களாக சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. இக்காலநிலை ஒரிரு நோய்கள் பரவுவதற்கும் சில நோய்கள் தலைதூக்குவற்கும் சாதமாக அமைகின்றன. இதனை அண்மைக் காலமாக அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் மழைக்காலநிலையுடன் சேர்த்து தலைதூக்கும் நோயாக டெங்கு வைரஸ் காய்ச்சல் விளங்கி வருகிறது. இது உயராபத்து மிக்க நோயான போதிலும் அதனை தவிர்த்துக் கொள்ளலாம் அல்லது கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

டெங்கானது ஒரு வகை வைரஸ் ஆகும். இது தானாகப் பரவக்கூடிய பண்பைக் கொண்ட ஒன்றல்ல. அதன் பரவுதலுக்கு காவி மிகவும் இன்றியமையாதது. காவி இன்றி பரவ முடியாத வைரஸே டெங்கு. இவ்வாறான பண்பைக் கொண்டுள்ள இவ் வைரஸின் காவியாகவே நுளம்பு செயற்படுகிறது. நுளம்பில் பல இனங்கள் உள்ளன.



- கவனயீனத்தையும் அசிரத்தையையும் தனக்கு சாதகமாக்கும் நுளம்பு
- முழுமையாகக் கட்டுப்படுத்தவும் குணப்படுத்தவும் கூடிய நோயினால் உயிரிழக்கும் துர்ப்பாக்கியம்

அந்த அனைத்து இன நுளம்புகளையும் தம்மைக் காவும் ஊடகமாக இவ்வைரஸ் பயன்படுத்திக் கொள்வதுமில்லை. அத்தோடு எல்லா நுளம்புகளும் இவ்வைரஸின் காவியாகத் தொழிற்படுவதுமில்லை. நுளம்புகளில் காணப்படும் ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகள் மாத்திரமே இவ் வைரஸின் காவியாகத் தொழிற்படுகின்றது.

இந்த ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகளானது மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகக்கூடியன.

ஒரு தடவைக்கு நூறு முதல் இரு நூறு வரையில் முட்டையிட்டு பல்கிப்பெருகும் இந்நுளம்புகள் மழைக் காலநிலையைத் தமது பெருக்கத்திற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

ஆனால் வீட்டுச்சூழலிலும் சுற்றாடலிலும் தெளிந்த நீர் தேங்க முடியாத படி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் பேணினால் இவ்வின நுளம்புகள் பெருக வாய்ப்பு இருக்காது. அப்போது டெங்கு வைரஸைக் காவிப் பரப்ப ஊடகமும் இராது. அதன் பயனாக டெங்கு வைரஸ் அச்சுறுத்தல் அற்ற நிலை ஏற்பட்டுவிடும். இதுதான் டெங்கு நோயின் யதார்த்தம். இதனை சரியான முறையில் புரிந்து கொண்டு செயற்பட்டால் டெங்கு வைரஸ் குறித்து அச்சம் கொள்ளவே தேவையில்லை.

இருந்த போதிலும் இவ்வைரஸ் நோய் தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் கவனயீனங்களையும் அசிரத்தைகளையும் இவ்வின நுளம்புகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மழைக்காலநிலையுடன் பல்கிப் பெருகுகின்றன.



அதன் விளைவாகவே இவ்வருடம் ஜனவரி முதல் டிசம்பர் 29ஆம் திகதி வரை 87 ஆயிரத்து 78 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். அவர்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த டிசம்பர்(2023) மாதத்தில் மாத்திரம் இந்நோய்க்கு உள்ளானவர்களாகப் பதிவாகி இருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணம் டெங்கு அபாய பிரதேசமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நாட்டில் இற்றை வரையும் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களில் 45.4 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் அதாவது 39 ஆயிரத்து 543 பேர் இம்மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

25 மாவட்டங்களைக் கொண்டுள்ள இந்த தீவு நாட்டில் டெங்கு நோய் தாக்கப்பட்டவர்களில் சுமார் அரை வாசிக்கும் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டிருப்பது சாதாரணமாக நோக்கக்கூடிய விடயமல்ல. டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்துக்குச் சாதகமான சூழலை இம்மாகாணம் பெரிதும் கொண்டிருப்பதன் வெளிப்பாடே இது. அதேநேரம் இந்நுளம்புகள் மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பருகும் பண்பைக் கொண்டிருப்பதால் அதற்கு ஏற்ற சூழலையும் இம் மாகாணமே அதிகம் கொண்டிருப்பதும் தெளிவாகிறது.

குறிப்பாக தெளிந்த நீர் தேங்கக்கூடிய கைவிடப்பட்ட யோகட் கப்புகள், சிரட்டைகள், பொலித்தீன், சிலிசிலி பைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், மட்பாண்டங்கள், அலுமினியப் பாத்திரங்கள், டயர்கள் உள்ளிட்ட அனைத்து திண்மக் கழிவுப் பொருட்களும் டெங்கு நுளம்புகள் முட்டையிட்டு பல்கிப் பெருகும் முக்கிய இடங்களாகும். அவ்விடங்களை முறையாகவும் சீராகவும் அப்புறப்படுத்தி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் பேண வேண்டும். அது தொடர்பான பொறுப்பில் கவனயீனமும் அசிரத்தையும் நிலவுவதும் இக்காய்ச்சலுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட துணைபுரியக்கூடிய காரணியாக விளங்குகின்றது.

டெங்கு வைரஸின் காவியாகத் தொழிற்படும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இக்காரணங்கள் அனைத்தும் வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால் இவை மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கும் பணியாகும். இதைவிடுத்து தனியே அரச நிறுவனங்களால் மாத்திரம் கட்டுப்படுத்தக்கூடிய நோயல்ல டெங்கு.

திண்மக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவதிலும் சுற்றாடலை நுளம்புகள் பெருக முடியாதபடி சுத்தமாகப் பேணிக் கொள்வதிலும் மக்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. இப்பொறுப்பில் கவனயீனமும் அசிரத்தையும் அதிகரித்திருப்பதன் விளைவாகவே இவ்வருடமும் 55 பேரின் உயிர்களைக் காவு கொண்டிருக்கிறது இவ் வைரஸ்.

இந்த நிலையில் டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய சுற்றறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டும் இருக்கிறார்.

18 ஆம் பக்கம் பார்க்க...

# இஸ்ரேல் — ஹமாஸ் போர் தனித்து விடப்படும் அமெரிக்கா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேல், தங்கள் நாட்டின் 75 ஆண்டுகால வரலாற்றில் மிகப் பெரிய உளவுத்துறை மற்றும் செயல்பாட்டுத் தோல்வியின் பேரழிவு விளைவுகளில் இருந்து இன்னும் மீள முடியாத நிலையில் உள்ளது. புத்திசாலித்தனமான வேலிகள் மற்றும் வெளிநாட்டுப் பணத்தின் தாராளப் பாய்ச்சல் ஆகியவை அரபு உலகின் எதிர்ப்பிலிருந்து இஸ்ரேலை பாதுகாக்கும் என்ற நீண்டகால அனுமானம் சமகால இஸ்ரேல், ஹமாஸ் போரில் அவிழ்க்கப்படுகிறது. தெற்கு இஸ்ரேலின் மீது அக்டோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல், மூன்று மாதங்களை கடந்தும் நீடிக்கின்றமை, இஸ்ரேலின் பலவீனத்தை பிரசாரப்படுத்த வாய்ப்பாக அமைகின்றது. மேலும், கடந்த வாரம் இப்பகுதியில் குறிப்பிட்டதை போன்று அரபு நாடுகளில் இயங்கும் கிளர்ச்சிக் குழுக்களின் ஆதரவு ஹமாஸுக்கு அதிகரிக்கப்படுகின்றது. எனினும் சமாந்தரமாக இஸ்ரேலுக்கு சர்வதேச ஆதரவின் வீச்சு குறைவடைந்து செல்லும் போக்கினை சர்வதேச அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அமெரிக்கா இஸ்ரேலுக்கு அதியுச்ச ஆதரவை வழங்கும் அதேவேளை அமெரிக்க கூட்டு நாடுகள் பின்வாங்கும் போக்கினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இக்கட்டுரை இஸ்ரேல், ஹமாஸ் போரில் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளின் போக்கினை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீதான ஹமாஸின் ஆரம்ப தாக்குதலுக்குப் பின் உடனடியாக, இஸ்ரேலிய அரசாங்கம் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் அவசர அணி திரட்டலை அறிவித்தது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலியர்கள் விரும்பாத போரை முடிக்க உறுதியளித்தார். காஸாவில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைக்கு 'இரும்பு வாள் நடவடிக்கை' என இஸ்ரேலிய அரசாங்கம் ஆரம்பத்தில் பெயரிட்டது. இப்போது அதன் மூன்று மாத காலத்தை நெருங்கித் தொடர்கிறது. நவம்பர் பிற்பகுதியில் ஒரு குறுகிய இடைவெளி உருவாக்கப்பட்ட போதிலும், அது நிலையான சமாதானத்திற்கான வாய்ப்புகளை உருவாக்கியிருக்கவில்லை. குறுகிய போர் நிறுத்த காலப்பகுதியினை இரு தரப்பும் கையாண்ட முறை தொடர்பில் கடந்த காலங்களில் இப்பகுதியில் விரிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. இஸ்ரேலிய பிரதமர் தொடர்ச்சியாக தேசியவாத பிரசாரங்களை முன்னிறுத்துகின்ற போதிலும், காசா மீதான போரை முடிப்பதற்கான இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் கால அட்டவணையும் மோசமானதாகவே உள்ளது.

அக்டோபர் 7 காசாவுக்குள் சுருக்கப்பட்டிருந்த போர், அரபு நாடுகளில் இயங்கும் கிளர்ச்சி குழுக்களின் ஈடுபாட்டுடன் மேற்காசிய பிராந்தியத்தை நோக்கி நகர்ந்துள்ளது. குறிப்பாக கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டதை போன்று ஹவுதிகளின் செங்கடல் மீதான தாக்குதல் கடற்பிராந்திய போராக நகர்ந்துள்ளது. மறுதளத்தில், அமெரிக்காவின் உறுதியான ஆதரவு இல்லாவிட்டால், இஸ்ரேல் அதன் போர் நோக்கங்களைத் தொடர்வதற்கு மிகவும் தடையாக இருக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அமெரிக்காவின் வலுவான ஆதரவு இஸ்ரேலை பாதுகாப்பதாக அமைந்தாலும், ஒற்றுமைய உலக ஒழுங்கில் அமெரிக்காவின் போர் என்பது அமெரிக்கா தலைமையிலான கூட்டாகவே அமைந்துள்ளது. எனினும் இஸ்ரேல், காசா போரில் அமெரிக்காவின் கூட்டு நடவடிக்கைகள் பலவீனப்படும் தன்மையை சர்வதேச அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனை நுணுக்கமாக நோக்குதல் அவசியமாகின்றது.

முதலாவது, செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேலுடன் தொடர்புறும் கப்பல் மீது யேமனின் ஹவுதி கிளர்ச்சிக் குழுவின் தாக்குதல்களுக்கு எதிராக ஒரு புதிய கடல் படையைத் தொடங்குவதன் மூலம் ஒரு உறுதியான சர்வதேச பதிலை முன்வைக்க முடியுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நம்பினார். குறித்த கடற்பாதுகாப்பு இராணுவ நடவடிக்கை 'செழுமை காப்பாளர் நடவடிக்கை' எனப் பெயரிடப்பட்டது. ஆனால் அது தொடங்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு, அமெரிக்காவின் பல கூட்டாளி நாடுகளும் அதனுடன் பொதுவில் அல்லது எல்லாவற்றிலும் தொடர்பு கொள்ள விரும்பவில்லை. குறித்த நடவடிக்கையில் பங்களிப்பாளர்களாக பட்டியலிடப்பட்ட அமெரிக்காவின் இரண்டு ஐரோப்பிய கூட்டாளிகளான இத்தாலி மற்றும் ஸ்பெயின் கடல் படையில் இருந்து தங்களைத் தூர விலக்கிக் கொள்வது போல் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. யேமனுக்கு அப்பால் உள்ள செங்கடல் கடற்பகுதியில் உள்ள ஒரு முக்கியமான கப்பல் பாதை வழியாக பில்லியன் கணக்கான டொலர்கள் மதிப்புள்ள வர்த்தகம் சுதந்திரமாகப் பாய்வதை உறுதி செய்வதற்காக, 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தற்காப்புக் கூட்டணி இது என்று பென்டகன் கூறுகிறது. ஆனால் பட்டியலிடப்பட்டுள்ள நாடுகளில் ஏறக்குறைய பாதி நாடுகள் இதுவரை தங்கள் பங்களிப்பை ஒப்புக்கொள்ள முன்வரவில்லை அல்லது அமெரிக்காவை அவ்வாறு செய்ய அனுமதிக்கவில்லை.

இரண்டாவது, ஐ.நா அரங்கிலும் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானங்களை பாதுகாப்பு சபையில் அமெரிக்கா வீட்டோவினை பயன்படுத்தி பாதுகாத்து



வரும்நிலையில், பொதுச் சபையில் இஸ்ரேல் சர்வதேச ஆதரவினை இழந்து வருகின்றமை தொடர்ச்சியாக உறுதி செய்யப்படுகின்றது. காசாவில் உடனடி மனிதாபிமான போர்நிறுத்தம் கோரி, கிட்டத்தட்ட மற்ற அனைத்து பாதுகாப்பு சபையின் உறுப்பினர்கள் மற்றும் பிற நாடுகளின் ஆதரவுடன் முன்வைக்கப்பட்ட பாதுகாப்பு சபை தீர்மானத்தை டிசம்பர் 8 அன்று அமெரிக்கா வீட்டோ செய்தது. எனினும், 193 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபை இதேபோன்ற தீர்மானத்தை டிசம்பர் 12 அன்று 153:10 என்ற வாக்குகள் மூலம் 23 பேர் வாக்களிக்காமல் ஒப்புதல் அளித்தது. குறிப்பாக அமெரிக்காவின் ஐரோப்பிய நட்பு கூட்டுக்களில் இயங்கும் பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. எகிப்து மற்றும் ஐக்கிய அரபு அமீரகமே இத்தீர்மானத்தை முன்மொழிந்திருந்தன. முன்னரும் நவம்பர் இரண்டாம் வாரத்தில் ஐ.நா பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட 'ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைகளைக் கண்டிக்கும்' தீர்மானம் 145 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. பிரான்ஸ், இந்தியா, ஜப்பான், தென்னாப்பிரிக்கா, மற்றும் இங்கிலாந்து உட்பட 145 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன. ஐ.நா அரங்கில் பாதுகாப்பு சபை தீர்மானங்கள் முக்கியமானவை. ஏனெனில் அவை சட்டபூர்வமாக பிணைக்கப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் பல கட்சிகள் சபையின் நடவடிக்கைக்கான கோரிக்கைகளை புறக்கணிக்க வீட்டோவை தேர்வு செய்கின்றன. பொதுச் சபைத் தீர்மானங்கள் சட்டபூர்வமாக பிணைக்கப்படுவதில்லை. இருப்பினும் அவை உலகக் கருத்தின் குறிப்பிடத்தக்க காற்றமுத்தமானியாக அமைகின்றது.

மூன்றாவது, அமெரிக்காவின் ஐரோப்பிய கூட்டு நாடுகளின் மக்கள் பெருமளவில் இஸ்ரேலின் போர் நடவடிக்கைகளில் தமது நாடுகளின் ஈடுபாட்டை விரும்பவில்லை. மக்களின் எண்ணங்களின் பின்னுந்துதல்களாலேயே ஆட்சியாளர்களும் இஸ்ரேல், ஹமாஸ் போரில் அமெரிக்க தீர்மானங்களை ஆதரிக்காமல் பின்வாங்கும் நிலை காணப்படுகின்றது. ஐ.நா பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட மனிதாபிமான போர் நிறுத்த தீர்மானத்திற்கு, பாதுகாப்பு சபையில் இராஜதந்திரிகள் அமெரிக்க ஆதரவைப் பெறுவதற்கான தீவிர பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதால் அது பல முறை நிறுத்தப்பட்டது. அமெரிக்காவின் ஐரோப்பிய கூட்டாளிகள் உட்பட ஏனைய உறுப்பினர்கள் அமெரிக்கா மீது விரக்தியடைந்து, பேச்சுவார்த்தையில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் எண்ணங்களுடன் தங்களை இணைத்துக் கொள்ள சில அமெரிக்க நட்பு நாடுகள் தயக்கம் காட்டுவது, காசாவில் ஏற்பட்ட மோதலால் உருவாக்கப்பட்ட பிளவுகளையே ஓரளவு பிரதிபலிக்கிறது.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு சர்வதேச விமர்சனங்கள் எழுந்துள்ளன. "ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்கள் சாத்தியமான வாக்காளர்களில் ஒரு பகுதியினர் தங்களுக்கு எதிராக திரும்புவர் என மிகவும் கவலைப்படுகிறார்கள்" என்று மாட்ரிட்டின் கம்ப்ளூட்டன்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவு பேராசிரியரான டேவிட் ஹெர்னாண்டஸ் கூறினார். ஐரோப்பிய பொதுமக்கள் இஸ்ரேலை அதிகளவில் விமர்சிக்கிறார்கள் மற்றும் மோதலுக்குள் தாங்களும் இழுக்கப்படுவதில் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். ரஷ்ய, உக்ரைன் போரில் ஐரோப்பிய ஈடுபாட்டின் சுமையை ஐரோப்பிய மக்கள் போராட்டங்கள் மூலம் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

நான்காவது, இஸ்ரேலின் தாக்குதலுக்கு சர்வதேச விமர்சனங்கள் எழுதாலும் பைடன் உறுதியான ஆதரவைப் பேணுவதையே வெளிப்படுத்தி வருகின்றார். பைடன் நிர்வாகம் சமீபத்தில் காஸாவில் பொதுமக்களின் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை குறைக்குமாறு இஸ்ரேலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இது சர்வதேச கண்டனங்களுக்கான கூற்றாக மாத்திரமே அமைந்திருந்து. எனினும் அமெரிக்க காங்கிரஸ், அமெரிக்க ஆட்சியாளர்களின் அமெரிக்க தேசபக்தி மற்றும் யூத தேசியவாதத்தின் பற்றினை எடைபோடுமளவிற்கு அமெரிக்க இஸ்ரேலுக்கான ஆதரவை முதன்மைப்படுத்தியுள்ளது. டிசம்பர் 5 அன்று, அமெரிக்க பிரதிநிதிகள் சபை 311:14 என்ற அடிப்படையில், குடியரசுக் கட்சியின் ஆதரவுடன் 'சியோனிச எதிர்ப்பு என்பது யூத விரோதம்' என அறிவித்துள்ளது. இத்தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த கென்டக்கியின் குடியரசுக் கட்சியின் பிரதிநிதி தோமஸ் மஸ்ஸி, "அமெரிக்க தேசபக்தியை விட சியோனிசத்தில் காங்கிரஸ் அதிக அக்கறை கொண்டுள்ளது" என விமர்சித்திருந்தார்.

தோமஸ் மஸ்ஸியின் விமர்சனத்தை வெள்ளை மாளிகை கண்டித்தது. சியோனிசத்தின் மீதான அமெரிக்காவின் நீடித்த அனுதாபத்தில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அக்டோபர் 18 அன்று டெல் அவிவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தன்னை ஒரு சியோனிஸ்ட் என்று கூச்சமின்றி அழைத்தார். அதேவேளை டிசம்பர் 3 அன்று அமெரிக்காவின் கடுமையான சியோனிச அமைப்பு நடத்திய விருந்தில் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் மைக் ஜோன்சன், தனது சியோனிச நிலைப்பாட்டைப் பறைசாற்றினார்.

எனவே, அமெரிக்கா கடந்த காலங்களில் கையாண்டுவரும் போர் இராஜதந்திரத்தில் பலவீனங்களை இஸ்ரேல், ஹமாஸ் போரில் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. ஒற்றுமைய உலக ஒழுங்கில் அமெரிக்கா போரினூடாகவே தனது வல்லாதிக்கத்தை கட்டமைத்திருந்தது. அதிலும் போர்களை தனது ஐரோப்பிய கூட்டுக்களின் ஒத்துழைப்புடனேயே வடிவமைத்திருந்தது. அமெரிக்காவின் வல்லாதிக்கத்துக்குப் பின்னால் ஐரோப்பா கூட்டு பலமான ஆதரவுத்தளமாகும். எனினும் சமீப காலமாக பல முனைகளில் அமெரிக்காவுக்கும் அதன் ஐரோப்ப கூட்டுகளுக்கும் இடையிலேயே முரண்பாடுகளை அவதானிக்கக்கூடியதாக அமைந்தது. குறிப்பாக டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே விரிசல் அடையாளம் காணப்பட்டது.

எனினும் பைடனின் முதற் வெளிநாட்டு பயணம் ஐரோப்பாவை மையப்படுத்தி திட்டமிடப்பட்டு ஐரோப்பிய உறவு புனரமைக்கப்பட்டது. இருப்பினும் சமகால உலக ஒழுங்கில் ஆதிக்கம் செலுத்தும் மென்வலு அரசியல் உந்துதலில், ஐரோப்பிய மக்களிடையே வலுப்பெறும் அமெரிக்காவின் போர் இராஜதந்திரத்தின் பயனற்ற அழிவை ஐரோப்பா சுமக்கத் தயாரில்லையெனும் வாதம், இஸ்ரேல், ஹமாஸ் போரில் அமெரிக்கா தனித்து விடப்படுவதன் மூலம் உறுதிசெய்யப்படுகின்றது.

# யாழ்.கீரிமலை தலித்தூண்டல் பாடசாலையின் ஒளிவிழா




யாழ். கீரிமலை தலித்தூண்டல் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை கனடா மெற்ரோலன் மீடியா நிறுவனம் வழங்கியிருந்தது. இந்த நிகழ்வு யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் தேசமானிய லயன் கலாநிதி நா.தனேந்திரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.
(படம் : வேலணை குறூப் நிருபர்)




அகில இலங்கை ஐயப்பன் சேவா சங்கம் நடத்தும் 48 ஆவது ஆண்டு மகா மண்டல பூஜை குருசாமி பொன் ரவீந்திர குமார் தலைமையில் ஜெயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மலேசியாவில் இருந்து வருகை தந்த தொழிலதிபர் மாணிக்கம் மண்டல பூஜை ஏற்பாட்டாளர் சுவாமிகள் பிச்சை கிருஷ்ணாவினால் கௌரவிக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம். அருகில் சமூக சேவையாளர் எச்.எச்.விக்ரமசிங்கவும் காணப்படுகின்றார்.

## "கீத்ராத் 60" 3 இன் 1




தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 60" மாபெரும் இசை நிகழ்ச்சி ஜனவரி 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30க்கு கொழும்பு 07 ஜே.ஆர். ஜயவர்த்தன மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த 60 ஆவது நிகழ்ச்சியை முன்னிட்டு 60 மாணவ, மாணவியருக்கு புத்தகப் பரிசு வழங்கப்படவுள்ளது. நம்நாட்டு முன்னணி பாடக, பாடகிகளுடன் சிங்கப்பூர் பிரபல பாடகர் ஹாஜி பஃரி ஹூல்லாஹ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### மோட்டார் வாகனங்கள்

### 117 வேன்கள் விற்பனைக்கு

மிட்ஷுபிஷி எல் 300 பயணிகள் போக்குவரத்திற்கான வேன், இரட்டை ஏசி, டீசல், அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டது. பிசி ............... விலை 50 இலட்சம் ரூபா தொலைபேசி 0112365365. இல. 58, பாமன்கட பாதை, கொழும்பு 06 085427

### வேலைவாய்ப்பு

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

அப்பம், ரொட்டி சுடுவதற்கு சிங்கள, தமிழ் ஊழியர் தேவை. அதியுயர் சம்பளம். தொடர்பு இலக்கம் 0706527104 085441



### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கட்டுநாயக்க, தோட்ட வேலைக்கு 50 வயதிற்குக் குறைந்த ஆண்கள் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. 076 - 9492235, 076 - 59 17760 அழையுங்கள். 085281

பஸ்ஸர மடுல்சீம தேயிலைத் தோட்டத்தில் தங்கி வேலை செய்ய தேயிலை கொழுந்து பறிப்போர் (ஆண்), சாரதிகள் தொழிலாளர் தேவை. 0762907712 தர்ஷி 083047

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

ஆர்க் லயிட் டிசைன் (பிவீடீ) எல்டிடீ தொழிலாளர்கள் மற்றும் பாஸ்மார்களை தேடுகின்றது. மேசன், பெயின்டர், ஓடு பாஸ், தொழிலாளர்கள். 0773487721, 0717935311. 084968

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 011 2 129 347
011 2 429 383 011 2 429 342/343

### 325 தொழில்துறை பொது

குருநாகல் தும்பு ஆலையில் வேலை செய்வதற்கு சோடி அல்லது ஆண் அல்லது பெண்கள் தேவை உணவு இலவசம் தங்குமிட வசதிகளும் இலவசம் T.P. 077 - 4280790/ 076 - 7090834 085287

### காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

நெதிமால, கடவத்த வீதி, ஆறாம் ஒழுங்கையில் பதினாறு பேர்ச் காணி. 31 அடி முகப்பாக, மின்சார, மற்றும் நீர் உண்டு. தொடர்பு 0779944866 082090

ராஜகிரிய, கலபலு வாவ வீதியில் 10 பேர்ச் இரண்டு மாடி வீடு விற்பனைக்கு 075 6088290 085527

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777282147 புத்தாண்டிற்கு கண்டியில் வீடு, காணி, ஹோட்டல் தோட்டம், தற்போது நடத்திச் செல்லப்படும் வியாபார நிலையங்கள் நம்பமுடியாத விலையில் சகல வசதிகளுடன் விற்பனைக்கு/ குத்தகைக்கு உண்டு. 0777438169084067

### 662 வீடு சொத்து கிளிநொச்சி மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு முன்னால் ஆனந்தபுரத்தில் ஓர் முழுமையான தளபாடங்களுடனான வீடு வாடகைக்கு.தொடர்பு 0714152042 085549



### 670 வீடு சொத்து விற்பனைக்கு/குத்தகைக்கு

சொய்சாபுர தொடர்மாடியில் ஓர் புதிதாகத் திருத்தப்பட்ட அப்பாட்மென்ட் உடனடியாக விற்பனைக்கு/ வாடகைக்குதொடர்பு 071 4152042 085548

வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகள்

மணமகன் தேவை கொழும்பை பிறப்பிடமான முஸ்லிம் 21 வயதுடைய மெலிந்த வெள்ளை நிறமுடைய 5.1 உயரம் H.N.D in Business Management படித்த மணமகளுக்கு படித்த, நற்குணம் கொண்ட மணமகன் தேவை. B210966




தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

EXCLUSIVE LAND FOR SALE
KOHUWALA
12 PERCH BLOCK AVAILABLE.
CLEAR DEEDS, COUNCIL APPROVED PLAN AND FIRST CLASS TITLE AVAILABLE AND HAS BEEN SOLELY OWNED FOR 60 YEARS.


RARE OPPORTUNITY EXISTS TO BUY PRIME LAND IN THE PRESTIGIOUS HEART OF KOHUWALA – GREEN PATH AND WIJAYAMANGALARAMA ROAD. LOCATED CONVENIENTLY WITHIN CLOSE PROXIMITY TO THE JUNCTION, SHOPS, SCHOOLS AND OTHER AMENITIES.
3.6m Per Perch PRICE NEGOTIABLE
GENUINE BUYERS ONLY AND NO BROKERS
DEAL DIRECT WITH OWNER FOR SMOOTH PROCESS
Contact - +61 401 473 534 ( WhatsApp )
Email: maheshkari79@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

எங்களுக்கு இலங்கையின் பழைய ரூபாய் நோட்டுக்கள் தேவை



தொடர்புகளுக்கு - 0727031745

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

பிலியந்தல
நகரின் மத்தியில் புத்தம் புதிய ஆடம்பரமான வீடு
இல்லமொன்றை உரிமையாக்கிக் கொள்ளுங்கள்
- மொத்த தரைப்பரப்பு 2750 ச.அடி
- 3 வாகனங்களுக்கான வாகன நிறுத்துமிடம்
- பாரிய அமருமிடம் மற்றும் உணவு அருந்தும் பிரதேசம்
- இணைக்கப்பட்ட குளியலறைகளுடனான 4 படுக்கையறைகள்
- விஷேடமாக வடிவமைக்கப்பட்ட சமையலறை - மரத்திலான பான்ரி கப்போட்டுக்கள்
- Elegant with wooden Detailing, Flooring, Staircase & other features
- மெடிஹெல்ப் வைத்தியசாலை மற்றும் அரசாங்க வைத்தியசாலை, கேஎவ்சி, பிசா ஹட், கார்கில்ஸ், கீல்ஸ், புட் சிட்டி ஆகியவற்றிற்கு நடை தூரம்
- காணியின் விஸ்தீரணம் - 10 பே.
- தனிப்பட்ட மொட்டைமாடிகள்
அமைவிடம்: வட்ட மாவத்தை
85 மில்லியன் (850 இலட்சம்) பேசித்தீர்க்கலாம்



மேலும் விபரங்களுக்கு 0766 592 782/ 0772 707 540 என்ற இலக்கங்களை அழைக்கவும்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

# ஒரே பார்வையில் 2023

## 2023 இலங்கையின் முக்கிய நிகழ்வுகள்

### ஜனவரி 02



**ஜனவரி 02 –** தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்த பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடல்.

### 13

**ஜனவரி 13 –** ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன இணைந்து புதிய கூட்டணியை அறிவித்தன.

### பெப்ரவரி 13

**பெப்ரவரி 13** பொருளாதார நிலைமையில் மக்கள் எதிர்நோக்கிய சிரமத்தை குறைத்து அவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்.

### 14



**பெப்ரவரி 14 –** ஜேர்மனுக்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் Peter Ramsauer, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பு.

### மார்ச் 06

**மார்ச் 06 –** கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்கு இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட தீர்மானத்துக்கு சர்வதேச நாணய நிதியம் (IMF) பாராட்டு.

### 09



**மார்ச் 09 –** 75ஆவது சுதந்திர தினத்தையொட்டி வெளியிடப்பட்ட புழக்கத்திலில்லாத 1,000 ரூபா நினைவு நாணயக்குற்றிகள் விற்பனை செய்யவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்து, விற்பனை செய்ய தொடங்கியது.

### ஏப்ரல் 12



**ஏப்ரல் 12 –** இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் தனது 76 ஆவது வயதில் காலமானார்.

### 21

**ஏப்ரல் 21 –** கொழும்பு துறைமுகத்தில் தெற்காசியாவின் மிகப்பெரிய வர்த்தக மற்றும் விநியோக கேந்திர நிலையத்தை நிர்மாணிப்பதற்கான வரலாற்று ஒப்பந்தம் கைச்சாத்து.

### மே 06



**மே 06 –** பிரிட்டனின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா பிரிட்டனில் நடைபெற்ற போது அவ்விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பு.

### 29

**மே 29 –** இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட நினைவு முத்திரை மற்றும் முதல்நாள் கடித உறை வெளியீடு.

### ஜூன் 01

**ஜூன் 01 –** கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் சிறுநீரகக் கல் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு சாதனை படைத்த இலங்கை மருத்துவர்கள் உலக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிப்பு.

### 18



**ஜூன் 18 –** முதலாவது பெண் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தனது 78ஆவது வயதில் காலமானார்.

தொகுப்பு: ஆர்.சுகந்தினி

### ஜூலை 13



**ஜூலை 13 –** அநுராதபுரத்திலிருந்து ஓமந்தைவரை ரயில் பாதை புனரமைப்பு நிறைவுற்றதையடுத்து அந்த ரயில் பாதையில் முதலாவது ரயில் சேவை அமைச்சர் பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தார்.

### 16

**ஜூலை 16 –** தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதனின் இருபதாவது ஆண்டு நினைவையொட்டி 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியீடு.

### ஓகஸ்ட் 28



**ஓகஸ்ட் 28 –** அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், 8 இலட்சம் குடும்பங்கள் முதற்கட்டமாக இந்தக் கொடுப்பனவை பெறத் தகுதி.

### 31

**ஓகஸ்ட் 31 –** காலி சிறைச்சாலையில் இரண்டு கைதிகளை பலிகொண்ட 'மெனிங்கோகோகல்' என்ற பக்றீரியா தொற்றுக்குள்ளான மற்றுமொரு நோயாளர் கொழும்பில் அடையாளம்.

### செப்டெம்பர் 05



**செப்டெம்பர் 05 –** இலங்கை சுழற்பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட 800 படத்தின் ட்ரெய்லரை சச்சின்ரெண்டுல்கர் மும்பையில் வெளியிட்டார்.

### 11

**செப்டெம்பர் 11 –** மட்டக்களப்பிலிருந்து 310 கிலோமீற்றர் தொலைவில் கடலில் நில அதிர்வு பதிவு. 1.29 ரிச்டர் அளவுகோலில் இந்த நில அதிர்வு பதிவு.

### ஒக்டோபர் 06



**ஒக்டோபர் 06 –** கொழும்பு, கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அருகில் டுப்ளிகேஷன் வீதியில் இ.போ.ச. பஸ்ஸின் மீது பெரிய மரமொன்று முறிந்து விழுந்ததில் 5 பேர் உடல் நசுங்கிப் பலி.

### 16

**ஒக்டோபர் 16 –** 30 வருடங்களுக்கு பின் மீண்டும் நாகபட்டினம் காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பமாகியது. 'செரியாபாணி' எனும் கப்பல் சேவையில் ஈடுபட்டது.

### நவம்பர் 02




**நவம்பர் 02 –** இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் குடியேறி 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை சிறப்பித்து அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 'நாம் 200'.

### 13

**நவம்பர் 13 –** 'வலுவான எதிர்காலத்துக்கான முன்னுரை' எனும் தொனிப்பொருளின் கீழ் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் எனும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு.

### டிசெம்பர் 09



**டிசெம்பர் 09 –** மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் திடீரென மின்சாரம் தடை.

### 28

**டிசெம்பர் 28 –** கம்பஹாவில் ஒரு கொவிட் மரணம் சம்பவித்தது. 63 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழப்பு.

## 2023 உலகின் முக்கிய நிகழ்வுகள்

தொகுப்பு: எஸ். பிர்தௌஸ்

### ஜனவரி 01

குரோசியா யூரோ நாணயம் மற்றும் செங்கன் பிராந்தியத்தில் இணைந்தது. இதன்மூலம் அந்த நாடு யூரோ வலயத்தில் சேர்ந்த 20 ஆவது நாடாகவும் செங்கன் பிராந்தியத்தில் இணைந்த 27ஆவது நாடாகவும் பதிவானது.

### ஜனவரி 15


நேபாளத்தின் காத்மண்டுவில் இருந்து பொகாராவை நோக்கி பயணித்த யெட்டி ஏர் லைன்ஸ் விமானம் 691 விபத்துக்கு உள்ளானதில் விமானத்தில் இருந்த 72 பேரும் கொல்லப்பட்டனர்.

### ஜனவரி 30



பாகிஸ்தானின் கைபர் பக்துங்வா, பெஷாவரில் பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் 84 பேர் கொல்லப்பட்டு 220 பேர் காயமடைந்தனர்.

### பெப்ரவரி 06



தெற்கு மற்றும் மத்திய துருக்கி மற்றும் வடக்கு மற்றும் மேற்கு சிரியாவில் இடம்பெற்ற 7.8 ரிச்டர் பூகம்பம் மற்றும் அதனைத் தொடர்ந்து பதிவான 7.7 ரிச்டர் அளவு பின் அதிர்வினால் 59,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டு 121,000 பேர் வரை காயமடைந்தனர். இரு நாடுகளிலும் பாரிய சேதங்கள் ஏற்பட்டன.


### பெப்ரவரி 23

இஸ்ரேலுடனான உறவை புதுப்பித்த ஓமான் முதல் முறை இஸ்ரேலிய விமானங்களுக்கு தனது வான் பகுதியை திறந்தது.

### மார்ச் 10

சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதியாக ஷி ஜின்பிங் மூன்றாவது தவணையாக தெரிவுசெய்யப்பட அந்நாட்டு தேசிய மக்கள் கொங்கிரஸினால் ஏகமனதாக அங்கீகாரமளிக்கப்பட்டது.

### மார்ச் 17



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. உக்ரைனில் போர் குற்றத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காகவே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

### ஏப்ரல் 04

ரஷ்யாவின் எல்லை நாடான பின்லாந்து 31 ஆவது நாடாக நேட்டோ அங்கத்துவத்தை பெற்றது.

### ஏப்ரல் 25



கென்யாவில் உள்ள ஷகஹொலா காட்டில் பாரிய தற்கொலை வழிபாடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. நற்செய்தி சர்வதேச அமைச்சுகள் என்ற அந்த வழிபாட்டு அமைப்பின் 429 வழிபாட்டாளர்களின் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் 613 பேரைக் காணவில்லை.

### மே 05



5 – கொவிட்–19 தொற்றின் உலகளாவிய சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு முடிவுக்குக் கொண்டுவந்தது. எனினும் அது ஒரு பெருந்தொற்றாக நீடிப்பதாக அது கூறியது.

### மே 28

துருக்கி ஜனாதிபதி தேர்தலின் இரண்டாவது சுற்றில் ரிசப் தையிப் எர்துவான் 52.18 வாக்குகளை பெற்று மூன்றாவது தவணைக்கு வெற்றிபெற்றார்.

### ஜூன் 02

இந்தியாவின் ஒடிசாவில் பயங்கர ரயில் விபத்து ஒன்றில் குறைந்தது 296 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 1,200 பேர் காயமடைந்தனர்.

### ஜூன் 18




டைட்டானிக் கப்பலை பார்வையிடச் சென்ற டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் கடலுக்குள் வெடித்ததில் அதில் இருந்த ஐவரும் கொல்லப்பட்டனர்.

### ஜூன் 19

சர்வதேச நீரை பாதுகாக்கும் முதலாவது ஒப்பந்தமாக சர்வதேச பெருங்கடல் ஒப்பந்தம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### ஜூலை 03



இரண்டாவது இன்திபாதா போராட்டத்திற்குப் பின் முதல் முறை மேற்குக் கரையில் இஸ்ரேலிய படை பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

ஜெனின் முகாமில் இடம்பெற்ற இந்த நடவடிக்கையில் 13 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். டெல் அவிவில் ஹமாஸின் பதில் தாக்குதலில் ஒன்பது பேர் காயமடைந்தனர்.


### ஜூலை 26

நைஜீரிய ஜனாதிபதி மொஹமது பசூம் தனது ஜனாதிபதி காவல் படையால் நடத்தப்பட்ட இராணுவ சதிப்புரட்சியில் பதவி கவிழ்க்கப்பட்டார். படையினர் ஆட்சியை கைப்பற்றியதை அடுத்து ஜெனரல் அப்துர் ரஹ்மான் டிச்யானி தலைவராக நியமிக்கப்பட்டார்.

### ஓகஸ்ட் 01

உலகின் பெருங்கடல் வெப்பநிலை புதிய உச்சமாக 20.96 பாகை செல்சியஸாக பதிவானது. இது 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பதிவான சாதனையை விஞ்சியது.

### ஓகஸ்ட் 23



23 – இந்தியாவின் சந்திரயான் 3 நிலவின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய முதல் விண்கலமாக பதிவானது. அந்த விண்கலம் விக்ரம் என்ற தரையிறங்கும் கருவியையும் பிரக்யான் என்ற ரோவரையும் எடுத்துச் சென்றிருந்தது.

### செப்டெம்பர் 08



மேற்கு மொரோக்கோவில் மரகேஷ்–சூபி மாகாணத்தில் இடம்பெற்ற 6.9 ரிச்டர் அளவிலான பூகம்பத்தில் குறைந்தது 2,960 பேர் கொல்லப்பட்டு வரலாற்று முக்கியம் வாய்ந்த கட்டடங்கள் சேதமடைந்தன.

### செப்டெம்பர் 10

டானியல் புயலால் லிபியாவின் டெர்னா நகரில் உள்ள இரு அணைகள் உடைப்பெடுத்ததில் குறைந்தது 5,000 பேர் கொல்லப்பட்டு மேலும் 10,000 தொடக்கம் 100,000 பேர் வரை காணாமல்போயினர். இந்த அனர்த்தத்தில் நகரில் கால் பகுதி அழிந்தது.

### ஒக்டோபர் 07



காசாவில் இருந்து தெற்கு இஸ்ரேலுக்குள் ஊடுருவி ஹமாஸ் நடத்திய தாக்குதலை அடுத்து இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. அது பெரும் போராக வெடித்தது. அடுத்த நாள் இஸ்ரேல் போர் பிரகடனத்தை வெளியிட்டதோடு அது தொடக்கம் நீடிக்கும் போரில் 21 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

### ஒக்டோபர் 17

இடம்பெயர்ந்த பலஸ்தீனர்களுக்கு அடைக்கலம் வழங்கியிருந்த அல் அஹ்லி அரபு மருத்துவமனை மீது இடம்பெற்ற தாக்குதலில் 100 தொடக்கம் 471 வரையானோர் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டது.

### நவம்பர் 17

பதிவுசெய்யப்பட்ட வரலாற்றில் முதல் முறையாக தொழில்துறைக்கு முந்தைய சராசரியை விட அதிகமாக உலக சராசரி வெப்பநிலை தற்காலிகமாக 2 பாகை செல்சியஸை விஞ்சியது.

### நவம்பர் 22



ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்த பின் முதல் முறையாக போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் உடன்பட்டன. பணயக்கைதிகள் பலர் விடுவிக்கப்பட்ட நிலையில் ஒரு வாரமே போர் நிறுத்தம் நீடித்தது.

### டிசம்பர் 12



டுபாயில் நடைபெற்ற சி.ஓ.பீ.28 காலநிலை மாநாட்டில் புதைபடிவ எரிபொருட்களில் இருந்து மாறுவதற்கு உலக நாடுகளிடையே முதல் முறை ஒருமித்த நிலைப்பாடு எட்டப்பட்டது.

### டிசம்பர் 22

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 20,000ஐ தாண்டியது. இது காசா மக்கள் தொகையில் 1 வீதமாக இருந்ததோடு 1948 அரபு – இஸ்ரேல் போரில் பதிவான உயிரிழப்புகளை தாண்டியது.

# சாதனை படைத்த '200இல் மலையகம் மாற்றத்தை நோக்கி...'



இலங்கை வாழ் மலையக மக்கள், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, சுமார் 200 வருடங்களாகியுள்ளன. இந்த நிலையில், அவர்களின் வாழ்க்கை இன்றும் அதே நிலைமையில் இருந்து வருகிறது.

ஸ்கொட்லாந்து நாட்டவரான ஜேம்ஸ் டெய்லர், 1867ஆம் ஆண்டு கண்டி மற்றும் நுவரெலிய மாவட்டங்களின் எல்லைப் பகுதியான லூல்கந்துர தோட்டத்தில் முதலாவது தேயிலை செய்கையை ஆரம்பித்தார்.

ஆனால் அதற்கு முன்னதாக கோப்பி உள்ளிட்ட செய்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டன. கோப்பி செய்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகவே, தேயிலை செய்கை அறிமுகப்படுத்தப்பட்டதாக வரலாற்று தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இலங்கைக்கு மலையக மக்கள் 1822ம் ஆண்டு மற்றும் அதனை அண்மித்த காலப் பகுதியில் அழைத்து வரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள், வரிசையாக அமைக்கப்பட்ட சிறிய அறைகளை கொண்ட லயின் அறைகளில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு 1822ம் ஆண்டு காலப் பகுதியில் அமைக்கப்பட்ட லயின் அறைகளில் மக்கள் இன்றும் வாழ்ந்து வருகின்ற நிலைமைகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன.

சுமார் 100 வருடங்கள், 150 வருடங்கள், 200 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட லயின் அறைகள் இன்றும் காணப்படுகின்றன. உடைந்த நிலையில், தகரங்கள் அற்ற நிலையில், சுவர்கள் இடிந்த நிலையில், இந்த லயின் அறைகள் காணப்படுகின்றன.

அன்று முதல் இன்று வரை தேயிலை தொழிலை நம்பி வாழ்ந்து வரும் இந்த மலையக சமூகம், எந்தவித முன்னேற்றத்தையும் அடையாது அதே நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையின் மலையக பகுதிகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், அந்த மக்களின் வாழ்க்கையில் பெரிய முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதே உண்மை. மலையக மக்களின் வாழ்க்கை அவலங்கள் கவனிப்பைப் பெறவேண்டுமென்ற நோக்கிலேயே பல்வேறுவகையான நிகழ்வுகள் அண்மைக்காலமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் '200ல் மலையகம் மாற்றத்தை நோக்கி' எனும் தொனிப் பொருளில் மாபெரும் நிகழ்வு கடந்த 24.12.2023 அன்று நுவரெலியா மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை மலையக மக்கள் முன்னணி உட்பட பொது அமைப்புகள் இணைந்து மேற்கொண்டிருந்தன. நிகழ்வுகள் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகின. ஊர்வலம் கலை, கலாசார நிகழ்வுகளுடன் நகர மண்டபத்தை வந்தடைந்ததும்,





(17ஆம் பார்க்க)









'நுவரெலியா எஸ்.தியாகு

தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 19

# ஏனைய நாடுகளில் நடத்த வாய்ப்பற்றுப் போகும் வேளை தமிழாராய்ச்சி மாநாடுகளை முன்னின்று நடத்தும் மலேசியா

உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்கும் மலாயா பல்கலைக்கழகம் தமிழோடும், தமிழியலோடும் மிக முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு குறித்த எண்ணக்கரு செயல்வடிவம் பெற்ற இடமாகவும் விளங்குகிறது. இதுவரையில் நான்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் இடம்பெற்ற இடமாகவும் இது விளங்குகிறது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை வேறு நாடுகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் அந் நாடுகளில் நடத்துவதற்கான வாய்ப்புகள் அற்றுப் போகின்ற வேளைகளில் அதனை முன்னின்று நடத்துவதில் மனமுவந்த ஈடுபாட்டை மலேசியா காண்பித்திருப்பதை அறிய முடிகிறது. 11ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையும் டுபாயில் நடத்துவதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இம் மாநாடு மலாயா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி மீதான ஆர்வத்தையும், அதன் மேன்மையையும் உணர்ந்த வகையில் மலேசியத் தமிழர்களின் ஈடுபாட்டையும் மதிப்பிட வேண்டி இருக்கிறது. அவ்வாறே அங்கு வாழ்கின்ற ஏனைய இனத்தவர்களின் பெருந்தன்மையையும் விதந்து பார்க்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகின்றமை கவனிக்கத்தக்கது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஏற்பட்ட உள்ளக முரண்பாடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடர்பிலும் வேறுபட்ட பிளவு நிலையை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாகவே இரண்டு 11ஆவது உலகத் தமிழ் ஆய்வு மாநாடுகள் இரண்டு இடங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. உலகத் தமிழ் ஆய்வு மன்றம் எனும் பெயரில் இதிலிருந்து பிரிந்தவர்களின் முயற்சியால் சிங்கப்பூரில் ஏற்பாடு செய்யப்படவிருந்த நிலையில் அம் மாநாடு இந்தியாவில் நடைபெற்றது. "பொதுவாக திராவிடம் பற்றியும், சிறப்பாகத் தமிழ் பற்றியும் செய்யப்படும் ஆய்வுகள் பல்வேறு துறைகளில் அறிவியல் முறையில் செய்வித்தலுக்கான ஊக்குவித்தலும் இவற்றோடு தொடர்புடைய பிற துறைகளில் ஆய்வு செய்து வரும் அறிஞர் பெருமக்களோடும் உலக நிறுவனங்களோடும் நெருங்கி பங்குகொள்ளுதல் ஆகும்." என்ற நோக்கத்தைக் கொண்ட நிலையில் உலகத் தமிழ் ஆய்வு மன்றம் தன்னை அடையாளப் படுத்திக்கொள்கிறது. இம் மன்றம் "புதிய வரலாற்றியல் கண்ணோட்டத்தில் தமிழ் செவ்விலக்கியங்களை ஆராய்ந்து முன்னைய, அண்மைக்கால அகழ்வாய்வுகளோடு, பிற அறிவியல் சான்றுகளை முன்வைத்து தமிழர், தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் உண்மையான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தல்" என்ற தொனிப்பொருளிலேயே மேற்படி மாநாடு அமையப்பெறறமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக இம் மாநாடுகள் தொடர்பில் வேறுபட்ட விமர்சனங்கள் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தோடு தொடர்புபட்ட தொடர் செயற்பாடு என்ற வகையில் மலேசிய மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.

பிரித்தானிய காலனித்துவ காலத்தில் 1905ஆம் ஆண்டு மருத்துவத் துறைக்கான உயர் கல்லூரி நிறுவனமாக தொடங்கப்பெற்றுள்ளது. பின்னர் 1915இல் கிங் எட்வட் ஏழாம் மருத்துவக் கல்லூரி என்பதாக உருமாற்றம் பெறுகிறது. இங்கு டிப்ளோமா பயின்ற மாணவர்களின் மருத்துவ பதிவுக்கு பிரிட்டிஷ் மருத்துவக் கல்லூரி அங்கீகாரம் வழங்கியுள்ளது. மலாயாவில் மருத்துவத்துறைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான முக்கிய தளமாக இயங்கியது. 1928இல் ராஃபிளஸ் கல்லூரி எனும் பெயரில் சிங்கபூரில் மேலுமொரு உயர்கல்வி நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது. மருத்துவ பாடநெறிகளுடன் ஏனைய கலைத்துறையுடன் தொடர்புபட்ட பாடநெறிகளையும் இணைக்கும் யோசனைகளும் முன்மொழியப் பட்டன. இக் கல்லூரியை பல்கலைக்கழகமாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பெற்றன. மேற்குறித்த இரண்டு கல்லூரிகளின் அடைவுகளை பரிசீலித்த நிலையிலேயே சுயாதீன பல்கலைக்கழகத்தின் தேவை உணரப்பட்டது. அதன் அறிக்கையின் பிரகாரம் இது குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டு 1949 அக்டோபர் 07ஆம் திகதி மலாயா பல்கலைக்கழகம் சிங்கபூரில் செயற்படத் தொடங்கியது. முதற் கட்டமாக 450 மாணவர்களுடன் கலை, அறிவியியல், மருத்துவம் ஆகியத்துறைகளில் பாடநெறிகள் தொடங்கப்பெற்றன. மலாய், சீன, தமிழ் ஆகிய மொழிகளை ஆரம்பிக்கும் யோசனை 1949இல் தொடங்கி 1957 காலப்பகுதி வரை அமுல்படுத்தவும் தொடங்கியது. இத் துறைகளோடு தொடர்புபட்ட ஏராளமான பாடநெறிகள் உள்வாங்கப்பட்டு முதுநிலை, முனைவர் பட்டங்களையும் வழங்கும் நிறுவனமாக உயர்ச்சி பெறுகிறது.

இணைந்த மலாயா கூட்டமைப்பு சுயாட்சி குறித்த அவதானத்தில் முனைப்பு பெறுகின்ற நிலையில் மலேசியாவிலும் தனித்துவ பல்கலைக்கழகத்தை அமைக்கும் எண்ணம் வலுப்பெறுகிறது. 1954இல் தொடங்கப் பெற்ற இக் கருத்து நிலை 1962இல் சாத்தியமாகிறது. சிங்கப்பூரில் அமைந்த பல்கலைக்கழகம் சிங்கப்பூர் பல்கலைக்கழகமாக மாறுகிறது. இப் பல்கலைக்கழகம் பின்னர் நான்யாங் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சிங்கபூர் தேசிய பல்கலைக்கழகமாக உருவாக்கப்படுகிறது. 1962இல் கோலாலம்பூரில் அமையப்பெற்ற பல்கலைக்கழகம் "மலாயா பல்கலைக்கழகம்" என்ற பெயரிலேயே இயங்கத் தொடங்கியது. மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய இலாகா தொடங்க வேண்டும் என்ற பிரயத்தனத்தில் பல முயற்சிகள் குறிப்பிடத்தக்கதாகும். "தமிழ் முரசு" இதழ் தொடர்த்தேர்ச்சியாக வெளியிட்ட செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சட்ட சபை உறுப்பினர் சி.ஆர்.தசரதராஜ், பல்கலைக்கழக மேலவை உறுப்பினர் கோ.சாரங்கபாணி ஆகியோரது வகிபங்குகளும், பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரிகளது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கவைகளாகும். "தமிழ் முரசு" நாளிதழில் கோ.சாரங்கப்பாணியால் தொடங்கப் பெற்ற "தமிழ் எங்கள் உயிர் நிதி" திட்டத்துக்கு அமைய மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய இலாகா அமைப்பதற்கும், அதற்கு தேவையான தமிழ் நூல்களை பெற்றுக்கொள்வதற்கும் நிதி திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1956இல் இணைத்துக்கொள்ளப் பட்ட இந்திய ஆய்வுத்துறையின் முதல் விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும் எம்.இராசாக்கண்ணு பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

"உலகோர் போற்றும் உயர் தமிழ் சீரிளமை மாறாத செந்தமிழ் தமிழர்களுக்கு உயிர் தாய்மொழி தமிழ் ஆதலால் கூறுகிறோம். தமிழ் எங்கள் உயிர் என்று அழைக்கிறோம். இன்றே பட்டியலில் பெயர் போடுங்கள்." என்ற வாசகங்களோடு தமிழ் முரசு இதழில் "தமிழ் எங்கள் உயிர் நிதி" திட்டத்திற்கான பிரசாரம் தொடர்த்தேர்ச்சியாகவே வெளியாகின.

**எண்ணிற் சிறந்ததுந் தமிழ்**
**எழுத்திற் சிறந்ததுந் தமிழ்**
**மண்ணிற் சிறந்ததுந் தமிழ்**
**பாரிற் பரந்ததுந் தமிழ்**
**மண்ணிற் பழையதுந் தமிழ்**
**மாசற் றொளிர் வதுந் தமிழ்**
**கண்ணிற் சிறந்ததுந் தமிழ்**
**தேனினு மினியது தமிழ்**
**தெவிட்டாச் சுவையிது தமிழ்**
**இலக்கணஞ் சிறந்தது தமிழ்**
**இயல் வளம் சிறந்தது தமிழ்**
**ஒப்புயர் வற்றது தமிழ்**
**ஒண்கலை நிறைந்தது தமிழ்**
**தன்னே ரிலாதது தமிழ்**
**தனிப்புகழ் வாய்ந்தது தமிழ் ஆதலால்**

தமிழர்களுக்கெல்லாம் தமிழே உயிர் என்ற கவிதை வடிவிலும் பிரசாரம் ஊடுருவியமை குறிப்பிடத்தக்கது. இவ் வளர்ச்சி நிதிக்கு முதலில் பங்களிப்பு செய்தவராக குன்றக்குடி அடிகளாரும் விளங்குகிறார். சங்க இலக்கிய புத்தகங்களை வழங்கியதோடு "தமிழ் முரசு" இதழில் வெளியான அவரது ஒப்புதல் செய்தியும் இச் செயற்பாட்டில் முக்கிய தடமாக அமைந்தது. அவ்வாறே தமிழ் நாட்டில் கரும வீரர் காமராஜும் நிதி திரட்டி வழங்குவதில் பெரும் பங்காற்றியுள்ளதை அறிய முடிகிறது.

மலாயா பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறை அமைக்கும் பிரயத்தனத்தில் மலேசியாவில் வாழும் தமிழர்களின் இருப்பு தொடர்பான சிந்தனையோட்டம் மிக முக்கியத்திற்குரியதாகும். இப் பல்கலைக்கழகத்தை பொறுத்தமட்டில் அந் நாட்டின் சுதந்திரத்திற்கு முன்னரே அச் சிந்தனை மேலோங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாகவே இந்திய ஆய்வுத்துறை தமிழில் முக்கியத்துவம் பெற்று விளங்குவதும் அவதானத்திற்குரியதாகும். மலேசியாவில் மூன்று இனத்தவர்கள் ஐக்கியத்துடன் வாழுகின்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையும் போற்றத்தக்க விடயமாகும். பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் தென் கிழக்காசிய நாடுகளில் தென்னிலங்கை தமிழர்களே இரையானார்கள். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களை விட குறைந்தளவான எண்ணிக்கையிலேயே வாழுகின்ற நிலையில் மலேசியாவில் தமிழர்கள் தமிழ் உணர்வுடன் ஒருங்கிணைந்திருப்பதையும் உணர முடிகிறது. இம் முன்மாதிரியை கவனத்தில் கொண்டு இலங்கையில் மலையகப் பல்கலைக்கழகம் குறித்த கனவை முன்னகர்த்தியிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

இலங்கையில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் இருநூறு வருட வாழ்வியலில் இருப்பு தொடர்பான உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதில் கடும் பிரயத்தனங்களை மேற்கொணடு கசப்பான அனுபவங்களையும் கொண்டதாக அமைகிறது. வாக்குரிமை பறிப்பு, பிரஜாவுரிமை பறிப்பு, ஒப்பந்தங்கள் ஊடாக குடும்பங்களை பிரித்த நடைமுறை, அவ்வப்போது வன்முறைகள் ஊடாக அடக்கி ஆளும் திட்டம், குடும்பக் கட்டுப்பாடு எனும் பெயரில் இன அழிப்பு நடைமுறை, திட்டமிட்ட பேரின குடியேற்றங்கள்,



(17 ஆம் பக்க பார்க்க)




புத்தாண்டே வருக
புத்தாண்டுப் புதுமலர்
மலர்ந்தது
எங்கும் அதன் மணம்
கமழ்கிறது
சந்தோஷம் எங்கும்
பிறக்கிறது
மக்கள் மனம் எல்லாம்
மகிழ்கிறது

வாணவெடி ஓசை
எங்கும் ஒலிக்க
கோயில் எங்கும்
பூஜை விளங்க
தேசிய கொடிகள்
எங்கும் பறக்க
ஆலய மணி ஒலி
எங்கும் கேட்க
பிறந்ததே புத்தாண்டு
நீ வருக! நீ வருக!

உள்ளத்தின் சோகங்கள் அகன்றிட
சாந்தி சமாதானம் ஓங்கிட
கொடூரம் மறைந்து
சுபீட்சம் பிறந்திட
வாழ்வின் ஏற்றங்கள் கண்டிட
மலரட்டும் புத்தாண்டு

போட்டி பொறாமை அகன்றிட
சாந்தி சமாதானம் ஓங்கிட
சண்டை குழப்பம் விலகிட
இருள் அகன்று ஒளிவீசிட
அஞ்ஞானம் மறைந்து
மெஞ்ஞானம் பெருகிட
மலரட்டும் புத்தாண்டு

கழிந்த காலங்கள்
நாம் கண்ட
கசப்பான நிகழ்வுகள்
இனியும் வேண்டாம்
ஆட்சி அதிகார
குழப்பங்கள்
டெங்கு, கொரோனாவின்
கொடுமைகள்
இனியும் வேண்டாம்

வளம் பல பெருகிட
தேகசுகம் உடல்நலம்
என்றும் கிடைத்திட
மலரட்டும் புத்தாண்டு
புத்தாண்டே
உன்னை வரவேற்றோம்
நீ வருக! வருக!

**எம்.ஏ.அத்தாஸ்,**
**மாத்தறை**





# மாண்புமிகு மாணவராய்...

மாண்புமிகு
மாணவர்க்கு
கவிஞன்...
நான் எழுதும்
மதியுரைக் கவியிது,
ஒழுக்கத்தை
பேணுங்கள்
ஒற்றுமையாக
வாழுங்கள்
இளமைக்
கல்வியினை
இனிதே
கற்று விட்டால்
எதிர் காலத்தில்,
பேர் வாங்கும்
மாண்புமிகு
மாணவராக
இம் மாநிலத்தில்..
வாழ்ந்திடலாம்.

**சி.மெளநேஷ்**
**மட்டக்களப்பு**



# இலக்கியத்தின் ஜனாதிபதியும் இந்தியாவின் ஜனாதிபதியும்



ஆச்சரிய விழா
அதிசய விழா
ஆழ்வார் கூட்டமைப்பின்
அறிவார்ந்த விழா

சொல்காப்பியருக்கு
தொல்காப்பியர் விருது

தமிழர்களின்
முதல் குடிமகனுக்கு
இந்தியாவின்
முதல் குடிமகன் செய்யும்
இராஜ மரியாதை

கவிதை விஞ்ஞானியும்
சந்தித்துப் பெருமைப்படும்
சரித்திரப் பதிவு

தென்னகத்து சக்ரடீஸ்சுக்கு
விருது வழங்குகிறார்

இலக்கணத்தின் ஜனாதிபதி
தொல்காப்பியர்
இலக்கியத்தின் ஜனாதிபதி
கலைஞர்
இந்தியாவின் முன்னாள்
ஜனாதிபதி கலாம்..

**சாஹிப் பரீதா**
**சிலாபம்.**

# கீரை மகத்துவம்



முற்றத்திற்கு ஒரு
மரம் அவசியம்
அது முருங்கை மரம் தரும்
முத்தான இலைகளின் கல்சியம்!!
பொன்போன்று மேனியை என்றுமே
புதுமை மாறாது பாதுகாக்கும்
பொன்னாங் கண்ணிக் கீரை!!

அருமருந்தாக அகத்தினில் நிற்பது அகத்திக் கீரை
ஆறாத புண்ணையும் தேற வைக்கும்
வலுவான கீரை!!
வேரோடு அறுத்து பிசைந்து உண்பதால்
சாறோடு உடலில் சேர்ந்து
மூளை வளர்ச்சியை தருவது வல்லாரை கீரை!!

குறும்பான பாடலோடு விரும்பாத வைத்தியராய்
கசப்பான சீனி நோய்க்கு எதிர்ப்பான
ஆயுதம் குறிஞ்சாக்கீரை!!
மாம்பாஞ்சான் என்றதொரு மகத்துவ கீரை
தேன் மருந்து போல....
இதற்கு ஒடுவடக்கி என்றதோர் பெயருமுண்டு..!!

வாதம் பித்தம் வாட்டும் தாகம் போக்கி
உணவில் வாசனை சேர்த்து
போஷனை தருவது கொத்தமல்லிக் கீரை!!
கலப்பு சத்துக்களின் கலசமாய் மிளிர்வது
சூழலில் கிடைப்பது அரிதாய்
தெரிவது தவசிக் கீரை!!

நோய் எதிர்ப்பை தாங்கி நிற்கும்
வெந்தயக்கீரை...
வாயுக் கோளாறையும் சரி செய்யும் பந்தயக் கீரை!!
முட்களின் அரசியாய் ஒரு கீரை
குப்பையில் முளைத்து
கொடியாய் படர்ந்து நிற்கும்
தூதுவளைக் கீரை..!
சளி சிக்கலின் நிவார ணக்கீரை!!

புதுமணம் கமழும் புதினாக்கீரை...
புத்துயிர் கொடுத்து சமையலில் சுவை சேர்க்கும்..!!
எளிதில் கிடைத்திடும் முளைக்கீரை....
ஜீரணம் தந்திடும் அரும் கீரை!!!

எலும்புகளின் சக்தியை பலப்படுத்தி
தழும்புகளை மறைய செய்யும் பசளிக்கீரை!!
குழம்புகளில் கொஞ்சம் சேர்த்து
உடனுக்குடன் உண்டு வந்தால்
கொடிய நோயினை வென்று தரும்
கரிசலாங்கண்ணி கீரை!!
சூழலின் அருட்கொடையாம்
சுகமான வாழ்வின் மருத்துவம் பேசும்....
அகன்று விரிந்த வையகம் தந்த மானுட வாழ்வின்
ஆயுளை பாதுகாக்கும் ஔடதமாய்
இலைகளின் பாக்கியம்!!

**மாஜிதா தவ்பீக்**
**மருதமுனை**

# நாளைய பூங்கா

பொங்கி அழாதே
உன்னை அவர்கள்
காணாமல் போகவில்லை
கண்டும் காணாததுபோல்
கடந்து போகிறார்கள்

நீ அடிக்கடி
சல்யூட் அடிக்காததுதான்
நீ செய்த ஒரேகுற்றம் !

உன்னைவிட
நூறடி பின்னே இருப்போரை
தூக்கிப் பிடிப்பதெல்லாம்
உன்னை நோகடிக்கத்தானா ?

இவர்கள் கோமாளிகள்
எப்பொழுதும்
கும்மாளம் போடுவார்கள்
புரிந்துகொள்

துணிந்து நில்
துவண்டுவிடாதே.

இன்று நீயொரு பூதான்
நாளைய பூங்கா
உனக்குள் மறைந்து கிடக்கிறது.

**திக்குவல்லை கமால்**

# பிறக்கட்டும் புத்தாண்டு




கொஞ்சக் காலமாக
வந்து போகும் மிந்தப்
புத்தாண்டுகள் எல்லாம்
உலகை ஆட்சியாளர்கள்
போலும், அரசியல்

வாதிகள் போலுந்தான்
வந்திருந்து போகின்றன
நலவொன்றும் நாம் காணோம்!
எவன் செத்தால் என்ன
எவன் வாழ்ந்தால் என்ன

அப்பாவி மக்களின் அடி
வயிற்றிலே அடித்து
அவரவரின்
பொருளாதாரங்களைக்
கொள்ளையடித்துக் களவாடி
மெல்ல நகர்ந்து போகிறது!
இந்த வருஷமாவது

சுயநலம் இல்லாத தாய்
மக்கள் நலமுள்ள தாய்
அனைவருக்கும் நல்ல தாய்
உள்ளன்பு கொண்ட தாய்
அகிம்சை மனமுள்ள தாய்
அன்பிற்கு இனிய தாய்
வந்து பிறக்கட்டும் புத்தாண்டும்!
பாண்டியூர் பொன்பாவேந்தன்

**ஏ.பி.என்.நவநீதன்**
**பாண்டிருப்பு 02,**
**கல்முனை**

# இனிய புத்தாண்டே....




இயற்கைதனிலே பூமி சுழல
காலம் அறிந்து கடிகாரம் சுழலும்
அது செயற்கை !!
காலையில் சூரியன் எழுந்து
மாலையில் மறையும்
இது இயற்கை !!

ஒவ்வொரு
நாளும்பெருமை மிக்கது
அதிலும் இந்நாள் நாள்
அருமை மிக்கது !!
உழைத்தவன் அறிவான்
உழைப்பின் அருமை
அது தான் அவன்
உயர்வுக்குபெருமை !!

நல்லதை நினைப்போம் !!
உதவிகள் செய்வோம் !!
மானுடம் வாழ
மனித நேயம் காப்போம் !!

பொல்லா காலம்
போனதென்றே
நினைத்து
நல்ல காலம்
பிறந்ததேன்றே வாழுவோம் !!

முயற்சி விதைகளை தூவி
நம்பிக்கை பயிர்களை
முளைக்கச் செய்வோம் !!
நம்பிக்கை வைக்கும்
நண்பர்களுக்கு
நட்பே துணை !!
அன்பே கடவுள் !!
புதிதாய் பிறந்த
புத்தாண்டு குழந்தையை
அன்பாய் வளர்த்து
அர்த்தமுள்ளதாக்குவோம் !!

# நன்றே

நெஞ்சினை நிறைக்கும்
தாயும் நன்றே
நேசமே காட்டும்
தந்தையும் நன்றே
நெருங்கியே இருக்கும்

உறவும் நன்றே
வஞ்சனை இல்லாப்
பெண்டீரும் நன்றே
வளத்தினை அழிக்காப்
பிள்ளை நன்றே
வணங்கிட அருளும்

தெய்வம் நன்றே
சஞ்சலம் இல்லா
மனமும் நன்றே
சாதிகள் இல்லாச்
சமூகமும் நன்றே
நஞ்சினை ஊட்டாச்
சொல்லும் நன்றே
நகையினை அணிந்த
முகமும் நன்றே
நலிந்தவர்க்கு உதவும்
கரமும் நன்றே
சரிநிகர்ப் பிறரை
நினைத்தல் நனிநன்றே.

**தமிழ்க்கீரன்**
**கல்மடு, கல்குடா.**

# இரத்த மோகத்தினால் திண்டாடும் பாவக் கருமிகளே



மனிதாபிமானமற்றவர்களே
உங்கள் துரோகத்திற்கு
பிஞ்சும் இல்லை
முத்தலும் இல்லையே

கொத்துக் கொத்தாய் சீரழிக்கும்
உங்கள் கொலை வெறியின்
நியாயமற்ற தாண்டவத்தின் மீறல்
பலஸ்தீனத்தினதும் காசாவினதும்
முத்துக்களின் வெற்றியே.
மனிதனாக பிறந்தது தப்பா
அல்லது பலஸ்தீனில்
பிறந்தது தப்பா

துரோகத்தனத்தின் தாண்டவத்தில்
ஆடித் திரிகின்றீர்களே
கொலை வெறிக்கு பிஞ்சுகளும்
கர்ப்பிணிகளும் தான் என்றால்
மன நோய் பிடித்த துரோகிகளாகி
விட்டீர்கள் என்பதே உண்மை.

கொலை வெறித்தனமும் துரோகமும்
வெற்றி தராது என்பதே யதார்த்தம்.
தோல்வி என்பது தலைவிதியே
தியாகமும் இறை நம்பிக்கையும்
கொண்டவர்கள்தான்
காசாவின் உறவுகள்
அந்த உறவுகள் வெற்றியின்
நட்சத்திரங்கள் என்பதே உண்மை.

நீ பறிக்கும் ஒவ்வொரு ஆத்மாவும்
உன் வம்சத்தின் அழிவிற்கானதே
நீ பறிப்பது உயிராக இருக்கலாம்
அவர்கள் செல்வது சொர்க்கமே
அது புரியாத
முட்டாள்களாகிவிட்டீர்கள்
பலஸ்தீன உறவுகளின்
இறை நம்பிக்கையும் துணிச்சலும்
சுவர்க்கத்தின் விருந்தாளிகளே

நீ படுகுழியின்
ஆழத்தை நோக்குகிறாய்
அவர்கள் வெற்றியின் ஆழத்தை
நோக்கி பயணிக்கின்றார்கள்.
நீ ஆயுதத்தால் மரண
பயத்தை தணிக்கின்றாய்
பலஸ்தீன முத்துக்கள்
கலிமாவினால்
அச்சத்தை போக்குகின்றன.

நீ போடும் ஆட்டத்தை
நிராயுதபாணியாக போட்டுப்பார்
பலஸ்தீன வீரர்கள்
வானத்து நட்சத்திரங்கள்போல்
மின்னிக் காட்டுவார்கள்.
வெல்லலாம் என்ற பகற் கனவுடன்
நீ தடுமாறுகின்றாய்.
அவர்களோ படைத்த
இறை நம்பிக்கையில்
வெற்றியை நோக்கிய
வீரர்களாகின்றனர்.

பலஸ்தீன இரத்த
வாடையில் நீங்கள்
அந்த முத்துக்களோ
சுவர்க்க வடையில்
துணிச்சலான வீரத் தியாகங்கள்

நீங்களோ மரணத்துக்கு அஞ்சி
ஆயுதத்தின் பின்னால்
ஒளியும் கோழைகளே.
உயிர்த் தியாகம்
வெற்றியின் படிகளே
இறைவனோடு என்றும் நாங்கள்
என்பதே காசா உறவுகளின்
மன நிறைவு

**சத்தார் எம் ஜாவித்**

# இரண்டாயிரத்து இருபத்து நான்கே வருக!

தை தொடக்கம் மார்கழி வரை
தொடரும் உன்ஆயுள் இறுதியில் மடிவு
தைரியமாக மற்றொரு ஆண்டு பிறக்கும்
பிறந்து மடிந்து சரித்திரம் படைப்பது
தையலே உங்களுக்கு வழக்கமாச்சு
பாவையே இரண்டாயிரத்து இருபத்து நான்கே
பட்டாடை கட்டி பூ மலை சூடி
தங்கச் சிலையென இளநகை ததும்ப
புதுமை கொண்டு புத்தாண்டே வருக!
உலகமெங்கும் போர் முழக்கம் ஓயட்டும்
சிந்தும் செங்குருதியில் தோய்ந்த நிலமகள்

உயிரற்ற சடலங்களை சுமந்து கிடக்கிறாள்
அவள் விழி சிந்தும் நீர் ஆறாய் ஓடுகிறது
உறங்கிய கடலும் கருணையின்றி சீறிப்பாய்கிறது
ஆண்டவனே நீதான் இந்த
உலகை காக்கவேண்டும்
உள்ளத்தில் உவகை பொங்கிடவேண்டும்

உத்தமியே இனிய புத்தாண்டே வருக!

ஏறிய பொருள் விலை இறங்கிடவேண்டும்
மக்கள் உள்ளத்தில் உவகை பொங்கட்டும்
எண்ணங்கள் ஆயிரம் மனிதனுக்கு
அத்தனையும் நனவாய் மலர்ந்திடவேண்டும்
எங்கும் மங்கலம் பொங்கட்டும் உலகில்
வறுமையகன்று நிம்மதி நிலைக்கட்டும்
எங்கள் வாழ்வில் நல்லெழில் தோன்றி
வையகம் மகிழ்ந்து ஆனந்தம் மேலிட

**கலாபூஷணம் கு. சண்முகம்,**
**வந்தாறுமூலை**



# திரவப் பெற்றோலிய வாயு; பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்



இலங்கையில் முன்னணி திரவப் பெற்றோலிய வாயு விநியோகஸ்தரான லிற்ரோ காஸ் லங்கா நிறுவனம், பாடசாலை மாணவர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுத்த விழிப்புணர்வுத் திட்டமான 'நாளையைப் பாதுகாக்கும் எமது பிள்ளைகள்' திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தது. இத்திட்டமானது நாடு முழுவதிலும் உள்ள 264 பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதுடன், திரவப் பெற்றோலிய வாயுவைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து அறிவூட்டுவது இதன் நோக்கமாகும்.

திரவப் பெற்றோலிய வாயு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் அதன் பாதுகாப்பான பயன்பாட்டுக் கலாசாரத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தி அதன் ஊடாக இறுதியில் அவர்களுடைய குடும்பங்களைத் தெளிவூட்டுவது 'நாளையைப் பாதுகாக்கும் எமது பிள்ளைகள்' திட்டத்தின் நோக்கமாகும். இதன் இறுதிப் போட்டியில் இராஜாங்க அமைச்சர் கௌரவ ஷெஹான் சேமசிங்க, சாகல ரத்னாயக்க மற்றும் லிற்ரோ தலைவர், முகாமைத்துவம் மற்றும் பணியாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றிய லிற்ரோ காஸ் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிடுகையில், "இந்தத் திட்டம் வெற்றிகரமாகப் பூர்த்தியடைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்." என்றார்.

# புதிய சுப்பர் கூல் மெத்தைகளை அறிமுகம் செய்துள்ள ஆர்பிகோ



இலங்கையின் மெத்தை துறையில் நீண்ட காலமாக முன்னிலையில் திகழும் நாமமான ஆர்பிகோ, புதிய சுப்பர் கூல் மெத்தையை அறிமுகம் செய்துள்ளது. ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பிஎல்சியின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகத் துறையின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு. லலித் விஜேயசிங்க இந்த புதிய சுப்பர் கூல் மெத்தையை அறிமுகம் செய்திருந்தார். இந்த அறிமுக நிகழ்வில் விசேட விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சௌகரியமான உறக்கத்தை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய சுப்பர் கூல் மெத்தைகள், மக்கள் ஓய்வெடுப்பதில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எமது தினசரி வாழ்க்கையில் இனிமையான இரவு நேர உறக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த அறிமுகத்தை மேற்கொண்டுள்ளது. சாதாரணமாக நபர் ஒருவர் தமது வாழ்நாளின் மூன்றில் ஒரு பகுதியை உறக்கத்தில் செலவிடும் நிலையில், சீரான நாளின் இயக்கத்துக்கு இனிய உறக்கத்தின் முக்கியத்துவத்தை ஆர்பிகோ உணர்ந்துள்ளது.

புதிய சுப்பர் கூல் மெத்தையின் நவீன தொழில்நுட்பத்தினூடாக, ஒப்பற்ற சௌகரியம் உறுதி செய்யப்படுவதுடன், மென்மையான ஃபோம் லேயர், குளிர்மையை தக்க வைக்கும் வகையில் பிணைக்கப்பட்ட ஃபோம் லேயர் மற்றும் லேடெக்ஸ் கலந்த கடினமான ஃபோம் லேயர் ஆகிய நான்கு லேயர்களில் ஓய்வுடனான மற்றும் புத்துணர்வூட்டும் உறக்க அனுபவம் உறுதி செய்யப்படுகின்றது. பாரம்பரியத்துடன் புத்தாக்கத்தை ஒன்றிணைத்து ஆர்பிகோ பரந்தளவு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இது போன்ற உயர் தரமான தயாரிப்புகளை வழங்கி வருகின்றது.



இலங்கை இன்சூரன்ஸ் அசோசியேஷன், காப்புறுதித் துறைக்காக 'இணைந்து பாடுங்கள்' எனும் நிகழ்வை நடத்தியது. காப்புறுதித் துறையில் சமூக உணர்வை வளர்ப்பதற்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், இலங்கை இன்சூரன்ஸ் அசோசியேஷன் (IASL) டிசம்பர் 2, 2023 அன்று கிராண்ட் மோனார்க் ஹோட்டலில் 'சந்திமாலுடன் இணைந்து பாடுங்கள்' நிகழ்வை ஏற்பாடு செய்தது. சூட்டி மல்லி, பொடி மல்லியின் நிகழ்ச்சிகளும் அன்றைய தினம் இடம்பெற்றது.

# யூனியன் அஷ்யூரன்ஸ் விருது வழங்கலில் வெற்றியாளர்களின் சாதனைகள் கௌரவிப்பு

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், பெருமளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த மத்திய வருட விருதுகள் 2023 நிகழ்வை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வினூடாக, 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த ஆலோசகர்கள், பிராந்தியங்கள் மற்றும் வலயங்கள் போன்றன கௌரவிக்கப்பட்டிருந்தன.

மத்திய வருட விருதுகள் வழங்கும் நிகழ்வில் 250 க்கும் அதிகமான வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் யூனியன் அஷ்யூரன்ஸ் குடும்பத்தினுள் எய்தியிருந்த விசேட சாதனைகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் அமைந்திருந்தன. பிரதான விருதை வெற்றியீட்டியவர்களில், தேசிய புதிய வியாபார சம்பியன் – புதிய ஆலோசகர் பிரிவு, பொரளை பிராந்தியத்தின் சி.என்.எஸ்.பெர்னாண்டோ பெற்றுக் கொண்டதுடன், தேசிய புதிய வியாபார சம்பியன் பிரிவின் வெற்றியாளராக சிலாபம் பிராந்தியத்தின் சி. அப்புஹாமி பெற்றுக் கொண்டார். சிறந்த பிராந்தியமாக குருநாகல் 1 பிராந்தியம் – வட மேல் 2 வலயம் தெரிவு செய்யப்பட்டதுடன், வடக்கு 2 வலயம் பாரிய பிரிவில் சிறந்த பிராந்தியத்துக்கான விருதை பெற்றுக் கொண்டது.




# CSSL National CIO பட்டியலில் அனோஜா பஸ்நாயக்க

இலங்கையின் தொழில்நுட்பத் துறைக்கு ஒப்பற்ற அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பு வழங்கியதை கௌரவிக்கும் வகையில், ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க, இலங்கை கணினி சங்கத்தின் National CIO பட்டியல் 2023 இல் உள்வாங்கப்பட்டிருந்தார்.




தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்பாட்டாளர்களின் பிரதான நிபுணத்துவ அமைப்பான இலங்கை கணினி சங்கத்தினால் (CSSL) முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய CIO பட்டியல் அறிமுக நிகழ்வு 2023 டிசம்பர் 12ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. தொழிற்துறையின் முன்னணி மற்றும் புகழ்பெற்ற நிபுணர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. CIO இன் பணி என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், உலகளாவிய ரீதியில் சகல துறைகளிலும், டிஜிட்டல் மாற்றியமைப்பு பயணம் முன்னெடுக்கப்படும் நிலையில், உதவி பணிநிலை என்பதிலிருந்து மூலோபாய பணிநிலையாக மாற்றமடைந்து வருகின்றது. தேசிய ரீதியில் CIO களை தெரிவு செய்யும் போது, முன்னெடுக்கப்பட்டிருந்த மதிப்பாய்வு அளவீட்டு தெரிவில் இது பிரதிபலிக்கப்பட்டிருந்தது.

பவர் நிறுவனத்தில் அனோஜா 2008 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப முகாமையாளராக தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அதற்கு முன்னர் Brandix, PricewaterhouseCoopers மற்றும் Hayleys ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியிருந்தார்.

# நவலோக மருத்துவமனையின் வருடாந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



நவலோக மருத்துவமனை குழுமத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்ட நத்தார் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக அண்மையில் நிறைவடைந்தன. வருடாந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் முதற்கட்டமாக கிறிஸ்மஸ் கேக் கலவை அண்மையில் தயாரிக்கப்பட்டதுடன், டிசம்பர் மாத தொடக்கத்தை முன்னிட்டு வைத்தியசாலை வளாகம் முழுவதும் கிறிஸ்மஸ் அலங்காரங்கள் மற்றும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நவலோக மருத்துவமனையில் வருடாந்த கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் கிறிஸ்மஸ் கரோல் இசைக் கச்சேரி 3 நாட்கள் இடம்பெற்றதுடன் கடைசி இசை நிகழ்ச்சி டிசம்பர் 15 ஆம் திகதி நவலோக வைத்தியசாலையின் முகப்பில் இடம்பெற்றது. இதில் நவலோக மருத்துவமனை குழுமத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நவலோக வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவமனையில் பங்குபற்றும் சிறார்களுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவினால் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஏறக்குறைய 50 சிறுவர்கள் கலந்துகொண்டதுடன் இந்நிகழ்வில் பங்குபற்றிய சகல சிறார்களுக்கும் உணவு மற்றும் பானங்கள் வழங்கப்பட்டன.

நவலோக வைத்திய சாலையின் வருடாந்த கிறிஸ்மஸ் வேலைத்திட்டம் தொடர்பில் மருத்துவமனை குழுவின் தலைவர் டொக்டர் ஜயந்த தர்மதாச கருத்து தெரிவிக்கையில். "வருடாந்திர கிறிஸ்மஸ் நிகழ்வு நவலோக மருத்துவமனையின் ஒரு அங்கமாகும், மேலும் எங்கள் ஊழியர்கள் கோவிட் காலத்தைத் தவிர ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து வருகின்றனர். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கிறிஸ்மஸ் கரோல்கள் மற்றும் பிற கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் மூலம், நோயாளிகளுக்கு மன மகிழ்ச்சியை அளிக்க முடிகிறது." என கூறினார்.

# நாடளாவிய பிரசன்னத்தை விரிவுபடுத்தும் SLIC



கைதடி, விஸ்வமடு மற்றும் ஹெட்டிபொல (மஹியங்கனை) ஆகிய இடங்களில் முகவர் வர்த்தக அபிவிருத்தி நிலையங்களை (ABDC) திறந்து வைப்பதன் மூலம் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் வடக்கு மற்றும் ஊவா பிராந்தியங்களில் தனது இருப்பை விரிவுபடுத்துகிறது. கைதடி ABDC கைதடி A9 வீதியிலும், விஸ்வமடு ABDC முல்லைத்தீவு வீதி, விஸ்வமடுவிலும் திறக்கப்பட்டது.



இரண்டு ABDCகளின் திறப்பு விழா டிசம்பர் 12, 2023 அன்று நடைபெற்றது. ஹெட்டிபொல (மஹியங்கனை) ABDC 2023 டிசம்பர் 15 ஆம் திகதி யசிரு எண்டர்பிரைசஸ், வில்கமுவ, ஹெட்டிபொலவில் திறக்கப்பட்டது. இந்நிகழ்வில் SLIC இன் பிரதம வர்த்தக அதிகாரி திருமதி நமலி ஏ.சில்வா, உதவிப் பொது முகாமையாளர்/ தேசிய விற்பனைத் தலைவர் ஜகத் வெல்கம ஆகியோர் பங்கேற்றனர்.

இவ்விரு நிகழ்வுகளிலும் அப்பகுதியின் சிறப்பு அழைப்பாளர்களும் வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர். முகவர் வர்த்தக மேம்பாட்டு மையங்கள் SLIC க்கு அதன் வரம்பை மேலும் அதிகரிக்க அனுமதிக்கிறது. இது அதன் விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் பாதுகாப்பு தேவைகள் தொடர்பாக வசதி மற்றும் வேகமான சேவையை வழங்குகிறது.

## யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட்

# புதிய இலச்சினை அறிமுகம்



இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் முன்னணி நிறுவனமான யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் தனது புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது.

குறித்த அறிமுக நிகழ்வு கொழும்பில் உள்ள பிரபல தனியார் ஹோட்டலில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் கடந்த 6 வருடங்களாக தனக்கான ஒருவழியில் யாத்திரியர்களின் அமோக ஆதரவுடன் நாடளாவிய ரீதியில் சேவையை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம் என்பதில் பெருமிதம் கொள்கின்றது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட இலச்சினை, ஒரு விமானத்தின் ஜன்னல் பகுதி இருப்பதுடன், அது ஆங்கில எழுத்து யூ வடிவத்தையும், அந்த ஜன்னலுக்குள் இருந்து பார்க்கும் போது விமானத்தின் பின் பகுதி போன்ற வடிவமைப்பு ஆங்கில எழுத்து "டி" வடிவத்தை கொண்டுள்ளது. இலச்சினையின் தோற்றத்தில் பல வர்ணங்கள் அடங்கியுள்ளன. அந்த நிறங்கள் ஒற்றுமை, அரவணைப்பு, அன்பு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.




யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் சர்வதேச தரத்தில் தனது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, தனது சேவையை வழங்கி வருவதுடன், கடந்த பல வருடங்களாக இலங்கை மக்கள் மத்தியில் ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் அபிமான நம்பிக்கையை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அறிமுக நிகழ்வில், நிறுவனத்தின் ஊடாக சேவையை பெற்றவர்களுக்கான நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டு கௌரவித்தமை நிறுவனத்தின் தரம், தனித்துவம் சிறப்பு மற்றும் புத்தாக்கம் என்பனவற்றை எடுத்து காட்டுகின்றது.



மஞ்சரி சிறுகதை

# வாழ்க்கைப் பரிசு

அலுத்துக் களைத்து வீடு வந்து சேர்ந்தாள் சாகிரா. பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருந்த மகள் சஹானா எழுந்தோடி வந்து கழுத்தில் தொங்கினாள். அள்ளியெடுத்து அவளுக்கு வாடிக்கையான முத்தத்தைக் கொடுத்துவிட்டு 'வாப்பா எங்கும்மா?' எனக்கேட்டாள். 'தூங்குறாம்மா..... ஸ்..... சத்தம் போடாதீங்க.... எழும்பிடுவா...' என்றாள் வாயில் விரல் வைத்துப் பாசாங்கு செய்தபடி. குழந்தையைத் தனியே விளையாடவிட்டு என்ன தூக்கம்? என்று புறுபுறுத்தவள் அறையைப் பார்த்தாள். கதவு திறந்தே கிடந்தது.

ஒவ்வொரு நாளும் காலையில் சிரான் கடைக்குச் சென்றிட, குழந்தையை ஆயத்தப்படுத்தி அழைத்துக்கொண்டு பாலர் பாடசாலையில் விட்டுவிட்டு அவள் பணிக்குச் செல்லவேண்டும். பகல் பன்னிரண்டு மணிக்கு சிரான் கடையிலிருந்து வந்து பிள்ளையை முன்பள்ளியிலிருந்து எடுத்துக் கொண்டு, அவள் வரும்வரையில் பார்த்துக் கொள்ள வேண்டும். அவள் மூன்றரை மணிக்குள் வந்த பின் சிரான் மீண்டும் சென்று கடையின் அலுவல்களைக் கவனித்து விட்டு இரவு எட்டு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வரவேண்டும். ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் கட்டாயமாகக் கடை மூடப்பட வேண்டும். இருவருமாக பிள்ளையுடன் நேரத்தைச் செலவிட வேண்டும்.

சஹானாவின் மழலைப்பருவத்தில் அவளைக் கவனித்துக் கொள்ள, சிரானின் தாயார் உதவியாக இருந்தார். எதிர்பாராதவிதமாக அவர் கொரோனாத் தொற்றுக்குப் பலியானதால் ஏற்பட்ட ரணம், இருவர் மனங்களிலும் ஆறாத வடுவானது. வேலைக்குப் போகும் பெண்டிரின் திண்டாட்டம் எப்படியானது என்பதை அதன்பின்னர் தான் சாகிரா உணர்ந்தாள். வீட்டுவேலைக்கு ஆள் கிடைப்பது முயற்கொம்பாக இருந்தாலும், நம்பிக்கையாக, நாணயமாக, நல்லொழுக்கமுள்ளவர்களாக வேலைக்கு வருபவர்கள் இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? அதனால் தான் சிரானும் சாகிராவும் கலந்துபேசி ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். சொந்தக்கடையும், மோட்டார் சைக்கிளும் சிரானுக்கு இருப்பது கூட இந்த ஒப்பந்தத்துக்குச் சாதகமாகவே அமைந்ததால் குடும்ப வண்டி சுமுகமாக ஓடலானது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்களின் இல்லம் கலகலப்பாக இருக்கும். மூவரும் ஒன்றாக இருந்து மகிழ்ச்சியை அனுபவிக்கும் விதமாக திட்டமிட்டுக்கொள்வார்கள். உறவினர்களைச் சந்திக்கச் செல்வது, சஹானாவுடன் சிறுவர் பூங்காக்களுக்குச் சென்று விளையாடுவது, நெருங்கிய உறவுகளை வரவழைத்து விருந்து வைப்பது, பிரபலமான உணவகங்களில் பகலுணவை எடுத்துக்கொள்வது, இப்படி.....

அன்று ஞாயிற்றுக்கிழமை, மாலை சிறுவர் பூங்காவுக்குச் செல்ல வேண்டிய நாள். சாகிரா பகலுணவு தயாரித்துக்கொண்டிருக்க, சிரான் சஹானாவை மடியில் வைத்துக் கதை பேசிக் கொண்டிருந்தான். சற்றைக்கெல்லாம், முச்சக்கரவண்டியொன்று வீட்டின் முன் நின்றது. வாட்டசாட்டமான ஒரு பெண்மணி சல்வார் உடையில் கேற்றைத் திறந்துகொண்டு வந்தாள்.

'ஹாய் சிரான்.... எப்படியிரிக்கீங்க?'

சிரான் எழுந்து வாசலருகில் வந்துபார்க்க, அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை.

'அட... இது ரலீனா இல்ல... வாங்க வாங்க... எவ்ளோநாள் கண்டு? எங்க இந்தப்பக்கம்?.....'

வாசலில் பேச்சரவம் கேட்டு சாகிரா வந்து பார்த்தாள்.

'சாகிரா.... இவ ரலீனா. ஏண்ட கிளாஸ்மேட்'

அழையாமல் வந்த அதிதியை இருவருமாக வரவேற்று அமரவைத்தார்கள். பரஸ்பர நலவிசாரிப்புகளோடு பழைய, புதிய விடயங்கள் சுவாரஸ்யமாகப் பரிமாறப்பட்டன. அறிமுகமில்லாத நபரைத் தாயின் பின்னால் ஒளிந்துகொண்டு தலையை மட்டும் நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள் சஹானா.

'ஸ்வீட் கேர்ள்....ஆன்ரிகிட்ட வாங்கடா செல்லம்...' என்று கையோடு கொண்டு வந்திருந்த பொதியை நீட்டினாள். குழந்தையல்லவா? தாயின் முகத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு அவள் உதிர்த்த புன்னகையை அங்கீகாரமாகக் கருதி மெல்லமெல்ல ரலீனாவை நெருங்கினாள்.

ரலீனாவின் குடும்பநிலை சுமாரானது. நிரந்தரத் தொழில் என்று எதிலும் ஒட்டிக்கொள்ளாத தந்தை. ரலீனாவுக்கு அடுத்தடுத்து இரண்டு தங்கையைர் தம்பி என்று குடும்பம் பெருத்துப் போன போது கஷ்டநிலை தீர்க்க ரலீனா விமானமேறினாள். தங்கைகளுக்கு வாழவழி செய்துவிட்டு, ஏழு வருடங்களின் பின் நாடு திரும்பியிருக்கின்றாள். வெளிநாட்டு வாழ்க்கையின் செழிப்பு அவள் சாயலில் ஒருசில வயதுகளைக் குறைத்து விட்டிருந்தது.



ரலீனாவுடன் எல்லோரும் பகலுணவு எடுத்தார்கள். சஹானாவும் அவளோடு ஈயாக ஒட்டிக்கொண்டாள். சாகிராவும் இயல்பாகப் பழகினாள். அன்றைய தினம் அந்த வீடு அதீத மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தது.

ரலீனா, சிரான் குடும்பத்தோடு ஐக்கியமாகிவிட்டாள். சாகிராவின் விடுமுறை நாட்களில் எல்லாம் ரலீனாவின் வரவு வாடிக்கையாகிவிட்டது. இவர்களால் ஒழுங்கு செய்யப்படும் பயணங்களிலெல்லாம் ரலீனாவும் ஓர் அங்கமானாள்.

வான விதானத்திலே 'எப்போது அவிழ்ந்துவிடலாம்' என்று எதிர்பார்ப்போடு கார்மேகங்கள் மூட்டை முடிச்சுகளுடன் காத்துநின்றன. மெல்லிய மழையிருட்டு; சின்னக்குமுறலாய் இடிமுழக்கம். நடையைத் துரிதப்படுத்தியபடி சாகிரா வீட்டை அண்மித்தாள். வீட்டினுள்ளே தொலைக்காட்சியின் சத்தம். 'இந்த நேரத்துல டீவி பாக்கிற பழக்கம் எங்க வீட்ல இல்லையே...' திறந்திருந்த கதவைத் தள்ளிக்கொண்டு உள்நுழைய... தான் வந்ததும் தெரியாமல் சஹானா கார்ட்டூனில் மூழ்கிக் கிடந்தாள்.

'சஹானா...' கத்த வேண்டும் போலிருந்தது. சுதாகரித்துக் கொண்டாள்.

'என்னம்மா இது புதுப்பழக்கம்? யாரு கார்ட்டூன் போட்டுத் தந்த?'

'வாப்பா தான்' கார்ட்டூனிலிருந்து கண்ணை எடுக்காமலே குழந்தை பதிலளித்தது. பெரிய பிள்ளையாயிருந்தால் கன்னத்தில் அறைந்திருக்கலாம்.

'என்னவா நீங்க... புள்ளக்கி கார்ட்டூன் போட்டுக் குடுத்த...?'

'ஐயோ எவ்ளோ நேரம் புள்ள போனிக்காவோட மட்டும் வெளயாடிட்டீக்கிற... பாவந்தானே' சிரான் சொன்னான்.

'நல்ல பஸந்து... கார்ட்டூன் பாக்கிறதால என்னென்ன கேடு வருமெண்டு ஒங்களுக்கு தெரியாவா? அப்படி இரக்கம் பாத்தா புள்ளேட கண்ணோட கருத்தும் சேந்து தான் கெட்டுப் போவும்..'

வாயைவாயைத் திறந்து காட்டிய குழந்தைக்கு சோற்றுக் கவளங்களை ஊட்டியபடியே, குழந்தை தன்னோடு அணைத்துக் கொண்டிருந்த பொம்மையைப் பார்த்தாள் சாகிரா.

'இந்த போனிக்கா நேத்தெல்லாம் ஒங்களுக் கிட்ட ஈக்கலயே சஹானா....இது எங்கால...?' பொம்மையை எடுத்து மேலுங்கீழும் புரட்டிப்பார்த்தாள். அது கண்களைத் திறந்து மூடுகின்ற, சரித்தால் அழுகின்ற அழகிய பொம்மை.

'இந்த பபாவ ரலீனா ஆன்ரி தந்தாங்க...'

'எப்ப...'

'இன்னக்கித் தாம்மா.... ஜாதி பபாவொண்டு...'

'ஆன்ரி இங்க வந்தாங்களா?'

குழந்தை உணவை மென்றுகொண்டே தலை ஆட்டியது. 'எங்கசரி போற வழீல புள்ளய பாக்க நெனச்சி வந்தீக்குமாக்கும்.'

காலவிருட்சம் நாளிலைகளை ஒவ்வொன்றாக உதிர்த்துக் கொண்டிருந்தது. அன்றும் பகலுணவுக்கு வந்த சிரான் வழமை போல கடைக்குப்போன பின சஹானாவுடன் சாகிரா கட்டிலில் சாய்ந்தாள்.

'இன்னக்கி நர்ஸரில என்ன செஞ்சீங்க...?'

'ம்...ம்.... கலர் பண்ணின... பாட்டு படிச்ச....ம்.... வெளயாடின..... உம்மா நா குட் கேர்ள் மா.... ஏ தெரீமா....? மெடம் தந்த வேலயெல்லாம் குவிக்கா செஞ்சி காட்டின... எனக்கு ஸ்டாரும் கெடச்ச.... ரெட் ஸ்டார்....'

'அப்படியம்மா.... வெரிகுட் கேர்ள்....'

சஹானாவின் நெற்றியில் முத்தமிட்டபடியே சொன்னாள். 'இப்ப போல எல்லாநாளும் குட் கேர்ளா ஈக்கனும். காட்டூன்லாம் பாக்காம படிச்சாத் தான் கெட்டிக்காரி ஆவேலும். சரியா?'

'நா காட்டூன் பாக்கிறல்லம்மா.... வாப்பா தான் போட்டுத்தாற. ரலீனா ஆன்ரி வந்தாக்கா வாப்பா எனக்குப் பாக்கச் செல்லி காட்டூன் போட்டுத் தருவா.... அப்ப நான் பாப்பன்...'

உச்சந்தலையில் நச்சென்று குட்டியது போலிருந்தது சாகிராவுக்கு. உடல் மெலிதாக வெடவெடத்தது. உள்ளத்தில் இனம்புரியாத பதற்றம். மேற்கொண்டு குழந்தையிடம் எதைக் கேட்க முடியும்? எவ்வளவு நேரம் கட்டிலில் சாய்ந்திருந்தாளோ? குழந்தை தூங்கிவிட்டிருந்தது. சிரானிடம் எதுவும் கேட்கக்கூடாது. கொஞ்சநாள் பொறுமையோடு வழமைபோல் இருக்க வேண்டும். நினைத்துக் கொண்டாளே தவிர உள்ளம் பதகளித்துக் கொண்டேயிருந்தது.

அடுத்துவந்த நாட்களில் சஹானாவிடம் எப்படித் தகவல் பெறலாம் என்ற சிந்தனையோடு மூளை போரிட்டது.

'இன்னக்கி ரலீனா ஆன்ரி வந்தாங்களா?'

'ரலீனா ஆன்ரி. என்ன கொணந்து தந்தாங்க?'

'அவங்க வந்தா ஒங்களோட வெளயாடுவாங்களா?'

'இன்னக்கிம் வாப்பா கார்ட்டூன் போட்டுத் தந்தாங்களா?'

நாளுக்கொரு கேள்வியாய் குழந்தையுடனான இந்த விஷவேள்வியில் சாகிரா ஆடிப்போனாள். என்ன செய்வது? தலைக்கு மேலால் வெள்ளம் போகவிடமுடியாதே. இரவெல்லாம் தூக்கமின்றி மூளையைக் கசக்கிப் பிழிந்தாள். பொறுமை என்ற ஆபரணத்தைக் கையில் பிடித்தபடி தீர்க்கமான முடிவுக்கு வந்தாள்.

(20 ஆம் பார்க்க)

**மஸீதா புன்னியாமீன்...**

குறுங்கதை

# பழனத்தில் விளைந்த பவளங்கள்

பொழுது புலர்ந்தால் சாப்பாட்டுக்கு என்ன செய்வதென்று சாபிராவின் உள்ளம் ஏங்கியழும். உறவுகளிடமோ, பக்கத்து வீட்டாரிடமோ சென்று கை நீட்டி யாசகம் கேட்பதற்கு அவள் மனசு இடம் கொடுக்காது. ஐந்து பிள்ளைகளையும் கௌரவமாகவே வளர்த்து வந்தாள்.

சாபிராவின் பிள்ளைகள் பசி வந்தால், தாயைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். எங்கையுமே சென்று வாய் வைக்க மாட்டார்கள். பட்டினி கிடந்து பழக்கப் பட்டு விட்டர்கள். ஒரு நாளைக்கு இரு நேரமே சாப்பிடுவார்கள்.

ராபித்..மகன்..! நபிலா தாத்தா வீட்டுக்குப் போய்"முருங்கைக் கீரை பிச்சி வாங்க". மத்தியானத்துக்குச் சோறாக்கிக் கீரைக் கறியோட சாப்பாடு தாரேன் என்றாள். எதுவித மறுப்புமின்றி ராபித் சென்றான்.

நபிலா தாத்தா...நபிலா தாத்தா...

கூப்பிட்டுப் பார்த்தான்.எந்தச் சத்தத்தையும் காணோம். யாருமே இல்லை. கதவு பூட்டியிருக்கு, வீட்டுக்கே போய் விடுவோம் எனத் திரும்பிய போது...

யாரது..!

உள்ளேயிருந்து குரல் கேட்டது. நபிலா தாத்தா தான் நின்றிருந்தாள்." உம்மா முருங்கைக் கீரை பிச்சிட்டு வரச் சொன்னாங்க." அதுதான் கூப்பிட்டேன் என்றான்.

"இத என்னிடம் கேட்கனுமா..? முருங்கை மரத்தில் ஆய்ந்திட்டுப் போறது தானே." எவ்வளவோ பேர் ஆய்ந்து போறாங்க. உனக்குத் தேவையேற்படும் போது ஆய்ந்து போகலாம். என்னிடம் கேட்கத் தேவையில்லை. நபிலா தாத்தா அனுமதி வழங்கினாள்.

ஆயினும்...

ஒவ்வொரு நாளும் ராபித் முருங்கைக் கீரைக்காக நபீலா தாத்தா வீட்டுக்கு வருவான். அவள் அனுமதியுடனே முருங்கைக் கீரையை ஆய்வான். இது நபிலா தாத்தாவின் உள்ளத் தில் பெரிதும் வேதனையாக இருந்தது.

ஒரு நாள்...

"நான் கேட்கிறேன்னு ஒன்னும் நினைக்க வாணாம்." தம்பி..நீ எப்போதும் முருங்கைக் கீரையை ஆய்வதற்கு வருகிறாய். உங்களுக்கா..? அல்லது வேறு யாருக்குமா..?

எங்களுக்குத் தான் தாத்தா."உம்மா சோறாக்கினா... கறிக்குக் காசில்லை." அதனால முருங்கைக் கீரையை ஒரு நாளக்கிப் பாலானம் காய்ச்சுவாங்க. மறு நாளைக்குச் சுண்டல் செய்வாங்க."

சில வேளைகளில் கடலுக்குச் சென்று"மட்டி" கிண்டி வருவாங்க. அதைக் கறியாக்குவாங்க. அல்லது பொரிப்பாங்க. அந்த ருசியோட சாப்பிட்டு முடிச்சிடுவோம்.

தம்பி..நீ போகும் போது இதெடுத்துப் போய் உம்மாக்கிட்ட கொடு. அவங்க சாப்பிடத் தருவாங்க என்றாள். இதற்குள் என்ன இருக்கு தாத்தா..? கோழிக் கறி..!

நீங்க இண்டைக்குத் தருவீங்க. நாளக்கி யார் தருவது..?

இதச் சாப்பிட்டு ருசித்தால்...எப்போதும் நாவு அதையே எதிர்பார்க்கும். அதனால இந்தக் கீரைக் கறியே போதும். நபிலா தாத்தா எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். ராபித் எடுக்க மறுத்தே விட்டான்.

வறுமையின் கொடூரம் வாட்டி வதைத்தாலும்,பொறுமையோடு பிள்ளைகளைப் படிக்க வைப்பதிலும், மார்க்க விடயங்களைக் கற்பிப்பதிலும் கவனத்தைச் செலுத்தினாள். இலவசச் சீருடையும், இலவசப் புத்தகங்களும் வழங்காவிட்டால், சாபிராவால் பிள்ளைகளைப் படிப்பிக்க முடியாது.

இவ்வாறு எத்தனை நாளக்கித் தான் வாழ்வது..? சாபிராவின் கணவன் நடைப் பிணமாகவே வாழ்ந்தார். ஏதாவது உதவி கேட்பார், கடன் கேட்பார் என்ற பயத்தினால் யாருமே பேச மாட்டார்கள். ஒதுக்கியே வைத்தனர்.

இவரது வறுமையை உணர்ந்து நண்பன் ரசான் தன்னிடமுள்ள வயலைச் செய்யுமாறு கூறினார்.

அதற்குக் காணிப் பங்கோ, குத்தகையோ தேவையில்லை. வாழ்வில் முன்னேறிய பின் வயலை என்னிடம் ஒப்படை என்றார்.

சாபிராவின் கணவனிடம் வயல் செய்வதற்குப் பணமோ, விதை நெல்லோ இல்லை. உதவி செய்வதற்கும் யாரும் முன்வரவில்லை. ஆதலால்... நெல்லில் கழிக்கப்பட்ட "பதரை" அள்ளி வந்து பழனத்தில் விதைத்தார். எதிர்பாராவிதமாகச் சில்லென்று முளைத்தது. தொடர்ச்சியாக மழை பெய்ததால், பக்கத்து வயல்காரன் தனது வயலில் நிறைந்த தண்ணீரைச் சாபிராவின் கணவனின் வயலுக்குள் வடிய விட்டான்.

அது வயலா..,கடலா..? என இனங்காணவியலாது திண்டாடினான் சாபிராவின் கணவன். இறைவா இதற்குள்ளும் சோதனையா..? மனசு வேதனையால் குமுறியது. மழை பெய்து முடிந்த இரு தினங்களில் நீர் வடிந்தோடியது.வேளாண்மை தழைத்தெழுந்து பச்சைப் பசேலெனக் காட்சியளித்தது.

இறைவா என்ன அதிசயம்..! "நீ கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பவன்."

"நெல்லால் இவ்வளவு விளைச்சலா..அவனுக்கே நம்ப முடியாமலிருந்தது.பொருமையாளருடன் அல்லாஹ் இருக்கிறான் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. ஏழைகளிடத்திலும் அல்லாஹ் உள்ளான் என்பதை ஊரே பேசியது.வசதி வாய்ப்புக்கள் பெருகின. ஏழை, எளியோருக்கு வாரி வழங்கினான்.

தனக்கு உதவிய நண்பனிடம் வயலை ஒப்படைத்தான்.காணிப்பங்காக நெல்லைக் கொடுத்தான்.


உனது கஷ்டத்தைப் போக்கவே உதவி செய்தேன். நான் கொடுத்த வாக்கை மீற மாட்டேன். உனது உயர்வைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். நீ மற்றவருக்கு உதவி செய்வதில் முந்திக் கொள். நண்பன் ரசானின் அறிவுரையைக் கேட்டுப் பூரிப்புடன் வீட்டையடைந்தான்.

நேற்று வரை சாபிராவின் குடும்பத்தைக் கண்டு ஓட்டம் பிடித்தவர்கள், இன்று திரும்பிவந்து பேசத் தொடங்கினர். மதிப்பும், மரியாதையும் துளிர்த்தெழுந்தது. பணமுள்ளவரைத் தான் சமுகம் வரவேற்கும்.

"பணமிருந்தால் உன்னை எல்லோருக்கும் தெரியும், பணமில்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது." எனும் தாரக மந்திரத்தை மனதில் கொண்டு செயற்பட்டான் சாபிராவின் கணவன்.

**கிண்ணியா
ஜெனீரா தௌபீக்
ஹைறுல் அமான்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 102



திரு/திருமதி.செல்வி ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 102
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 102

**இடமிருந்து வலம்**

1. பாராட்டு அல்லது கௌரவிக்கும் வகையில் வழங்கப்படுவது
4. மகள்
7. இதுவும் ஒரு மொழிதான் (குழம்பியுள்ளது)
9. சமையல் தேவைக்குரியது. மண்ணில் மட்டுமல்ல. உலோகத்தாலும் தயாரிக்கப்படுகின்றது. (திரும்பியுள்ளது)
10. திருடன் குழம்பிவிட்டான்
11. விரோதம்
13. ஆவல்
15. உப்புமா தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருள்
16. செல்வத்தையும் குறிக்கும் (திரும்பியுள்ளது)
18. வேதனை தரும் உணர்வு
20. சமையலறை
22. யானைக்கு இது உண்டு
24. எதிர்பாராத நேரத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கை.
25. பயணிகள் தற்காலிகமாகத் தங்குமிடம்

**மேலிருந்து கீழ்**

1. விற்பனை மேலோங்க இதுவும் தேவை
2. சுவை
3. தூசு அல்லது புழுதி
4. அவசியமற்ற பிரச்சினை அல்லது வீண் தகராறு (தலைகீழ்)
5. ஒருவகைத் தானியம்
6. கொடைக்கு உதாரணமாகச் சொல்லப்படும் மன்னன் (தலைகீழ்)
8. தன் குட்டியைச் சுமந்து திரியும் விலங்கு (குழம்பியுள்ளது)
12. இந்தியாவிலுள்ள ஒரு பெரும் நதி (தலைகீழ்)
13. உலகம்
14. திரைப்பட பாடலாசிரியர் இவர்
17. திசை ( குழம்பியுள்ளது)
19. எதிர்த்துப் போராடும் மனவலிமை (குழம்பியுள்ளது)
21. பல்லக்கு (குழம்பியுள்ளது)
22. வழிபாடு
23. பொன் யானை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 101

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. பாரதியார்
4. பாதி
6. காந்தம்
8. குக்கல்
11. அகதி
12. அம்மை
13. அகம்
14. சகா
16 .மின்
17. அணை
18. கிரமம்
21. பொடி
22. அறிவிலி
23. தூய்மை

**மேலிருந்து கீழ்**

1. பாக்கு
2. திலகம்
3. கார்
4. பாதகம்
5. அதிகம்
7. அந்தி
9. அக்கா
10. மைல்
14. சங்கிலி
15. தேன்
16. அம்மி
17. அடிமை
19. ரவி
20. மறி
21. பொய்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 101

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எம்.டபிள்யூ.எப் ஷனாஸ்,** 'ஹசன்ஸ்தான்' நாரங்கல்ல, துல்ஹிரிய | **எம். கோகிலாதேவி** ஹல்கொல்ல, பரகாதுவ | **எம்.எச்.சி.என். ஹும்தா,** 411, புதிய விதி, வெலிகம |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ் சஞ்சனா** வரக்காபொல
2. **கே.எம்.எம். பாரூக்** மாத்தளை
3. **எஸ். விகாஷினி** கொழும்பு 01
4. **யு. வைஷ்னவ்** பாண்டிருப்பு
5. **எஸ். கனகரட்ணம்**, திருகோணமலை
6. **ஏ.சி.ஸ்ரீதரன்,** யாழ்ப்பாணம்
7. **வேல்நாயகம் ராஜேந்திரன்** காரைதீவு
8. **எஸ். பாக்கியநாதன்** காரைதீவு
9. **எஸ்.எச்.எம் ஜிப்ரி** உக்குவளை
10. **த. நாகையா,** கல்முனை

# மஸ்ஜித் அந்நபவி
## ஒரு வரலாற்றுப் பார்வை



உலகில் வாழும் முஸ்லிம்கள் மாத்திரமன்றி பிறமத சகோதரர்களின் மனங்களையும் கவர்ந்து உலக வரலாற்றில் தனக்கென ஒரு அடையாளத்தை பதித்துக்கொண்டது மஸ்ஜித் அந்நபவி. அல்லாஹ்வை ஈமான் கொண்டு நம்பிக்கையோடு வாழும் அனைத்து முஸ்லிம்களினதும் அதிகபட்ச ஆசைகளில் ஒன்றுதான் மக்கா நகரம் சென்று உம்ரா மற்றும் ஹஜ் யாத்திரைகளை நிறைவேற்றி, மதீனா நகரில் உள்ள நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மஸ்ஜித் அந்நபவியில் இரண்டு ரக்காத்தேனும் தொழ வேண்டும் என்பது.

சவுதி அரேபியாவின் மேற்கு பகுதியில் உள்ள புனித மதீனத்து மண்ணின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இம்மஸ்ஜித் அந்நபவி உலகிலேயே மிகவும் புனிதமான பள்ளிவாசல்கள் எனும் பட்டியலில் மக்காவில் அமைந்துள்ள மஸ்ஜித் ஹராமுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் உள்ளது.

புனித மக்கா நகரில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைச் செயல்கள் அதிகரித்து அழைப்பு பணியை மேற்கொள்ள முடியாமல் போனது. இச்சந்தர்ப்பத்தில் நபித்துவம் கிடைத்து 13 ஆண்டுகளின் பின்னர் மக்கா நகரிலிருந்து மதினா நகருக்கு ஹிஜ்ரத் பயணத்தை மேற்கொண்ட நபியவர்கள் மதீனாவில் தன்னுடைய வீட்டுக்கு அருகாமையில் முஸ்லிம்களுக்கென்று ஒரு கேந்திரஸ்தலமாக இம்மஸ்ஜித் நபவியை ஹிஜ்ரி 01 ஆம் ஆண்டு (622) நிறுவினார்கள். மதீனா நகரம் ஆரம்ப காலத்தில் எஸ்ரிப் என்று அழைக்கப்பட்டு பின்னர் அல் மதீனா அல்முனவ்வரா என்றழைக்கப்பட்டது.

இம்மஸ்ஜித் அமைந்துள்ள குறித்த இடத்தில் ஹிஜ்ரத்துக்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்ற அன்ஸாரிகள் (மதீனா முஸ்லிம்கள்) தொழுகையை நிறைவேற்றிவந்தார்கள். பின்னர் ஹிஜ்ரத் பயணத்தை மேற்கொண்டு மதீனா நகரம் வந்தடைந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறித்த அவ்விடத்தை நெருங்கியவுடன் அவர்களுடைய ஒட்டகம் அன்சாரிகள் தொழுது கொண்டிருந்த அதே இடத்தில் அமர்ந்து கொண்டது. அதையே நபியவர்கள் மஸ்ஜித் அந்நபவியினை நிறுவுவதற்கான இடமாக தேர்ந்தெடுத்தார்கள்.

குறித்த இடம் பெற்றோரை இழந்த அனாதை சிறுவர்களான ஸஹ்ல் இப்னு அம்ர் மற்றும் சுகைல் இப்னு அம்ர் ஆகியோருக்கு சொந்தமாக இருந்ததுடன் அவ்விடத்தினை விலைபேசி பணம் கொடுத்து வாங்கிய சம்பவத்தினை இஸ்லாமிய வரலாறுகளூடாக அறிந்து கொள்ள முடியும்.

வணக்க வழிபாடுகள், கல்வி, தீர்ப்பு வழங்கல், சமூக விடயங்கள் மற்றும் அரசியல் செயற்பாடுகள் என அனைத்து விடயங்களுக்கும் கேந்திர ஸ்தலமாக காணப்பட்ட இம்மஸ்ஜித் நபவியில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகையும் ஆயிரம் தொழுகைகளுக்கு சமமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இச்செயற்பாடுகளில் வணக்க வழிபாடுகள், போதனைகள், வழிகாட்டுதல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் என பல சேவைகள் இன்றும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(18 ஆம் பக்க பார்க்க)

ஏ.சீ. தஸ்தீக் (ஹாமி மதனி.)
முதல்வர்
அல் ஹாமியா அரபுக் கல்லூரி கல்முனை

## கிழக்கில் பெரு வெள்ளம்... (04 ஆம் பக்க தொடர்ச்சி)

எனினும் நவகிரிக் குளத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளதனால் போரதீவுப் பற்றுப் பிரதேசத்திலுள்ள தாழ்நிங்களில் வாழும் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறும் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் வியாழக்கிழமை (28.12.2023) அறிவித்துள்ளது. வடக்கு, வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும். அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் சில இடங்களில் 75மில்லிமீற்றர் வரை ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30தொடக்கம் 40கிலோமீற்றர் வரை ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலைமத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படலாம். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முடப்பட்ட மட்டக்களப்பு _ பொலன்னறுவை பிரதான வீதி மாற்று வீதிகளைப் பயன்படுத்த அறிவிப்பு

பராக்கிரம வாவியின் வான் கதவுகள் வெள்ளிக்கிழமை(29.12.2023) இரவு 10.00 மணியளவில் திறக்கப்பட்டுள்ளதால், மட்டக்களப்பு பொலன்னறுவை பிரதான வீதி மறு அறிவித்தல் வரை முற்றாக மூடப்படும் என்று பொலன்னறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இதன்படி, வெலிகந்த, திம்புலாகலை மற்றும் மட்டக்களப்பு செல்லும் பயணிகளின் வசதிக்காக கதுருவெல புகையிரத நிலையத்தில் இருந்து மன்னம்பிட்டி நோக்கி விசேட புகையிரத சேவையொன்று காலை 10.30 முதல் இடம்பெறும் என கதுருவெல புகையிரத நிலைய அதிபர் தெரிவித்தார். மற்றும் மட்டக்களப்பு நோக்கி பயணிக்கும் வாகனங்கள் மாற்றுப் பாதையாக கிரிதலே, எலஹெர, பகமூனை, தெஹிஅத்த கண்டிய வீதி ஊடாக பயணிக்க முடியும் என அறிவித்துள்ளது.

மழைவெள்ளத்தால் மக்கள் இவ்வாறு பல இன்னல்களை எதிர்கொண்டு வருகின்ற இந்நிலையில் மாலைதீவு அருகே வெள்ளிக்கிழமை(29.12.2023) காலை இந்தியப் பெருங்கடலில் 4 சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவதாக ஏற்பட்ட நிலநடுக்கம் 4.8ரிச்டர் அளவில் 10கிலோ மீற்றர் ஆழத்தில் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கங்கள் 5.2, 5.8 மற்றும் 5.0 ஆக பதிவாகியுள்ளன. இரண்டாவது மற்றும் நான்காவது நிலநடுக்கம் (ரிச்டர் அளவு 5.2 மற்றும் 5.0) 10 கிலோ மீற்றர் ஆழத்திலும், மூன்றாவது நிலநடுக்கம் (5.8 ரிச்டர் அளவு) 7.7 கிலோ மீற்றர் ஆழத்திலும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இலங்கைக்கு எந்த பாதிப்பு இல்லை என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் (GSMB) குறிப்பிட்டுள்ளது.

தற்போது பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 10 பெரிய குளங்கள் உள்ளன. அதில் 9 குளங்கள் வான்பாய்கின்றன. இதனால் தாழ்நிலங்களும், வயல் நிலங்களும் பாதிப்படைந்துள்ளன. இந்நிலையில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் ஆலோசனைக்கமைய ஏற்கனவே மட்டக்களப்பு முகத்துவாரம் வெட்டப்பட்டுள்ளது. அதுபோன்று சனிக்கிழமை பெரியகல்லாறு முகத்துவாரம் வெட்டப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும், மீனவர்களும், பெரிதும் நன்மையாடைவார்கள் என மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந.நாகரெத்தினம் தெரிவிக்கின்றார். கிராமங்கள், வீடுகள், வீதிகள் என எல்லாவற்றிலும், வெள்ள நீர் தேங்கிக்கிடப்பதனால் அதனை வெளியேற்றும் நடவடிக்கைக்காக பெரியகல்வாறு ஆற்றுவாய் சனிக்கிழமை வெட்டப்பட்டுள்ளது. இதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்களும், மீனவர்களும், பெரிதும் நன்மையடைவார்கள் என்பதோடு இவ்வாறு முகத்துவாரம் வெட்டப்படுவதற்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வருடாந்தம் கார்த்திகை, மார்கழி, மற்றும் தை மாதங்களில் பெருவெள்ளப் பெருக்கையும், ஏனைய மாதங்களில் வரட்சியையும் எதிர்கொண்டு வருகின்றனர். சுமார் இரண்டு மாதங்களில் பொழியும் கனமழை நீரை, சிறிய மற்றும் பெரிய குளங்களில் தேக்கி வைப்பதை விடுத்து வீணாக கடலைச் சென்றடைகின்றது. "ஒரு துளி நீரும் வீணே கடலைச் சென்றடையவிடமாட்டேன்" என பராக்கிரம பாகு தெரிவித்த வாக்கைக் காப்பாற்ற இன்னும் இம்மாவட்டத்தில் யாரும் முன்வரவில்லை என்பதுவே பெரும் துரதிர்ஷ்டமாகும். கிராமிய மட்டத்தில் சிறு சிறு குளங்கள் தூர்வாரல் செய்யப்படல் வேண்டும். பெரிய குளங்கள் இன்னும் விஸ்தரிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் "நீரின்றி அமையாது உலகு" என்பதற்கிணங்க இம்மாவட்டம் மாத்திரமின்றி முழு நாடும் தன்னிறைவுப் பொருளாதாரத்தில் முன்நோக்கி நகரும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

## ஏனைய நாடுகளில் நடத்த... (13ஆம் பார்க்க தொடர்ச்சி)

பெருந்தோட்டத்துறையில் இருந்து ஒதுங்கிக்கொள்வதைத் தூண்டும் உளவியல் அணுகுமுறை, தங்களுக்குள்ளேயே பிரிந்து சிதைந்து வாழுகின்ற போக்கு போன்ற இன்னோரன்ன காரணங்களால் இந்திய வம்சாவளி மக்களான "மலையகத் தமிழர்கள்" தங்களது பலவீன இருப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பது வேதனைக்குரிய உண்மையாகும். மலேசியாவைப் பொருத்தமட்டில் தமிழர்கள் தங்களை இந்தியர்கள் என அடையாளப்படுத்துவதிலேயே அதீத அக்கறை செலுத்துவதை உணர முடிகிறது. அது பூகோள அமைவிடத்தில் இந்தியாவின் செல்வாக்கு நிலையின் பிரமையுடனான பாதுகாப்பு உத்தரவாதத்தை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது. தங்கள் தாய் நாடு மலேசியா என்பதுடன் தங்கள் பூர்வீகம் இந்தியா என்பதில் உறுதியாக அடையாளப்படுத்துவதில் அக்கறை செலுத்துவதையும் உணர முடிகிறது.

இந் நிலையில் மலையக பல்கலைக்கழகம் குறித்த ஆர்வம் நீண்ட காலமாகவே பேசுபொருளாக அமைகிறது. முஸ்லிம்களின் தனித்துவ வளர்ச்சியில் பொருத்தமான அணுகுமுறையை பின்பற்றிய எம.எச்.எம். அஷ்ரப் "தென்கிழக்குப் பல்கலைக்கழகம்" ஊடாக அதனை சாத்தியப்படுத்தினார். கடல்சார் தொழில் விருத்தியுடன் தொடர்புபட்ட கற்கைநெறிகளும் யாழ். பல்கலைக்கழகம் உட்பட்ட சில பல்கலைக்கழகங்களிலும் இணைந்த கல்லூரிகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. இந் நடைமுறையோடு பெருந்தோட்டத் தொழிற்துறை தொடர்பான நுட்பங்களை அறிவுபூர்வமான வளர்ச்சிப் போக்கில் யோசித்திருந்தால் மலையக தொழிற்துறையோடு தொடர்புபட்ட கற்கை நெறிகளோடு விருத்தியடைந்திருந்தால் மலையக பல்கலைக்கழகம் குறித்த சாத்தியப்பாடுகள் இலகுப்படுத்தப்பட்டிருக்கும். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பீ.எஸ்சி. பட்டம் பெற்றவர்களே மாடு வளர்க்கும் தொழிற்துறையில் புல் வெட்டுவதும், பால் கறப்பதுமான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றமை கவனிக்கத்தக்கது.

படித்தவர்கள் விருப்புடன் ஈடுபடுகின்ற வகையில் நுட்பமும், நேரான எண்ணமும் வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனாலேயே உலகம் முழுதும் பால்பைக்கற்றுகளை இவ்விரு நாடுகளும் விநியோகம் செய்கின்றன. அவ் அணுகுமுறையை மலையக தொழிற்துறைகளில் உட்புகுத்தி முன் நகர்த்தியிருந்தால் கூட மலையக மக்களில் வாழ்க்கைத் தரமும், நாட்டின் அபிவிருத்தியும் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் என எண்ணத் தோன்றுகிறது.

**பயணம் தொடரும்....**


## மலையக தியாகிகளுக்கு... (13ஆம் பார்க்க தொடர்ச்சி)

மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. தமிழக முதலமைச்சர் மறைந்த எம்.ஜி. ராமச்சந்திரன், மலையக தியாகிகள், மலையக மறைந்த தலைவர்கள், என அனைவருக்கும் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு கலை, கலாசார நிகழ்வுகளும் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் மகுடம் சூட்டுவது போல அமைந்தது மலையக தியாகிகளுக்காக நுவரெலியா நகர மத்தியில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி என்று சொன்னால் அது மிகையாகாது. இதனை அமைப்பதற்காக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர். ராஜாராம் எடுத்துக் கொண்ட முயற்சி அவருடைய அந்த முயற்சிக்கு தன்னுடைய முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆகியோரை பாராட்டியாக வேண்டும். மலையக தியாகிகளை இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க நியாயமில்லை. அவர்களிடம் எமது தியாகிகளையும் மலையக அரசியல் தலைவர்களையும் கொண்டு செல்வதற்கும் அவர்களுடைய தியாகங்கள் என்றுமே மறக்கப்படாதவை என்பதையும் இந்த நினைவுத் தூபி ஞாபகப்படுத்தும். இதனை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருடையதாகும்.

**மலையக தியாகிகள்**

1. முல்லோயா கோவிந்தன் 2. ராமசாமி வீராசாமி 3. அய்யன் பெருமாள் வேலாயுதம் 4. வெள்ளையன் 5. ராசம்மாள் 6. ஏப்ரகாம் சிங்கோ 7. கருமலை 8. கொம்பாடி 9. பொன்னையா 10. பிரான்சிஸ் 11. அய்யாவு 12. வைத்திலிங்கம் 13. முத்துசாமி 14. ஆராயி 15. நடேசன் 16. செல்லையா 17. மாரியப்பன் 18. அழகன் 19. ரெங்கசாமி 20. சோனை 21. அந்தோணிசாமி 22. பார்வதி 23. கந்தையா 24. ஆறுமுகம் 25. இராமசாமி 26. அழகர்சாமி 27. இராசையா 28. சிவனுலெட்சுமன் 29. பழனிவேலு 30. ஜோசையா ஜோசப்




## மியன்மாரில் சைபர்... (03ஆம் பார்க்க தொடர்ச்சி)

அவர்கள் சொல்கிறபடி நடந்து கொண்டால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்றே தெரிகிறது. ஆனால் இது ஒரு வஞ்சகம். ஏமாற்றுவேலை. பணம் பறிக்கும் செயல் எனக் கருதி இதைத் தொழிலாக செய்ய மறுக்கும்போதுதான் இந்த இணையவெளி மோசடிக்காரர்கள் தமது கோரமுகத்தை வெளிப்படுத்தத் தொடங்குவார்கள். மறுக்கும், இலக்கை எய்தத் தவறும், வேண்டா வெறுப்பாக 'கடமை'யை செய்யும் இளைஞர் யுவதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். வழங்கப்பட்டுள்ள வசதிகள் குறைக்கப்படுகின்றன. துன்புறுத்தப்படுகிறார்கள். சித்திரவதை செய்யப்படுகிறார்கள். தாக்கப்படுகிறார்கள். அதாவது, பலவந்தமாக தொழிலைத் தொடர்வதற்கான எல்லா முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

இந்த ஆட் கடத்தல் எவ்வளவு காலமாக நடைபெற்று வந்திருக்கிறது என்று தெரியவில்லை. சில வாரங்களுக்கு முன்னரேயே, இலங்கையின் ஒரு முன்னணி தொலைக்காட்சி இந்த மியன்மார் சைபர் கிரிமினல்களிடம் சிக்கித் தவிக்கும் இளைஞர்கள் தொடர்பில் ஒரு காணொளியை வெளியிட்டது. அதில் தன் முகத்தை மறைத்துக் கொண்ட ஒரு இலங்கைப் பெண், தான் அனுபவிக்கும் கஷ்டங்களையும், சித்திரவதைகளையும் தெரியப்படுத்தி தன்னையும் ஏனையோரையும் மீட்கும்படி கேட்டிருந்தார். இதன் பின்னரேயே இந்த ஆட்கடத்தல் தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன. இதைத் தொடர்ந்து, தாம் வாழும் முகாம்கள், சித்திரவதை செய்யப்படும் காட்சி ஆகிய காணொளிகளும், தகவல்களும் இந்த இளைஞர்கள் மூலம் வெளியாகின. தன் உடலையும் முகத்தையும் கறுப்பு உடையால் மறைத்துக் கொண்டு பேசிய பெண்மணி, தான் யார் என்று தெரியவந்தால் கொலை செய்துவிடுவார்கள் என்ற கூறியது, இந்த இலங்கையர்கள் எத்தகைய பயங்கரமான சூழலில் உள்ளனர் என்பதை உணர்த்தியது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பெண்கள் துன்புறுத்தப்படுவது வழமைதான். ஆனால் மியன்மாரில் நடப்பதோ முற்றிலும் வேறானது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு காரணமாக தாய்லாந்தில் நல்ல சம்பளத்தில் வேலைவாய்ப்பு என்ற விளம்பரத்தைப் பார்த்ததும் எமக்கு எந்த சந்தேகமும் எழவில்லை. நாட்டை விட்டு கிளம்பிவிட்டால் போதும் என்பதாகவே நினைத்தோம் என்று ஒரு இளைஞர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. துபாய் சென்றிருந்த மற்றொரு இலங்கைப் பெண்மணியை சந்தித்த ஒரு சீனப் பெண்மணி, தாய்லாந்தில் நல்ல சம்பளம், வசதியான வாழ்க்கை என ஆசை வார்த்தை கூறி அவரை தாய்லாந்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இதில் இருந்து, நேரடியாக இலங்கையில் இருந்து மட்டுமல்ல, வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையரும் தாய்லாந்து 'தரவேற்ற' தொழிலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் என்பதை அறிய முடிகிறது. தொழில் செய்யும்படி பலவந்தப்படுத்தப்படும் மற்றொரு பெண்மணி, ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் தமது சம்பள சேமிப்பு சூறையாடப்படுவதாகவும், எட்டாயிரம் டொலருக்கு விலை பேசப்படும் மற்றொரு அழைப்புக்கு விற்கப்படுவதாகவும் கூறியுள்ளார். பாலியல் துன்புறுத்தல் இருப்பதாக தகவல் இல்லையானாலும் அதுவும் இருக்கலாம்.

ஒரு இந்தியத்தகவல், 300 இந்தியப் பிரஜைகள் மியன்மாரில் சிக்கிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கிறது. இதே சமயம் மியன்மார் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தன்னால் 32 இலங்கையரை விடுவிக்க முடிந்ததாகவும் பேச்சுவார்த்தைகளை தாம் தொடர்வதாகவும் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக்க பிரியந்த பண்டார தெரிவித்துள்ளார். 'பிம்ஸ்டெக்' அமைப்பு நாடுகள் இந்த சட்ட விரோத ஆட் கடத்தல் தொடர்பாக பேச வேண்டும் என்றும் இவர் தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். வங்கதேசம், இலங்கை, இந்தியா, பூட்டான், நேபாளம், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகள் இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

மியன்மாரில் சிக்குண்டிருப்பவர்களை விடுவிப்பதில் ஒரு பெரிய சிக்கல் காணப்படுகிறது. யங்கொன்னை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யும் இராணுவ அரசுக்கு மியன்மார் முழுவதிலும் ஆட்சி அதிகாரம் கிடையாது. அங்கு வாழும் இனக் குழுக்களை 12க்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய தீவிரவாத அமைப்புகளே ஆட்சி செய்கின்றன. இத்தீவிரவாத அமைப்புகள் சுதந்திரமாக இயங்குகின்றன. தலைநகரில் உள்ள இராணுவ அரசுக்கு இவை கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. இதேசமயம் இலங்கை அரசு இராணுவ அரசுடன் தான் பேச்சுவார்த்தை நடத்த முடியுமே தவிர, இத்தீவிரவாத இயக்கங்களுடன் அல்ல. இந்த இயக்கங்களுடன் மியன்மார் இராணுவ அரசு மோதி, சிக்கியிருப்பவர்களை விடுவிக்கப் போவதில்லை. எனவே பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே இவர்களை விடுவிக்க முடியும்.

மியன்மாருக்கான தூதுவர் தான் இதுவரை 32 நபர்களை விடுவித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். தனது வாகனம் தீவிரவாத அமைப்பினால் தடுத்து நிறுத்தப்பட்டதோடு தன் சாரதியை ஏழு நாட்களாகத் தடுத்து வைத்திருந்ததாகவும் தெரிவித்திருப்பதை கவனிக்கும்போது, விடுவிப்பதில் காணப்படும் முட்டுக்கட்டைகளை யூகிக்க முடிகிறது. மியன்மாருக்கான ஆட் கடத்தல், எத்தனை ஆண்டுகளாக நடைபெற்ற வருகிறது என்பது தெரியாத ரகசியம். சிக்கியிருப்போர் நூறுபேராக இருக்கலாம் என்பது அனுமானம் மட்டுமே. எமது வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மியன்மார் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஏனையோரையும் விடுவிக்க முயற்சிப்பார் எனவும் அறிய முடிகிறது. எவ்வளவு தூரம் இது சாத்தியம் என்பது வேறு விஷயம்.

எனினும் இந்த இணையவெளிக் கொள்ளையர்கள் எமது வேண்டுகோளை ஏற்று அனைவரையும் விடுவிப்பார்களானால் அவர்கள் தமது 'சைபர்' கொள்ளையை எப்படித் தொடர முடியும் என்ற கேள்வி எழுகிறது அல்லவா? இது ஒரு பெரிய வலையமைப்பு. மியன்மாரின் இராணுவ அரசின் ஒரு பிரிவினர் இச் 'சைபர்' குழுக்களுடன் இரகசிய தொடர்புகளை பேணி வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இக்கிரிமினல் குழுக்கள் ஆட் கடத்தல் மாத்திரமின்றி, போதைப் பொருள் கடத்தல், விபசாரம், கசினோக்களை நடத்துதல், மனித அவயங்களை கடத்துதல், வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவி சேமிப்புகளை கொள்ளையிடுதல் போன்ற பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதால் சிக்குண்டிருப்பவர்களை விடுவிக்க பெரிய அளவில் அழுத்தம் தரவேண்டியிருக்கும். இதனால்தானம் பிம்ஸ்டெக் அமைப்பு இவ் விவகாரத்தில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது. மியன்மாரில் இலங்கையர்கள் அடிமைகள் போல வேலை வாங்கப்படுகிறார்கள் என்று செய்தி வெளியானதும், கிடைத்த தகவல்களின் அடிப்படையில், இலங்கை முகவர்களாக செயல்பட்ட குழுவினரை பொலிஸார் கூண்டோடு கைது செய்து உள்ளே தள்ளிவிட்டனர். இந்த சட்ட விரோத ஆட் சேர்ப்பு எங்கெல்லாம் வேர் விட்டிருக்கிறது என்பதில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாம் செய்யக் கூடியதெல்லாம் இலங்கையின் கதவுகளை அடைப்பது மட்டுமே. சைபர் கொள்ளையர் வலையமைப்பை நாம் ஒன்றும் செய்ய முடியாது. மியன்மாரில் என்ன நடக்கிறது என்பதை ஊடகங்கள் வழியாக பகிரப்படுத்துவதன் மூலம், எந்தத் தொழில் கிடைத்தாலும் சரி நாட்டைவிட்டுக் கிளம்பினால் போதும் என அவசரம் காட்டுபவர்களுக்கு உண்மை நிலவரத்தை, வெளிநாடுகளில் பச்சை பசேல் என்ற பசுமை மட்டுமல்ல, புதை மணலும் காத்திருக்கிறது என்பதை தெரிவிக்க முடியும்.

அதுவே எமது பணி. உலகெங்கும் சைபர் கொள்ளையர்கள் உள்ளனர். அமெரிக்க உளவு நிறுவனம் உட்பட பல நாடுகளின் உளவு அமைப்புகள் இவர்களைத் தேடி வருகின்றன. எனவே இக் கொள்ளையர்களின் கோட்டையை நாம் தகர்க்க முடியாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பதிவு செய்யப்பட்ட சட்ட பூர்வமான முகவர் நிலையங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளுங்கள் என்ற செய்தியை அழுத்தமாக சொல்வதுதான்!






# 2024 புத்தாண்டு ராசி பலன் :
# தொட்டதெல்லாம் பொன்னாகும் அதிர்ஷ்டசாலிகள் யார்?

### மேஷம்

இலாபங்கள் நிறைந்த ஆண்டாக மேஷ ராசிக்காரர்களுக்கு அமைந்துள்ளது. வேலை செய்யும் இடத்தில் பதவிஉயர்வு சம்பள உயர்வும் கிடைக்கும். 2024ஆம் ஆண்டு பொற்கால ஆண்டாக அமையப்போகிறது. உற்சாகமாக மன மகிழ்ச்சியோடு புத்தாண்டினை வரவேற்க தயாராகுங்கள்.

### ரிஷபம்

ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது என்று ரிஷப ராசிக்காரர்கள் பாடப்போகிறீர்கள் இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி அதி அற்புதமாக இருக்கும். நிதி நெருக்கடிகள் விலகும். கடன்கள் குறையும். சினிமா ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு அதி அற்புதமான ஆண்டாக அமையும். 2024ஆம் ஆண்டில் உங்கள் வாழ்க்கையில் அற்புதங்கள் நடக்கப்போகிறது. தொட்டது துலங்கும் வெற்றிகள் தேடி வரும்.

### மிதுனம்

2024ஆம் ஆண்டில் உங்களுக்கு நவக் கிரகங்களும் சாதகமான நிலையில் பயணம் செய்வதால் தடைகள் எல்லாம் தகர்ந்து விடும். எந்த பிரச்சினை வந்தாலும் எளிதில் கடந்து விடுவீர்கள். நன்மைகள் அதிகம் நடக்கும். வேலைக்காக செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

### கடகம்

சந்திரனை ராசி நாதனாகக் கொண்ட கடகம் ராசிக்காரர்களே. சனிபகவான் அஷ்டம சனியாக பயணம் செய்கிறார். இலாப வீட்டில் குருபகவான் அமர்கிறார். நினைத்த காரியம் நிறைவேறும். உடல் நலத்தில் கவனம் தேவை. உடம்புக்குள் இருந்த நோய்கள் வெளிப்பட்டு குணமடையும். மருத்துவ செலவுகள் குறையும் 2024ஆம் ஆண்டில் சவால்களை சமாளிப்பீர்கள். கடன் பிரச்சினையில் மாட்டிக்கொள்ளாதீர்கள்.

### சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு 2024ஆம் ஆண்டு அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது. வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் என்று பாடுவீர்கள். வருடம் முழுக்க உற்சாகமாக இருப்பீர்கள். புதிய வேலை கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடங்க முயற்சி செய்வீர்கள். கடன்கள் தீரும். பண வருமானம் அதிகரிக்கும் வங்கியில் சேமிப்பு உயரும்.

### கன்னி

2024ஆம் ஆண்டு உங்களுடைய கஷ்டங்கள் கவலைகள் குறையப்போகிறது. ஒன்பதாம் வீட்டில் அமரப்போகும் குருவின் பார்வை உங்களுக்கு கிடைக்கப்போகிறது. கை நிறைய சம்பளத்தில் நல்ல வேலை கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரும். வெளிநாடு செல்வதற்கான யோகங்கள் கை கூடி வரப்போகிறது. 2024ஆம் ஆண்டு பொருளாதார வளம் நிறைந்த ஆண்டாக கன்னி ராசிக்காரர்களுக்கு அமையப்போகிறது.

### துலாம்

சுக்கிரனை ராசி நாதனாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களே உங்களுக்கு நல்ல வேலை கிடைக்கப்போகிறது. வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வுடன் கூடிய இடமாற்றமும் கிடைக்கும். சொந்த வீடு வாங்குவீர்கள். அலுவலகத்தில் மதிப்பு மரியாதை கூடும். பேர் புகழ் தேடி வரும். குடத்தில் இட்ட விளக்காக இருந்த நீங்கள் இந்த ஆண்டு குன்றில் மேலிட்ட விளக்காக சுடர்விட்டு பிரகாசிப்பீர்கள். வெற்றிகள் தேடி வரும்.

### விருச்சிகம்

பிறக்கப் போகும் புத்தாண்டு விருச்சிகம் ராசிக்காரர்களுக்கு அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது. வருமானம் அதிகரிக்கும் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் கடன்கள் அடைபடும். குரு பகவான் நல்ல வேலையை தேடித்தரப்போகிறார். சனி பகவான் அந்த வேலையை நிரந்தரமாக்கப்போகிறார். பதவி உயர்வுடன் சம்பள உயர்வும் சிலருக்கு கிடைக்கும். வெற்றி மீது வெற்றி வந்து சேரப்போகிறது.

### தனுசு

தொட்டதெல்லாம் பொன்னாகும் காலம் தனுசு ராசிக்காரர்களுக்கு கைகூடி வரப்போகிறது. வேலையில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். எதையும் சமாளிக்கும் தெம்பும் தைரியமும் பிறக்கும். பொற்காலமாக இருப்பதால் உங்கள் வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழும். புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரும். அவசரப்பட்டு முடிவெடுக்காதீர்கள் எதையும் நிதானமாக தேர்வு செய்யுங்கள்.

### மகரம்

2024ஆம் ஆண்டில் உங்களுக்கு பொன்னான வாய்ப்புகள் தேடி வரப்போகிறது. காரணம் குரு பகவானின் பார்வை உங்களுக்கு கிடைக்கப்போகிறது. புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரும். செலவுகள் அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ப வருமானமும் அதிகமாக வரும். செய்யும் வேலைகளை பொறுமையாகவும் நிதானமாகவும் செய்வது நல்லது. பாத சனி என்றாலும் பதற்றப்பட வேண்டாம்.

### கும்பம்

2024ஆம் ஆண்டு முழுக்க உங்களுக்கு ஜென்ம சனி காலம் என்றாலும் பெரிதாக பாதிப்பு எதுவும் ஏற்படப்போவதில்லை. தொழில் வியாபாரத்தில் அகலக்கால் வைக்காதீர்கள். 2024ஆம் ஆண்டில் வியாபாரத்தில் பெரிய முதலீடு எதையும் செய்யாதீர்கள். வேலை செய்யும் இடத்திலும் வார்த்தைகளில் நிதானம் தேவை இல்லாவிட்டால் பிரச்சினைதான். புத்தாண்டில் நிதானமாக ஒவ்வொரு அடியையும் வைத்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

### மீனம்

உங்களுக்கு ஆண்டு முழுவதும் பண வருமானம் அதிகரிக்கும். புதிய வேலை கிடைக்கும். புதிய தொழில் தொடங்கலாம். வேலை செய்யும் இடத்திலும் வீட்டிலும் உங்கள் கை ஓங்கியே இருக்கும். ஏழரை சனியாக இருந்தாலும் நன்மைகள் அதிகம் நடைபெறும் ஆண்டாகவும் அமையப்போகிறது. வேலை செய்யும் இடத்தில் யாரை நம்பியும் பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம். புத்தாண்டு உங்களுக்கு புதுமைகளை தரக்கூடிய ஆண்டாக அமையப்போகிறது.



# உலக முதலீட்டாளர்களை ஈர்க்கும் சவுதி அரேபியா

சவுதியின் இளவரசர் முகம்மது பின் சல்மான் நாட்டின் பொருளாதாரத்தை எண்ணெய் துறையிலிருந்து விடுவிக்க பல டிரில்லியன் டாலர் திட்டத்தை அறிவித்துள்ள நிலையில் சவுதி அரேபியா "புதிய சீனாவாக" மாறி வருவதாக புளூம்பெர்க் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ரியாத்தில் கடந்த சில மாதங்களாக சர்வ தேச சந்தையில் பெரும் முதலீட்டு வாய்ப்புகளைத் தேடும் குழுக்கள் ஒன்று சேர்ந்துள்ளதாக மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு எம்.எஸ்.சி.ஐ. உலக சந்தைகள் பட்டியலில் இடம் பெற்ற சவுதி அரேபியாவின் பக்கம் உலக முதலீட்டாளர்களின் பார்வை திரும்பியுள்ளது.

இளவரசர் முகமது பின் சல்மானின் தாராளமயப்படுத்தும் சீர்திருத்தங்கள் சவுதி அரேபியாவை முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் மாற்றியுள்ளது. மேலும் இந்த சீர்திருத்தங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குகின்றன.

ஈ.ஜி.எஃப். இன் புதிய மூலதன நிறுவனத்துக்காக (E.F.G. New capital) புதிய உலக சந்தைகள் நிதியைத் தொடங்க உதவிய "ஃபர் குஸ் அர்கில்" கூறுகையில் சவுதி அரேபியா இப்போது 2000களின் ஆரம்பத்தில் இருந்த சீனாவைப் போன்று மாற்றமடைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த ஆண்டு சவுதி அரேபியாவின் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுமார் 3 பில்லியன் டொலர் முதலீடு செய்துள்ளனர். மேலும் பட்டத்து இளவரசர் முகம்மத் இப்னு சல்மானின் நவீன சீர்திருத்தங்களினூடாக முதலீடுகள் அதிகரிக்கும் போது அத்தொகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவுதி அரேபியாவின் பங்குச் சந்தை மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் திரவமான சந்தையாகும். அதில் உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளரான சவுதி அராம்கோ நிறுவனம் உள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியாவில் அதிக வேலை வாய்ப்புகள்:

**சுற்றுலா:**

சவுதி அரேபியா 2030 ஆம் ஆண்டுக்குள் 100 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் இலக்கு நிர்ணயித்துள்ளது. இதை அடைய அரசாங்கம் பல சுற்றுலா திட்டங்களை செயல்படுத்தி வருகிறது அவை:

1. ரியத் எக்ஸ்போ 2023 உலகின் மிகப்பெரிய கலாசார விழா
2. சவுதி அரேபிய கடல் சரக்குக் கடற்பாதையில் புதிய திட்டம்
3. "அல்கத்யா" ஒரு உலகளாவிய பொழுதுபோக்கு நகரம்

இந்த திட்டங்களில் சுற்றுலா ஹோட்டல்கள் போக்குவரத்து உணவகம் மற்றும் விருந்தோம்பல் போன்ற துறைகளில் பல வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொழில்:**

சவுதி அரேபியாவில் தொழில் மற்றும் தொழில்நுட்பம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற துறைகளை வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை அடைய அரசாங்கம் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது அவையாவன:

1. தேசிய தொழில் வளர்ச்சி மற்றும் சரக்கு போக்குவரத்து திட்டம்
2. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டம்
3. தேசிய மாற்ற திட்டம்

இந்த திட்டங்கள் யாவும் உற்பத்தி எரிசக்தி தொழில்நுட்பம் மற்றும் சேவை போன்ற துறைகளில் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தகவல் தொழில்நுட்பம்:**

சவுதி அரேபியா ஒரு உலகளாவிய தொழில்நுட்ப மையமாக மாற இலக்கு நிர்ணயிப்பட்டுள்ளது. இதை அடைய அரசாங்கம் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது அவையாவன:

1. "நியோம்" இணையம் மற்றும் தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட இது ஒரு புதிய நகரம்
2. பொது முதலீட்டு நிதி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோர் போன்ற துறைகளில் முதலீடு செய்யும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
3. தேசிய டிஜிட்டல் தளம் அரசாங்க சேவைகளை டிஜிட்டல் வடிவத்தில் வழங்குவதற்கான திட்டம்

இந்த திட்டங்கள் யாவும் தொழில்நுட்பம் புதுமை மற்றும் தொழில்முனைவோர் போன்ற துறைகளில் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏனைய துறைகள்:**

சுற்றுலா, தொழில், தொழில்நுட்பம் தவிர சவூதி அரேபியாவில் கல்வி, சுகாதாரம், நிதி சேவைகள் மற்றும் வணிகம் போன்ற பிற துறைகளில் பல வேலை வாய்ப்புகள் உள்ளன.

சவுதி அரேபியா ஒரு பன்முக பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது இது அனைத்து திறன்கள் மற்றும் கல்வி நிலைகளையும் உள்ளடக்கிய மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குகிறது. அரசாங்கம் தொடர்ந்து வளர்ச்சி மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

**தேவையான திறன்கள்:**

சவூதி அரேபியாவில் உள்ள பல வேலைகளுக்கு குறிப்பிட்ட திறன்கள் தேவைப்படுகின்றன. உதாரணமாக சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் வாடிக்கையாளர் சேவை மற்றும் தொடர்பு ஆகியவை முக்கிய திறன்களாகும். தொழில் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பொறியியல் மற்றும் அறிவியல் ஆகியவை முக்கிய திறன்களாகும்.

தனிநபர்கள் தேவையான திறன்களைப் பெற கல்வி மற்றும் பயிற்சி மூலம் தங்களை தயார் செய்து கொள்ளலாம். சவுதி அரேபியாவில் பல கல்வி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன அவைகளும் வேலைவாய்ப்புக்கான திறன்களை வழங்குகின்றன.

**கலாநிதி அப்துல் சத்தார்**
**விரிவுரையாளர் காசிமிய்யா அரபுக் கல்லூரி, புத்தளம்.**

## டெங்கு:

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாட்டிலுள்ள மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகளில் 62 பிரிவுகள் டெங்கு அச்சுறுத்தல் அதிகமுள்ள பிரிவுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதிலும் மேல் மாகாணத்துக்கு வெளியே கண்டி, புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேசங்களிலும் டெங்கு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் மருத்துவர் நிமல்கா பன்னிலகெட்டி தெரிவித்திருக்கிறார்.

இன்றைய காலகட்டத்தில் சுற்றாடல் சுத்தம் தொடர்பில் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். திண்மக்கழிவுப் பொருட்கள் தொடர்பான அசிரத்தையின் விளைவாகவே தெளிந்த நீர் தேங்கக்கூடிய கழிவுப் பொருட்கள் சுற்றாடலிலும் வீட்டுச் சூழலிலும் நிறைந்து காணப்படுகின்றன.

இக்கழிவுப் பொருட்களை முறையாகவும் சீராகவும் அப்புறப்படுத்துவதில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இது மிகவும் இன்றியமையாத தேவையாகும். இத்தேவை குறித்து உரிய முறையில் கவனம் செலுத்தி செயற்படாவிடில் காலம் முழுவதும் டெங்கு அச்சுறுத்தல் நீடித்து நிலைக்கவே செய்யும். அதுவே மருத்துவ நிபுணர்களின் கருத்தாகும்.

அதேநேரம் இந்நோய்க்கு உள்ளான ஒருவருக்கு நான்கு விதமான அறிகுறிகள் வெளிப்படலாம். சிலருக்கு சாதாரண காய்ச்சலாகவும் இன்னும் சிலருக்கு கடும் காய்ச்சலாகவும், மேலும் சிலருக்கு இரத்தக் கசிவுடன் கூடிய காய்ச்சலாகவும், அசாதாரண காய்ச்சலாகவும் கூட இந்நோய் அறிகுறிகள் வெளிப்படலாம். குறிப்பாக காய்ச்சலுடன் தலைவலி, கண்களின் கீழ்ப்பகுதியில் வலி, தசைவலி, மூட்டுக்களில் வலி, வாந்தி, தோலில் சிவப்பு நிறப் புள்ளிகள், இரத்தக்கசிவு போன்றவாறான அறிகுறிகள் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் 48 மணித்தியாலயங்களுக்கு மேல் காய்ச்சல் காணப்படுமாயின் தாமதியாது தகுதி வாய்ந்த மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஏனெனில் காய்ச்சல் தொடர்பான கவனயீனமும் அசிரத்தையும் தான் பலரது மரணத்துக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது என்றும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒன்றில் முழுமையாகத் தவிர்த்துக்கொள்ளவோ அல்லது மருத்துவ ஆலோசனையுடன் கூடிய சிகிச்சை மூலம் குணப்படுத்திக் கொள்ளவோ கூடிய நோயினால் உயிரிழப்பது தான் துர்பாக்கிய நிலையாகும். ஆகவே நுளம்புகள் பெருக முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் பேணிக் கொள்வது டெங்கு அச்சுறுத்தலைத் தவிர்த்து கட்டுப்படுத்திட உதவக்கூடியதாகும். அதனால் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு மக்களுடையதாகும்.

# உலகத் தமிழர்களின் மனங்களை வென்றவர் கேப்டன் விஜயகாந்த்

## சுப்பையா ஆனந்தகுமார் இரங்கல்



தே.மு.தி.க தலைவரும் பிரபல நடிகருமான விஜயகாந்த் மறைவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் மூவர் அடங்கிய தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினருமான சுப்பையா ஆனந்தகுமார் இரங்கல் தெரிவித்துள்ளார்.

நடிகரும் தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த், உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த வியாழக்கிழமை காலமானார். விஜயகாந்தின் உடல், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சென்னை தீவுத்திடலில் வைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

கேப்டன் விஜயகாந்த் காலமானார் என்ற செய்தி, மிகுந்த வருத்தமும் மனவேதனையும் அளிக்கிறது எனக் கூறியுள்ள சுப்பையா ஆனந்தகுமார், தென்தமிழகத்தில் பிறந்து, தென்னிந்தியத் திரையுலகையே கட்டியாண்ட பெருமைக்குரியவர். ஏழை எளிய தொழிலாளர்களின் பசிப்பிணி போக்கிய மாமனிதர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பேரன்பைப் பெற்ற அற்புதமான கலைஞர்.

தன்னலமற்ற தலைவர். தமிழ்மக்கள் நலன் ஒன்றையே நோக்கமாகக் கொண்டவர். கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர். சொல்லொன்றுசெயலொன்றுஎன்றில்லாது, சொன்ன சொல் வழி நின்றவர். பாசாங்கில்லாத மனிதர்.

கேப்டன் விஜயகாந்தின் மறைவு, தமிழகத்துக்கும், உலக தமிழ் மக்களுக்கும் பேரிழப்பு. அவரது இன்னுயிர் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது புகழ் என்றும் அவர் பெயரை நிலைத்திருக்கச் செய்யும்.

கேப்டனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், தேமுதிக தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், இலங்கை மக்கள் சார்பாக இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா இறைவன் திருப்பாதங்களை அடைய, இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்" எனவும் சுப்பையா ஆனந்தகுமார் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்

## மஸ்ஜித் அந்நபவி...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்ப காலத்தில் நபியவர்கள் மற்றும் ஸஹாபாக்கள் ஒன்றிணைந்து நிறுவிய இம்மஸ்ஜித் ஈத்த மர ஓலைகள் மற்றும் அதன் பாகங்களைக்கொண்டு அமைந்ததாகும்.

இதில் மூன்று நுழை வாயில்கள் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இதன் பின்னர் அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்களின் காலப் பகுதிகளில் தேவைகளை கவனத்தில் கொண்டு விஸ்தரிக்கப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

ஹிஜ்ரி 01(622)இல் நிர்மாணிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட

விஸ்தரிப்பு மற்றும் புனர்நிர்மாணங்களின் பட்டியல் பின்வருமாறு...

1. ஹிஜ்ரி 07 (628) நபியவர்களின் காலம்.
2. ஹிஜ்ரி 17 (638) உமர் இப்னுல் கத்தாப்
3 .ஹிஜ்ரி 30 (640) உஸ்மான் இப்னு அப்ஃபான்
4. ஹிஜ்ரி 91 (710) வலீத் இப்னு அப்துல் மலிக்
5. ஹிஜ்ரி 165 (782) முஹம்மத் இப்னு மஹ்தி
6. ஹிஜ்ரி 888 (1483) காய்திபாய்
7. ஹிஜ்ரி 1277 (1860) முதலாவது அப்துல் மஜீத்
8. ஹிஜ்ரி 1375 (1955) அப்துல் அஸீஸ் ஆலு சுஊத்
9. ஹிஜ்ரி 1414 (1994) பஹத் இப்னு அப்துல் அஸீஸ் ஆலு சுஊத்

சவுதி அரேபியாவின் ஆட்சிக் காலத்தில் இறுதியாக செய்யப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் புனர்நிர்மாணம் மிகவும் பிரமாண்டமானதும் வியப்புக்குரியதுமாகும்.

இதில் 41 நுழைவாயில்கள், 103.89 மீட்டர் உயரமுடைய 10 மனாராக்கள், 8.88 மீட்டர் உயரமுடைய 170 சாதாரண குப்பாக்கள், 3.55 மீட்டர் உயரமுடைய 27 நகரக் கூடிய குப்பாக்கள் மற்றும் 436 மின் விசிறிகளைக் கொண்ட 22 மீட்டர் உயரமுடைய 250 குடைகள் உள்ளடங்கலாக 698,000 பேர் தொழும் அளவிலான பாரிய இட வசதிகளைக் கொண்டுள்ளது.

அல்லாஹ் நம் அனைவரினதும் நற்கிரிகைகளை ஒப்புக் கொள்வானாக!

# குரு நகரில் புதிய யாழ். ஆயரின் நத்தார் திருப்பலி



யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமனம் பெற விண்ணப்பித்து தேர்வு பெற்ற வணக்கத்துக்குரிய கமிலாஸ் நிமால் ஜோன்பிள்ளை ஆண்டகை குருநகர் சந்தியமாயோர் தேவாலயத்தில் தமது முதலாவது நத்தார் திருப்பலியினை டிசம்பர் 25 காலையில் வழங்கினார். ஆயர்கள் அணியும் நாவல் நிற மேலாடை, சிலுவை, மோதிரம் ஆகிய அணிகலங்களுடன் வந்திறங்கிய இவரை மாலைகள் அணிவித்து மக்கள் சம்பிரதாயபூர்வமாக வரவேற்று ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். உத்தியோகபூர்வ விடயமாக ஒரு வாரம் யாழில் தங்கிய இவர் முரசுமோட்டை, பளை, கிளிநொச்சி, பரந்தன், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டபின் பல கத்தோலிக்க பிரமுகர்களையும் முக்கிய குருமார்கள் கன்னியாஸ்திரிகளையும் சந்தித்து வெள்ள நிவாரணம் பற்றி உரையாடினார். கொழும்பிலுள்ள தனது நீண்ட கால நண்பரான பாப்பரசரின் பிரதிநிதியை சந்தித்து நிலைமைகளை விளக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

வத்திக்கானின் பூரண நிதி உதவியில் கண்டியில் இயங்கும் தேசிய குருமடத்தின் பிரதம ஆலோசகராக உரோமையின் சர்வதேச மறைபரப்பு நிலையம் இவரை நியமித்துள்ளது. இங்கிருந்து கொழும்புக்கு செல்லும் இவர் இலங்கையின் இன்றைய பிரச்சினைகள் பற்றி கொழும்புப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் சில திட்ட வட்டமான பேச்சு வார்த்தைகளை முன்னர் நடத்தியதாக நத்தார் தின மறை உரையில் குறிப்பிட்டார். தற்போதைய யாழ்ப்பாணம் ஆயர் முதுமையடைந்து ஓய்வு பெறுவதனால் அந்தப் பொறுப்பை தாம் ஆற்றவேண்டியுள்ளதெனத் தெரிவித்த மேதகு கமிலாஸ் ஜோன்பிள்ளையின் நியமனம் பெப்ரவரி பதினோராம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார் அல்லது மட்டக்களப்பின் ஆயராக பொறுப்பேற்கும்படி ரோமையின் சர்வதேச மறைபரப்பு நிலையம் தம்மிடம் கோரியதாகவும் ஆனால் தனது சேவை யாழ்ப்பாணத்துக்கே தேவை அறுதியாக கூறும் இவரது ஆயர் பட்டமளிப்பு என விழா ஒழுங்குகளை வடமாகாண கத்தோலிக்கமக்களும்குருமாரும்முன்னெடுக்கவுள்ளனர்.



# பசுமைக் கருத்தாக்கங்களுடன் மேம்படுத்தப்படும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள்

தற்போது நாட்டில் உள்ள பதினேழு அரச பல்கலைக்கழகங்கள் கிட்டத்தட்ட 140,000 பட்டதாரிகளுக்கு இடமளிக்கின்றன. இது அரை தசாப்தத்துக்கும் முன்பு 100,000 மாணவர்களாக இருந்ததுடன், மேலும் அரசாங்கங்களின் வேண்டுகோளின்படி இந்த எண்ணிக்கை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 200,000 மாணவர்களாக உயரக் கூடும்.

மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இணையாக அரச பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பினை அப் பல்கலைக்கழகத்தன் மூலோபாயத் திட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்த மற்றும் விரிவுபடுத்தப்பட வேண்டும். மேலும் இவ் விரிவுபடுத்தல்களும், மேம்படுத்தல்களும் சமகால பசுமைச் சூழல் நெறிமுறைகளுக்கு உட்பட்டிருத்தல் பல்கலைக்கழகங்களின் உலகளாவிய தரவரிசைப்படுத்தலில் முக்கிய அளவீட்டுக் கருவியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

உலகளாவிய பல்கலைக்கழகங்களின் பசுமைப் போக்குடன் ஒத்திசைவைப் பேணுவதற்கு உள்ளூராட்சி பல்கலைக்கழகங்களின் மேற்கூறப்பட்ட நெறிமுறைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும் மாணவர்களின் அனுமதி எண்ணிக்கை அதிகரிப்பிற்கான நிதியை மொத்தமாக அளிப்பதில் அரசுக்கு நிலவும் நிதி நெருக்கடி பல்கலைக்கழகங்களில் தற்போது காணப்படுகின்ற பசுமை அமைப்புகளின் சரிவிற்கு பிரதான காரணமாகின்றது.

இக்கட்டுரை அவ்வாறு நிலவும் நடைமுறை தொடர்பில் எழும் சவால்களையும் அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பான விடயங்களையும் உள்ளடக்குகின்றது.

பல்கலைக்கழகங்களின் சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கம் தூரநோக்கத் திட்டங்களுடன் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய முக்கிய காரணிகளில் ஒன்றாகும். பல்கலைக்கழகங்களில் போதுமான அளவிலான பசுமைப் பராமரிப்புகள், பூர்வீக மரநடுகையை ஊக்குவித்தல், வளாகத்திலுள்ள ஈரநிலங்களைப் பராமரித்தல், வளாகத்தில் கல்விசார் விவசாயத்தை உக்குவித்தல், வளாகத்தின் இயற்கை இருப்புகளைப் பராமரித்தல் மற்றும் அருகிலுள்ள நிலங்களின் சாத்தியமான கைப்பற்றுகை என்பவை பல்கலைக்கழகங்களின் சுற்றுச்சூழல் அமைப்பை பராமரிப்புச் செய்யக்கூடிய சில முயற்சிகள் ஆகும்.

போதிய இடவசதி இல்லாமை பல்கலைக்கழகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். தற்போதய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் எதிர்கால அனுமதி முறைகளைக் கருத்திற் கொண்டு கட்டடங்கள் மற்றும் சாலைகளின் நிர்மாணிப்புகளை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான நீண்டகால பசுமைத்திட்டம் முதலில் தேவைப்படுகின்றது.

இரண்டாவதாக உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தி அதன் மூலம் ஏற்படும் சூழல் மாசடைவு மற்றும் காலநிலையில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் போன்ற எதிர்மறையமான விளைவுகளுக்குப் பதிலாக புதுப்பிக்கத்தக்க எரிசக்திகள் மூலம் ஆற்றலை அதிகரித்தல், இயற்கையான ஒளி மற்றும் காற்றோட்ட வசதிகளை விருத்தி செய்தல், பேண்தகு பராமரிப்புகளை உறுதிப்படுத்தல், முறையான நிலத் தெரிவுகள் மற்றும் பராமரிப்புகள், கழிவு அப்புறப்படுத்தல், பராமரிப்பில் ஒழுங்குகளைப் பின்பற்றல், கட்டட நிர்மாணங்களுக்கு உள்ளூர் மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற பசுமைக் கொள்கைகளை கடைப்பிடித்து திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அவசியமானது.

பல்கலைக்கழகங்களில் மின்நுகர்வு குறைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மின்நுகர்வை அதிகரித்தள்ளது. இதனை அணுகுவதற்கான சிறந்த வழி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களை முடிந்தவரை பயன்படுத்துதலாகும். அவ்வாறான சாத்தியப்பாடுள்ள பிரதான முறை சூரிய சக்தியைப் பயன்படுத்துதலாகும். இது அனைத்து அரச பல்கலைக்கழகங்களுக்கும் சாத்தியமான ஒன்றாகும். இதற்கான ஆரம்ப முதலீடு அதிகமாக உள்ள போதிலும் சூழல் நட்பு மற்றும் குறைந்த பராமரிப்புச் செலவு என்பன இதனை நிலையான மற்றும் பொருத்தப்பாடான முறையாக அடையாளமிடுகின்றது. இந்த முயற்சிக்கான வெளிநாட்டு நிதியை அரசாங்கம் ஈர்ப்பது தேவையான ஒன்றாகும்.

பல்கலைக்கழக வளாகத்திலிருக்கும் நீர் வளங்களைத் திறம்படப் பாதுகாத்தல், தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான திறன் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை மேம்படுத்தல், நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுதல், நிலத்தடி நீரின் திறமையான பயன்பாடு, நீர் மறுசுழற்சி என்பன அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய சில பகுதிகளாகும். சூரிய ஒளி மூலமான சக்தியுடன் நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் கலப்பின முறை தாழ்வான பிரதேசங்களில் காணப்படும் பல்கலைக்கழகங்களுக்கு பயனுள்ள முறையாகும். மேலும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையை மட்டுமே சார்ந்திருக்காமல் மேற்கூறப்பட்ட பயன்பாடுகள் மூலமாகவும்; சீரான நீர்ப்பாவனையை உறுதிப்படுத்தலாம்.

முன்னறிவிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் விரிவாக்கத்திற்கு மத்தியில் பசுமை நலன்களைப் பேணுவதில் கழிவு மேலாண்மை முறையை மேம்படுத்துவது குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றது. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தன்னகத்தேயுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றம் சாக்கடை சுத்திகரிப்பு நிலையங்கள் என்பவற்றின் சரியான விரிவாக்கத்துடன் அதன் அமைப்புகளை ஒழுங்காக மேம்படுத்த வேண்டும்.

செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு வழிமுறைகளும் அத்தியாவசியமானவையாகும். இவை இல்லாமை, இந்த முழு அமைப்பையும் தோல்வியடையச் செய்யும். குறிப்பாக தொடர்ச்சியான செலவினங்களைக் குறைக்க மனித மற்றும் பௌதீக வளங்களைக் குறைக்குமாறு பல்கலைக்கழகங்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இது சுற்றுச்சூழல் அபாயங்களை மோசமாக்கக் கூடும். பல்கலைக்கழக சமூகத்துக்கு அப்பால் விரும்பத்தகாத சமூக தாக்கங்களுக்கு இட்டுச் செல்லும். இவற்றைத் தவிர்க்க சுற்றுச்சூழல் நெறிமுறைகளை மேம்படுத்தும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற பிரிகையடைய முடியாத பொருட்கள் இருப்பது பசுமையான சூழலைத் தக்கவைக்க எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும். அவற்றை எதிர்கொள்வதற்கு எரியூட்டிகளை அறிமுகப்படுத்துதலும் அதன் தொழிற்பாட்டு வழிமுறைகளுடன் தொடர்புடைய சுற்றுச் சூழல் அதிகாரிகளின் வழிகாட்டலுக்கு அமைய இயங்குவது, கழிவுகளை பாதுகாப்பாக அகற்ற உதவும்.

அதேபோல் திண்ம மற்றும் திரவ வடிவிலான ஆய்வுகூட இரசாயனப் பதார்த்தங்கள் இரசாயனப் பகுப்பாய்வதற்காக பாதுகாப்பாக ஒரு மையப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கொண்டு செல்லப்படுதல் அவற்றின் பாதுகாப்பான அகற்றலை உறுதி செய்யும். எவ்வாறாயினும் அவ்வாறான நிறுவனங்களை கண்டறிவதில் உள்ள சிக்கல்தன்மை பல்கலைக்கழகங்களை மாற்றுவழிகளை நோக்கி நகர்த்துகின்றன.

பல்கலைக்கழக வளாகத்தில் காணப்படும் போக்குவரத்து அமைப்பு மற்றைய அம்சமாகும். அதிக வாகனப் பயன்பாடு, அதிக ஒலி மாசடைதலை தூண்டி பாதசாரிகளுக்குத் தொந்தரவை ஏற்படுத்தும் மற்றும் அதிகளவான காபன் புகை வெளிப்பாடு என்பன சில உதாரணங்களாகும். மறுசீரமைப்பு நடவடிக்கைகளாக குறிப்பிட்ட பகுதிகளில் வாகனக் கட்டுப்பாடு, தனிநபர் வாகனப் பயன்பாட்டைக் குறைத்தல், மின்மயமாக்கப்பட்ட வாகன ஊர்திகளின் அறிமுகம், ஸ்மாட் சைக்கிள் பாவனை மற்றும் வளாகத்தின் நடைபாதைகளின் பாவனையை ஊக்குவித்தல், வாகன நிறுத்துமிடங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்தல் என்பன போக்குவரத்து அமைப்புகளை மேம்படுத்தும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் ஒவ்வொரு தனிமனிதனும் சரியான அணுகுமுறையுடன் கவனம் செலுத்தி பசுமைச் சூழலுக்கான மனப்பான்மையை வெளிப்படுத்தினால் மட்டுமே சாத்தியமாகும்.

அரச பல்கலைக்கழகங்கள் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்போடு தங்களது தற்போதய உட்கட்டமைப்பு வசதிகளை மீள்பரிசீலித்து பசுமை கருத்துக்களை உள்வாங்குவதற்கான சரியான தருணமே இது. தற்போதய சூழலை இயற்கை மற்றும் கட்டமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சூழலுக்கு மாற்றி பல்கலைக்கழகங்களை சுத்தமான மற்றும் வசதியான கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கான இடமாக மாற்றுவதற்கான திட்டங்களைத் தொடங்க அரச பல்கலைக்கழகங்கள் வித்திட வேண்டும்.



**எம்.எப்.எப்.பாரூக்**
**பொறியிலாளர்**
**ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்**

# மனித உரிமை என்றால் என்ன?

மனித உரிமைகள் எந்த ஒரு சமுதாயத்தினாலோ, அரசினாலோ அல்லது அரசியல் அதிகார அமைப்புகளினாலோ உருவாக்கப்பட்டதல்ல.

அதுபோல் எவராலும் வழங்கப்பட்டதுமல்ல. அதனால்தான் எந்த ஒரு அரசுக்கும், அதிகார அமைப்புக்கும் மனித உரிமைகளை மீறுவதற்கான அதிகாரம் அளிக்கப்படவில்லை.

மனிதர்களாகப் பிறந்தவர்களுக்கு கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகளை நாம் மனித உரிமைகள் என்று அழைக்கிறோம்.

சாதி, மதம், பால், இனம், நாட்டுரிமை ஆகிவற்றிற்கு அப்பால், ஒவ்வொரு, மனிதனின் தனிப்பட்ட அடிப்படை உரிமைகள் வாழ்வதற்கான உரிமை, அரசியல், பொருளாதார,

சமூக, கலாசார, கல்வி, தனி மனிதருக்கு உரிய உரிமைகள். பொதுவாக பிரிக்கப்பட முடியாதவை.

அவை ஒன்றோடொன்று சார்ந்து இருப்பவை. அதனால் பல்வேறு வகையான மனித உரிமைகள் இருக்க முடியாது. முக்கியத்துவத்தின் அடிப்படையிலும், அனைத்து மனித உரிமைகளும் சமமானவை.

அதனால்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய மனித உரிமைகளில் எவ்விதமான வகைப்பாடுகளும் காணப்படவில்லை.



**ரசிக் சபீலா ரஸ்மியா**
**சர்வதேச மனித உரிமைகள் முகாமைத்துவ பெண்கள் மற்றும் சிறார்கள் உரிமைகள் இணைப்பாளர்**


## கேள்வி கோரல்

**கைத்தொழில் அமைச்சு**

**கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டட்**

### தொடங்கஸ்லந்த, மதுரா கொடவில் அமைந்துள்ள கஹட்டகஹ காரிய சுரங்க கட்டிடத்தொகுதிக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல்

கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டட் நிறுவனத்திற்கு சொந்தமான தொடம்கஸ்லந்த, மதுரா கொடவில் அமைந்துள்ள கஹட்டகஹ மினிரன் சுரங்க இடப்பரப்பு தொகுதி 2024ம் ஆண்டு சார்பாக பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விநியோகஸ்தர்களால் உறுதி செய்து விநியோகிக்கப்பட்ட குறித்த கேள்விகோரல் மாதிரிப் பத்திரங்கள் மாத்திரம் கேள்விகள் சமர்ப்பிப்பதற்காக பாவிக்கப்பட வேண்டியதுடன் கேள்வியின் முழுமையான கேள்விகோரல் ஆவணங்கள் உத்தியோகபூர்வ இணையதளம் http://www.kgraphite.lk இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு இவ் இணையதளத்திற்கு பிரவேசித்து கேள்விகோரல் ஆவணங்களை இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம் அல்லது கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்வி கோரல் மாதிரிப் பத்திர விபரங்களை 2024.01.01 முதல் 2024.01.14 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 5000/- தொகையைச் செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான விலைமனு விண்ணப்பங்கள் 2024 ஜனவரி 16 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு தலைவர், பெறுகைக் குழு, கஹட்டகஹ கிரைபட் லங்கா லிமிட்டட், இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு - 05, என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் இடத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்பு சுரங்க வளாகத்தைப் பரீட்சித்துப் பார்க்க எதிர்பார்ப்பின் தொ.பே.இல. 0742024749 மூலம் கஹட்டகஹ சுரங்க இடப்பரப்பு தொகுதியின் இயந்திர பொறியியலாளர் / முகாமையாளர் (பதிவு) ஐ அழையுங்கள் விலைமனுக்கள் உள்ளிடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2024.01.16 பி.ப. 2.00 இற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பற்றிய கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டட் நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

கேள்விகள் திறத்தல் 2024.01.16 பி.ப. 2.00 இற்கு, கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டட், இல.561/3, எல்விட்டிகல மாவத்த, நாரஹேன்பிட்ட, கொழும்பு - 05 இல் இடம்பெறும் (கேள்விதாரர்களுக்கு அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ்வேளையில் சமுகமளிக்கலாம்)

**தலைவர், பெறுகைக் குழு,**
**கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டட்**
**இல.561/3, எல்விட்டிகல மாவத்த,**
**நாரஹேன்பிட்ட,**
**கொழும்பு - 05**

**தொ.பே.இலக்கம்**
**0112 - 368736 / 37**
**037 - 2252015**
**பெக்ஸ் - 0112368737**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**

### பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் - 2024/2025

1. 2024.03.01 ஆம் திகதியிலிருந்து 2025.02.28 ஆம் திகதியன்று வரையும் செயல்வலுப்பெறும் வகையில் ஒரு வருடத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. தகைமையுள்ள விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   - அ. விலைமனுதாரர் இலங்கையில் வியாபார பதிவு செய்தல் கட்டளைச்சட்டம், கம்பனிகள் சட்டம் அல்லது கூட்டுறவு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒன்றாக பதிவு செய்த நிறுவனமொன்றாகவிருத்தல் வேண்டும்.
   - ஆ. உரித்தான சேவைகளை வழங்கும் சமூக அடிப்படையிலான நிறுவனமாக பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்திருக்கும் நிறுவனங்களும் விண்ணப்பிக்கலாம். (சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொண்ட தகுதித்தன்மை சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)
   - இ. அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது நிகரான திறனுடன் அரச பல்கலைக்கழகங்கள் அடங்கலாக பாரிய அளவிலான தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு சித்திகரமாக பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் மூன்று வருடங்களுக்கு (03) குறையாத (2021, 2022 மற்றும் 2023) அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலேயுள்ள மூன்று வருடங்களில் 30 மில்லியன் ரூபா தொகைக்கான ஆகக் குறைந்தது மூன்று நிகரான தன்மையிலுள்ள ஒப்பந்தங்களுடன் வருடாந்த நிதிப்புரள்வானது 40 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - ஈ. பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கும் வேளையில் 2024 ஆம் ஆண்டிற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுப்பிணையானது 500,000 ரூபா பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது 300,000 ரூபா ரொக்கப் பண வைப்பாகவிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024.05.20 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2024.01.01 ஆம் திகதியிலிருந்து 2024.01.19 ஆம் திகதியன்று வரையும் வாரநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 025-2266781 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பொது நிருவாகத்திற்கான உதவி பதிவாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. விலைமனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னராக ஆளணியரை நிலையெடுத்தல் தொடர்பாக தளவிஜயமொன்றை மேற்கொண்டு பல்கலைக்கழகத்தின் அனைத்து தேவைப்படுத்தல்களின் தெளிவான விளக்கமொன்றை பெற்றுக் கொள்ளுமாறு விலைமனுதாரர் பணிப்புரை வழங்கப்படுகின்றனர். 2024.01.11ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பல்கலைக்கழகத்தின் பிரதான கேட்போர்கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. 2024.01.01ஆம் திகதியிலிருந்து 2024.01.19ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், பொதுவான நிருவாகத்திற்கான உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். https://www.rjt.ac.lk/notice என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் வரைவை பதிவிறக்கம் செய்து மீளளிக்கப்படாத கட்டணமானது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெயரில் அனுராதபுர மக்கள் வங்கியில் பேணப்படும் 008-1-001-8-1725841 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது இணைக்கப்படல் வேண்டும்.
8. 04/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் பொது முயற்சியாளர்களுக்கு 15% முன்னுரிமையொன்று வழங்கப்படும்.
9. விலைமனுக்கள் 2024.01.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் பிரதியுடன் 2024.01.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக நிருவாக கட்டிடத்தின் 2 ஆம் மாடியிலுள்ள பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Security Services – 2024/2025" என்ற தலையங்கம் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன் விலைமனுக்கள் 2024.01.22ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**துணை வேந்தர்/தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
**31.12.2023.**

# அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம்

NIFS

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம் விண்ணப்பங்களை கோருகின்றது.

1. **ஆய்வாளர் (Research Fellow)**
2. **ஒருங்கிணைப்பாளர்**
3. **நிருவாக அலுவலர் - தரம் II**
4. **தொழில்நுட்ப அலுவலர் தரம் III**
5. **சாரதி தரம் III**
6. **முகாமைத்துவ உதவியாளர்**

## 1. ஆய்வாளர்

**தகைமைகள்:**

i. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பௌதிக விஞ்ஞானங்கள்/வாழ்க்கை விஞ்ஞானம்/ இரசாயனம்/பௌதிகம் ஆகியவற்றில் விஷேடத்துவத்துடன் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) கௌரவப் பட்டம்

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பௌதிக விஞ்ஞானங்கள்/வாழ்க்கை விஞ்ஞானம்/ இரசாயனம்/பௌதிகம் ஆகியவற்றில் விஷேடத்துவத்துடன் இரண்டாம் வகுப்பு (கீழ் பிரிவு) கௌரவப் பட்டத்துடன் ஆகக் குறைந்தது ஒரு வருட பட்டப்பின் பட்ட ஆய்வு அனுபவம்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பௌதிக விஞ்ஞானங்கள்/வாழ்க்கை விஞ்ஞானம்/ இரசாயனம்/பௌதிகம் ஆகியவற்றில் விஷேடத்துவத்துவம் அல்லது ஆகக் குறைந்தது இரு வருட பட்டப்பின் பட்ட ஆய்வு அனுபவத்துடன் விஞ்ஞானமாணி பட்டம் மற்றும் ஆகக் குறைந்தது இரண்டாம் வகுப்பு கௌரவப்பட்டம்.

**அத்துடன்**

ii. பௌதிக விஞ்ஞானங்கள்/ வாழ்க்கை விஞ்ஞானங்கள் இரசாயனம் / பௌதிகம் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்ற விஞ்ஞானமாணி பட்டம்.

**அல்லது**

தத்துவசாஸ்திரத்தில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் தத்துவசாஸ்திரத்தில் பெற்ற முனைவர் பட்டம் மற்றும் இரு வருட ஆய்வு அனுபவத்துடன் அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகத்தின் புள்ளி வழங்கும் திட்டத்திற்கமைவாக ஆகக் குறைந்தது 50 புள்ளிகளை பெற்றிருத்தல்.

பின்வரும் துறைகளில் பட்டப்பின் தகைமைப்பட்ட தகைமைகளையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

a) Condensed Mater Physics
b) Plant Taxonomy and Conservation
c) Natural Products
d) Microbial Biotechnology

**வயது :** 60 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

வேலைவாய்ப்பானது நிரந்தர அடிப்படையில் அமைந்திருக்கும். சம்பள மட்டம் மற்றும் செய்விதி ஆகியன பின்வருமாறு:

**U-AC 3 – II – 2016A – 79,360 – 11 x 1,630 – 97,290/- + ஆய்வுப் படி + கல்விசார் படி + அரசாங்கப் படி.**

## 2. ஒருங்கிணைப்பாளர்:

**தகைமைகள்:**

i. பமாஆ இனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானத்தில் பெறப்பட்ட விஞ்ஞானமாணிப் பட்டமொன்றுடன் உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் பெற்ற பட்டம்.

ii. முகாமைத்துவ மட்டத்தில் திட்ட ஒருங்கிணைத்தல் துறையில் பெற்ற 1 ஆம் பட்டத்தின் பின்னர் அரசாங்க திணைக்களமொன்றில், கூட்டுத்தாபனமொன்றில், சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் 15 வருட அனுபவம்.

iii. சர்வதேச மற்றும் தேசிய மாநாடுகளை ஒழுங்குபடுத்தலிலுள்ள அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**வயது:** 35 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

வேலைவாய்ப்பானது நிரந்தர அடிப்படையில் அமைந்திருக்கும். சம்பள மட்டம் மற்றும் செய்விதி ஆகியன பின்வருமாறு:

**HM 1-1 – 2016A – 81,670 – 15 x 2,270 – 115,720/- + அரசாங்கப் படி.**

## 3. நிருவாக அலுவலர்:

**தகைமைகள்:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இளமாணிப் பட்டத்துடன் அரசாங்க திணைக்களமொன்றில் /கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் நிருவாகத்தில் ஒரு (01) வருட பட்டப்பின் பெற்ற தகைமைப் பட்ட அனுபவம்.

**வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

வேலைவாய்ப்பானது நிரந்தர அடிப்படையில் அமைந்திருக்கும். சம்பள மட்டம் மற்றும் செய்விதி ஆகியன பின்வருமாறு:

**JM 1-1 – 2016 – ரூபா.42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580 + அரசாங்க படி.**

## 4. தொழில்நுட்ப அலுவலர்: தரம் III

**தகைமைகள்:**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் கணிதம் மற்றும் மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ஆகியன அடங்கலாக 4 திறமைச் சித்திகளுடன் விஞ்ஞான பிரிவில் கபொத (உ/த) இல் மூன்று சித்திகளுடன் 5 ஆம் தேசிய தொழில்கல்வி மட்டத்திற்கு குறையாமல் கணனி விஞ்ஞானம்/கணனி பொறியியல்/ ICT மற்றும் இரு வருட டிப்ளோமா.

ICT உபகரணம் மற்றும் வலையமைப்பு நிருவாகத்தின் பராமரிப்பில் அனுபவமுள்ளவர்களுக்கு விஷேட முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

வேலைவாய்ப்பானது நிரந்தர அடிப்படையில் அமைந்திருக்கும். சம்பள மட்டம் மற்றும் செய்விதி ஆகியன பின்வருமாறு:

**MA 2-1-2016-30,310-10x300-7x4x495-20x660-50,940 + அரசாங்க படி.**

## 5. சாரதி

**தகைமைகள்:**

ஒரே அமர்வில் சிங்களம் /தமிழ் /ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக இரு பாடங்களில் க.பொ.த. (சா/த) இல் சித்தி.

**அத்துடன்**

பார ஊர்திகளை செலுத்துவற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரிமம் மற்றும் புகழ் வாய்ந்த தாபனமொன்றில் பார ஊர்திகளை செலுத்துவதில் பெற்ற ஐந்து வருட அனுபவம்.

**வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

வேலைவாய்ப்பானது நிரந்தர அடிப்படையில் அமைந்திருக்கும். சம்பள மட்டம் மற்றும் செய்விதி ஆகியன பின்வருமாறு:

**PL 3-2016-26,290-10x270-10x300- 10x300 – 12x350-39,490 + அரசாங்க படி.**

## 6. முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

**தகைமைகள்:**

ஒரே அமர்வில் கபொத (உ/த) இல் மூன்று சித்திகளுடன் கபொத (சா/த) இல் ஒரே அமர்வில் சிங்களம் /தமிழ் /ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு திறமைச் சித்திகளுடனான சித்தி.

**குறிப்பு:** அ) கணனி பிரயோகங்களின் புலமை (eg. Word Procession, Spread Sheet, Presentations and Stenography ) சிறந்த தகைமையாக கருதப்படும்.

ஆ) Knowledge in Word Processing in Sinhala and Tamil will be a distinct advantage.

**வயது:** 18 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**வேதனம்:** வேலைவாய்ப்பானது ஒப்பந்த அடிப்படையில் அமைந்திருக்கும்.

**சம்பள நிலை: 27,910 + வாழ்க்கைச் செலவுப் படி**

ஊழியர் அவர்களின் சம்பளத்தின் 10% ஐ NIFS பதவிநிலை அலுவலர்களின் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் அதே வேளையில் நிறுவகமானது 15% ஐ பங்களிப்புச் செய்யும். இதற்கு மேலாக, நிறுவகமானது சம்பளத்தின் 3% ஐ ஊநநி இற்கு பங்களிப்புச் செய்யும்.

விண்ணப்பதாரிகள் விபரமுள்ள சுயதரவை இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் வயது மற்றும் தகைமைகளை சான்று பகருவதற்காக

சான்றிதழ்களின் பிரதிகளுடன் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாட்களுள் அனுப்பப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் உரித்தான விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலினூடாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம்,**
**ஹந்தான வீதி, கண்டி.**

**தொலைபேசி:** 081-2232002
**தொலைநகல்:** 081-2232131

**இறுதித் திகதி: 21.01.2024.**

16 ஆம் பக்க தொடர்ச்சி ...

'இன்னக்கி நான் லீவு வா... சஹானாவ நர்ஸரில உட்டுட்டு நீங்க கடைக்குப் போங்க...' கேள்விக்குறியோடு சாகிராவைப் பார்த்த சிரான் 'ஏன் வா லீவு? சொகமில்லயா' என்று ஆதுரத்துடன் கிட்ட வந்து விசாரித்தான். சாகிரா எப்படியோ சமாளித்தாள். வழமை போல சிரான் பகலுணவுக்கு வந்து போன சிறிது நேரத்தில் சஹானாவை அழைத்துக்கொண்டு சாகிரா புறப்பட்டாள். ரலீனாவின் வீட்டுவாசலில் ஆட்டோ நின்றது.

ரலீனாவின் தாயார் வாயெல்லாம் பல்லாக வரவேற்றார். மகளை அழைக்கப் பார்த்தவளைத் தடுத்து,

'ஒங்களத் தாம்மா பாக்க வந்த வாப்பா எங்க?' என்று கேட்க, வாசலில் சாக்குக் கட்டிலில் படுத்திருந்த கணவரை எழுப்பி விட்டாள்.

'நான் இப்ப சொல்றத கேட்டு ரெண்டு பேரும் அதிர்ச்சியாவ வாணம். நேரடியாகவே விஷயத்துக்கு வாறேன்' என்றவள், சஹானாவை அங்கிருந்த குழந்தைகளுடன் விளையாட அனுப்பினாள். 'ஒங்கட மகளும் சிரானும் ஒன்னாப் படிச்சவங்களாம். அதால வந்த பழக்கம் ரலீனாவ குடும்பத்துல ஒத்தரா நெனக்க வச்சது. ஆனா...ஆனா' தளர்ந்துபோன குரலை வலுக்கட்டாயமாக சரி செய்தாள்.

'கிளாஸ்மேட் என்ற தொடர்பைத் தாண்டி, ரலீனாவுக்கும் சிரானுக்கும் இடைல வேறொரு தொடர்பும் இரிக்கிறதா எனக்குப்படுது...'

'என்னதும்மா இது நீங்க செல்லுற? எங்கட புள்ளட மேல்ல வீண்பழி போடப் பாக்கிற?' கோபமாகத் தாயார் பேசினாலும் குரலில் நடுக்கம். கணவரின் முகத்தைப் பாரத்தாள்.

'இதபத்தி யாருக்கும் தெரியாதும்மா. நானாத்தான் தேடிப்பார்த்து சில விஷயங்களைத் தெரிஞ்சி கொண்ட. ஒங்கட மகளுக்கும் கலியாணமாவல. அதுக்காக ஆசாபாசங்கள் இல்லாமயா போவும். இந்த விஷயம் வெளில கசியிறதுக்க முந்தி, ஊருக்குள்ள அவமானப்பட முந்தி, ஒரெயொரு ஒதவி பண்ணினாப் போதுமெனக்கு.'

சொல்லிவிட்டு அந்தத் தம்பதியின் முகங்களை ஊடுருவினாள். 'எங்கட மகளுக்கு மாப்புள தேடித்தேடி நாங்க தோத்துட்டோம்மா வெளிநாட்டுக்கு போன புள்ள வாணமென்டு தான் எல்லாரும் சொல்றாங்க. காலாகாலத்துல எம்புள்ளக்கொரு கலியாணம் நடந்திருந்தா.... இந்த மாதிரி கதயெல்லாம் கேட்கத் தேவலம்மா....'

கண்களைச் சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டாள் அந்தத் தாய்.

'இது கதையல்லம்மா.... அத கண்ணு மூக்கு வச்சி கதயாக்காம இருக்கத்தான் நான் இந்த ஒதவியக் கேக்கிறன்.'

'என்னம்மா இந்த ஊர உட்டுட்டு நாங்க போவணுமா?'

தகப்பனார் வாய்திறந்தார். கொஞ்சம் சூடான வார்த்தைகள்..

'அதுக்கொண்டும் தேவப்படாது வாப்பா. ஒங்கட மகளோட கதச்சிப்பாருங்க. அவ உண்மைய ஒத்துக் கொள்ளுவான்னு நம்புறன் அவங்க ரெண்டுபேரும் இஸ்லாத்தால தடுக்கப்பட்ட விதத்துல நடந்து கொள்ளுறத்த தெரிஞ்சும் நாங்க பேசாம இருந்தா, பாவம் எங்க எல்லாருக்கும் தான். அதனால... அதனால...' கட்டுப்பாட்டை மீறித் தழுதழுத்தது சாகிராவின் குரல். சிறிது நேரம் மௌனித்து விட்டு தொடர்ந்தாள்.

'ரலீனாவுக்கு எங்னகடவர நிக்காஹ் பண்ணிவைக்க எனக்குப் முழுச்சம்மதம். அதுக்கு ஒதவி செய்ங்கன்னு தான் கேக்க வந்தன்.'

அதிர்ந்து போனார்கள் ரலீனாவின் பெற்றோர்.

'என்ன மடத்தனம் மகள். இது எப்பிடி நடக்கும்? ஒங்கட வாழ்க்க என்னாவுறது? சரிப்பட்டு வராது.'

'என்னபத்தி யோசிக்க வாணாம் உம்மா. அவருக்கு ரெண்டு கலியாணம் முடிக்க இஸ்லாம் சொல்ற தகுதி தாராளமா இரிக்கி. அதனால இத செஞ்சி வைக்கிறது எங்கட கடம'

தீர்க்கமான தன்னுடைய முடிவை முன் வைத்தவள் எப்படியோ பேசி சம்மதிக்க வைத்தாள். உரியவர்களுடன் பேசி ஒரு வாரத்துக்குள் பதிவுத் திருமணம் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சிரானுக்குக் கடும் அதிர்ச்சி.

'என்ன சாகிரா.... எனக்கிட்ட ஒரு வார்த்த விசாரிக்காம இப்பிடித் திடீர்னு முடிவெடுத்த?'

'ஒங்களோட இது சம்பந்தமா பேச எதுவுமில்ல. இந்த வீட்டில ஹராமான காரியங்கள என்னால அனுமதிக்கேலா. அல்லாஹ்வுக்காகத் தான் நான் இந்த முடிவ எடுத்த.'

சாகிராவின் தீட்சண்யமான பார்வையைச் சந்திக்க முடியாமல் சிரான் தலை கவிழ்ந்தான்.

மாலையில் ஊர்ப் பள்ளிவாசலில் நிக்காஹ்.

இதயத்தைப் பிழியும் வேதனை மேலிட தன் கணவனை அவரது நண்பர்கள் சிலரோடு பள்ளிக்கு அனுப்பி விட்டு கதவைத் தாழ்ப்பாள் போட்டாள் உடைந்து நொறுங்கிப் போன உள்ளத்துக்கு ஆறுதல் பெற, வெளிப்படையாக அழக்கூட முடியவில்லை. சஹானா உடனிருப்பதால்.

'அன்புள்ள கணவர் சிரானுக்கு. நான் உங்களுடன் எந்த மனஸ்தாபமும் இல்லை. ஒரு சராசரிப் பெண் என்றவகையில் என்னால் சோகத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை தான்.

ஆனாலும் உங்கள் மீது கொண்டுள்ள உண்மையான அன்பின் காரணமாகவே நான் இந்த முடிவுக்கு வந்தேன். உங்களுக்கு நல்லதை நாடிய திருப்தி என்னுள்ளத்தை நிறைத்திருக்கிறது.

நான் இனியும் உங்களுடனிருந்தால் ரலீனாவைக் கவனிப்பதில் உங்களுக்கு சங்கடம் ஏற்படலாம். எனவே நான் வீட்டை விட்டு வெளியேறுகிறேன். சஹானாவுடன் என் தாய் வீட்டுக்குத் தான் போகிறேன். என்னைத் தேடுவதாக அங்கே நீங்கள் வந்து சிக்கலில் மாட்டிக் கொள்வதை நான் விரும்பவில்லை.

நீங்கள் தான் எப்போதும் என் கணவர். உங்களை மணவிலக்கு செய்யும் எண்ணம் கடுகளவும் எனக்கில்லை. எனக்கும் கணவர் இருக்கிறார் என்ற அந்தஸ்தை சமூகத்தின் முன் நான் விட்டுத்தரத் தயாரில்லை. இது உங்கள் வீடு. திருமணமே கைகூடாத ஓர் அபலைக்கு வாழ்வு கொடுத்த நற்பாக்கியம் உங்களை வாழ வைக்கும். உங்கள் புது வாழ்க்கைக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

இப்படிக்கு சாகிரா – உங்கள் மனைவி'

கடிதத்தை எழுதி முடித்ததும் பெரியதொரு பாரம் மனதிலிருந்து இறங்கிய உணர்வு. தனது அலைபேசியின் 'சிம்' மைக் கழற்றி கடித மடிப்புக்குள் வைத்தாள். வெண்ணிற உறைக்குள் கடிதம் மேசை மீது சலனமின்றிக் கிடந்தது.

அதற்கு மேலால் ஒற்றைச் சிவப்பு ரோஜாவை வைத்ததும், 'பளிச்'சென்று தெரிந்தது. கதவைச் சாத்திவிட்டு சஹானாவுடன் வெளியில் வந்து அவளை, ஏற்றிச்செல்ல முச்சக்கர வண்டியொன்று வாசலில் காத்திருந்தது.

**முற்றும்**

---

| | | |
|---|---|---|
| 01. நிறுவனம் | : | இலங்கை நீதிபதிகள் நிறுவனம் |
| 02. பதவி | : | செயலாளர் பதவி |
| 03. பதவிகளின் எண்ணிக்கை | : | 01 |
| 04. ஏனையவை | : | இப்பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுவதுடன், மேலதிக விபரங்களுக்கு www.judgesinstitute.lk ஐப் பார்வையிடவும் |
| 05. விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி | : | 2024.01.15 (பதிவுத்தபால் மூலம்) |
| 06. விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி | : | பணிப்பாளர், இலங்கை நீதிபதிகள் நிறுவனம், இல. 80, நீதிமன்ற மாவத்தை, கொழும்பு - 12 |

**பணிப்பாளர்**
**இலங்கை நீதிபதிகள் நிறுவனம்**

---

# கேள்வி அறிவித்தல் - LED திரை முறைமை சேவையை பெற்றுக்கொள்ளல்

# இலங்கை இராணுவம்

1. 2024-03-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான காலத்தினுள் இலங்கை இராணுவத்திற்குத் தேவைப்பாட்டிற்கு, மிகக் குறுகிய கால அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களை ஆவரணப்படுத்துவதற்குத் தேவையான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளிலான LED திரை முறைமை சேவையை நிலையான விலையின் (RATE Contract) கீழ் ஒரு நாள் / சில நாட்களுக்கு முன்னான அறிவிப்பின் அடிப்படையில் தேவையான நாள் முதல் பல நாட்களுக்கு LED திரை முறைமை ஒன்று அல்லது பலவற்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு, ஶ்ரீ ஜயவர்தனபுரயில் அமைந்துள்ள இராணுவ தலைமை சமிக்ஞை அதிகாரி அலுவலகத்தினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | தேவையான LED திரை வகைகள் | LED திரை நிறுவப்பட வேண்டிய பிரதேசம் | 2024-03-01ஆம் திகதி முதல் 2024-12-12ஆம் திகதி வரையான காலத்தினுள் தேவையான LED திரை சேவை எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | P3 10’x08’ (உள்ளக) | கொழும்பு மாநகர எல்லை | 6 |
| 02 | P3 14’x10’ (உள்ளக) | கொழும்பு மாநகர எல்லை | 2 |
| 03 | P3 16’x10’ (உள்ளக) | பனாகொட, அனுதாரபுரம் | 4 |
| 04 | P4 20’x12’ (திறந்தவெளி) | பனாகொட | 2 |
| 05 | P3 20’x10’ (உள்ளக) | கொழும்பு மாநகர எல்லை | 1 |

2. மேலும் LED திரை முறைமை சேவைக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் அவதானத்தை செலுத்தி அதற்கான கட்டணங்களை வெவ்வேறாக உள்ளடக்கி விலைகளை வழங்குதல் வேண்டும்.
   - அ. இயைபுடைய சேவையை வழங்கும்போது குறைந்தபட்சம் இரண்டு இயக்குநர்கள் மற்றும் அதிகபட்சமாக ஐந்து இயக்குநர்களைக் கொண்ட பணியாட் தொகுதியினரை ஈடுபடுத்துதல்
   - ஆ. சகல டுநுனு திரை முறைமையுடனும் Arena System மற்றும் UPS சகிதம் Video Mixer வழங்குதல்.
   - இ. தேவையின் பிரகாரம் துணைப்பாகங்களை வழங்குதல் (Fiber to SDI, SDI to Fiber, HDMI SDI, SDI to HDMI, HDMI to Alalog, HDMI splitter, Analog splitter, BNC/HDMI Cables போன்றன)
   - ஈ. LED பெனலை தேவையான உயரத்தில் நிறுவுவதற்கான இரும்புச் சட்டக வசதி
   - உ. போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

   LED பெனலுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கான மின்பிறப்பாக்கி வசதி இலங்கை இராணுத்தினால் வழங்கப்படும்.

3. மேற்கூறப்பட்ட வழங்கல்களுக்காக வழங்கப்படும் பெறுகை ஆவணங்களை கொழும்பு, ஶ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், பிரதான சமிஞ்ஞை அதிகாரி அலுவலகம் எனும் முகவரியில் 2024-01-01ஆம் திகதி முதல் 2024-01-15ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1600 மணித்தியாலம் வரையான காலத்தினுள் 0112748416, 0114050358 எனும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொண்டு இராணுவ தலைமையத்தின் கிழக்கு நுழைவாயிலுக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட கேள்வி 2024-01-26ஆம் திகதி 1100 மணித்தியாலத்தில் கொழும்பு, ஶ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம், இராணுவத் தலைமையக வாகனத் தரிப்பிடத்தில் திறக்கப்படும் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. இந்த ஆவணங்களை வேண்டும் வழங்குநர்கள் இந்த விடயங்களை வழங்குவதை உறுதி செய்வதற்கு உள்ள காரணிகள், நிறுவனப் பதிவுச் சான்றிதழின் பிரதி, செயல்நிலை வெட் சான்றிதழ் மற்றும் கடந்த 06 மாதங்களுக்கான நிறுவனத்தின் வங்கிக் கூற்றின் புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் இந்த வழங்கலுக்காக முன்வரும் வழங்குநர்கள் அரச பாதுகாப்பு அமைச்சில் வழங்கல் பதிவேட்டில் பதிவு செய்துகொண்டிருந்தால் அவர்கள், அரச பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தால் மட்டும் போதுமானது.

4. மேற்கூறிய கேள்வி தொடர்பில் ஆர்வம் காட்டும் மற்றும் தரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள சகல விண்ணப்பதாரர்களும் கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன் கேள்விப் பெறுமதியின் பிரகாரம் ஒரு கேள்விப் படிவத்திற்காக 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத தொகையை நிதிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு (கொழும்பு, ஶ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகம்) கேள்விப் படிவத்தை பெற்றுக்கொள்வதற்கு முன் செலுத்தி அந்தப் பற்றுச்சீட்டை பிரதான சமிக்ஞை அதிகாரி அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்,

பிரதான சமிக்ஞை அதிகாரி அலுவலகம் - தொலைபேசி இலக்கம் 011 2748416, 0114050358

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஶ்ரீ ஜயவர்தனபுர.**
**கொழும்பு**

# வாரபலன்



31.12.2023 - 06.01.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மனதில் ஏதேனும் பதற்றம் உண்டாகலாம். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் உண்டாகும். வீடு, வாகனம் தொடர்பான செலவு குறையும். வழக்கு விவகாரங்களில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் இருந்த தடங்கல்கள் நீங்கும். சாதுரியமான பேச்சு வியாபார விருத்திக்கு கைகொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணி தொடர்பாக அலைய நேரிடலாம். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வருகை இருக்கும். பெண்கள் எடுத்த காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பர். மாணவர்கள் பாடங்களை நன்கு படித்து ஆசிரியர்களின் பாராட்டை பெறுவர். திறமையான செயல்பாடுகள் வெற்றிக்கு உதவும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

சிந்தித்து செயல்படுவது நன்மை தரும். பெரியோரின் உதவி கிடைக்கும். நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். பங்குதாரர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அவ்வப்போது வாக்குவாதங்கள் உண்டாகலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செல்வது கருத்து வேற்றுமை வராமல் தடுக்கும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது மனதுக்கு திருப்தியை தரும். பெண்களுக்கு வரவுக்கு ஏற்ற செலவு இருக்கும். காரியத் தடை, தாமதம் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். உயர்கல்வி பற்றிய சிந்தனை மேலோங்கும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எடுத்துக் கொண்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். சின்ன சின்ன பிரச்சினைகள் தீரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேற்கொள்ளும் கடுமையான பணிகள் கூட எளிமையாக நடந்து முடியும். குடும்பத்தில் இருப்பவர்களின் நடவடிக்கை பதற்றத்தை ஏற்படுத்தலாம். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை உண்டாகலாம். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். பெண்கள் எடுத்த காரியத்தை சாதகமாக செய்து முடிப்பர். திடீர் மன தடுமாற்றம் உண்டாகலாம். பெரியோர் ஆலோசனை கை கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை அதிகரிக்கும். கவனமாக பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். காரிய அனுகூலங்களும் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். வீடு, வாகனங்கள் தொடர்பான செலவு ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளால் டென்ஷன் அடைவார்கள். எதிர்பார்த்தபடி சக ஊழியர்களால் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் சில்லறை சண்டைகளும், பூசல்களும் இருக்கும். உறவினர்களுடன் கருத்து வேற்றுமை வரலாம். பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பது நல்லது. பெண்கள் எந்த ஒரு வேலையில் ஈடுபட்டாலும் அதுபற்றி ஒருமுறைக்கு பலமுறை யோசித்தபின் ஈடுபடுவது நல்லது. துணிச்சல் அதிகரிக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் பாடங்களை படித்து கூடுதல் மதிப்பெண் பெற முயற்சிகள் மேற்கொள்வர்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

தடங்கல்கள் நீங்கும். பயணங்கள் சாதகமான பலன் தரும். மனக்கவலை நீங்கி தெளிவு உண்டாகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் நன்கு முடியும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். வியாபாரம் சிறக்க கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை சிறப்பாக செய்து முடித்து மேலதிகாரிகளின் பாராட்டு பெறுவர். கணவன் மனைவிக்கிடையே சந்தோஷமான நிலை காணப்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் மூலம் அலுகூலம் உண்டாகும். பெண்களுக்கு மனக்குழப்பம் நீங்கி தெளிவான சிந்தனை உண்டாகும். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். மாணவர்களுக்கு தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெற ஆசிரியர்களின் கருத்துகளை கேட்பது நல்லது.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2 ஆம் பாதம்)**

மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கலாம். வெளியூர் பயணங்கள் மனதுக்கு சந்தோஷத்தை தரும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உங்களது சிறப்பான செயல்கள் மற்றவர்களின் பாராட்டை பெற்றுத்தரும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சின் மூலம் முன்னேற்றம் காண்பர். எதிர்பார்த்தபடி நிதிநிலை உயரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலான பணிகளை கவனிக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் மூலம் டென்ஷன் உண்டாகலாம். கணவன் மனைவிக்கிடையே கோபத்தை விட்டுவிட்டு இதமாக பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும். பெண்களுக்கு எடுத்த காரியங்களை செய்து முடிப்பதில் காரிய தாமதம் உண்டாகும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை இருக்கும். காரியத் தடை, வீண் அலைச்சல் ஏற்படலாம். கெட்ட கனவுகள் வரலாம். திடீர் கோபம் ஏற்படும். எதிர்ப் பாலினத்தாரிடம் கவனமாக பழகுவது அவசியம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆர்டர் கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். பழைய பாக்கிகள் வசூலாவது மனத்திருப்தியை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிச் சுமையால் பதற்றத்துடன் காணப்படுவர். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே சின்னசின்ன கருத்து வேற்றுமைகள் வரும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் மற்றவர்களின் விமர்சனத்திற்கு ஆளாக வேண்டி வரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் அடங்கி விடுவார்கள். எதிர்பாலினத்தாரின் நட்பும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவி அல்லது கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் இருப்பவர்களின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். அவர்கள் உங்களை மதிப்பது மனதுக்கு இதமளிக்கும். பெண்களுக்கு மனதில் வீண்குழப்பம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எடுக்கும் முயற்சிகள் நல்ல பலன் தரும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

உடல் ஆரோக்கியம் உண்டாகும். வீண் வாக்குவாதத்தால் பகை உண்டாகலாம். பயணத்தில் தடங்கல், வீண் செலவு போன்றவை ஏற்படும். மனதில் தைரியம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ ஏற்படாது. தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். வாக்குவன்மையால் லாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான காரியங்கள் சாதகமான பலன்தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவிகள் கூடுதல் பொறுப்பு கிடைக்கப் பெறுவர். அலுவலக பணிகளை வெற்றிகரமாக செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். நீண்ட நாட்களாக இருந்த குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் சாதகமாக முடியும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்களுக்கு பயணங்களால் செலவு ஏற்படும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பர்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர்பாலினத்தாரின் நட்பு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான பணிகள் சாதகமாக நடக்கும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தனப் போக்கு மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டபடி பணிகளை முடிக்க முடியாமல் தாமதம் ஏற்படலாம். சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதை வளரவிடாமல் சமாளித்து விடுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இடைவெளி காணப்படும். பிள்ளைகள் புத்திசாதுர்யமாக நடந்து கொள்வது மன மகிழ்ச்சியை தரும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். மாணவர்கள் திட்டமிட்டபடி பாடங்களை படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவர்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எந்த காரியம் செய்தாலும் தாமதம் உண்டாகும். எல்லாவற்றிலும் ஒரு பயம் ஏற்படும். புதியநபர்களின் நட்பு உண்டாகும். வீடு வாகனம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் மெத்தனமான போக்கு காணப்படும். வியாபாரம் தொடர்பான பயணங்களை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியாத நிலை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இருக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவதன் மூலம் முக்கியமான காரியங்களில் நல்ல முடிவு எடுக்க முடியும். பிள்ளைகளின் நலனுக்காக பாடுபட வேண்டி இருக்கும். பெண்கள் வீண் வாக்குவாதங்கள், அடுத்தவர் பற்றிய விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை அதிகரிக்கும். திடமான மனதுடன் படிப்பது வெற்றியை தரும்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

பேச்சின் இனிமை சாதுர்யத்தின் மூலம் காரிய வெற்றி ஏற்படும். சாமர்த்தியமான செயல்களால் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். மனகவலை நீங்கும். பயணத்தின் போது ஏற்பட்ட தடங்கல் நீங்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். போட்டிகள் விலகும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிகளை விரைந்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். புதிய வேலை தொடர்பாக மேற்கொள்ளும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தினர் உங்களை அனுசரித்து செல்வர். கணவன், மனைவிக்கிடையே இருந்த பிரச்சினைகள் தீரும். பிள்ளைகள் மூலம் பெருமை உண்டாகும். பெண்களுக்கு மனக்கவலை நீங்கி உற்சாகம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

# உங்களை அரியணையிலேற்றும் தர்மகர்மாதிபத்தியயோகம்!





'தசாபுத்தி அந்தரப்படி நன்மை தரும் உங்கள் சாதக கிரக அமைப்புகள்' என்ற எனது சென்ற சோதிட ஆய்வுக் கட்டுரையில் சொல்லப்படாமல் விடுபட்டுப்போன ஏனைய கிரகங்களின் நற்பயன் தொடங்கும் கால கட்டத்தை இக்கட்டுரை மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

புதன் 5ஆம் வீட்டுக்குரியவராகி 11ஆம் வீட்டிலிருந்தால் அவ்விதம் அமைந்த சாதகருக்கு 32ஆவது வயதிலிருந்தே நல்ல காலம் ஆரம்பிக்குமெனக் கொள்ள வேண்டும். அநேகமாக இடப லக்கின சாதகருக்கு இது அமையலாம். ஆனாலும், அந்த இலக்கினத்துக்கு 11ஆம் வீடானது புதனுக்கு நீசவீடு (மீனம்) என்பதால், அப்புதனுக்கு நீசபங்கம் ஏற்பட்டிருந்தாலன்றி அதனால் அச்சாதகருக்கு அதிர்ஷ்டம் தொடருவதென்பது அரிது. அதேவேளை கும்பலக்கினகாரருக்கு 5ஆம் வீடாகிய மிதுனத்திற்குரிய புதன் அதற்கு 11ஆம் வீடாகிய தனுவில் இருந்தாலும் இந்த நல்ல காலம் அதே வயதில் தொடங்கும்.

இந்தப் புதன் 9ஆம் வீட்டுக்குரியவராகி 10ஆம் வீட்டில் சஞ்சரித்திருந்தால் சாதகர் தமது 35ஆவது வயதிலிருந்தே பூர்வ புண்ணிய வினையாலும், தந்தை மூலமாகவும், தர்ம காரியங்கள் மூலமும் இலாபம் பெறுவதுடன் செய்யும் தொழிலிலும் அபிவிருத்தியடைவார் என்று முடிவெடுக்க வேண்டும். ஐந்தாம் வீட்டுக்குரியவர் சந்திரனாகி, அவர் 10ஆம் வீட்டில் இருப்பாரானால் அவ்விதம் அமைந்தவருக்கு அதிர்ஷ்டவசமாக 24ஆம் வயதிலிருந்தே தொழில் மேன்மையும் பொருள் வரவும் உண்டாக ஆரம்பிக்குமென கொள்ள வேண்டும்.

மேட லக்கினத்தில் பிறந்தவருக்கு இலக்கினாதிபதியான செவ்வாய் மகரத்தில் உச்சம் பெற்றிருந்தால் அந்த சாதகருக்கு 28ஆம் வயதிலிருந்தே செய்தொழிலில் முன்னேற்றமும், மதிப்பும், கௌரவமும் உண்டாக ஆரம்பிக்குமெனக் கொள்ளவேண்டும். அதுபோல மீன லக்கினத்தில் பிறந்த ஒரு சாதகருக்கு வியாழன் 5ஆம் இடத்தில் உச்சம் பெற்றிருந்தால் அவருக்கு 16 வயதிலிருந்தே சௌபாக்கியங்கள் உண்டாக ஆரம்பித்து விடும். இதே வியாழன் கடக லக்கினத்தில் பிறந்தவருக்கு 9ஆம் வீட்டுக்கு உரியவராகிறார். அவர் கடகத்திலேயே இருப்பாரானால் அவ்விதம் தமது சாதகத்தில் அமைந்தவருக்கும் 16 வயது முதலே தந்தை மூலமாக நல்லதொரு முன்னேற்றம் உண்டாகச் செய்வார்.

அதேவேளை விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு 2ஆம்இ 5ஆம் வீடுகளுக்குரிய வியாழன் 9ஆம் இடத்தில் உச்சம் பெற்றிருந்தால் அச்சாதகர்கள் கல்வித்துறையில் முன்னேற்றமடைவதுடன், அதிர்ஷ்டவசத்தால் பொருள் வரவையும் பெறுவதற்குரிய காலம் 16 வயதிலிருந்தே ஆரம்பமாகும்.

ராகு ஒரு பாவக்கிரகம். ஆயினும் அவருக்குப் பொருத்தமான இடமொன்றில் அமர்ந்து சுபர் பார்வை அல்லது சேர்க்கை பெற்றிருப்பாரானால் அவர் மூலம் பெறக்கூடிய பலன்கள் ஆகா, ஓகோ என்றிருக்கும்! இந்த ராகுவானவர் ஒரு கேந்திரத்திலமர்ந்து சுபக் கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை பெற்றிருந்தால் அவருக்கு விளையக்கூடிய நற்பலன்கள் 42ஆவது வயதிலிருந்தே ஆரம்பிக்கக் கூடும்.

சுபர் பார்வை அல்லது சுபர் சேர்க்கை என்று சுப பலம் பெற்ற ஒரு கிரகம் 10ஆம் வீட்டில் அமர்ந்திருந்து 10ஆம் வீட்டுக்குரிய கிரகமும் கேந்திரம் அல்லது திரிகோணமேறியிருந்தால் அச்சாதகர் முயன்று உயர் பதவியை அல்லது அந்தஸ்தை அடைய அதுவே தகுந்த அடிப்படையாகும்.

அதுபோல கேதுவும் பலம் பெற்று எந்த வீட்டோடு எந்தக் கிரகத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறாரோ அந்த வீட்டின் பலனையும் சேர்ந்துள்ள கிரகத்தின் பலனாகவும் தன் கையில் வாங்கிக் கொண்டு சாதகருக்கு அவரது 48ஆவது வயதிலிருந்து நலம் விளைவிக்க ஆரம்பிப்பார்.

ஒரு சாதகத்தில் இலக்கினத்திற்கு அதிபதியான கிரகம், 10ஆம் வீட்டில் பலம் பெற்றிருந்தால் அச்சாதகருக்கு சுபீட்சங்களும் நலன்களும் உண்டாகத் தடையிராது. ஒரு கிரகம் பலம் பெறுவதென்பது அது உச்சம் பெறுவதும், கேந்திர, திரிகோண நிலைகளில் அமர்ந்திருப்பதுமாகும்.

சுபக்கிரக பார்வை அல்லது சேர்க்கை என்பது இவ்விதம் அமர்ந்துள்ள கிரகங்களுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகும். இலக்கினாதிபதிக்கு 10ஆம் வீடு நீச வீடாயிருந்தால் அதற்கு பாவிகள் பார்வை அல்லது சேர்க்கையிருந்தாலும் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பங்கப்படுத்திவிடும்.

9ஆம் வீட்டுக்குரிய கிரகம் 10ஆம் வீட்டிலும்இ 10ஆம் வீட்டுக்குரிய கிரகம் 9ஆம் வீட்டிலும் மாறியமர்ந்து இடப்பரிவர்த்தனம் பெற்று சுப பலமும் பெற்றிருந்தால் அவ்விதம் அமைந்த சாதகருக்கு அதிர்ஷ்டமும் உயர் பதவியும் வாழ்க்கையில் கிட்ட உத்தரவாதமுண்டு. 9ஆம், 10ஆம் வீடுகளுக்குரிய கிரகங்கள் ஒன்று கூடி 9ஆம் வீட்டிலோ அன்றி 10ஆம் வீட்டிலோ அமர்ந்திருந்தால் மிகவும் விசேடமான பலனுண்டு. அரச பணியில் இருந்தாலும் அரசியல்வாதியாக இருந்தாலும் இத்தகையவரை அரியணையிலேற்றி அழகு பார்க்கும் இக்கிரக அமைப்பு மிகவும் உன்னதமான 'தர்ம கர்மாதிபத்திய யோகம்' என்று இதற்குப் பெயர்.

9ஆம், 10ஆம் வீடுகளுக்குரிய கிரகங்கள் ஒரு திரிகோணத்தில் (1, 5, 9 ஆகிய இடங்கள் அல்லது ஒரு கேந்திரத்தில் (1, 4, 10 ஆகிய இடங்கள்) அமர்ந்து வலிமை பெற்றிருந்தால் அவ்விதம் அமைந்த சாதகர் வாழ்க்கையில் முன்னேற நிறைய வாய்ப்புகள் கிட்டும். அது போல 5ஆம், 10ஆம் வீடுகளுக்குரிய கிரகங்கள் இடப்பரிவர்த்தனை பெற்றிருப்பதும் மிகுந்த சுபிட்சங்களை சாதகர் தம் வாழ்நாளில் பெறுவதற்கு வழி வகுக்கும். இந்த 5, 10க்கு உள்ளவர்கள் எந்தக் கேந்திரத்திலோ அல்லது திரிகோணத்திலோ அமர்ந்திருந்தாலும் அதனால் மதிப்பும் செல்வாக்கும் கொண்ட உன்னதமான ஸ்தானத்தை சாதகர் தமது வாழ்க்கையில் அடைய வைப்பர்.

சுபர் பார்வை அல்லது சேர்க்கை சுபர் வீடு என்று சுப பலம் பெற்ற ஒரு கிரகம் 10ஆம் வீட்டில் அமர்ந்திருந்து 10ஆம் வீட்டுக்குரிய கிரகமும் கேந்திரம் அல்லது திரிகோணமேறியிருந்தால் அச்சாதகர் முயன்று உயர் பதவியை அடைய அதுவே தகுந்த அடிப்படையாகும். சூரியனும் செவ்வாயும் கூடி 10ஆம் வீட்டிலமர்ந்து 10ஆம் வீட்டுக்குரிய கிரகமும் ஏதோவொரு வகையில் பலம் பெற்றிருந்தால் அச்சாதகர் வாழ்க்கையில் அடைய வேண்டிய யாவற்றையும் அடைந்து அனைவராலும் பாராட்டப்படவும் செய்வார். ஆனால், இந்தக் கிரகச் சேர்க்கையானது தனித்து இராமல் வேறும் பாவக்கிரகத்தின் சேர்க்கையைப் பெற்றிருந்தால் அது அச்சாதகரின் தந்தைக்கு நலக்குறைவையும் பிரிவையும் கொண்டுவரும். அல்லது சாதகரால் தந்தைக்கு யாதொரு சுகமும் கிடையாது எனக்கொள்ள வேண்டும்.

எந்தவொரு சாதகத்திலும் சனி 10ஆம் வீட்டிலிருந்தால் அச்சாதகர் எத்தகைய அடி மட்டத்தில் பிறந்து வளர்ந்தாலும் தமது கடுமையான உழைப்பின் மூலம் முன்னேற்றப்படிகளில் ஏறி முதல் நிலைக்கு வந்துவிடுவார்.

சரி. கட்டுரையை இவ்வளவோடு நிறுத்திவிட்டு சந்தேக நிவர்த்திக்காக என்னிடம் வந்துள்ள வாசகர்களின் கடிதங்களில் ஒன்றுக்கு மட்டும் இம்முறை பதிலளிக்க முயல்கிறேன்.

முதலில் வத்தளையிலிருந்து சண்முகம் என்பவரின் கடிதம். தனு லக்கினம். இலக்கினத்தில் சூரியனும் புதனும். இரண்டில் சுக்கிரனும் சந்திரனும். மூன்றில் கேது, 5இல் சனியும் செவ்வாயும், ஆறில் வியாழன், 9இல் ராகு. இது எனது சாதக கிரக நிலை. பல வருடங்களாக எனக்கு 'எக்ஸிமா' என்ற சரும நோய் பீடித்து வாட்டுகிறது. அவ்வப்போது வைத்தியம் செய்தால் குணமாகும். பிறகு கொஞ்ச நாளில் மறுபடியும் தலைதூக்கும். சொறியச் சொறியச் சொர்க்கம் தெரியும். சொறிந்து ஓய்ந்தால் சிதலும் இரத்தமும் வழிந்து கொண்டேயிருக்கும். வலி உயிர் போகும். இது குணமாகாதா? அதற்குரிய சாத்தியங்கள் என் சாதகத்தில் தென்படுகின்றனவா? அல்லது எனது சாவில் தான் இதற்கு முடிவா?

உங்கள் சாதகக் கிரக நிலைகளெல்லாம் ஒரு தொழு நோயாளிக்குரிய பொதுவான அடையாளங்களாகும். இருப்பினும் அதற்கான சில குறிப்பிட்ட கிரகங்கள் இடம் மாறியுள்ளதால் அந்த நோய் தவிர்க்கப்பட்டு எக்ஸிமா என்ற சருமநோயின் அளவோடு நிற்கிறீர்கள். இலக்கினாதிபதி ரோகத்தானத்தில் (6 ஆம் வீட்டில் மறைவு பெற, ரோகத் தானாதிபதியும் ஆயுட் தானாதிபதியும் இலக்கினத்தில் கூடி நின்றால் அத்தகையவருக்கு தொழுநோய் பீடிக்குமென்பது விதி.

உங்கள் சாதக விடயத்தில் அது கொஞ்சம் மாறிவிட்டது. தனுவின் இலக்கினாதிபதி வியாழன் ஆறில் மறைய, ஆறாம் வீட்டுக்குரிய சுக்கிரனும், ஆயுட்தானாதிபதி சந்திரனும் இலக்கினத்தில் அல்லாது அதற்கடுத்த வாக்குத் தானத்தில் மாறி நிற்க வாக்குத்தானாதிபதி சனி மேடத்தில் நீசமடைந்து கூடவே அவ்வீட்டுக்குரிய செவ்வாயும் அமர்ந்துள்ள காரணத்தால் நீச பங்கமும் பெறுகிறார். இந்தச்சனி சந்திர கேந்திரம் பெற்றிருப்பதும் சனியின் நீச பங்கத்திற்கு இன்னொரு காரணம். இந்த அமைப்பு காரணமாக பாரதூரமான எந்த நோயும் இதுவரை உங்களை பீடிக்கவில்லையென்று எண்ணுகிறேன்.

வெறும் எக்ஸிமா என்ற அளவில்தான் உங்கள் வியாதி இருக்கிறது. ஆங்கில வைத்தியம் எதுவும் இதற்குச் சரி வராது. சித்த ஆயுர்வேத சிகிச்சை முறைகளையே பின்பற்றுங்கள். நோய் முற்றாக குணமடையாவிடினும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

திருவோணம்



# படித்ததும் பகர்வதும் 173





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### 2023 இலிருந்து 2024க்கு!




2023ஆம் ஆண்டின் இறுதி நாளில் இருக்கின்றோம். இன்பம், துன்பம், சோதனை, வேதனை, சோகம், மகிழ்ச்சி என பல்வேறுபட்ட கலவையான உணர்வுகளை தந்து விட்டு 2023 ஆம் ஆண்டு எம்மை விட்டும் பிரியா விடை பெறுகிறது. ஒரு வருடம் முடிந்து மறு வருடம் பிறக்கின்ற வேளையில், எல்லோர் மனதிலும் ஏதோ ஒரு வகையிலான குதூகலம், புதிய உத்வேகம், புதிய உற்சாகம், புதிய நம்பிக்கை எனத் தோன்றுவது வழக்கம்.

202 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு தனித்துவமாக ஆரம்பிக்கின்றது. க.பொ.த. உயர்தர பரீட்சை வருடத்தின் முதல் வாரத்திலேயே இடம் பெறுகிறது. இதனால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாரிய பொறுப்புடனும், பெரிய எதிர்பார்புகளுடனும் வருடம் தொடங்கும் போதே பரீட்சை எழுதுகின்றனர். அதே வேளை ஏனைய மாணவர்கள் பாடசாலை விடுமுறையை மகிழ்வோடு அனுபவிக்கின்றனர்.

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் 'வெட்' (VAT) வரி 15% லிருந்து 18%மாக அதிகரிக்கப்பட்டிருப்பதாலும், 90க்கும் மேற்பட்ட புதிய பொருட்களுக்கு புதிதாக (VAT) வரி விதிக்கப்பட்டிருப்பதாலும் பொருட்களின் விலைகள் எந்த அளவு அதிகரிக்கும் என்ற அச்சத்தோடும், இதனால் ஏற்படப் போகின்ற பொருளாதார பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்ற கலவரத்துடனும் பெரும்பான்மையானோர் புது வருடத்தை ஒருவித அச்சத்தோடு எதிர்நோக்குகின்றனர்.

இலங்கையில் 2024ஆம் ஆண்டு, 'தேர்தல் ஆண்டு' என கருதப்படுவதால் அரசியல் களமும் சூடு பிடிக்கும் காலமாக இவ்வருடம் ஆரம்பிக்கின்றது. தேர்தலில் போட்டியிடுதல், கட்சிகளை புனரமைத்தல், ஏனைய கட்சிகளுடன் கூட்டணிகளை அமைத்தல், நடைபெறப் போகும் ஒவ்வொரு தேர்தலுக்கும் பொருத்தமான வேட்பாளர்களை தெரிவு செய்தல், தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான வியூகங்களை அமைத்து செயல்படுதல் போன்ற பல்வேறு விடயங்களில் அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் பரபரப்பாக இயங்க வேண்டிய வருடமாக இவ்வருடம் பிறக்கிறது.

இவ்வாறு பல்வேறு தரப்பினருக்கும் வெவ்வேறுபட்ட விதங்களில் புது வருடப் பிறப்பு அமைந்திருந்தாலும் அவர்கள் அனைவரும் தாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இத்தகைய நிலைமைகளை சந்தித்தே ஆக வேண்டும் என்பது தவிர்க்க முடியாத காலத்தின் கட்டாய நிலையாகும். இதுவே இயற்கையின் நியதியுமாகும்.

எனவே, இவற்றை எதிர்மறை சிந்தனைகளோடு எதிர்நோக்காமல், நேரிய நற் சிந்தனையோடு, நல்ல எதிர்பார்ப்புகளோடு புதுவருடத்தை சந்திக்கத் தயாராவதே புத்திசாலித்தனமாகும். எத்தகைய கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், பிரச்சினைகள், சோதனைகள் ஏற்பட்டாலும் அவற்றை உள உறுதியுடன் எதிர்கொண்டு வெற்றிவாகை சூடும் நல்லெண்ணம் எல்லோரிடத்திலும் ஏற்படுவது, எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கவும் நற்பலன்களை பெறவும் வழிவகுக்கும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு, 'நல்லதையே நினைத்து, நல்லதையே செய்தால் நன்மையே விளையும் என்ற நம்பிக்கையோடு சிந்தித்து செயலாற்ற வேண்டும். நல்ல விதையை நல்ல நிலத்தில் விதைத்தால் நல்ல அறுவடையே கிடைக்கும்' என்பதை நம்பி செயல்பட வேண்டும்.

பிறக்கின்ற புத்தாண்டு எல்லோர் வாழ்விலும் நன்மைகளைத் தாராளமாக தந்து வாழ்வில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோட, எல்லாம் வல்லோனை பிராத்திக்கின்றோம்!.

அனைவருக்கும் இதயம் நிறைந்த இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!


## புது வரவு

### ஐம்பது எழுத்து ஆளுமைகள்

பொன்விழா கண்ட இலக்கிய ஆளுமை, பன்னூலாசிரியர், கவிஞர் பாலமுனை பாறூக், தமிழ் உலகுக்கு தந்திருக்கும் தனித்துவமான ஒரு பொக்கிஷம் "ஐம்பது எழுத்து ஆளுமைகள்" நூல். எழுத்து உலகில் பொன்விழாவைத் தாண்டி, சிகரம் தொட்ட அரை நூறு எழுத்து உலக ஆளுமைகளை பலரும் அறியும் வகையில், எல்லோரும் பாராட்டும் வகையில் ஆவணப் படுத்தியிருக்கிறார்.

"ஐம்பது வருட இலக்கிய வாழ்வுக்கு வெளிச்சம் வைத்த கவிதைப் பயணத்தோடு இன்று எம் கைகளில் தவழும் கட்டுரை நூல் ஐம்பது மூத்த இலக்கிய ஆளுமைகளைத் தேடி அடையாளம் கண்டு இளைய தலைமுறையிடம் சேர்க்கும் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிறது." என்று இந்நூலைப் பற்றி சிலாகிக்கின்றார் வரலாற்று ஆய்வாளர் மாத்தளை ஜெஸீமா ஹமீட்.

இன்னும் சேர்க்கப்பட வேண்டிய ஒரு சிலர் இந்நூலில் இடம்பெறவில்லையே என ஆதங்கப்பட்டாலும், "தவிர்க்க முடியாத காரணங்களினால் முக்கியமான சிலர் விடுபட்டுள்ளனர் இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்கும்




போது அவர்களையும் எழுதி விட வேண்டும் என்ற விருப்பமே நெஞ்சில் நிறைந்திருக்கின்றது" என்ற நூலாசிரியரின் விளக்கம் ஆறுதல் அளிப்பதோடு, இதன் இரண்டாம் பாகம் விரைவாக வெளிவர வேண்டும் என்று பிரார்த்திக்கவும் தூண்டுகிறது.

இலங்கையில் எழுத்துலக, இலக்கிய, கலைத்துறை ஆளுமைகள் பற்றி ஏற்கனவே வெளிவந்துள்ள சுமார் இருபது நூல்களின் விபரங்களை, நூலாசிரியர் தன்னுரையில் குறிப்பிட்டிருப்பது, இத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும், துணையாகவும் இருக்குமென்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அத்துடன் இலங்கையின் முன்னோடி ஐம்பது எழுத்து ஆளுமைகளைப் பற்றி அறிந்துகொள்ளவும், அவற்றை ஒரே நூலாக பாதுகாக்கவும் ஒவ்வொரு வாசகருக்கும் இந்நூல் வாய்ப்பளிக்கிறது.

நூல்: ஐம்பது எழுத்து ஆளுமைகள், ஆசிரியர்: பாலமுனை பாறூக், பதிப்பு: அக்டோபர் 2023, பக்கங்கள்: XIV + 166, விலை: 1650/=, வெளியீடு: பர்ஹாத் பதிப்பகம், தொடர்புகளுக்கு: 0775367712

## சிந்தனை செய் மனமே

### கேட்காத காது!

அந்த மனைவிக்கு 'தன் கணவனுக்கு காது கேட்கவில்லையோ!' என்று திடீரென சந்தேகம் வந்தது. ஆனால் அதை கணவனிடம் நேரடியாக கேட்க அவளுக்கு தயக்கமாக இருந்தது. இந்த விடயத்தை தெளிவாக விளக்கி தனது உறவுக்கார டாக்டருக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

டாக்டரிடம் இருந்து பின்வருமாறு பதில் வந்தது.

"இருபது அடி தூரத்தில் இருந்து உங்கள் கணவரிடம் ஏதாவது பேசிப் பாருங்கள். கணவரின் காதில் அது விழவில்லை என்றால் சற்று நெருங்கி பதினைந்து அடி தூரத்தில் இருந்துப் பேசுங்கள். பின் பத்தடி, ஐந்தடி என்று குறைத்துக் கொண்டே நெருங்கிச் சென்று பேசுங்கள். எத்தனை அடி தூரத்தில் இருந்து பேசினால் கணவருக்கு காது கேட்கவில்லை எனத் தெரிந்தால் அதற்கேற்றபடி சிகிச்சை அளிக்கலாம்"

அதைப் படித்ததும் மனைவிக்கு ஒரே சந்தோசம். அடுத்த நாள் வீட்டு வாசலில் இருந்தபடியே உள்ளிருந்த கணவரிடம், "இன்று மகனுக்கு பாடசாலைக் கட்டணம் கட்டியாச்சா" என்று கேட்டாள். பதில் எதுவும் இல்லை.

பின்னர் வீட்டு வரவேற்பறையில் இருந்து அதே கேள்வியைக் கேட்டாள். அதற்கும் பதில் இல்லை, ஹாலில்



இருந்து கேட்டாள், சமையலறை வாசலில் இருந்தும், மீண்டும் மீண்டும் அருகே வந்தும் அதே கேள்வியைக் கேட்டாள்.

கணவரிடமிருந்து பதிலே இல்லை. 'போச்சு! இரண்டு ஸ்பீக்கர்களும் அவுட் ஆகிவிட்டது போல' என்று மனதில் உறுதி செய்து விட்டு கடைசி வாய்ப்பாக கணவனின் காது அருகே சென்று மிகச் சத்தமாக, "இன்னைக்கு பையனுக்கு பீஸ் கட்டியாச்சா?" என்று கேட்டாள்.

காதில் ஏதோ குண்டு வெடித்தது போல் இருந்தது கணவனுக்கு! கணவன் அவளைக் கோபமாக திரும்பிப் பார்த்து, "ஏன் டீ இப்படி கத்துற, நீ வாசல் கேட்டிலிருந்து, வரவேற்பறையிலிருந்து, ஹாலில் இருந்து, சமையலறை வாசலில் இருந்து நீ இதே கேள்வியைக் கேட்க, கேட்க நானும் கட்டியாச்சு, கட்டியாச்சுனு பதில் சொல்லிக்கிட்டே இருக்கேன், அது உன் காதுல விழலியா? காதுல என்ன பஞ்சு மூட்டையா வைச்சிருக்க...?" எனப் பொரிந்துத் தள்ளிவிட்டான்

மனைவி அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றாள். தவறு தன்னிடம் தான் இருக்கிறது என உணர்ந்து திகைத்து நின்றாள்.

**இப்படித்தான் பலர் பிரச்சினையைத் தம்மிடம் வைத்துக் கொண்டு, அது பிறரிடம் இருப்பதாக நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.**

## பாடம் தரும் பாடல்

### மனம் ஒரு குரங்கு

மனம் ஒரு குரங்கு மனித மனம் ஒரு குரங்கு
அதைத் தாவ விட்டால் தப்பி ஓட விட்டால் நம்மைப்
பாபத்தில் ஏற்றி விடும் அது பாசத்தில் தள்ளி விடும்

அடித்தாலும் அணைத்தாலும் வழிக்கு வராது
அப்படியே விட்டுவிட்டால் முடிவும் இராது
நயத்தாலும் பயத்தாலும் அடங்கி விடாது
நமக்குள்ளே இருந்து கொண்டு நன்மை தராது

வெள்ளிப் பணம் நாடி வாலாட்டம் போடும்
கள்ளத்தனம் செய்து வெறியாட்டம் ஆடும்
கள்ளைப் பாலாக்கிக் களியாட்டம் போடும்
கடவுள் இருப்பதைக் கருதாமல் ஓடும்

கலையின் பெயராலே காம வலை வீசும்
காசு வருமென்றால் மானம் விலை பேசும்
நிலையில் நிற்காமல் கிளை தோறும் தாவும்
நிம்மதியில்லாமல் அலை போல மோதும்

**இயற்றியவர்: வீ. சீதாராமன்**

## தகவல் களஞ்சியம்

### இலங்கையில் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சி!

உலகில் சனத்தொகை அதிகரித்து வருவதாக பரவலாக பேசப்படுகிறது. ஆனால் 'இலங்கையில் வருடாந்த பிறப்பு வீதம் கணிசமான அளவு குறைந்துள்ளது' என்ற அதிர்ச்சியான தகவல் சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் தொடர்பான தரவு அறிக்கையின்படி, வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி காணப்படுவது பற்றி இத்தகவலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2014ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாக, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதன்படி, இவ்வருடம் ஜூலை மாதம் 1ஆம் திகதி வரையான கடந்த ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 268,920 ஆக குறைந்துள்ளது. 2022ஆம் ஆண்டில் வருடாந்த பிறப்புகளின் எண்ணிக்கை 275,321 என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2021ஆம் ஆண்டில், பிறப்புகளின் எண்ணிக்கை 284,848 ஆகவும், 2020 இல் 03 லட்சத்திற்கும் அதிகமான பிறப்புகளும் பதிவாகியுள்ளன.

இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு பிறப்பு பதிவு 6,401 ஆல் குறைந்துள்ளதுடன், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 41,786 பிறப்புகள் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார கஷ்டங்கள், சமூகப் பிரச்சினைகள், பிறப்பு கட்டுப்பாட்டுத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுவதில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, கணவன், மனைவி இருவரும் தொழில் செய்தல், உலகளாவிய ரீதியில் பரவிய தொற்று நோய்கள் போன்ற பல காரணங்களால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது குறைந்துள்ளதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# காலணிகள் சொல்லுமா கொலைகாரன் யார் என்று! சிரஞ்சீவி கண்டுபிடிப்பாரா அதைத் துணிவோடு நின்று!

தனது கற்பனை,
சிரஞ்சீவியின் அனுபவத்திற்கு முன்னால் எடுபடவில்லை என்பதை,
சிந்துஜன் புரிந்து கொண்டான்.

"சரி, எப்படியோ செல்வராகவனை இந்த இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அதேநேரம் செல்வராகவனுக்கு நடக்க முடியாது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்! இன்னுமொரு விஷயம், நேற்றிரவு நாம் பார்த்த அந்த சைகை வெளிச்சத்தை நீங்கள் மறந்துவிட்டீர்களா, மாமா?"

"ம், ஆமாம் சிந்துஜன், நான் அதைக் கொஞ்சம் மறந்து தான் போய்விட்டேன், நீ இப்போது ஒரு காரியம் பண்ண வேண்டும்"

"சொல்லுங்கள்!"

"உடனே வீட்டுக்குப் போய் போலிசுக்குப் போன் பண்ணு, போலிஸ் வரும்வரை நான் இங்கேயே இருக்கிறேன்!"

வீட்டுக்குப் போக சிந்துஜன் திரும்பிய போது,
போலிஸ் சார்ஜண்ட் ஒருவர் அவ்வழியே மோட்டார் பைக்கில் செல்வதைப் பார்த்துவிட்டு,
கையை அசைத்து,
அவரை நிறுத்தினார்!
நடந்த விஷயங்களை அவரிடம் கூறினார்.

"என்னது! செல்வராகவனை சுட்டு விட்டார்களா!" என்று வியப்புடன் கேட்ட படியே,
பைக்கை நிறுத்தி விட்டு,
படாரென்று கீழே இறங்கினார் அந்த சார்ஜண்ட்!

"ம், கொஞ்சம் பொறுங்கள். எங்கள் இன்ஸ்பெக்டர் இப்போது இந்த வழியாகத்தான் வந்து கொண்டிருப்பார். அவரிடம் நாம் விஷயத்தைச் சொல்லுவோம்!"

அவர் கூறியதுபோல்,
சிறிது நேரத்தில்
அந்தப்பகுதி போலிஸ் இன்ஸ்பெக்டர்,
தனது மோட்டார் பைக்கில்
விரைந்து வந்துகொண்டிருந்தார்.
சார்ஜண்ட்டின் சைகை அறிந்து
இன்ஸ்பெக்டர் பைக்கை நிறுத்தினார்.
அவரிடம் நடந்ததை தெரிவித்தார் சார்ஜண்ட்.
அடுத்து,

மூவரும் கொலை நடந்திருந்த கஜு மரத்தின் அருகில் சென்றார்கள்!
அதேநேரம்,
மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த அந்தப் பகுதிக்குள் இருந்து,
வெளியே வந்தார் சிரஞ்சீவி,
அவர் கரங்களில்,
இரண்டு சப்பாத்துகள்!
அவரைப் பார்த்ததும்,
இன்ஸ்பெக்டர் அவருக்கு செல்யூட் அடித்தார்.

தனது மாமாவுக்கு கிடைக்கும் கௌரவத்தைப் பார்க்கும் போது,
சிந்துஜனுக்கு அது பெருமையாகவே இருந்தது!

"என்ன சேர்? காலையிலேயே துயரமான ஒரு காரியத்திற்குத்தான் கைவைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே"

"ஆமாம், மிகவும் கவலையான ஒரு காரியம்!" இன்ஸ்பெக்டர் சொன்னதை ஆமோதித்து பதில் சொன்னார் சிரஞ்சீவி.

"அதுசரி சேர், அவர்கள் ஏன் செல்வராகவனின் பிணத்தை மரக்கிளையில் கட்டிப் போட்டிருக்கிறார்கள்?' ஐயத்துடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இல்லை இன்ஸ்பெக்டர். அவர்கள் கட்டிப் போடவில்லை, கயிற்றை சும்மாதான் சுற்றியிருக்கிறார்கள். கிளையின் மீது பெலன்சில்தான் அவருடைய பிணம் இருக்கிறது. எந்த விதமான கால் தடயங்களின் அடையாளத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை!" என்றார் சிரஞ்சீவி.

இந்தப் பகுதியில் உள்ள நிலப்பகுதி மிகவும் கரடு முரடாகவே இருக்கிறது! அதனால்தான் காலடித் தடங்கள் எதுவும் பதிவாகவில்லை! அதோ அங்கே பாருங்கள். அந்த இடத்தில் சிலவேளை காலடித் தடயங்கள் பதிவாகி இருக்கலாம். அங்கே ஒரு நீரோட்டம் இருப்பதால் அந்த நிலத்தில் சகதியும் பதிந்திருக்கிறது! கொஞ்சம் தூரத்தில் இருந்த ஒரு பகுதியைக் காட்டியபடியே சொன்னார் இன்ஸ்பெக்டர்.

"ஓ. அப்படியா. அப்போ அந்தப் பகுதி நமக்கு கொஞ்சம் பயன்படலாம் என்று நினைக்கிறேன்!" என்று சொல்லியபடியே,
அந்த சப்பாத்துகளையும் எடுத்துக்கொண்டு,
மற்றவர்களுடன்,
நீரோட்டம் பாய்ந்து கொண்டிருந்த அந்தப் பகுதிக்குச் சென்றார்!
அப்படி செல்லும் போது,
அந்த சப்பாத்துகளை ஆராய்ந்து பார்த்த அவருக்கு,
அதன் அடிப்பாகத்தில்,
சகதி பதிந்திருப்பது தெரிந்தது!

"இந்த சப்பாத்துக்குச் சொந்தக்காரனை நம்மால் கண்டு பிடிக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கிறதா இன்ஸ்பெக்டர்?"

சிரஞ்சீவியின் கரங்களில் இருந்த காலணிகளை வாங்கிப் பார்த்த இன்ஸ்பெக்டர்,

"இந்த மாதிரியான சப்பாத்துக்கள் இந்தப் பகுதியில் உள்ள எல்லோரிடமும் இருக்கிறது. அதேநேரம் எல்லா சப்பாத்துக்



கடைகளிலும் கிடைக்கும். இது யாருடையது என்று கண்டுபிடிக்க முயற்சி செய்கிறேன்!" என்றார்.

"கொலை செய்தவர்கள் இந்த சப்பாத்துகளை விட்டுச் சென்றார்களா? அது யாராக இருந்தாலும் அவன் புதுமையான மனிதன்தான்! அவன் மிகவும் தந்திரசாலியாக இருக்கவேண்டும் இல்லையென்றால் அடி முட்டாளாக இருக்க வேண்டும். நன்றாகத் திட்டமிட்டே செய்யப்பட்ட ஒரு கொலை இது! இதில் பலரும் சம்பந்தப்பட்டிருக்கலாம்!" சிந்தித்தபடியே சொன்னார் இன்ஸ்பெக்டர்.

"பலரா?" என்று,
கேள்வியை உச்சரித்தார், இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பது ஒரு நபர் மட்டும்தான்!"

"இல்லை, அப்படி இருக்க வாய்ப்பில்லை சிரஞ்சீவி சேர்! இந்த செல்வராகவன் கடந்த சில மாதங்களாக முடக்கு வாதத்தால் முடங்கிப் போயிருந்தது உங்களுக்குத் தெரியாமல் கூட இருந்திருக்கலாம். சில தினங்களுக்கு முன்புதான் என்னிடமும் இதைப்பற்றிச் சொன்னார்!"

"அதைப்பற்றி எங்களுக்கும் தெரியும் இன்ஸ்பெக்டர். நானும் எனது மருகனும் அவருடைய விருந்தாளிகள்!"

"ஓ! அப்படியானால் நீங்கள் இருவரும் நேற்றிரவு அங்குதான் இருந்தீர்களா?" வியப்பை விழிகளில் காட்டினார் இன்ஸ்பெக்டர். சிந்தித்தபடியே,
தலையை மேலும் கீழுமாக ஆட்டினார் சிரஞ்சீவி!
நீரோட்டம் பாய்ந்த அந்தப் பகுதிக்கு வந்த அவர்கள்,
அந்தப் பகுதியை ஆராய்ந்து பார்த்தார்கள்!
நீரோட்டத்தின் நீர்த்துளிகள்,
அந்தப் பாதை தெளிந்திருந்ததால்,
தரை இலேசாக சகதியில் குளித்திருந்தது.
அதை உற்றுப் பார்த்தபோது,
மோட்டார் வாகனமொன்று வந்து போனதற்கான அடையாளம் தெரிந்தது.

"ஏன்? இன்ஸ்பெக்டர்? கார்களைப் பயன்படுத்துகிறவர்கள் யாராவது இந்தப் பகுதியில் இருக்கிறார்களா?"

"ம். எனக்குத் தெரிந்த வரையில் இந்தப் பகுதியில் உள்ளவர்களில் திருமதி மீனாவிடம் மட்டும் தான் கார் இருக்கிறது!"

"ஓ! எனக்கும் ஞாபகம் இருக்கிறது" என்று சொன்ன சிரஞ்சீவி,
சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு,
"இவள் எப்படிப்பட்ட பெண் இன்ஸ்பெக்டர்?" அவரைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டார் சிரஞ்சீவி!
அவள் ஒரு பணக்கார விதவை.
நல்ல வருமானம் வரக்கூடிய ஒரு எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரி.

"சரி. அடுத்ததாக காலடித் தடங்களைப் பார்ப்போம்!" என்று சொல்லியபடியே,
அங்கே பதிவாகியிருந்த காலடித் தடயங்களை ஆராய்ந்தார் சிரஞ்சீவி.
நிறையவே காலடித் தடங்கள் பதிவாகி இருந்தன.

"ம்.. இதோ இருக்கிறதே நான் தேடிய காலடித் தடம்" என்று சொல்லியபடியே,
"ஓர் இடத்தில் நின்றார்.
அது,
கென்வஸ் காலணி ஒன்றின் பதிவு!
எல்லோரும் அந்த இடத்திற்கு வந்து பார்த்தார்கள்.

"ம். என்ன இது! இடது கால் காலணியின் பதிவு மட்டும் தானே இருக்கிறது. வலதுகால் பதிவு எங்கே?" சுற்றும் முற்றும் பார்த்தார், சிரஞ்சீவி!

"அதோ அங்கே இருக்கிறது பாருங்கள்?" என்றார் இன்ஸ்பெக்டர்.
சுமார் ஐந்தடிகளுக்கு அப்பால்,
வலது காலின் தடம் பதிவாகியிருந்தது
வியப்புடன் திரும்பினார் சிரஞ்சீவி

"அகலக் கால் வைக்கும் உயர்ந்த மனிதன்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இல்லை இன்ஸ்பெக்டர், அவன் வேண்டுமென்றே இப்படி பாய்ந்திருக்கிறான். அங்கே பாருங்கள் முன்பகுதி தோண்டப்பட்டிருக்கும் விதத்தை. இப்போது இடது கால் பதிவையும் வலது கால் பதிவையும் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள். இந்தப் பாதையைப் பற்றி நன்றாகத் தெரிந்த ஒருவர்தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள்!"

அதேநேரம்,
"அதோ அங்கே பாருங்கள் என்ன அது?" என்று கேட்டபடியே,
சற்றுதொலைவில் இருந்த புல்தரையில் விழுந்து விடந்த,
ஒரு பொருளைக் காட்டிக் காட்டி,
சிந்துஜன் கேட்டதும்,
எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்!
அங்கே!

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 95

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | |
| | 05 | | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 | | 13 |
| 14 | 15 | | 16 | 17 | 18 |
| 19 | | | 20 | | |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) நடிப்புக்கலை தெரிந்தவள் இவள்.
(6) நம் அனைவருக்கும் அறிவுதான் பலம். அறிவைப் பெற வேண்டுமானால் மாணவர்களாகிய உங்களுக்கு அவசியமானது இது.
(9) கண்களிலிருந்து சுரக்கின்ற திரவம் இது. கண்களின் பாதுகாப்புக்காகவே இத்திரவம் சுரக்கின்றது.
(14) ஆண்மானை மாத்திரமன்றி ஓவியம், சிற்பம், சங்கீதம், நடனம் போன்றவற்றையும் குறிக்கின்ற பொதுச்சொல் (தலைகீழான சொல்).
(16) எமக்கெல்லாம் ஆண்டொன்று போனால், இதுவும் ஒன்று கூடிக்கொண்டே போகும்.
(21) யானையைப் பராமரிப்பவனை மாத்திரமன்றி, தேர் செலுத்துபவனையும் குறிக்கின்ற சொல். (தலைகீழான சொல்)
(24) நிறையுணவான திரவ ஆகாரம்.

### மேலிருந்து கீழ்

(2) ஒளி ஊடுருவக் கூடியதும், நொருங்கக் கூடியதுமான பதார்த்தம் இது. நமது அன்றாட பாவனைப் பொருட்கள் பலவற்றில் இது மூலப்பொருள். (தலைகீழான சொல்)
(4) இடப்பெயர்ச்சிக்கான உடலங்கம்.
(6) அனைத்திலும் வல்லமையுள்ளவரென்று தன்னைக் கருதுகின்ற அகங்காரம் இது. மமதை, ஆணவம், செருக்கு என்றெல்லாம் இச்சொல்லுக்கு வேறு ஒத்தசொற்கள் உள்ளன.
(8) தாவரத்தின் இனப்பெருக்கத்துக்கான அங்கம் இது. பெரும்பாலும் பழத்தின் உள்ளே காணப்படுவது.
(9) கலைகளில் வல்லவனை இப்பெயரால் குறிப்பிடலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 94

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. குளிர் 04. மான் 07. ஏழை 10. சபை
12. மழலை 15. கண் 18. குடை 20. ஆமை
23. மாலைதீவு

**மேலிருந்து கீழ்**

01. குப்பை 03. ஏர் 05. கலைஞன் 08. மழை
11. சண்டை 18. குலை 20. ஆலை 21. தீமை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 93

### பாராட்டு பெறுவோர்

**1. ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

**2. எம்.ஏ. ஆக்கியா ஸைனப்**
தரம் 07, தர்காநகர் அலிப் தேசிய பாடசாலை,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**3. எம்.ஆர். பதுரியா ஜெஹான்**
தரம் 04C, கொ/ கைரியா ஆரம்ப பாடசாலை,
தெமடகொட வீதி, கொழும்பு 09.

**4. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி, கம்பளை,
இல. 12/22A, இளவதுறை, கம்பளை.

**5. எம்.இசட்.எப். சைனப்**
தரம் 03B, கைரியா மகளிர் கல்லூரி,
இல. 200/4, ஆர் ரம்யா வீதி,
தெமட்டகொட, கொழும்பு 09.

**6. ஏ. அப்துர் ரஹ்மான்**
தரம் 05D, வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை,
இல. 27, மொஹமட் ஒழுங்கை, வெலிகம.


**7. எம்.ஐ. பாத்திமா**
தரம் 04B, முகர்ரமா சர்வதேச பாடசாலை,
போதிராஜ மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10

**8. நாதிர் நூரி**
தரம் 10, அல் அஸ்ஹா மத்திய கல்லூரி,
திஹாரிய.

**9. ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 95
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அறன் வலியுறுத்தல் : வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்...**

*தெளிவுரை :*
*ஒருவன் அறம் செய்ய தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தை செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிற...*

### அன்பார்ந்த மாணவச் செல்வங்களே!

முடிவற்ற சாத்தியங்கள், அற்புதமான கண்டுபிடிப்புகள் மற்றும் எண்ணற்ற வளர்ச்சிக்கான வாய்ப்புகள் நிறைந்த புத்தம் புதிய ஆண்டிற்கு உங்களை வரவேற்கிறோம். நீங்கள் இந்தப் பயணத்தைத் தொடங்கும்போது, ஆண்டு முழுவதும் உங்களுடன் எடுத்துச் செல்ல சில அறிவுரைகள்...

**தைரியமாக இருங்கள்**

இந்த ஆண்டு, புதிய அனுபவங்களை எதிர்கொள்ள தைரியமாக இருங்கள். உங்களுக்கு நீங்களே சவால் விடுத்துக் கொள்ளுங்கள். ஒரு புதிய செயலை முயற்சிப்பதாக இருந்தாலும், புதிய நண்பர்களை உருவாக்கினாலும் அல்லது நீங்கள் நம்புவதைப் பற்றி பேசினாலும் தைரியம் என்பது மிக முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**கருணையை வளர்த்துக் கொள்ளுங்கள்**

கருணை என்பது மந்திரம் போன்றது உலகத்தை சிறந்த இடமாக மாற்றும் சக்தி அதற்கு உண்டு. மற்றவர்களிடம் அன்பாக இருங்கள், உதவிக் கரம் கொடுங்கள், நீங்கள் எங்குச் சென்றாலும் நேர்மறையின் அலைகளை உருவாக்குங்கள். சிறிய கருணை செயல்கள் உங்களைச் சுற்றியுள்ள உலகில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**பெரிய கனவு, கடின உழைப்பு**

உங்கள் கனவுகள் இரவு வானத்தில் நட்சத்திரங்கள் போல் உள்ளன. அழகான, ஊக்கமளிக்கும், மற்றும் உங்கள் எல்லைக்குள் பெரிய கனவு காணுங்கள், இலக்குகளை நிர்ணயித்து, அந்த கனவுகளை நிஜமாக மாற்ற கடினமாக உழைக்கவும். நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு அடியும் உங்களை நட்சத்திரங்களுக்கு நெருக்கமாக்குகிறது.

**ஒவ்வொரு கணத்திலிருந்தும் கற்றுக்கொள்ளுங்கள்**


வாழ்க்கை என்பது பாடங்கள் நிறைந்த ஒரு பெரிய சாகசமாகும். ஒவ்வொரு தருணத்தையும், அது மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி, சவாலாக இருந்தாலும் சரி, அதை கற்றுக்கொள்வதற்கும் வளர்வதற்கும் ஒரு வாய்ப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொரு அனுபவமும் உங்களை அற்புதமான நபராக வடிவமைக்கிறது.

**உங்களை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்துங்கள்**

உங்களை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்துவது உங்கள் தனித்துவத்தை உலகத்துடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு அழகான வழியாகும். அது கலை, இசை, எழுத்து அல்லது வேறு எந்த வகையான வெளிப்பாடாக இருந்தாலும், உங்கள் படைப்பாற்றல் மற்றவர்களை ஊக்குவிக்கட்டும்.

நீங்கள் 2024 இல் காலடி எடுத்து வைக்கும் போது, முடிவில்லாத அன்பு, ஆதரவு மற்றும் சாத்தியக்கூறுகளால் நீங்கள் சூழப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இந்த ஆண்டு உங்களுடையது, அதை மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக மாற்ற உங்களுக்கு சக்தி உள்ளது.







## பாவோபாப் மரங்கள்



மடகாஸ்கர் தீவில் இருக்கும் Baobab (பாவோபாப்) மரங்கள் தான் உலகில் மிகப்பெரிய மரங்கள். உயரத்தில் அல்ல, சுற்றளவில். இந்த மரங்களின் உயரம் 15 - 98 அடி வரை இருக்கும்.

ஆனால், மரத்தின் சுற்றளவும் அதிகபட்சமாக 154 அடிகள் இருக்கும். இவற்றின் அதிசயம் என்னவென்றால், மரத்தின் அடிப்பகுதி மூங்கில் போல் வெற்றிடம் கொண்டதாகவும், அந்த வெற்றிடத்தில் நீர் நிறைந்தும் இருக்கும். ஒரு பெரிய Baobab மரத்தில் 1,20,000 லீற்றர்கள் நீர் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். கோடை காலங்களில் இந்த நீர் ஆவியாக மாறிவிடாமல் மரங்களே பாதுகாக்கின்றன.

மடகாஸ்கர் தீவிலிருக்கும் மக்கள் வறட்சிக் காலங்களில் இம்மரங்களிலிருக்கும் நீரை அருந்துகின்றனர். மரங்கள் இறந்துவிட்டால், அடிப்பகுதியைத் தண்ணீர் சேமித்து வைக்க உபயோகப்படுத்துகின்றனர்.

1000 வருடங்கள் பழமையான மரங்கள் இத்தீவில் இருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், அதை நிரூபிக்க ஆதாரம் ஏதும் இல்லை. ஏனென்றால், மரங்களின் வயதைக் கணக்கிடும் growth rings பாவோபாப் மரங்களில் கிடையாது.

## இவ்வார மழலை






**பாத்திமா மர்யம் பைஸல்,**
தரம் 03, மவுண்ட் கல்வரி சர்வதேச பாடசாலை, ஹப்புகல, காலி.




**ஹப்ஸா சப்ராஸ்,**
தரம் 08, கைரியா மகளிர் கல்லூரி, கொழும்பு.

## குமிழிகள் (Bubbles) எவ்வாறு உருவாகிறது?

*காற்றின் மூலக் கூறுகள் மிகவும் மென்மையானது. ஸ்ட்ரோவை (strow) சவர்க்கார நீரில் முக்கி எடுத்தால், சவர்க்காரத்தின் ஒட்டுதல் தன்மை காரணமாக நீரைப் படர வைத்து அது அந்த ஸ்ட்ரோவில் இருக்கும் மிகுதி இடங்களை நிரப்பிக் கொள்ளும்.*

*அவ்வாறு பரவியிருக்கும் சவர்க்கார நீரை நாம் ஊதும் போது காற்றின் மூலக்கூறுகள் அந்த வேகத்தில் முன்சென்று நீர்ப்பரப்பில் மோதி அதை முன்னால் தள்ளும்.*






ஆங்கிலத்தில் கண்டங்களின் பெயர்கள் அனைத்தும் அவை தொடங்கும் அதே எழுத்துடன் முடிவடைகின்றன.

## அன்றாட வாழ்வில் அறிவியலின் பயன்பாடு

இன்றைய யுகத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் பங்கின்றி வாழ்வே ஸ்தம்பித்து விடும் நிலை உள்ளது. அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அடியிலும் அறிவியலின் பயன் இடம்பெற்றுள்ளது. எனவே, நம் அறிவியல் கல்வி குழந்தைகளையும் இளைஞர்களையும் அறிவியல் விதிகளை, கண்டுபிடிப்புகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்த பயிற்றுவிக்க வேண்டும்.

**வீட்டில்**

மின்சாரம் இல்லாமல் இன்றைய வாழ்வை நினைத்துப் பார்க்க இயலாத நிலைக்கு நாம் பழகிவிட்டோம். வீட்டில் அன்றாட செயற்பாடுகள் அனைத்தும் மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாம் பயன்படுத்தும் சாதனங்களையும், அவற்றில் செயல்படும் அறிவியல் தத்துவங்களையும் இங்கு காண்போம்.

மின் விளக்குகள் (Electric Lamps), மின் சமிக்ஞைகள் (Elecric Signals) - மின் ஆற்றலை ஒளி ஆற்றலாக மாற்றுகின்றன.

வானொலியில் மின் ஆற்றல் ஒலி ஆற்றலாக மாற்றப்படுகிறது.

துணி துவைக்கும் இயந்திரம் (Washing Machine), மின்சார மோட்டார் (Electric Motor) மாவு அறைக்கும் இயந்திரம் (Wet Grinder) - மின் ஆற்றல் இயந்திர ஆற்றலாக மாற்றப்படுகிறது.

மின் சமைப்பான் (Electric Cooker), மின் சலவைப் பெட்டி, (Iron Box) - மின் ஆற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப்படுகிறது. இவை அனைத்தும் ஆற்றல் அழிவின்மை விதியின் அடிப்படையில் செயற்படுகின்றன.

நீராவி குளிர்விக்கப்படுவதால் நீர்மமாகிறது என்ற தத்துவத்தின் அடிப்படையில் குளிர் சாதனப் பெட்டி (Refrigerator) செயல்படுகிறது.

**பாடசாலையில்**

அறிவியல் வளர்ச்சியினை பள்ளியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளித்திட வேண்டியது அவசியம். ஏனெனில், அறிவியல் அறிவை பெருக்கிக் கொள்ளவும் அவற்றைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளவும் அவற்றின் சிறப்பைக் கண்டு வியந்து அதனைப் போல ஏதேனும் கண்டுபிடிப்பு நிகழ்த்த வேண்டும் என்ற ஊக்கத்தை தூண்டவும் முடியும்.

பாடசாலையில் உள்ள தொலைக்காட்சியில் கல்வி நிகழ்ச்சிகளைக் காண்கிறோம்.

இதில் மின் ஆற்றல் ஒளி மற்றும் ஒலி ஆற்றலாக மாற்றப்படுகிறது.

பாடசாலையில் நாம் பயன்படுத்தும் குடிநீர் சுத்திகரிப்பான் (Water Purifier) பிரித்து வடித்தல் என்ற விதியின் அடிப்படையில் செயற்படுகிறது.

ஆய்வகங்களில் பயன்படும், தூய நீர் கலன் (Distilled Water Plant) காய்ச்சி வடித்தல் தத்துவத்தில் செயற்படுகிறது.

ஒளிப்படக்கருவி (Camera) ஒளி பிரதிபலித்தல் தத்துவத்தில் செயற்படுகிறது.

நுண்ணோக்கி (Microscope) லென்ஸ் தத்துவத்தின் அடிப்படையில் செயற்பட்டு பொருட்களின் அளவைப் பெரிதாக்கிக் காட்டுகின்றது.

**பொது இடங்களில்**

பொதுமக்களும் அன்றாட வாழ்வில் பல இடங்களில் அறிவியல் கண்டுபிடிப்புகளின் பயன்களை அடைந்து வருகின்றனர். பெருகிவரும் மக்கள் தொகையின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அறிவியல் கருவிகளின் கண்டுபிடிப்புகளும் அதிகரித்துக் கொண்டு தான் இருக்கின்றன.

ட்ரக்டர் (Tractor), மிதிவண்டி (Bicycle) போன்றவை எளிய இயந்திரங்களின் தத்துவத்தில் செயற்படும் கூட்டு இயந்திரங்கள் ஆகும்.

லொரிகளிலும், ட்ரக்டர்களிலும் பெரிய பொருள்களை ஏற்றுவதில் சாய்தளத்தின் தத்துவம் பயன்படுகிறது.

கத்தரிக்கோல், இடுக்கி, பாக்கு வெட்டி, திறப்பான் போன்றவற்றில் நெம்புகோல் தத்துவங்கள் பயன்படுகின்றன.

மின் தூக்கி (Electric Lift), பளு தூக்கி (Crains), போன்றவற்றில் கப்பியின் தத்துவம் செயற்படுகிறது.

செய்தித் தொடர்புத் துறையில் (Telecommunication), ராடார் (Radar), சோனார் (Sonar) இவற்றின் தத்துவங்கள் வியக்கத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளன. இன்னும் பல்வேறு துறைகளில் பல்வேறு அதிநவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் இன்று மனிதனின் வேகத்தையும் செயற்பாடுகளையும் அதிகரித்துள்ளன. அறிவியல் வளர்ச்சி கட்டுக்கடங்காமல் சென்று கொண்டு இருக்கிறது. வணிக வளாகங்கள், பேருந்து, ரயில், விமான நிலையங்கள், சந்தைகள் போன்ற இடங்களில் அறிவியலின் பயன்பாடு மிக அதிகமே.

## மஞ்சரி விளையாட்டு

# வெற்றி, தோல்விகளுடன் முடிகிறது 2023

2023 ஆம் ஆண்டு என்பது இலங்கை விளையாட்டில் மைதானத்தை விடவும் மைதானத்திற்கு வெளியிலான பரபரப்புகள் தான் அதிகம். கால்பந்து மீது தடை, கிரிக்கெட்டின் மீது தடை, ஏன் ரக்பியில் கூட தடை என்று தடைகளின் ஆண்டு என்றும் குறிப்பிடலாம். இதற்கு அப்பால் சர்வதேச மட்டத்தில் தடகளப் போட்டிகளில் பெற்ற சில வெற்றிகள் ஆறுதல் அளித்தன. 2023 ஆம் ஆண்டில் இலங்கை விளையாட்டு எப்படி இருந்தது என்று பார்ப்போம்.

### கால்பந்து



இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தை தேர்வு செய்யும் தேர்தலுடனேயே 2023 ஆம் ஆண்டு ஆரம்பமானது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஸ்ரீ ரங்கா ஜனவரி மாதம் தலைவராக தெரிவானார். ஆனால் பதவியில் இருந்த தலைவர் ஜஸ்வர் உமர் போட்டியிட தடுக்கப்பட்டது.

இந்தக் குழப்பத்திற்கு மத்தியில் சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) அரசியல் தலையீடு பற்றி இலங்கை கால்பந்து சம்மேளனத்தை எச்சரிக்க கடைசியில் ஜனவரி நடுப்பகுதியாகும்போது இலங்கை கால்பந்து மீது தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடை இலங்கையின் ஒட்டு மொத்த கால்பந்து விளையாட்டையும் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

இலங்கை கால்பந்தின் இயக்கத்திற்கு பிஃபாவின் நிதி அடிப்படையானது. அது தடைப்பட்டதால் தேசிய மட்டத்திலும் கால்பந்து விளையாட்டு தோய்ந்து போனதோடு சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு கால்பந்து ஆட முடியாமல்போனது.

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சாஃப் சம்பியன்சிப் கால்பந்து தொடரில் இலங்கையால் ஆட முடியாமல் போனது. இலங்கை அணி இந்தத் தொடரில் பங்கேற்காதது வரலாற்றில் முதல் முறையாக இருந்தது. இலங்கை இல்லாத நிலையில் பிராந்தியத்திற்கு வெளியில் இருக்கும் குவைட் மற்றும் லெபனான் அணிகள் போட்டிக்கு அழைக்கப்பட்டன.

குவைட்டுக்கு எதிரான இறுதிப் போட்டியில் இந்திய அணி பெனால்டி ஷூட் அவுட் முறையில் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

தடையை நீக்கினாலே இலங்கை கால்பந்தால் நகர முடியும் என்ற நிலையில் தேர்வு செய்யப்பட்ட புதிய கால்பந்து நிர்வாகமும் முழுமையாக இயங்கவில்லை. எனவே பிஃபா சொன்ன போக்கில் செயல்படுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. கடைசியில் கால்பந்து இடைக்கால சபை ஒன்று நியமிக்கப்பட்டு புதிதாக தேர்தலை நடத்துவதற்கு ஒப்புக்கொண்டதை அடுத்தே இலங்கை கால்பந்து மீதான தடை நீக்கப்பட்டது.

ஏழு மாதங்கள் நீடித்த பிஃபாவின் தடை ஒகஸ்ட் 28 ஆம் திகதி நீக்கப்பட்டது. கொடுத்த வாக்குறுதிக்கு அமைய புதிய நிர்வாகத்திற்கான தேர்தலும் நடத்தப்பட்டது. செப்டெம்பர் 29 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஜஸ்வர் உமர் மீண்டும் தலைவராக நியமிக்கப்பட்டார்.

தடை நீக்கப்பட்டதால் 2026 உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதிகாண் ஆட்டத்தில் ஆடுவதற்கு இலங்கை கால்பந்து அணிக்கு வாய்ப்பு கிடைத்தது. யெமன் அணிக்கு எதிராகவே அந்த தகுதிகாண் போட்டிகளில் இலங்கை அணி களமிறங்கியது.


சவூதியில் ஒக்டோபர் 12 ஆம் திகதி நடைபெற்ற முதல் கட்டப் போட்டியில் யெமனிடம் 0–3 என்ற கோல் கணக்கில் தோல்வியை சந்தித்த இலங்கை, சொந்த மண்ணில் ஒக்டோபர் 17 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் கட்டப் போட்டியை 1–1 என்ற கோல் கணக்கில் சமன் செய்தது. எவ்வாறாயினும் 4–1 என்ற மொத்த கோல் வித்தியாசத்தில் யெமன் அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

கிட்டத்தட்ட ஓர் ஆண்டு காலமாக கால்பந்து வாடையே வீசாத இலங்கை அணி இந்தத் தகுதிகாண் சுற்றில் கௌரவமான பின்னடைவு ஒன்றை சந்தித்ததே பெரிய செய்தி. பிஃபா தரவரிசையில் இலங்கை தற்போது 204 ஆவது இடத்தில் உள்ளது. அதாவது இலங்கைக்கு பின்னால் ஏழு நாடுகள் தான் இருக்கின்றன. எனவே, 2024 இல் இலங்கை கால்பந்து பயணிக்க வேண்டிய தூரம் நீண்டது.



### கிரிக்கெட்







இலங்கை அணி 2023 ஆம் ஆண்டு ஆடிய மொத்த சர்வதேச போட்டிகளின் எண்ணிக்கை 44. அதிலே 24 ஆட்டங்களில் தோல்வியுற்ற இலங்கை அணி 19 போட்டிகளில் வெற்றியீட்டியது. அதாவது இந்த ஆண்டில் ஆடிய 6 டெஸ்ட்களில் 2 வெற்றி 4 தோல்விகளையும், 31 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 16 வெற்றி, 15 தோல்விகளையும், 7 டி20 சர்வதேச போட்டிகளில் ஒரு வெற்றி 5 தோல்விகளையும் பெற்றது.

ஒட்டுமொத்தத்தில் 2023 என்பது இலங்கை கிரிக்கெட்டுக்கு நல்லதாக இருக்கவில்லை. ஆண்டை ஆரம்பித்து இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 சர்வதேச தொடரை 2–1 என இழந்ததோடு பின்னர் நடந்த ஒருநாள் சர்வதேச தொடரை 0–3 என பறிகொடுத்தது. அதிலும் மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 390 ஓட்டங்களை விளாச, இலங்கை அணி 73 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்தத் தோல்விப் படலம் ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் முழுமையான கிரிக்கெட் தொடர் ஒன்றுக்காக நியூசிலாந்து சென்ற இலங்கை அணிக்கு தோல்விகள் தான் மிஞ்சின. அதிலும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 0–2 என இழந்ததால் இலங்கையால் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற முடியாமல்போனது.

இதனால் சிம்பாப்வேயில் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெற்ற உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் பங்கேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. என்றாலும் பல வீனமான அணிகள் பங்கேற்றதால் இலங்கைக்கு அந்தத் தொடரில் பெரிய சவாலாக இருக்கவில்லை. இறுதிப் போட்டியில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றியது.

என்றாலும் இடையில் வந்த லங்கா பிரீமியர் லீக் தொடர் இலங்கை அணிக்கு சாதகத்தை விடவும் பாதகமாகவே முடிந்தது. ஜூலை மாதத்தில் முதல் முறையாக லங்கா பிரீமியர் லீக் தொடருக்கு வீரர்கள் ஏலம் விடப்பட்டது. அதிக விலைபோன வீரராக இளம் வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்கவை ஜப்னா கிங்ஸ் அணி 92,000 டொலர்களுக்கு வாங்கியது.

ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற நான்காவது லங்கா பிரீமியர் லீக் தொடர் நல்லதே இடம்பெற்றது. பி லவ் கண்டி அணி சம்பியன் கிண்ணத்தையும் வென்றது. என்றாலும் இந்தத் தொடர் முடியும்போது இலங்கை அணியின் முன்னணி வீரர்களான வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர உட்பட பலருக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் ஒகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்ற ஆசிய கிண்ணம் மற்றும் அதனைத் தொடர்ந்து இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்த முன்னணி வீரர்களால் பங்கேற்க முடியாமல்போனது. ஆசிய கிண்ணத்தில் இலங்கை அணி இறுதிப் போட்டி வரை முன்னேறிய போதும் இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக 50 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியை சந்தித்தது அணியின் கட்டமைப்பை கேள்விக்குரியாக்கியது.



இது இந்தியாவில் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியிலும் தொடர்ந்தது. வீரர்களில் காயங்கள் ஒருபக்கம் இருக்க, இருக்கின்ற வீரர்களும் சோபிக்கத் தவறினார்கள். இதனால் குழுநிலையில் இலங்கை அணி மொத்தமாக ஆடிய 9 போட்டிகளில் 2 இல் மாத்திரமே வெற்றி பெற்று 9 ஆவது இடத்தை பிடித்ததோடு சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பையும் இழந்தது.

இந்தியாவின் ஆதிக்கத்துடன் உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்றபோதும் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் இந்திய அணி தோல்வியை சந்தித்தது.

இந்தத் தோல்வி இலங்கை கிரிக்கெட்டில் மைதானத்திற்குள் மாத்திரமன்றி அதற்கு வெளியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மே மாதம் நடந்த இலங்கை கிரிக்கெட் தேர்தலில் வெற்றியீட்டிய ஷம்மி சில்வா 2025 ஆம் ஆண்டு வரை தலைவராக இருக்க தேர்வு செய்யப்பட்டார்.

என்றாலும் நவம்பர் மாதத்தில் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை ஒன்றை விளையாட்டுத் துறை அமைச்சர் நியமிக்க, அதனை நீதிமன்றம் இடைநிறுத்த இந்தக் குழப்பம் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் இலங்கை கிரிக்கெட்டை இடைநிறுத்தும் அளவுக்குச் சென்றது. என்றாலும் இலங்கை அணி சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்கு ஐ.சி.சி அனுமதித்ததால் பெரும்பாலும் இந்தத் தடை ஓர் அடைய நடவடிக்கையாகவே இருந்து வருகிறது.

கிரிக்கெட்டை ஒட்டி இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் விளையாட்டில் எப்படித் தாக்கம் செலுத்தும் என்று இப்போது கணிக்க முடியாது. என்றாலும் உபுல் தரங்க தலைமையில் புதிய தேர்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதோடு இலங்கை கிரிக்கெட்டின் நிரந்தர ஆலோசகராக முன்னாள் அணித் தலைவர் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டிருக்கிறார்.

எனவே, 2024 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட்டில் அதிரடி மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

என்றாலும் சமரி அத்தப்பத்து தலைமையிலான இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி புதிய உச்சத்தைத் தொட்டது. ஜூன், ஜூலையில் நியூசிலாந்துக்கு எதிராக வரலாற்றில் முதல் முறை ஒருநாள் தொடர் ஒன்றை வென்றதோடு இங்கிலாந்து மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடர் ஒன்றை கைப்பற்றி வரலாறு படைத்தது. பின்னர் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டிவரை முன்னேறி தோற்றபோதும் வெள்ளிப் பதக்கத்தை வென்றது.



### தடகளம்

ஏப்ரல் மாதம் உஸ்பகிஸ்தானில் நடந்த 5ஆவது ஆசிய இளையோர் தடகள சம்பியன்சிப் போட்டியுடனேயே 2023 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இதில் இலங்கைக்கு இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன. உயரம் பாய்தலில் நிபுல் பெஹசரவும், கோலூன்றிப் பாய்தலில் துஷேன் சில்வாவும் அந்தப் பதக்கங்களை வென்றனர்.

தொடர்ந்து ஜூன் மாதத்தில் தென்கொரியாவில் ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி நடைபெற்றது. இதில் மத்திய தூர ஓட்ட வீராங்கனை தருஷி திசாநாயக்கவினால் இலங்கைக்கு இரண்டு தங்கங்களை வென்று கொடுக்க முடிந்தது. பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டபோட்டியில் தங்கம் வென்ற அவர் 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் தங்கம் வென்ற இலங்கை அணியில் இடம்பிடித்தார். தவிர அவர் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்றார்.

தருஷியின் பதக்க வேட்டை இத்தோடு முடியவில்லை. ஜூலை மாதம் தாய்லாந்தின் பேங்கொக் நகரில் நடைபெற்ற 25ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் 19 வயதான தருஷி பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் வென்றார்.

இதில் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் நதீஷா ராமநாயக்கவும் தங்கப் பதக்கத்தை வென்றதோடு ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் இலங்கை அணியால் தங்கம் வெல்ல முடிந்தது. இதன்மூலம் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கையால் நான்காவது இடத்தை பிடிக்க முடிந்தது.

2023 ஆம் ஆண்டில் இலங்கை பங்கேற்ற பிரமாண்ட விளையாட்டுப் போட்டியாக கடந்த செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் சீனாவின் ஹொன்சு நகரில் இடம்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியை குறிப்பிடலாம். அதிலும் தருஷியத்தை தான் குறிப்பிட வேண்டும். பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்ற அவர் 2002 ஆம் சுசந்திகா ஜயசிங்கவுக்கு பின் ஆசிய விளையாட்டுப் போட்டியின் தடகளப் போட்டியில் தங்கம் வென்ற இலங்கையின் முதலாமவரானார்.

இந்த விளையாட்டுப் போட்டியின் பெண்களுக்கான ஈட்டியெறிதலில் டில்ஹானி லொகுகே இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்று கொடுத்தார்.

தடகளப் போட்டிகளில் இலங்கைக்கு நம்பிக்கை தந்த ஆண்டாக இது இருந்தது. குறிப்பாக தருஷி மற்றும் ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்ட அணியினர் 2024 ஆம் ஆண்டின் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளனர். எனினும் இலங்கையின் மற்றொரு எதிர்பார்ப்பான யுபுன் அபேகோன் காயம் காரணமாக 2023 ஆம் ஆண்டு முக்கிய போட்டிகளில்



பங்கேற்கவில்லை.

2024 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் பாரிஸ் ஒலிம்பிக் போட்டி நடைபெறப்போகிறது. இந்தத் திறமைகள் இலங்கைக்கு ஒரு பதக்கமேனும் வென்று தரும் என்று எதிர்பார்க்கலாம்.

### ரக்பி

கால்பந்து, கிரிக்கெட் போன்று இலங்கை ரக்பிக்கும் உலக ரக்பி கௌன்சில் கடந்த மே மாதம் தடை விதித்தது. அதே அரசியல் தலையீடு என்ற காரணம் தான். இதனால் சர்வதேச போட்டிகளில் இலங்கை ரக்பி அணிக்கு தேசிய கொடியுடன் விளையாட முடியாமல்போனது.

அதிலும் தென்கொரியா மற்றும் தாய்லாந்தில் நடந்த ஆசிய ரக்பி செவன் போட்டி இலங்கைக்கு கை நழுவியது. சீனாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் கொடியின் கீழேயே பங்கேற்றது.

பல கட்ட பேச்சுவார்த்தைகள், சீர்திருத்தங்கள் என்று முன்னெடுக்கப்பட்ட முயற்சியை அடுத்து கடந்த நவம்பர் மாதத்தில் இந்தத் தடையை உலக ரக்பி நீக்கியது. இந்தத் தடை இலங்கை ரக்பிக்கும் இந்த ஆண்டு கெட்ட காலமாக மாறியது. அதில் இருந்து விடுபடுவது இலகுவானதாக இருக்காது.

### ஏனையவை

ஜனவரி மாதம் பங்களாதேஷில் நடந்த 23 வயதுக்கு உட்பட்டோருக்கான மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டியில் இலங்கை அணி மூன்றாம் இடத்தை பிடித்ததோடு ஜூன் மாதம் தென் கொரியாவில் நடந்த ஆசிய இளையோர் வலைப்பந்து போட்டியிலும் இலங்கை அணி 3ஆம் இடத்தை பிடித்தது.

ஆறு அடி ஒன்பது அங்குலம் உயரம் கொண்ட இலங்கை வலைப்பந்து நட்சத்திரமான தர்ஜினி சிவலிங்கம் கடந்த ஒகஸ்டில் சர்வதேச வலைப்பந்து போட்டிகளில் தனது ஓய்வை அறிவித்தது பெரும் இழப்பு. அதேபோன்று பெட்மின்டன் நட்சத்திரம் நிலுக கருணாரத்னவும் செப்டெம்பர் மாதத்தில் ஓய்வு பெற்றார்.

**எஸ்.பிர்தௌஸ்...**



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 டிசம்பர் 31 ஞாயிற்றுக்கிழமை
அருந்ததியின் மணப்பெண்
அலங்காரக் கண்காட்சி

# விழுங்க வந்த பாம்பை கடித்துக் கொன்ற ஆடவர்

பிலிப்பைன்ஸில் தன்னை விழுங்க வந்த பத்து அடி மலைப் பாம்பை கடித்துக் கொன்ற ஆடவர், அந்தப் பாம்பை ஊர் மக்களுக்கு உண்ணக் கொடுத்திருக்கிறார்.

போஹோல் வட்டாரத்தில் போலியுலியோ அலெரியா என்ற 48 வயது ஆடவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது மலைப்பாம்பு குறுக்கே வந்தது.

அது அவரின் இடுப்புப் பகுதியைச் சுற்றி நெருக்க ஆரம்பித்தது. உயிருக்கு அஞ்சிய போலியுலியோ எப்படியாவது விடுபட எண்ணினார். அவர் பாம்பின் கழுத்தைக் கடித்தார்.

சுமார் 10 நிமிடப் போராட்டத்துக்குப் பின்னர் மலைப்பாம்பு போலியுலியோவை விட்டது. அந்தப் பாம்பு அங்கேயே இறந்தது.

உடனடியாக மருத்துவமனைக்குச் சென்ற போலியுலியோ முக்கிய ரத்தக் குழாய்கள் ஏதும் பாதிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்டார்.

அவர் பாம்பின் உடலை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினார். கிராம மக்கள் பாம்பை வாட்டிச் சாப்பிட்டனர். பிலிப்பைன்ஸின் சில பகுதிகளில் பாம்புகள் உணவாகச் சாப்பிடப்படுவதுண்டு.





## நேர்முகப்பரீட்சைக்கு வந்தவரை நேர்காணல் செய்த பி.பி.சி

பி.பி.சி தொலைக்காட்சி நிறுவனத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு வந்த ஒருவரை அந்த நிறுவனம் தொழில்நுட்ப ஊடகவியலாளர் என நினைத்து நேரடி ஒளிபரப்பில் பேட்டி கண்டு சொதப்பிய கதை பிரபலமானது.

காய் கோமா 2006 மே 8 ஆம் திகதி மேற்கு லண்டனில் உள்ள பி.பி.சி. தொலைக்காட்சி நிலையத்தின் வரவேற்பு அறையில், தகவல் தொழில்நுட்ப உதவியாளர் வேலைக்கு நேர்முகப்பரீட்சைக்கு காத்திருந்தார். அந்த நேரம் பார்த்து காய் கென்யி என்ற தொழில்நுட்ப நிபுணர் ஒருவர் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றுக்காக வந்திருந்தார்.

அப்பிள் கணினியின் வழக்கு விசாரணை ஒன்று தொடர்பில் கருத்தை கேட்கவே காய் கென்யியை பி.பி.சி. அழைத்திருந்தது. அப்போது காய் கென்யியும் வரவேற்பு அறையில் ஒருபக்கம் காத்திருந்தார். என்றாலும் இருவரின் முதல் பெயரும் ஒரே மாதிரி இருப்பதால் காய் கோமா நேர்காணலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கோமா ஸ்டுடியோவுக்கு அழைத்துச் செல்லும் முன் ஒப்பனை செய்யப்பட்டார். அது அவருக்கு புதிதாக இருந்தபோதும், என்னதான் நடக்கிறது




என்று பார்ப்போமே என்று காத்திருந்தார். கடைசியில் அவர் கெமராவுக்கு முன் நிறுத்தப்பட்டார். தொகுப்பாளர் காய் கென்யியின் பெயரை கூறியபோதுதான் காய் கோமாவுக்கு குழப்பம் புரிந்தது.

நேரடி ஒளிபரப்பிலேயே அவரது கண்கள் மேலும் கீழும் சென்றது அதனை பார்த்துக் கொண்டிருந்த அனைவருக்கும் புரிந்தது. பின்னர் ஆப்பிள் வழக்கு பற்றி அவரிடம் தொகுப்பாளர் கருத்துக் கேட்டபோது, ஒன்றும் புரியாத அவர் தெரிந்த வகையில் பதில் கூறி தப்பிக் கொண்டார்.

உண்மை புரிந்த தொகுப்பாளரும் விரைவாக பேட்டியை முடித்துக் கொண்டார். பின்னர் காய் கோமா தான் வந்த நேர்முகப்பரீட்சைக்கு தோன்றியபோதும் வேலைக்கு எடுபடவில்லை.

## 65 ஆண்டுகளின் பின் கிடைத்த பணப்பை

அமெரிக்காவில் 1950களில் தொலைக்கப்பட்ட பணப்பை 65 ஆண்டுகளுக்குப் பின் திரையரங்கு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜோர்ஜியா மாநிலத்தின் அட்லான்டா நகரில் உள்ள பிளாஸா தியேட்டர் திரையிரங்கின் கழிப்பறையில் பணப்பை இருந்தது. கழிப்பறையில் புதுப்பிப்புப் பணிகள் நடத்தப்பட்டபோது சுவர் ஒன்று இடிக்கப்பட்டது. அதன் பின்னால் பழைய அலுமாரியில் சிவப்புப் பணப்பை இருந்தது.

பணப்பையில் அதிர்ஷ்டக்குலுக்குச் சீட்டு, கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள், கடன்பற்று அட்டைகள் முதலியவை இருந்தன. உரிம அட்டை ஒன்றில் பணப்பையின் சொந்தக்காரருடைய பெயர் இருந்தது.



திரையரங்கின் உரிமையாளர்கள் இணையம் வழி அவரின் மகளைக் கண்டுபிடித்திருக்கிறார். 71 வயதான மகள் அவரின் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் ஆகியோருடன் பணப்பையைப் பெற்றுக் கொண்டார்.

தற்போது குடும்பத்தின் வரலாற்றுப் புதையலாக உருமாறியுள்ள பணப்பை ஒரு



விதத்தில் தாயாரை மீண்டும் கண்முன் கொண்டுவந்ததாக மகள் கூறியிருக்கிறார்.

## பாப்ரசரின் விசித்திர வழக்கு

கி.பி. 891 தொடக்கம் 896 வரை பாப்பரசராக இருந்த போர்மோசஸ் விசித்திரமான வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்தார். அவர் பாப்பரசராக இருந்த காலம் என்பது ரோமானிய திருச்சபை பெரும் பிளவை சந்தித்த காலமாக இருந்தது. அது அவரது மரணத்தின் பின்னரும் துரத்தியது.

பாப்பரசர் மரணித்து ஏழு மாதங்கள் கடந்திருந்தபோது, பொய்ச் சாட்சியம் அளித்ததாகவும், சட்டவிரோதமாக பாப்பரசர் பதவியில் இணைந்ததாகவும், ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மறைமாவட்டங்களுக்கு சட்டவிரோதமாக தலைமை வகித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டார்.

புதிய பாப்பரசர் ஆறாவது ஸ்டீபன் வழக்கு விசாரணைக்கு உத்தரவிட்டார். வழக்கு விசாரணையை எதிர்கொள்ள அடக்கம் செய்யப்பட்ட போர்மோசஸின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. அவரது உடலுக்கு பாப்பரசர் போன்று ஆடை அணிவிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்காக நீதி மன்றத்தில் அவரது உடல் அமர வைக்கப்பட்டது. வழக்கு விசாரணைகளும் நடத்தப்பது. கடைசியில் பாப்பரசர் போர்மோசஸ் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு அவரது பாப்பரசர் பதவியும் ரத்துச் செய்யப்பட்டது.





ஸிசா
(சப்ரான் – ரிம்ஸானா)

# அருந்ததி இதழின் வெளியீட்டு விழா




34 வது அருந்ததி இதழின் வெளியீட்டு விழா கொழும்பு கலதாரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. மணப் பெண் அலங்கார காட்சி மற்றும் திருமண கண்காட்சி நிகழ்வில் இது வெளி யிட்டு வைக்கப்பட்டது. மலரின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் ஆலோசகர் ஹாஷிம் உமர் பெற்றுக் கொண்டார். இவ் ஆட்டப்ப டத்தை அலங்கரித்தவர் க்ளவுட் நைன் உரிமையாளர் ஜானுபா அசோக்குமார். புகைப்படம் எடுத்தவர் ஜெயன் கிரா பிக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஜெயந்தி ரன், ஆடை வடிவமைத்தவர் சாயிஷா நிறுவனத்தைச் சேர்ந்த சிந்துஜா.



கல்யாண புரோக்கர் : "உங்க அப்பா பெரிய ஒலிம்பிக் ரசிகரா இருக்க லாம். அதுக்காக மூத்த மகளுக்கு தங்கத்துலயும், ரெண்டாவது மக ளுக்கு வெள்ளிலயும், மூணாவது மகளுக்கு வெண்கலத்துலயும் நகை செஞ்சு போடறதாச் சொல்றது நியா மில்லை சார்....

ராணி : சென்சார் போர்டுல வேலை செய்ய றவரைக் கல்யாணம் செய்துகிட்டது தப்பாப் போச்சு..

வேணி : ஏன்?

ராணி : படுக்கையறையே இல்லாம வீடு கட்டி யிருக்காரு..





திருடன்: டேய், நான் திருடன்... மரியாதையா எடு பர்ஸை

பொலிஸ்: டேய், நான் பொலிஸ் காரன்... மரியாதையா கொடு லஞ்சம்

தொண்டர் : கவர் னர் பதவிக்கு உங்க பெயர் அடிபடுது தலைவரே, நீங்க என் னடான்னா, ரொம்ப சோகமா இருக்குறீங்கலே தலைவரே?

தலைவர் : இந்த





நர்ஸ் 1 : ஏன் எல்லாப் பேஷண்டுகளும் ரொம்ப ஜாலியா இருக்காங்க ?

நர்ஸ் 2 : டாக்டர்கள் ஸ்டிரைக் பண்ணப் போறாங் களாம். அதனால, ஒப்பரே ஷனை தள்ளி வச்சுட்டாங் களாம். அதான்.....



பப்பு தன்னுடைய இரண்டு நண்பர்களு டன் மோட்டார் சைக்கிளில் வீதியில் சென்று கொண்டிருந்தான். டிராபிக் பொலிஸ் கை நீட்டி, நிறுத்த சைகை செய்தார். அப்போது,

பப்பு: கொஞ்சமாவது அறிவிருக்கா? ஏற்கெ னவே 3 பேர் இருக்கோம். நாலாவதா நீங்க எங்க உக்காருவீங்க?



பாபு : இரண்டும் இரண்டும் சேர்ந்தால் எவ்வளவு?

கோபு : நான்கு!

பாபு : இல்லை / 22.

மாணவன் : ஸார் நான் யூரின் பாஸ்பண்ணிட்டு வர்றேன்.

பையன் : நிச்சயம் பண்ணவா ?

பெண் : என் பின்னாடியே வர் றிங்களே அதுக்கு செக்யூரிட்டி சம் பளம் வாங்கதான்.

ஒருவர் : டாக்டர் செலவு மட்டும் எனக்கு மாசம் ஐந்நூறு ரூபாய் ஆகுது

மற்றொருவர் : டாக் டரோட செலவைப் போய் நீங்க ஏன் பண்றீங்க?





ரமணன் : என்னோட நாலு தம் பிங்க குளத்திலே விழுந்துட்டாங்க. ஒருத்தன் தலைமுடி மட்டும் தான் நனைஞ்சது.

முராரி : அப்ப டியா! மத்த மூணு பேருக்கும் நீச்சல் தெரியுமா?

ரமணன் : இல்லை. அவங்கள் ளாம் மொட்டை.



# மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் திறந்து வைப்பு!









கிழக்கு மாகாண வரலாற்றில் மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. டச்பே (DUCHBAY) கடற்கரையில் இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த 24ஆம் திகதி இரவு இடம்பெற்ற விசேட சமய ஆராதனை நிகழ்வுகளில் கிழக்கு மாகாண அளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டிருந்தார். டச்பே (DUCHBAY) கடற்கரையில் அமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரத்தின் முன்னிலையில் இதுவரை 10ஆயிரத்துக்கும் அதிகமானோர் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டுள்ளனர்.

# முஸ்லிம் சமூகம் சிவில் நிர்வாக அதிகாரிகளை அதிகம் உருவாக்க வேண்டும்





இனவாத சிந்தனைகள் இல்லாத இலங்கையர்களாக நமது பிள்ளைகளை வளர்த்து நாட்டுக்கு உயரிய சேவை செய்பவர்களாக, நாட்டை உயிர்ப்புடன் நேசிப்பவர்களாக எமது எதிர்கால சந்ததிகளை உருவாக்க வேண்டும்.

நாட்டினதும், சமூகத்தினதும் நலனுக்காக முஸ்லிம் சமூகம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளை அதிகதிகம் உருவாக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது என கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல் மீஸான் பௌண்டேஷன் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா தெரிவித்தார்.

காரைதீவு பிரதேசத்தின் மூத்த பாலர் பாடசாலைகளில் ஒன்றான மாவடிப்பள்ளி அல் மதீனா பாலர் பாடசாலை மாணவர்களின் பச்சை விழா நிகழ்வுகள் (25) பாடசாலை மண்டபத்தில் பாலர் பாடசாலை முதல்வர் எம்.எச்.எம். அஸ்வர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஐ.தே.கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரும், கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் அதிகாரசபை பணிப்பாளர் சபை உறுப்பினருமான தொழிலதிபர் யூ.எல். ஆதம்லெப்பை பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மேலும் விசேட அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலி, டலண்ட் பிளஸ் நிறுவுனர் அல்ஹாபிழ் ஆர்.எம். சில்ஹான், அல் மீஸான் பௌண்டஷன் இளைஞர் விவகார செயலாளர் ஜெ.எம். ஹசான், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல். வஹாப் உட்பட ஆசிரியைகள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்முஸ்லிம் சமூகம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளை அதிகதிகம் உருவாக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது.

# கடல் கடந்து போயும் கலை, இலக்கிய துறைகளில் ஈடுபாடு காட்டிவரும் சிந்தனைச் செல்வர் எஸ். ரி. நாதன்



இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்கள் ஐரோப்பிய நாடுகளில் இன்று வாழ்ந்து வருவது மட்டுமல்ல கலை, இலக்கியத் துறைகளிலும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அது போல் தமிழ் மொழியை வளர்ப்பதிலும் தீவிர பங்களிப்பு செலுத்தி வருகிறார்கள். அவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்களில் ஒருவர்தான் சிந்தனைச் செல்வர் எஸ். ரி. நாதன். இவர் இலங்கையிலிருந்து பல்வேறு நாடுகளுக்கு சென்றுள்ளார். இறுதியாக கனடாவில் நிரந்தரமாக தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் தற்போது அங்கேயே வாழ்ந்து வருகிறார். இவரது முழுப் பெயர் செல்லத்துரை தவநாதன்.





இவர் கனடாவில் இரு நூல்களை வெளியிட்டு இருக்கிறார். இந்த இரு நூல்கள் கவிதை அல்லது சிறுகதைகள் நூலோ இல்லை. இரண்டுமே அறிவாற்றலை வளர்க்கக்கூடிய இரு நூல்கள். இரண்டும் கட்டுரை நூல்கள்.

இந்த நூல்களின் பெயர்கள் "உறங்கும் உண்மைகள்". இந்த உறங்கும் உண்மைகள் பாகம் 1, பாகம் 2 என இரு நூல்கள்.

முதலாம் பாகம், இயற்கை, உயிர், வாழ்க்கை, சுதந்திரம் என பல்வேறு தொனிப்பொருள்களைக் கொண்ட நூல். மற்றையது குடும்பம், அரசியல், சட்டம், மகிழ்ச்சி என்ற தலைப்புகளைக் கொண்டு கட்டுரைகள் வடிக்கப்பட்ட நூல். இரு நூல்களும் வாழ்வின் தத்துவங்களை மற்றும் வாழ்க்கைக்கு அவசியமான விடயங்களை கற்றுத் தருகின்ற இருநூல்கள்.

கொழும்பு புனித ஜோசப் கல்லூரி, மட்டக்களப்பு வெஸ்லி கல்லூரி மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள சில தனியார் கல்லூரிகளில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றியவர் இவர்.

இவர் பத்திரிகைகளில் பல்வேறு வகையான கட்டுரைகளை எழுதி வெளியிட்டு வந்திருக்கிறார்.



காலத்தின் கோலத்தால் இலங்கை மண்ணை விட்டுச் சென்றவர் அங்கும் தன்னுடைய இலக்கிய பணிகளையும் கலைப் பணிகளையும் முன்னெடுத்து வந்துள்ளார்.

இலங்கையில் ஆசிரியராக வெளியேறிச் சென்றவர், அங்கு போயும் வானொலியில் செய்திகள் வாசித்துள்ளார், நிகழ்ச்சிகளை தயாரித்து அளித்துள்ளார். வானொலி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியுள்ளார். இந்த கலைப் பணிகளை இன்றும் தொடர்ந்து ஆற்றி வருகிறார்.

இவர் இந்த இரு நூல்களையும் 2014, 2016 ஆம் ஆண்டுகளில் கனடாவில் வெளியிட்டிருக்கிறார். முதலாவது நூலை கனடாவில் வெளியிட்டதன் மூலம் இவருக்கு 10ஆயிரம் டொலர் கிடைத்துள்ளது. இவர் இந்த பணத்தைக் கொண்டு இலங்கையிலுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அதன் பின் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இவர், இலங்கையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இந்த இரு நூல்களினதும் அறிமுக விழாவை நடத்தினார். இந்த இரு நூல்களின் அறிமுக விழாவில் இவர் மற்றுமொரு புரட்சிகரமான செயலை செய்துள்ளார். இலங்கையில் இதுவரை எத்தனையோ நூல் வெளியீட்டு விழாக்கள் நடந்துள்ளன. எல்லாருமே தமிழ் மொழியில் உரையாற்றி தமிழ் மொழியில் மட்டும் தான் நூல் வெளியீட்டு விழாக்களை நடத்தி வந்துள்ளார்கள். இவர் ஏனைய மதத்தவர்களுக்கும் இனத்தவர்களுக்கும் மதிப்பளித்து தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் இந்த அறிமுக விழாவை நடத்தியுள்ளார். 80 வறிய குடும்பங்களுக்கு உதவி செய்துள்ளார்.





கவிதைகள் எழுதும் ஆற்றலும் இவருக்கு உண்டு. இவர் முதன் முதல் எழுதியது ஒரு புரட்சிகரமான ஒரு கவிதையை. அதனைத் தொடர்ந்து காதல் கவிதைகளும் வற்றாத நதியைப் போல் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கின. இவர் முதன் முதலில் ஈழநாடு பத்திரிகையில் தான் எழுதியுள்ளார். பின்தான் உதயன், தினகரன் பத்திரிகையில் எழுதியுள்ளார். இவர் தினகரன் பத்திரிகையில் கவிதைகள், சிறுகதைகள் விரும்பி வாசித்துள்ளார். ஏன் சிறுகதைகளை விரும்பி வாசிக்கிறீங்கள் என்று கேட்டதற்கு, தினகரனில் பிரசுரமாகும் சிறுகதைகளில் முடிவுகள் புதுமையானதாக இருக்கும். அல்லது எதிர்பாராத முடிவுகளாக இருக்கும்.

# பெண்கள் நலிந்தவர்களாகவே பார்க்கப்படுகிறார்கள் நிமிர்ந்தெழ வேண்டும் என்பதே என் கருத்து

## ஹுமைரா அல் அமீன்



**கே: உங்களைப் பற்றிய தகவல்களுடன் நேர்காணலை ஆரம்பிக்கலாம்.**

என்னுடைய முழுப் பெயர் ஹுமைரா அபுசாலி.

ஹுமைரா அல் அமீன் என்ற பெயரில் எழுதி வருகிறேன். பதுளை மைனா மற்றும் பாரதிக் கண்ணம்மா என்ற புனைப் பெயர்களிலும் எழுதியிருக்கிறேன். தந்தை பெயர் அபுசாலி. தாயார் எஹியா உம்மா.

கணவர் பெயர் அல் அமீன். இரண்டு ஆண் குழந்தைகள். மூத்தவர் சாதாரண தரத்திலும் இளையவர் தரம் எட்டிலும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில் நீதிமன்ற உரை/ மொழிபெயர்ப்பாளராகவும் நீதி அமைச்சின் கீழ் சத்திய பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றுகிறேன்.

**கே: உங்களது ஆரம்ப களம் எதுவாக அமைந்தது?**

பாடசாலைக் காலத்தில் கவிதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டு பல சான்றிதழ்களும் பரிசில்களும் பெற்றுள்ளதோடு பாடல்கள் இயற்றிப் பாடியும், நாடகங்கள் எழுதி நடித்தும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிச் சான்றிதழ்கள் பெற்றிருக்கிருக்கிறேன்.

ஆனால் 2000ம் வருடம் தான் முதன் முதலாக எனது கவிதை இலங்கை வானொலி தென்றல் அலைவரிசையின் அந்தி நேரச் சிந்துகளில் சிரேஷ்ட அறிவிப்பாளர் புர்கான் பீ இப்திகாரால் வாசிக்கப்பட்டது. 2003 இல் நான் எழுதிய "சந்தியா" என்ற சிறுகதை மித்திரன் வாரமலரில் பிரசுரமானது.

**கே: நீதிமன்ற உரை/ மொழிபெயர்ப்பாளராக இருக்கிறீர்கள். அதனைப்பற்றிச் சொல்லுங்கள்.**

பொறுப்புவாய்ந்த ஒரு பணி. ஒவ்வொரு நாளும் பல அனுபவங்கள். பல விதமான மனிதர்களை அவர்களது உணர்வுகளைப் படிக்க முடிகிறது. வாழ்க்கைக்கு பல அனுபவங்களைப் பெற முடிகிறது. அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களையும் அதிகாரம் செய்யக்கூடிய பணி.. அதுவும் ஒரு தன்னம்பிக்கையான உணர்வைத் தருகிறது.

**கே: மொழிபெயர்ப்பு ஊடகமாக இருக்கிறீர்கள். அது ஒரு கலை எனலாம். நாம் எடுத்துக் கொண்ட மூலமொழியில் தெளிவும் மொழிபெயர்ப்பை கையாளும் ஆற்றலும் இருக்க வேண்டும். இது ஒரு சவால் மிகுந்த துறையா?**

நிச்சயமாக. சவால் மிகுந்த ஒரு துறை தான். ஏககாலத்தில் பிழையின்றி மொழி பெயர்க்க வேண்டும். அத்தோடு நீதிமன்றம் என்பதால் பொறுப்போடும் கவனமாகவும் இருக்கவும் வேண்டும். மொழிபெயர்ப்பானது தீர்ப்புகளிலும் செல்வாக்கு செலுத்தும் என்பதால், ஒவ்வொரு சொல்லின் கருத்தும் சரியாகவும் சாட்சியத்தை மாற்றிவிடாமலும் இருக்க வேண்டும். மொழிகளின் மீதுள்ள பற்றும் தொழில் மீது எனக்கிருக்கும் விருப்பும் காரணமாக இந்தப் பணியை மகிழ்வோடு தொடர்கிறேன்.

**கே: இலக்கியத்துடனான பங்களிப்பு மற்றும் தொடர்பினைப் பற்றி கூறுங்கள்.**

ஆரம்பத்தில் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் பத்திரிகைகளில் என் கவிதை ஆக்கங்கள் பிரசுரமாகியும் ஒலிபரப்பாகியுமிருக்கின்றன.

திருமணத்தின் பின் குழந்தைகளின் கடமைகளோடு எழுத்து முற்றாக நின்று போனது. 2022 முகநூல் கவிதை குழுமங்களில் இணைந்து மீண்டும் எழுத ஆரம்பித்த போதும் 2022 மார்ச் மாதத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையால் மகளிர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாபெரும் கவிதை/ சிறுகதைப் போட்டியில், சிறுகதைப் பிரிவில் மூன்றாம் இடம் பெற்று பரிசும் சான்றிதழும் பெற்றுக் கொண்டதோடு, மீண்டும் என் எழுத்துப் பயணம் ஆரம்பமானது. ஞானம் சஞ்சிகையினால் நடத்தப்பட்ட அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசோடு, அந்த சிறுகதையும் சஞ்சிகையில் பிரசுரமானது. தொடர்ந்து முகநூல், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்று என் எழுத்துப் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். பாடல், கவிதை, சிறுகதை, நாவல் என்று சகல துறைகளிலும் எழுதி வருகிறேன்.

**கே: பெண் படைப்பு இலக்கிய நோக்கில் எப்படி பார்க்கப்படுகிறது?**

பல இடங்களில் வரவேற்கப்படுவதைப் போலவே மனம் நோகக் கூடிய சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. பொதுவாகவே பெண்கள் எனும் போது நலிந்தவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். ஆனால் நிமிர்ந்தெழ வேண்டும் என்பதே என் கருத்து. அவர்களின் திறமைகள் நிராகரிக்கப்படும் இடங்களில் எல்லாம் பெயரை நிலைநாட்டி சாதிப்பவர்களாக பெண்கள் இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.

**கே: எழுத்துக்களில் அதாவது படைப்புகளில் ஆண், பெண் என்ற தராதரம் பார்க்கும் மாயை உள்ளதா?**

பெரும்பாலும் இல்லை என்றே தோன்றுகிறது. திறமையான எழுத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

**கே: பெண் ஆளுமைத்திறன் எல்லா கட்டமைப்புகளிலும் சுதந்திரமாக செயற்படுவதை வரவேற்கிறீர்களா?**

பெண்கள் தமக்கென்று பேண வேண்டிய சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எல்லைகள் இருக்கின்றன. அவை பாதிக்காத வகையில் தனது ஆளுமையையும் திறமைகளையும் வெளிப்படுத்த வேண்டும். பெண்ணின் மடியிலிருந்துதான் அதாவது தாயிடமிருந்து தான் அரசனானாலும் அறிஞரானாலும் ஆரம்ப கல்வியைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

பெண்கள் பல துறைகளிலும் இப்போது சாதித்து தம் பெயரை நிலை நாட்டி வருவது வரவேற்கத்தக்கது.



**கே: நீங்கள் நூல்கள் ஏதேனும் வெளியிட்டிருக்கிறீர்களா?**

ஆமாம். பத்திரிகைகளில் வெளியான கதைகளோடு பரிசு வென்ற கதைகளையும் சேர்த்து ஒரு நூலாக வெளியிட எண்ணினேன்.

அதன்படி முகநூலில் அறிமுகமான பலரினதும் அன்பான ஆலோசனை உதவிகளோடு என் கன்னி நூலான " செம்பனிச் சிதறல்கள்" சிறுகதைத் தொகுதியை 2023.05.07 அன்று வெளியிட முடிந்தது. எனது நூலின் அணிந்துரையை பதுளையின் மூத்த இலக்கியர் கவிஞர் சாரணாகையூம் எழுதித் தந்ததோடு, நூலின் முதல் பிரதியை தமிழ்மணி மானா மக்கீன் பெற்றுக் கொண்டார்கள். எனது கவிதைத் தொகுதியொன்றையும் நாவலொன்றையும் வெகு விரைவில் வெளியிட எண்ணியிருக்கிறேன்.

**கே: உங்களால் மறக்க முடியாத அல்லது பட்டை தீட்டிய சம்பவம் என்று எதனைக் கருதுகிறீர்கள்?**

எனது கன்னி நூல் வெளியீட்டைத் தான் சொல்வேன். அந்த நூல் வெளியீட்டில் பல பாடங்களைக் கற்றுக் கொண்டேன். பாடசாலைக் காலத்திலிருந்தே சிலரது பொறாமை உணர்வுகளால் நிராகரிக்கப்பட்டும் பகிஷ்கரிக்கப்பட்டும் வேதனைகளோடு முட்டி மோதி தான் வாழ்க்கையில் ஒரு நிலைக்கு வந்திருக்கிறேன். போராட்டங்களும் சவால்களும் நிறைந்த பயணம் தான்.

அப்படி பல சிரமங்கள் தாண்டி இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த போது அங்கிருந்த கனவான்களின் பலிவாங்களுக்கு எனது நூல் வெளியீட்டையும் என்னையும் பகடையாக்கினார்கள் என்பது வேதனையளித்தது.

அது மட்டுமல்ல நட்பாக இருந்த சிலர், பொய்யான காரணங்களைக் கற்பித்து ஒதுங்கிக் கொண்டார்கள். எழுத்திலக்கிய உலகைப் பற்றி நிறைய கற்றுக் கொண்டேன்.

**கே: உங்களது திறமைக்கு கிடைத்த அங்கீகாரம் என்று எதனைக் கருதுகிறீர்கள்?**

விருதுகள், பொன்னாடைகள் என்று எதையும் இலக்காக வைத்து நான் பயணிப்பதில்லை. அவை திறமையானவர்களைத் தேடி தானாக வர வேண்டும். சில போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறேன். என் முகநூல் எழுத்துக்களை வாசிப்பவர்களிடமிருந்து சில வாய்ப்பகள் தானாகக் கிடைத்திருக்கிறது. தவிரவும் எனக்கென்றொரு வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் பாராட்டவும் வாழ்த்தவும் பிரார்த்திக்கவும் என்று எனக்கான ஒரு கூட்டத்தை உழைத்திருக்கிறேன். அந்த அன்பும் அவர்கள் மனதில் எனக்கிருக்கும் இடமுமே எனக்கான அங்கீகாரம் என்று கருதுகிறேன்.

**கே: உங்களது குடும்பம் கலைக்குடும்பமா?**

அடிப்படையில் கலைத்துறையில் பெயர் பதித்த பின்னனியொன்று எனக்கு இல்லை. இருப்பினும் என் தாயார் எழுத்தத்துத் துறையில் ஆர்வமுள்ளவர். முஸ்லிம் சேவையில் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியில் அவரது ஆக்கங்கள் தொடர்ந்தும் ஒலிபரப்பாகியிருக்கிறது. அத்தோடு 1970 களில் "ஜும்ஆ" பத்திரிகையின் பதுளை பிரதேச முகவராகவும் இருந்திருக்கிறார். என் தந்தையும் சித்திரங்கள் வரைவதிலும் பாடல் கதைகள் என்று கலைத்துறையில் மிகவும் ஆர்வமாக இருந்த ஒருவர்.

மூத்த சகோதரியின் தொடர்கதையொன்று மித்திரன் வாரமலரில் பிரசுரமாகியிருக்கிறது. தம்பியும் தங்கையும் கவிதை எழுதுவதில் மிகுந்த ஆர்வமும் திறமையுமுள்ளவர்கள் என்பதால் நானும் ஒரு கலைக்குடும்ப வாரிசு என்று சொல்லிக் கொள்ளலாம். இருப்பினும் அவர்கள் இலைமறை காய்களாகவே இருந்து விட்டதில் கவலைதான்.

பாத்திமா நளீரா

# சிந்தை கவர்ந்த வகவத்தின் 95 ஆவது கவியரங்கு



நீண்ட விடுமுறையாக இருந்த போதும் கூட வலம்புரி கவிதா வட்டம் தனது 95 ஆவது கவியரங்கினை கடந்த பௌர்ண மியன்று கொழும்பு, பழைய நகர மண்ட பத்தில் நடாத்தியது. மிகவும் ஆர்வத்தோடு கவிஞர்களும் ஆர்வலர்களும் குழுமி கவி யரங்கிற்கு வலு சேர்த்தனர். கவிஞர் சந் தக்கவிமணி கிண்ணியா அமீர் அலி தனது சந்தக் கவிதையினால் அரங்கின் சிந்தைக் குளிர வைத்தார். மூன்று மணித்தியாலங்கள் நீடித்த அரங்கு இறுதி வரை கவிதைகளில் லயித்திருந்தது. ஒவ்வொரு கவிதையும் வித விதமான உணர்வுகளைத் தந்தது. வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ் வினை நெறிப்படுத்தினார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும் பொருளாளர் ஈழ கணேஷ் நன்றியுரையும் வழங்கினர். அண்மையில் மறைந்த பேரா சியர் செ. யோகராசா, பேருவளையில் வசித்து வந்த கவிஞர் வாழைத்தோட்டம் வசீரின் தம்பி, கவிஞர் ரிஸான் ஸெய்ன், மருதமுனை ஹரீஸாவின் தந்தை பி.எம். எம். காதர் ஆகியோரும் இதே தினத் தில் சுனாமி பேரலையில் மறைந்தோரும் நினைவு கூரப்பட்டனர்.



பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலியின் 27 ஆவது ஆண்டு விழா அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது எமது வகவச் செயலா ளரும் உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கொழும்பு கிளை தலைவருமான இளநெஞ்சன் முர்ஷி தீன் விருது வழங்கி கௌரவிக்கப்பட் டார். அதே போன்று அங்கே விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட வகவ கவிஞர் சுபாஷினி பிரணவனுக்கும் வகவம் தனது பாராட்டைத் தெரி வித்தது. (பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலி (France ITR) பணிப்பாளர் விசு செல்வராசா வலம்புரி கவிதா வட்ட கவியரங்கில் அதிதியாக கலந்து கொண்ட போது வகவ கவிய ரங்கு முதன்முறையாக நேரடியாக சர் வதேச வானொலியில் ஒலிபரப்பப் பட்டது குறிப்பிடத்தக்கது.)



கிண்ணியா அமீர் அலியின் தலைமையில் இடம்பெற்ற

கவியரங்கில் கவிஞர்கள் தமிழ்த் தென்றல் அலி அக்பர், கவிஞர் திலகம் எம். பிரேம் ராஜ், ரவூப் ஹஸீர், இளநெஞ்சன் முர்ஷி தீன், வாழைத்தோட்டம் எம். வஸீர், வதிரி சி. ரவீந்திரன், வாசுகி பி. வாசு, ந. தாமரைச் செல்வி, கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், பவானி சச் சிதானந்தன், கமர்ஜான் பீபி, அமீன் சஜூதா , ராஜா நித்திலன், சிந்தனைப்பிரியன் முஸம் மில், லைலா அக்ஷியா, எஹலியகொட முஸ்னி முர்ஷித், தி. ஸ்ரீதரன், ஆர்.எஸ். ரஸ்மியா, இ. கலைநிலா, எஸ். தனபாலன்,

தாட்சாயினி சர்மா, ரகீப் அல் ஹாதி, மினு வன்கொட ஏ. சிவகுமார், எம். பி. எம். சித்தீக் சீ. தனுஷிகா ஆகியோர் கவிதை பாடினர்.

கலாபூஷணம் எம்.எஸ்.எம்.ஜின்னா, மணவை அசோகன், சு. ஜெகதீஸ்வ ரன், மௌலவி காதிர்கான், மலாய்கவி டிவாங்ஸோ, ஏ.கே.இளங்கோ, ஏ.டப். அப்துல் அஸீஸ், பர்ஹாத் சித்தீக், ராஹிலா ஹலாம், கே. யோகேஸ்வரி, ரிஸ்மினா ரபீக், கவிதா இளங்கோ, உணர்ச்சிப் பூக்கள் ஆதில் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

# " மகரஜோதி மணிகண்டா" பக்தி பாடல் இறுவட்டு வெளியீடு












நீர்கொழும்பை சேர்ந்த பாடலாசிரியர் மற்றும் கவிஞர் சுந்தர்ராஜன் டினுஷா காயத் திரியின் கவிவரிகளிலும், ஒருங்கிணைப்பிலும் தயாரிக்கப்பட்ட சபரிமலை சாஸ்தாவின் புகழ்பாடும் " மகரஜோதி மணிகண்டா" பக்தி பாடலின் இறுவட்டு வெளியீடானது, செ. ரவிச்சந்திரன் குருசாமியின் தலைமையில் நீர்கொழும்பு ஐயப்ப தேவஸ்தான யாத்திரை குழுவினரின் 41 வது மஹா மண்டல பூஜையை முன்னிட்டு " நீர்கொழும்பு இந்து கலாச் சார மண்டபத்தில்" நடைபெற்றது. தயாரிப்பு (பிரான்ஸ்) சாய் நவகுமார், இசை ஈழத் தின் இசைத் தென்றல் PS விமல், பாடகி ஞானலிங்கம் சுவர்னா, பாடகர் பி. எல் றெஜிஸ், சிறப்பு ஒலிக்கலவை இசையெழுவாருதி எம்.பகி., வடிவமைப்பு K. குணால்.

Senthooram செந்தூரம்



## Girls இல்லாத Boys

'கஜினிகாந்த்', 'பொய்க்கால் குதிரை' உட்பட சில படங்களை இயக்கிய சந்தோஷ் பி. ஜெயக்குமார் அடுத்து இயக்கியுள்ள படத்துக்கு 'தி பாய்ஸ்' என்று தலைப்பு வைத்துள்ளார்.

கதையின் நாயகர்களுள் அவரும் ஒருவராக நடிக்கிறார். 'ஜெயிலர்' ஹர்ஷத், வினோத், ஷா ரா, யுவராஜ் உட்பட பலர் நடிக்கின்றனர். அஹமத் ஷெரிப் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப் படத்துக்கு அருண் மற்றும் கவுதம் இசையமைத்துள்ளனர். நோவா ஃபிலிம் ஸ்டுடியோஸ் சார்பில் தயாரிப்பாளர் செந்தில்குமாரும் சந்தோஷ் பி. ஜெயக்குமாரின் டார்க் ரூம் பிக்சர்ஸும் இணைந்து தயாரித்துள்ளன. இதன் முதல் தோற்ற போஸ்டரை இயக்குநர் வெங்கட் பிரபுவும் பிரேம்ஜியும் இணைந்து வெளியிட்டுள்ளனர்.

படம் பற்றி சந்தோஷ் பி.ஜெயக்குமார் கூறும்போது, "ஐந்து இளம் பேச்சுலர்களின் வாழ்வியலை சித்தரிக்கும் வகையில் இதன் திரைக் கதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் கதாநாயகி என்று யாரும் இல்லை" என்றார்.



## லால் சலாமுக்கு பதிலாக பொங்கல் ரேஸில் பிரபல நடிகரின் படம்

2024 ஆம் ஆண்டு பொங்கலை முன்னிட்டு ரஜினியின் 'லால் சலாம்' படம் ரிலீஸ் செய்வதாக அறிவிக்கப்பட்டது. இதனால் ரசிகர்கள் எக்கச்சக்கமான வெயிட்டிங்கில் இருந்தனர். இந்நிலையில்லைகா நிறுவனம் தனது தயாரிப்பில் இருக்கும் மற்றொரு படத்தை பொங்கலுக்கு ரிலீஸ் செய்வதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதனால் ரசிகர்கள் இடையில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பொங்கலை குறி வைத்து தமிழ் சினிமாவில் பல படங்கள் வெளியாவது வழக்கம். தொடர்ச்சியான விடுமுறையை கணக்கில் கொண்டு படங்கள் வெளியாகும். அதிலும் உச்ச நட்சத்திரங்களின் படங்கள் கட்டாயமாக வெளியாகும். அந்த வகையில் இந்தாண்டு பொங்கலை குறி வைத்தும் முன்னணி நடிகர்களின் படங்கள் ரிலீஸ் ஆகவுள்ளன.ரஜினியின் 'லால் சலாம்' படம் 2024 ஆம் ஆண்டு பொங்கலன்று ரிலீஸ் ஆகவுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. ஐஸ்வர்யா இயக்கியுள்ள இப்படத்தில் விஷ்ணு விஷால், விக்ராந்த் பிரதான கதாபாத்திரத்தில் நடித்திருந்தாலும், சூப்பர் ஸ்டார் மொய்தீன் பாய் என்ற கெஸ்ட் ரோலில் நடித்துள்ளதால் இப்படம் ரஜினி படமாகவே ரசிகர்களால் பார்க்கப்பட்டு வருகிறது.



மேலும் நீண்ட காலமாக ரசிகர்களின் எதிர்பார்ப்பில் இருக்கும் 'அயலான்' படமும் பொங்கலன்று ரிலீஸ் ஆவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'இன்று நேற்று நாளை' பட இயக்குனர் ரவிக்குமாரின் இரண்டாவது படைப்பாக உருவாகியுள்ள இப்படத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ளார். பெரும் பொருட் செலவில் ஏலியன் சயின்ஸ் பிக்சன் படமாக அயலான் உருவாகியுள்ளது. இப்படத்தின் மீது ரசிகர்கள் இடையில் எக்கச்சக்கமான எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

அதே போல் தனுஷின் 'கேப்டன் மில்லர்' படமும் பொங்கலுக்கு ரிலீசாக தயாராகவுள்ளது. ராக்கி, சாணிக்காயிதம் போன்ற படங்களின் இயக்குனர் அருண் மாதேஸ்வரனின் மூன்றாவது படைப்பாக உருவாகியுள்ள இப்படம் முழுக்க முழுக்க போரை மையப்படுத்தி உருவாகியுள்ளது. தனுஷ் இப்படத்தில் இலங்கையை சார்ந்த போராளியாக நடித்துள்ளார். பொங்கலை முன்னிட்டு 'கேப்டன் மில்லர்' படத்தினை ரிலீஸ் செய்யும் பணிகளில் தற்போது படக்குழுவினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இந்த பொங்கல் ரேஸில் இருந்து 'லால் சலாம்' படம் விலகியுள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கண்டிப்பாக இப்படம் பொங்கலுக்கு வெளியாக வாய்ப்பில்லை என கூறப்படுகிறது. அத்துடன் 'அயலான்' படம் ரிலீஸ் ஆவதிலும் சிக்கல் தொடர்ந்து வருகிறது. மேலும், சுந்தர் சியின் 'அரண்மனை 4' பொங்கலுக்கு ரிலீஸ் ஆகவில்லை.

ஏ.எல் விஜய் இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார். ஜி.வி பிரகாஷ் குமார் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார். முழுக்க முழுக்க ஆக்ஷன் திரைப்படமாக உருவாகி இரண்டு பாகங்களாக உருவாகி இருக்கும் இந்தப் படத்தின் முதல் பாகம் இந்த் ஆண்டு பொங்கலுக்கு வெள்யாக இருப்பதாக படக்குழு தெரிவித்துள்ளது.
லால் சலாமுக்கு பதிலாக பொங்கல் ரேஸில் பிரபல நடிகரின் படம்



## அந்த 47 நாட்கள் மறக்க முடியாதது

### நடிகை ஹனிரோஸ்

பிரபல மலையாள நடிகை ஹனி ரோஸ். இவர் தமிழில், 'முதல் கனவே', 'சிங்கம்புலி', 'கந்தர்வன்' உட்பட சில படங்களில் நடித்துள்ளார். தெலுங்கிலும் நடித்து வரும் அவர், இப்போது 'ரேச்சல்' என்ற படத்தில் மாட்டிறைச்சி வெட்டுபவராக நடித்துள்ளார். ஆனந்தினி பாலா இயக்கும் இதில் கலாபவன் சஜோன், பாபுராஜ், ஜாஃபர் இடுக்கி, ராதிகா உட்பட பலர் நடிக்கின்றனர். ஸ்வரூப் பிலிப் ஒளிப்பதிவு செய்துள்ளார். மலையாளத்தில் உருவாகும் இந்தப் படம் பான் இந்தியா முறையில், இந்தி, தெலுங்கு, தமிழ் மொழிகளிலும் வெளியாக இருக்கிறது. இந்நிலையில் இதன் படப்பிடிப்பு இப்போது முடிந்துள்ளது.

இதுபற்றி தெரிவித்துள்ள ஹனி ரோஸ், "இதன் படப்பிடிப்பில் கலந்துகொண்ட கடந்த 47 நாட்கள் என் வாழ்வில் மறக்க முடியாத அத்தியாயமாக மாறியிருக்கிறது. இந்த பான் இந்தியா படத்தில் நடித்தது, தனித்துவமான அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது. கதாநாயகியாக 18 வருடங்கள் நடித்துவிட்டேன். ஆனால், ஆனந்தினி பாலா இயக்கத்தில் நடித்தது, பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார். இந்தப் படத்தின் முதல் தோற்ற போஸ்டர் வெளியாகி கவனிக்கப்பட்டது.

## "என் படங்களில் சமரசங்களை குறைத்துக்கொள்ள விரும்புகிறேன்" – இயக்குநர் வெற்றிமாறன்



"என்னுடைய படங்களில் சமரசங்களை குறைத்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த சில ஆண்டுகளில் வெளியான படங்களில் 'அயோத்தி' மிகச் சிறப்பான படம்" என இயக்குநர் வெற்றிமாறன் புகழ்ந்துள்ளார்.

21வது சென்னை சர்வதேச திரைப்பட விழா கடந்த 14ம் தேதி தொடங்கியது. இதில் மொத்தம் 57 நாடுகளின் 126 படங்கள் திரையிடப்பட்டன. இதன் நிறைவு விழா வியாழக்கிழமை (டிச. 21) நடைபெற்றது. இதில் சிறந்த தமிழ் திரைப்படமாக 'அயோத்தி' தேர்வு செய்யப்பட்டது. 'மாமன்னன்' படத்துக்காக சிறந்த நடிகர் விருதை வடிவேலு பெற்றார். 'விடுதலை பாகம் 1' படத்துக்காக இயக்குநர் வெற்றிமாறனுக்கு சிறப்பு ஜூரி விருது வழங்கப்பட்டது. அப்போது பேசிய இயக்குநர் வெற்றிமாறன், "பொதுவாக இப்படியான படங்களை இயக்கும்போது, கன்டென்டையும், வெகுஜன எதிர்பார்ப்பையும் சேர்த்து உருவாக்குவது சவாலாக இருக்கும்.

சில இடங்களில் கன்டென்டில் சமரசம் செய்து கொள்வோம். சில இடங்களில் வெகுஜன ரசனைக்காக சமரசம் செய்துகொள்வோம். இதனால் படத்தின் குவாலிடியில் சில சமயம் சிக்கல் இருக்கலாம்.

உங்களுக்குத் தெரியும், என் படங்களின் டப்பிங் கச்சிதமாக இருக்காது. மிஸ் ஆகும். நிறைய குறைகளுடன், தவறுகளுடன் தான் படத்தை எடுத்து முடிக்கிறோம். இந்த மாதிரியான கதையாடலை இந்த சமூகத்தில் நிகழ்த்த வேண்டும் என நோக்கத்துக்கான அங்கீகாரமாக இந்த விருதை கருதுகிறேன்.

என்னுடைய அடுத்தடுத்த படங்களில் நான் சொன்ன இந்த சமசரங்களை குறைத்துக்கொண்டு சிறப்பான படைப்புகளை உருவாக்க வேண்டும் என நினைக்கிறேன். இந்த விருது எங்களுக்கு ஊக்கமளிக்கிறது.

அதேபோல 'அயோத்தி' படம் இன்றைக்கு பேச வேண்டிய படைப்பு. பல இடங்களில் நான் அயோத்தி படத்தை பேசாமல் விட்டுவிட்டேன். இந்த வாய்ப்பை அதற்காக பயன்படுத்திக் கொள்கிறேன். கடந்த சில ஆண்டுகளில் வெளியான படங்களில் 'அயோத்தி' சிறந்த படம். படக்குழுவுக்கு என் வாழ்த்துகள்" என்றார்.

## பூஜா ஹெக்டேவை இயக்குகிறார் அஜய் ஞானமுத்து?



ஏ.வி.எம் நிறுவனம் கடந்த சில வருடங்களாகத் தமிழில் திரைரப்படங்கள் தயாரிக்கவில்லை.

கடந்த வரும் வெப் தொடர் ஒன்றைத் தயாரித்திருந்தது. இப்போது ஓடிடி தளம் ஒன்றுக்காகத் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க இருப்பதாகவும் அந்தப் படத்தை அஜய் ஞானமுத்து இயக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தப் படத்தின் கதை, நாயகிக்கு முக்கியத்துவம் கொண்டது எனக் கூறப்படும் நிலையில் அதில் நடிக்க, பூஜா ஹெக்டே ஒப்பந்தமாகி இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அஜய் ஞானமுத்து இப்போது அருள்நிதி, பிரியா பவானி சங்கர் நடித்துள்ள 'டிமான்டி காலனி 2' படத்தை இயக்கியுள்ளார்.

## 30 செகண்ட் டான்ஸ் வீடியோவுக்கு 2 லட்சம்



இசையமைப்பாளர் விஜய் ஆண்டனியின் பல சூப்பர் ஹிட் பாடல்களுக்கு லிரிக் எழுதியவர் பிரியன். இவர் மஸ்காரா போட்டு மயக்குறியே, மக்காயலா மக்காயலா, உசுமுலாரசே உள்ளிட்ட பல ஹிட் பாடல்களை எழுதியுள்ளார். பிரியன் 'அரணம்' படம் வாயிலாக ஹீரோவாக அறிமுகமாக உள்ளார். இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.டிக்டாக், இன்ஸ்டாகிராம் வாயிலாக பிரபலம் ஆனவர் அமலா ஷாஜி. இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் வீடியோ போடும் இவருக்கு நான்கு மில்லியன் அளவிற்கு பாலோயர்கள் உள்ளனர். டான்ஸ் ஆடி வீடியோ போடுவது. ரீல்ஸ் செய்வது போன்றவை மூலமாக ஏராளமான ரசிகர்களை பெற்றுள்ளார் அமலா ஷாஜி. இவர் குறித்து பாடலாசிரியர் பிரியன் பேசியுள்ளது சமூக வலைத்தளங்களில் சலசலப்பை கிளப்பி வருகிறது.அரணம் பட பாடல் வெளியீட்டு விழாவில் பேசிய பிரியன், இரண்டு நிமிட பாடலுக்கு டான்ஸ் ஆட இன்ஸ்டாவில் நடனமாடும் சென்னையை சார்ந்த பெண் ரூ.50 ஆயிரம் கேட்கிறார். 30 செகண்டுக்கு நடனமாட கேரளாவை சார்ந்த பெண் இரண்டு லட்சம் கேட்கிறார் என்று கூறினார். அவரின் இந்த பேச்சை கேட்டு மேடையில் உள்ளவர்கள் சிரிக்க ஆரம்பித்து விட்டனர்.மேலும், பிரியன் இந்த இரண்டு லட்சம் பணத்தை எங்கள் கலைஞர்களிடம் கொடுத்தால் விடிய விடிய வேலை பார்ப்பார்கள் என்றார். அப்போது மேடையில் உள்ளவர்கள் அவர் யார் என சொல்லுங்கள் என கேட்டனர். அதனை தொடர்ந்து அவர் வேற யாரும் இல்லை அமலா ஷாஜி தான் என கூறினார் பிரியன். அவர் பேசியுள்ள இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## தள்ளிப் போன 'தங்கலான்'



பா.ரஞ்சித் இயக்கத்தில், விக்ரம், பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி உட்பட பலர் நடித்துள்ள படம், 'தங்கலான்'. ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ள இந்தப் படத்தை ஸ்டூடியோ கிரீன் ஞானவேல் ராஜா தயாரித்துள்ளார்.

கோலார் தங்க சுரங்கத்தில் தமிழர்கள் பட்ட துயரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. பீரியட் படமான இதன் டீஸர் வெளியாகி வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்தப் படம் ஜன. 26ம் திகதி வெளியாக இருப்பதாக அறிவித்திருந்தனர். இந்நிலையில் இறுதிக் கட்ட பணிகள் முடிவடையாததால் மார்ச் 29ம் திகதிக்கு இதன் வெளியீடு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# வலைத்தளங்களில் பதிவிடும் போதும் பழகும் போதும் எச்சரிக்கை அவசியம்

வலைத்தளங்களில் நாம் பழகும் உறவுகளுடன் எச்சரிக்கை உணர்வுடன், ஓர் எல்லையுடன் பழக வேண்டும்.

உங்கள் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிடும் முன் உங்கள் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்.

உங்கள் நண்பர்களை தெரிவு செய்யும் போது அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். அல்லது நண்பராக பயணிக்கும் போது இடையூறு வரும் விதமாக நடவடிக்கை இருப்பின்

அந்நபருடன் எச்சரிக்கையாய் இருங்கள் அல்லது விலகி விடுங்கள்.

உங்களின் அந்தரங்க விடயங்கள், புகைப்படங்கள் என்பவற்றை யாருடனும் பகிராதீர்கள்.

எதிர் தரப்பினருடன் அரட்டையடிக்கும் (chat) போது அவசியம் என்றால் மட்டும் பதில் சொல்லுங்கள்.

அனைவருக்கும் திருப்பி பதிலளிக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை.

வீண் விவாதங்கள் செய்தால் தவிர்த்து விடுங்கள் அல்லது ஒதுங்கி செல்லுங்கள்.

உங்களைப் பயந்து ஒதுங்கிவிட கூறவில்லை.

நாயிடம் கடிபடுவதை விட வழிவிடுவது சிறப்பல்லவா.

புகைப்படம் மற்றும் சுய விபரங்கள் இல்லாதவர்களை முகநூலில் இணைத்துக் கொள்ளாதீர்கள்.

சிலர் நண்பராக இணைத்தால் மட்டுமே அவர்களைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியும். அப்படியானவர்களை நண்பராக இணைத்து விபரம் பாருங்கள். விபரங்கள் இல்லாமல் முகநூலை ஏதோ பேருக்கு வைத்திருப்பவராக இருந்தால் தவிர்த்து விடுங்கள். முக்கியமாக அவர்கள் பின் தொடரும் பக்கங்கள் (Like pages) என்னவென அவதானியுங்கள்.



வெளிநாட்டு நபர்கள், (வெள்ளையர்கள்) நண்பர்கள் விடுப்பு கொடுத்திருப்பார்கள். அவர்களின் முகநூலில் ஒரே நாளில் சில புகைப்படங்களை பதிவிட்டு அதற்கு பின் எந்தப் பதிவும் இருக்காது. இவர்கள் நண்பர்களாக மாறி தொலைபேசி எண் கேட்டு உங்களுக்கு பழகி உங்களுக்கு பரிசில்கள் வந்துள்ளன, பொதிகள் வந்துள்ளன என்று பணம் கேட்பார்கள். ஏமாந்து விட வேண்டாம். மிகப்பெரிய ஏமாற்றம் இதுதான். உள் நாட்டு நபர்களுடன் இணைந்து முகநூல் மட்டுமல்ல இணைய முகவரி, கைபேசி என்பவற்றுக்கு கூட செய்திகள் வருகின்றன. உங்களுக்கு பரிசு விழுந்துள்ளது, லொத்தர் பரிசு கிடைத்துள்ளது, பெறுமதியான பொதிகள் வந்துள்ளன. சுங்க வரி செலுத்தினால் அதனை பெற்றுக் கொள்ள முடியும் என்று பெரும் தொகையான பொருளின் பெறுமதியைக் கூறுவார்கள். ஏமாந்து விடாதீர்கள்.

எனக்கு தெரிய இந்தக் குழுவினரிடம் இலட்சக் கணக்கில் கொடுத்து ஏமாந்த நபர்கள் ஏராளம். அதுவும் கடன் பட்டு நமக்கு பரிசு வரும் அல்லது லொத்தர் பரிசு வரும் என்கிற ஆவலுடன் பணத்தை செலுத்தி கடனாளியாக இருக்கும் நபர்கள் ஏராளம்.

இந்த ஏமாற்றுக் குழுவுடன் உள்நாட்டு நபர்களும் இணைந்தே இயங்குகிறார்கள். இப்படியான விடயங்களுக்கு பணம் செலுத்தி ஏமாற வேண்டாமெனவும் அப்படியா செய்திகள் வரும் பட்சத்தில் அறிவிக்குமாறும் எமது பொலிஸ் துறையே பல அறிக்கைகளை ஊடகம் வழியாக வெளியிட்டுள்ளது.

வலை தளங்கள் ஓர் வரமான விடயம். இங்கு யாரையும் யாரும் கட்டாயப்படுத்தி நண்பர்களாக இருக்கும் உறவை நீடிக்க வைக்க முடியாது. எனவே உங்கள் ஒவ்வொருவரின்பாதுகாப்பும்உங்கள்கைகளில் தான் உள்ளது. நிதானமாக சுய சிந்தனையுடன் அளவோடு பயணித்தால் நிம்மதியாய் வாழலாம். நிம்மதி உங்கள் தெரிவாக இருக்கட்டும்.

கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...



# ஆரோக்கியம்

மனிதர்களுக்கு ஆரோக்கியம் என்பது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், சமூக ரீதியாகவும் நன்றாக இருந்து வாழ்க்கையை முழு வாழ்க்கையாக நீடித்த ஆயுளுடன் வாழச் செய்வதேயாகும். அதுவே ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஆரோக்கியமான வாழ்க்கை என்பது வேலை, குடும்பம், பிள்ளைகளை கவனிப்பது போன்ற அன்றாட ஓட்டங்களுக்கு மத்தியில், அவர்கள் தங்களைக் கவனித்துக் கொள்ள முடியாமல் போகிறது. இதனால் அவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். பின்வரும் வழிமுறைகளை கையாள்வதன் மூலம் பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தை சீராக பராமரிக்க முடியும்.

ஆரோக்கியம் அவசியம்உடற்பயிற்சி செய்தல் : இதய நோயைத் தடுப்பதற்கு உடற்பயிற்சி மிகவும் அவசியமான ஒன்றாகும். இதனால் பெண்களின் மன வலிமை அதிகரிப்பதுடன், எலும்பு மற்றும் இதய ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும். வாரத்திற்கு குறைந்தது நான்கு நாட்களாவது 30 நிமிட உடற்பயிற்சியை செய்ய வேண்டும். நடைபயிற்சி, ஜாகிங், நடனம், நீச்சல் போன்ற வெவ்வேறு பயிற்சிகளை செய்வதன் மூலம் உங்கள் உடல் ஆரோக்கியம் பெறும். இது போன்ற உடற்பயிற்சிகள் செய்யும் போது தங்கள் நண்பர்களுடனோ அல்லது கணவருடன் சேர்ந்து செய்யலாம். ஏனெனில் அவ்வாறு செய்வதன் மூலம் உங்களுக்கு நல்ல ஊக்குவிப்பு கிடைக்கும். வலிமை பயிற்சி தசையை உருவாக்கி வலுவான எலும்புகளை பராமரிக்க உதவுகிறது.

சரிவிகித உணவு எடுத்துக் கொள்ளுதல் : ஊட்டசத்து மிகுந்த உணவு ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு அடித்தளமாக விளங்குகிறது. சரிவிகித சத்துள்ள உணவுகளை உட்கொண்டாலே பெரும்பாலான நோய்களை தவிர்த்து விடலாம். ஒரு பெண்ணின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு சமச்சீரான உணவை உட்கொள்வது மிகவும் முக்கியமானது. சீரான உணவு உண்பது ஆரோக்கியமற்ற உணவுகளைத் தவிர்ப்பதன் மூலம் தொடங்குகிறது. தொகுக்கப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளில் பெரும்பாலும் சர்க்கரை, உப்பு, ஆரோக்கியமற்ற கொழுப்புகள் மற்றும் கலோரிகள் நிறைந்திருக்கும். எனவே வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களை வழங்கும் உணவுகளை பெண்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். பழங்கள், காய்கறிகள், தானியங்கள், கீரைகள் போன்ற நார்ச்சத்து நிறைந்த உணவுகள், மீன், இறைச்சி, கொட்டைகள், விதைகள் மற்றும் ஆலிவ் எண்ணெய், பால் போன்ற உணவுப் பொருட்களை அன்றாட உணவுப் பொருட்களில் சேர்த்துகொள்வது அவசியம்.



# சிகை அலங்காரம்

அணியும் ஆடைக்கு ஏற்ப ஹேர்ஸ்டைலை தேர்வு செய்ய நிறைய பெண்கள் விரும்புகிறார்கள். சுருள் முடி உள்ள பெண்கள், தங்கள் கூந்தலை ஸ்ட்ரெய்ட்டனிங் செய்து கொள்வதும், நீண்ட முடி உள்ள பெண்கள் கர்லிங் செய்து கொள்வதும்தான் இப்போது ஃபேஷன். அலை அலையாகப் புரளும் கூந்தலுக்கு எப்போதும் வரவேற்பு அதிகம். மாடர்ன் உடைகளுக்குப் பொருத்தமான ஹேர்ஸ்டைல் சிம்பிளாக இருக்கவேண்டும். புடவை போன்ற பாரம்பரிய உடைகளை அணிந்துகொள்ளும் போது அதற்குப் பொருத்தமான சிகை அலங்காரத்தை செய்து கொள்ள குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும். சிகை அலங்காரம் பார்ட்டி, ஃபங்ஷன்களுக்குச் செல்லும் போது ஹேர்ஸ்டைல் செய்து கொள்வதற்குப் பெண்கள் அதிகம் மெனக்கெடுகிறார்கள். ஹேர் கட்டைப் பொறுத்தவரை 'லேயர் கட்'தான் பெண்களின் விருப்பமான தேர்வாக இருக்கிறது. எல்லா ஆடைகளுக்கும் இந்த ஹேர் கட் ஒத்துவரும் என்பது ப்ளஸ். மாடர்ன் உடைகளுக்கு 'யு கட்', குழந்தைத்தனமான முகத்துக்கு 'ஃபிரெஞ்ச் கட்', அல்ட்ரா மாடர்ன் தோற்றம் விரும்பும் பெண்களுக்கு 'பாய் கட்' என இந்தப் பட்டியல் வெகு நீளம்.

இந்த ஆய்வுக்காக 2 ஆயிரம் பெண்களை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களில் 20ல் ஒருவர், புது ஹேர்ஸ்டைலுக்கு மாற விருப்பம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். தங்கள் தோற்றத்தை அழகாக வெளிப்படுத்தும் வெரைட்டியான ஹேர்ஸ்டைலைத் தான் பெண்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்களில் பாதிப் பேர் புது ஹேர்ஸ்டைலுக்கு மாறிப் பார்ப்போமே என்று சோதனை முயற்சியாக செய்து பார்க்கிறார்கள். அதாவது, கூந்தல் விஷயத்தில் ரிஸ்க் எடுக்க, பெண்கள் தயாராக இருக்கிறார்கள்.


உலக அளவில், பெண்கள் ஒரு வருடத்துக்கு இரண்டு விதமான ஹேர்ஸ்டைலையும் குறைந்தது கூந்தலுக்கு ஒரு கலர் ஷேடும் செய்கிறார்கள் என்பதும் ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. 15 வயது முதல் 65க்குள் 100 விதமான வண்ணங்களை கூந்தலுக்குத் தேர்வு செய்கிறார்கள். கல்லூரியில் படிக்கும் காலங்களில் ஃபேஷனுக்கு ஏற்ப கூந்தல் டிசைனை மாற்றிக் கொள்கிறார்கள்.

''பெண்கள் தங்கள் கூந்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது ஆரோக்கியமான விஷயம். இதனால் அவர்கள் தோற்றத்தில் புது மாற்றம் ஏற்படும். அது, அவர்களை தன்னம்பிக்கை உள்ள பெண்ணாக மாற்ற உதவும். இது, அவர்களின் வாழ்க்கை மாற்றத்துக்கு ஒரு மைல்கல்லாக இருக்கிறது. பொதுவான இடத்தில் நீங்கள் தனித்துத் தெரிய வேண்டுமென்றால், லேட்டஸ்ட் டிரெண்ட் என்ன என்பதை தெரிந்து வைத்துக் கொண்டு, அதைப் பின்பற்ற வேண்டும். அதற்கு ஹேர்ஸ்டைல், ஹேர் கட் அவசியம்.



# Champion Kids Pre School பாலர் பாடசாலையின் பட்டமளிப்பு விழா






தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் கொழும்பு 15 இல் இயங்கி வரும் *Champion Kids Pre School* பாலர் பாடசாலையின் முதலாவது பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை மாலை கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களுடன் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மகிழ்ச்சியாக நிகழ்ச்சியை நடத்தியபோது...








# வடமராட்சியில் நூல் அறிமுகவிழா










புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் ''அன்றலர்ந்த மலர்கள்'' நூல் அறிமுகவிழா வடமராட்சி புற்றளை மகா வித்தியாலயத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. உறவினர்கள், ஊரவர்கள், நண்பர்கள், கலை இலக்கிய நண்பர்கள் என ஏராளமானவர்கள் வருகை தந்து விழாவைச் சிறப்பித்தனர். ஜீவநதி க.பரணீதரன் விழாவுக்குத் தலைமை தாங்கினார். திருமதி கோகிலா மகேந்திரன் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார். எழுத்தாளர் தாட்சாயணி நூலின் முதல் பிரதியை வாங்கிச் சிறப்பித்தார். அன்றைய தினம் புலோலியூர் ஆ. இரத்தினவேலோனின் 65 ஆவது பிறந்ததினமும் விழாவில் கொண்டாடப்பட்டது விசேட அம்சமாகும். ஊரவர்களும், நண்பர்களும் எழுத்தாளர் புலோலியூர் ஆ.இரத்தினவேலோனை மாலையிட்டும் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர்.



# டவர் மண்டப நாடக விழா








# நுவரெலியாவில் 'மலையகம் 200 மாநாடு'







மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் )24) நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் 'மலையகம் 200 மாநாடு' மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் சிறப்பு அதிதியாக தமிழ்நாடு அதிமுக சட்டமன்ற உறுப்பினர் என். முருகுமாறன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# சட்டத்தைப் பேச என்று கற்றுக் கொள்ள 10 வருடங்களுக்கு மேல் எடுத்தது

## சட்டத்தரணி எம் .சி. சபறுள்ளா

இப்படித்தான் சட்டத்தைப் பேச வேண்டும் என்று கற்றுக் கொள்ள 10 வருடங்களுக்கு மேல் எடுத்திருக்கின்றது மனம் திறந்து பேசும் சட்டத்தரணி எம் .சி. சபறுள்ளா .

"சட்டத்துறை உங்களுக்கு "தனிப்பட்ட " (Personal) ரீதியில் எதை எதையெல்லாம் தந்திருக்கின்றது" என்ற மசாலாத்தனமான கேள்விக்கு பதிலாக என்னிடத்தில் மங்க



ளகரமாக இன்ஸ்டென்ட் ஃபாஸ்ட் ஃபுட் லெவலில் அன்லிமிடெட் பார்சலொன்று கைவசம் இருக்கின்றது.

"எனது வறுமையை அது படுகொலை செய்து புதைத்திருக்கின்றது. எவரையும் இந்த தேசத்திலே பயமில்லாமல் எதிர்கொள்ளலாம் என்கின்ற தைரியத்தை உறுதி எழுதிக் கொடுத்திருக்கின்றது. சமூகத்தில் ஷேர்ட் கொலரை தட்டிக் கொண்டு நெஞ்சை நிமிர்த்தியவாறு நடந்து செல்லுகின்ற ஸ்மார்ட் லெவல் திராணியை தந்திருக்கின்றது. பள்ளி நாட்களில் புஷ் சைக்கிளில் செல்ல வேண்டும் என்று கனவு கண்டு கனவு கண்டு கடைசி வரையில் அது கைகூடாமல் போன இந்த ஏழை சிறுவனுக்கு காரில் பயணம் செய்வதற்கான டொயோட்டோடிக்வாய்ப்பினைவழங்கிஇருக்கின்றது.

பட்ஜெட் பார்க்காமல் எப்போதும் செலவு செய்கின்ற பாக்கியத்தை தந்திருக்கின்றது. மகன் அரிப் முராதுக்கு ஹார்ட் போல் கிரிக்



கெட்டுக்காக முதலீடு செய்வதிலிருந்து பிள்ளைகளை அவர்கள் விரும்பிய துறையில் விரும்பிய இடத்தில் கடல் கடந்த தேசத்திலேனும் படிக்க வைக்கின்ற பாக்கியத்தை வழங்கி இருக்கின்றது" என்று இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்.

அப்படிப்பட்ட சட்டத்துறையில் கால்நடைப் பயணத்தை ஆரம்பித்து இதோ 19 வருட கலண்டர்கள் காலாவதியாகி இருக்கின்றன. நேற்று போல் தான் இருக்கின்றது ஒரு சட்டத்தரணியாக உச்ச நீதிமன்றத்தில் சத்தியம் செய்தது. 19 வருடங்கள் அதற்குள்ளே டைம் டிராவல் செய்ய ஆரம்பித்திருக்கிறது. காலம்தான் எவ்வளவு வேகமானது.

இதுவரை காலத்துக்குமான சட்டத்துறையில் கருத்தாடை கட்டிக் கொண்டு மீலோர்ட் உச்சாடனத்தால் கடந்து வந்த 19 வருட காலத்தைய அற்புதமான பயணத்தை திரும்பிப் பார்க்கின்றேன். இதற்குள்ளே எத்தனையோ நடந்து விட்டன.

பிறந்த குழந்தையாக சட்டத்துறையில் உடுப்பு போட்டு தவழ்ந்து தத்தித்தத்தி நடந்து விழுந்து மறுபடியும் எழுந்து நடக்க பழகி மெல்ல ஓட பழகி மரதன் ஓட்டத்திலிருந்து மணிக்கு நூறு இருநூறு கிலோ மீட்டர் வேகத்தில் ஓடப்பழகி இப்போதுதான் சட்டத்துறையில் ஓரிடத்திற்கு வந்திருக்கின்றேன்.

நீதிமன்றத்தில் இப்படித்தான் சட்டத்தைப் பேச வேண்டும் என்று கற்றுக் கொள்ளவே எனக்கு 10 வருடங்களுக்கு மேல் எடுத்திருக்கின்றது. வெளியிலிந்து பார்த்தால் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக கடமை புரிவது இலேசு மாதிரித்தான் தெரியும். ஆனால் சட்டத்தை படிக்க படிக்கத்தான் அதன் நீள அகலங்களும் அதன் ஆழ அகலங்களும் புரிய ஆரம்பிக்கும்.


இப்படி புரிய ஆரம்பிக்கவே 10 வருடங்கள் எடுக்கும். அதன் பின்னர் மெல்ல மெல்ல நம்மை பட்டை தீட்ட ஒரு ஐந்து வருடங்கள் எடுக்கும். சட்டத்தில் ஒரு நிலையான இடத்துக்கு வந்து நிற்பதற்கு 15 வருடங்களாவது ஆகக் குறைந்தது தேவை என்பது தான் எனது அனுபவக் குறிப்பு.

அதுவும் சட்டத்துறையை மாத்திரமே இருபத்து மணி நான்கு மணி நேரமும் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுகின்ற டைகர் தயாநிதிகளுக்கு.

சட்டத்துறைக்கு வந்த பின்னே ஓரளவுக்கேனும் இந்தத் துறையிலே செய்திருக்கின்றோம் என்பது ஆன்ம நிம்மதி. எப்போது இந்த சட்டத்துறையில் கால் பதித்தேனோ அன்றிலிருந்து தொடங்கிய தேடல் இது. மரணத்தோடு தான் முற்றுப் பெறுவேன் என்று அடம்பிடித்துக் கொண்டு இருக்கின்றது .

எப்போது பார்த்தாலும் சட்ட புத்தகங்களை கட்டிப் பிடித்துக் கொண்டு யுவர் ஒனர் என்று ரிபீட்டட் மோடில் வாழ்வின் ஒட்டுமொத்த ரிங்டோன் அமைந்துவிட்டது.

கடந்து போன 19 வருட கால பகுதியில் கற்றுக் கொண்டதும் பெற்றுக் கொண்டதும் அதிகம். சட்டத்துறையைப் பொறுத்தளவில் நான் ஒரு சாதாரண மாணவன். சாதாரணமானவன். அவ்வளவுதான்.



ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக சட்டத்தை படிக்கின்ற போது ஆன்ம திருப்தி அடைகின்றேன். புதிது புதிதாக கற்றுக் கொள்கின்ற போது ஆன்மாவுக்குள்ளே ஒரு பெரும் அருவி ஊற்றெடுக்க ஆரம்பிக்கிறது.

இப்போதெல்லாம் எனது வாசிப்பு என்பது சட்ட புத்தகங்களோடு மட்டும் என்று சத்தியம் செய்திருக்கின்றேன். சட்டம் என்பது கற்றுக் கொள்ள தாகத்தோடு அலைகின்ற வெறித்தனக்காரர்களுக்கு மாத்திரம் தான். அவர்களால் தான் இந்த துறையில் சாதிக்க முடியும்.

மற்றும் படி சாதாரண கருத்த கோட்டுகளுக்கு இந்த சட்டத்துறை வயிற்றுப் பிழைப்புக்கு கேரண்டி.

வாழ்வில் இந்தளவு தூரம் இல்லை கொண்டு வந்து வல்ல அல்லாஹ்வுக்கும் எனது பெரும் காதலுக்குரிய சட்டத்துறைக்கும் எனது தாய் வீடாகவே மாறிப் போன அத்தனை நீதிமன்றங்களுக்கும் எப்போதும் நன்றிகள்.





இதுவரை காலத்துக்குமான எனது அனுபவத்தில் சட்டத்துறையைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு பில்லாவாக இருக்க வேண்டும். நீங்கள்தான் உங்களை பார்த்து பார்த்து செதுக்க வேண்டும். நீங்களே சிற்பி. நீங்களே சிலை. இதுதான் எனது 19 வருட காலத்தையும் பேரனுபவம்.

சட்டத் துறையில் பில்லாவாக இருப்பதெல்லாம் அஜீத்திய ஆசம்.

19 வருடங்கள் .....நீதிமன்றங்களில் ஒரு சட்டத்தரணியாக பெரும் அனுபவக் குவியல். எனவேதான்

நோகாமல் நொங்கு சாப்பிடலாம் என்று ஆசைப்படுகின்ற அப்ரண்டிசுகளும், சட்டப் புத்தகங்களை வாசிக்காமலே கோர்ட்டை எப்படியும் ஐந்தாம் கியரில் ஓட்டலாம் என்று கனவு காணுகின்ற லேஸியஸ்டுகளும் தயவுசெய்து கருத்த கோட்டை மாட்டிக்கொண்டு நீதிமன்றங்களில் காலத்தை வீணடிக்காதீர்கள் என்று தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

இவரொரு சிறந்த எழுத்தாளராக,விமர்சகராக இருப்பதோடு பிற எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் நூல்வெளியீடுகளுக்கு கலந்து சிறப்பிக்கின்ற நல்ல தன்மையும் கொண்டவர் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

ஏ.எம். கஸ்புள்ளா

# இலக்கிய எல்லை கடத்தல்

வருடமொன்றைக் கடக்கிறது காலம்.

காலத்தின் மாயத்தில் இலக்கியமும் எல்லை கடந்து செல்கிறது.

ஈழத்தில் இலக்கியவெளியின் பிரவாகம் மேலும் உடைப்பெடுக்கிறது.

தமிழில் நூல்வரவுகள் மிதமிஞ்சிய பெருக்கெடுப்புத்தான். இலக்கியத்தின் உட்பிரிவுசார் படைப்புவெளி இந்த ஆண்டிலும் அவ்வப்போது வெளியீடுகளில் நிறைந்தது.

ஆய்வுகள், கலந்துரையாடல்கள், இலக்கிய சந்திப்புகள், புத்தகக் கண்காட்சிகள், விருதுகள், மாலைகள், பொன்னாடைகள், பட்டங்களென நிறைந்த வெளி நம்முடையது.



பிரதேச ரீதியான கலாசார விழாக்கள் நாடு பூராகவும் இல்லாத சூழலில் தமிழ்ப்பரப்பில்வடக்குக் கிழக்கில் ஓரளவு முகங்கொள்கிறது.ஏனைய பிரதேசங்களில் தமிழ் கலை இலக்கிய கலாசார நிகழ்வுகள் மேலும் தேவையுணர்ந்து நிற்கிறது.

**ஒரு புறம் தமிழ்**

புலம்பெயர் தேசத்தின் நுழைவு, இந்தியவழி பங்களிப்பு, தமிழ்சிங்கள வெளி ஒத்திசைவு என இலக்கியத்தளம் விரிவு காண்கிறது.

மறு புறம் நூல் விற்பனை அல்லது வெளியிட்டதை வழங்குதல் என்பது குன்றிய நிலையிலும் தொகையளவு கூடிவிட்டது. இன்னொரு புறம் சமூக ஊடகங்களின் பெருத்த ஆக்கிரமிப்பு இலக்கியச்செய்திகளை உடனுக்குடன் தந்துவருகிற நிலை எல்லை கடத்தலின் ஒரம்சம்.

சமூக ஊடகங்களில் இடம்பிடிக்கும் தொகையளவுப் பெருக்கம் அதன் காத்திரத்தன்மையின் குன்றலென்ற முரண் அளவு நிலையைத் தோற்றுவித்திருப்பது பாதகநிலை தான். இளஞ்சந்ததிக்குக் காட்டப்படும் காட்சிகள் கவர்ச்சியை மட்டும் கொண்டதாகி விட்டது. கவிதைகளுக்கான நடத்தப்படும் முகநூல் போட்டிகளும், தெரிவும், பட்டமளிப்பும் விமர்சனத்துக்குரியதாகி நிற்கிறது.

வாசிப்பருகிய அல்லது மின்வாசிப்பென சுருங்கிய சூழல் தோன்றியுள்ளது.

இந்தப் பின்புலத்தில் இவ்வாண்டு காத்திரமான இலக்கியப் பண்புகளைக் கொண்டிருந்ததென்பதும் மறுதலிக்க முடியாது.

இலக்கிய வடிவம் அல்லது வகை தனது பாரம்பரிய உருவ, உள்ளடக்கத்தில் இருந்து மேலும் வளர்தல் அல்லது அதன் எல்லை கடந்து செல்லுதல் என்பதும் நவீனம்பின் நவீனம் மாய யதார்த்தப் புனைவியம் அதனையும் கடந்த புத்தாக்க வெளியென இலக்கியத்தின் எல்லா வடிவங்களிலும் எல்லை கடத்தலை வருங்காலமும் அவாவி நிற்க வேண்டும். இலக்கிய எல்லை கடத்தல் புதிய பாதைகளைக் கண்டடைவதற்கான இலக்கிய மீயுயர் தன்மையை நமது சூழலில் உருவாக்க வேண்டும்.

## பொழுது கரைதலும் நிறக்கனாவும் வீரியம் ஊறியனும்



கரைந்த பொழுதின் நிறக்கனாவக்குள் கிடந்து
துடித்ததொரு தாகம்
ஆயிரம் மஇடறஉகளஆலஉம் நிரப்பிய முடியாக் தவிப்ப
நெஞ்சத்தில் ஆயிரத்தோறாவது கதவையம்
அகலத்தஇறந்த காத்திருப்ப
காலத்தின் குரலை மென்றபடி அலைந்தேன்
இருளின் சுவடுகளில் தொலைந்தேன்
வெறுமையம் ல் கனவ நெடிது
நிறம் உதிர்ந்து சிதறிய நிழவில்
என்
முகம் கண்டேன்
23.59
கரையம்
பிரிட்டிஷ் பூச்சியக்கடிகாரம் என் முகத்தில் மொழிந்தது
கனவும் கண்டேன்
நிறங்களாலெழும் புதுத் தாகத்தில் துடித்தது
கனா மற்றும் காலம்
தூர விரியம் அருங்கனின் ஒரு சுடர்

**முல்லை முஸ்ரிபா**

நன்றி:மௌனத்தின் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாவு எனும் எனது புதிய கவிதைத் தொகுப்பிலிருந்து

## பிரமிள் பிரமாண்டம்

தமிழின் இலக்கியப்பரப்பில் உரத்துப் பேசவேண்டிய பெயர் பிரமிள்.

பிரமிள் படைப்புக்களைத் தொகுதிகளாகத் தருகிறது லயம்.

கால சுப்ரமணியம் பதிப்பிடும் பிரமிள் படைப்புலகம் பிரமிளின் கவிதைகள், கதைகளும் நாடகங்களும், விமர்சனக் கட்டுரைகள் (1960 – 1980), விமர்சனக் கட்டுரைகள்(1980 – 2000), பேட்டிகளும் உரையாடல்களும், ஆன்மீகம், அறிவியல், மொழிபெயர்ப்பு என ஆறு தொகுதிகள் கண்டுள்ளன.

தர்மு சிவராமு என்கிற பிரமிள் பிரமிக்கத்தக்க தமிழ் வெளிப்படைப்பாளர்.

அவரது எழுத்துக்களின் கூர்மையும், ஆழமும் தமிழுக்கு முன்னோடியாய் அவரை நிறுத்தியது.

காலசுப்ரமணியத்தின் தொகுப்பு வழி பிரமிளெனும் பிரமாண்டத்தை வாசிக்கலாம்.

தொகுதி ஆறு

'பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு இலக்கிய மேதைமை கொண்டு விளங்கியவர் பிரமிள்(19391997) நவீன தமிழின் முதல்தரக் கவியாகவும் முதன்மையான விமர்சகராகவும் போற்றப்பட்டவர். சிறுகதையாசிரியர், ஓவியர், சிற்ப வல்லுநர், நாடக ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர்; எல்லாவற்றையும் விட சிறந்த ஆன்மீகவாதி யென தொகுப்புரையில் கால சுப்ரமணியம் கூறுகிறார்.




இப்பெரும்பனுவல் பிரமிளின் ஆன்மீகம் மற்றும் அறிவியல், மொழிபெயர்ப்பு சார் பங்களிப்புகளைப் பதிவு செய்துள்ளது.

## அறம்: இந்துவின் முத்தமிழ் விழா

தமிழுக்கு மகுடம் சூடும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் ஏற்பாட்டில் டிஸம்பர் 21இல் சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்வுற்றது முத்தமிழ் விழா.

மாணவர்களின் ஆற்றல் வெளிப்படு மையமாக இயலும் இசையும் நாடகமும் என அரங்கு ஒளி பெற்றது.

'அறம்' தொனித்த முத்தமிழரங்கில் இசையும், பாடலும், நடனமும், பல்லியமும்,

நாடகமும், பேச்சும், பட்டிமன்றமுமென மாணாக்கரின் கலையாளுமை களங்கண்டது.

சொல்லின் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் பிரதம அதிதியாக அரங்கை சிறப்பித்தார்.

அறம் பேசும் அழகிய காணொளி காட்சிப்படுத்தப்பட்டது.

கலையும், இலக்கியமும் பாடசாலைக்காலத்தில் மாணவரிடையே வளர்த்தெடுக்கும் முயற்சி எதிர்கால கலை இலக்கியத்திற்கு காத்திரமான செயற்பாட்டாளர்களைத் தரவல்லது.




நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட பம்பலப்பிட்டி இந்துவின் முத்தமிழ் விழா தமிழின் ஊடாக இளந்தலைமுறையை வளர்த்தெடுக்கும் முயற்சியாகும்.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா



அந்தக் காலத்தில் பாடசாலை என்பது ஒரு அறை மட்டுமாகவே இருந்தது. முதல் நாள் பாடசாலைக்கு சென்ற மண்டேலாவின் மனது படபடப்பாக இருந்தது.

மண்டேலாவை ஆசிரியர் அழைத்து “நீ படிக்கப் போவது ஆங்கில பாடங்களை, கற்கப் போவது பிரிட்டிஷ் சரித்திரத்தை, பழகிக்கொள்ளப் போவது ஆங்கிலேய பழக்கவழக்கங்களை, அநாவசியமாக உனக்கேன் ஆபிரிக்கப் பெயர்? என்று கேட்டுவிட்டு இன்றிலிருந்து உனது பெயர் “நெல்சன்” என்று பெயர்மாற்றம் செய்துவிட்டார். ரோலிலாலா மண்டேலா அன்றிலிருந்து இன்றுவரை நெல்சன் மண்டேலா என்றே அழைக்கப்பட்டார். அந்தக்காலத்தில் சோஸா மக்கள் மானசீகக் கடவுளாக “கமாடா” என்னும் கடவுளையே வணங்கி வந்தார்கள். மண்டேலாவின் தந்தை காட்லாதான் அப்பகுதி மக்களின் அறிவிக்கப்படாத பூசாரியாக விளங்கினார். சோஸா மக்களுக்கு கிறிஸ்தவ மதம் அறிமுகப்படுத்தப்பட்டதும் முதன்முதலாக மண்டேலாவின் தாயார்தான் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டார். அவருக்கு ஃபேனி என்ற கிறிஸ்தவப் பெயர் சூட்டப்பட்டது. அத்துடன் மண்டேலாவும் கிறிஸ்தவத்திற்கு மாறி மெதடிஸ்ட் வெஸ்லியன் தேவாலயத்திற்கு அழைத்து செல்லப்பட்டு ஞானஸ்நானம் அளிக்கப்பெற்றது.

மண்டேலா சிறுவயதில் பெற்றோரிடம் கதை சொல்லுங்கள் என்று கூறி அதை ஆர்வமாகக் கேட்டு ரசிப்பான். காட்லா அவனுக்கு விறுவிறுப்பான போராட்ட கதைகளை கூறுவார். காட்லா சொல்லும் கதைகளின் படிப்பினை போராட வேண்டும், எதிரிகளைத் தாக்க வேண்டும், போர்க்களத்தில் பயந்து தப்பியோடக் கூடாது, நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் போன்ற தத்துவங்கள் பொதிந்ததாகவே அமைந்திருக்கும்.

(சிறுவயதிலேயே மண்டேலாவின் மனதில் நியாயத்திற்காக போராட வேண்டுமென்ற கொள்கையை காட்லா ஊட்டி ஊட்டி வளர்த்திருக்கிறார் போல). மண்டேலாவின் சிறுபராயம் முட்புதர்கள் நிறைந்த தொன்றாகவே இருந்தது. வாரம் ஒரு மனைவியின் வீட்டில் தங்கும் வழக்கமுடைய காட்லா திடீரென்று ஒருநாள் மண்டேலாவின் தாயின் வீட்டிற்கு வந்தார். ஆனால் அது மண்டேலாவின் தாயின் வீட்டிற்கு வரும் தினமல்ல. மண்டேலா அவரைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். காட்லாவின் உடலில் பல மாற்றங்களை கண்டுகொண்டான். அடிக்கடி இருமினார். நடக்க முடியாமல் தள்ளாடினார். வாய்திறந்து ஒரு வார்த்தை கூட பேச முடியாமல் வந்தவுடனேயே படுத்துவிட்டார். பின் எழும்பி “என் புகையிலையைக் கொண்டுவா” என்று காட்லா திடீரென்று உறுமினார். மண்டேலாவும் அவனது தாயாரும் செய்வதறியாது திகைத்தனர். காட்லா விடுவதாய் இல்லை. பின் புகையிலை கொண்டுவரப்பட்டு நெருப்பூட்டி அவரிடம் கொடுக்கப்பட்டது. ஆவலுடன் வாங்கி ஒருமணிநேரம் தொடர்ந்து புகைத்தார். புகைப்பதை நிறுத்தவே இல்லை. அதன்பிறகு கையிலிருந்த புகையிலை புகைக்கும் சுக்கான் கைநழுவி விழுந்தது. அந்த நொடியிலிருந்து காட்லாவின் சரித்திரம் முடிந்துவிட்டது. ஆம்! அவர் மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகத்திற்கு சென்றுவிட்டார். தந்தையை இழந்த மண்டேலா துயரத்தால் அனலில் விழுந்த புழுவாய்த் துடித்தான். செய்வதறியாது திகைத்தான். அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வி மனதிற்குள் குடைந்து கொண்டே இருந்தது.

“இனிமேலும் குனுவில் இருந்து பயனில்லை கிளம்பு மகனே” என்று அம்மா சொல்லிவிட்டதும் மண்டேலா தன் பொருட்களை மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு அம்மாவை பின்தொடர்ந்து நடந்தான். தன் கிராமத்தை தான் ஓடியாடி விளையாடிய புல்வெளியை திரும்பித் திரும்பி பார்த்தபடி கண்ணில் நீர் மல்க நடந்து சென்றான். என்ன பேசுவது என்று தெரியாமல் இருவரும் அமைதியாக நடந்து சென்றனர். மதியத்திற்குப் பின் மக்கீஸ்வனி எனும் கிராமத்தை சென்றடைந்தனர். அங்கு தெம்பு மக்களின் தலைமையகம் அரண்மனை போல் காட்சியளித்தது. அக்கட்டிடத்தின் முன் பலர் கூடி இருந்தனர். அவர்களுடன் மண்டேலாவும் தாயாரும் சென்று நின்றுகொண்டார்கள். சிறிது நேரத்தில் ஒரு மோட்டார் கார் (ஃபோர்ட் எ8) அந்த வீட்டுக்குள் நுழைந்தது. சூட் அணிந்த ஒரு மெலிந்த நபர் காரிலிருந்து இறங்கினார். அங்கு கூடியிருந்த அனைவரும் கைகூப்பி மரியாதை செய்தனர். மண்டேலாவோ யார் என்று புரியாமல் அம்மாவைப் பார்த்தான். அவனின் தலையை வருடியவாறு “மகனே இனி நீ இங்குதான் தங்க வேண்டும். காரிலிருந்து இறங்கி சென்றவர்தான் உன்னை வளர்க்கப் போகிறார். அவர் பெயர் ஜோங்கிந்தாபா” என்று கூறினார். ஜோங்கிந்தாபாதான் அப்போதைய தெம்பு இன அரசர். காட்லாவுக்கு ரொம்ப வேண்டியவர். இதற்கு முன் அரசராக இருந்த ஜோங்கிலிஸ்வி (ஜோங்கிந்தாபாவின் தந்தை) மரணமடைந்த போது அந்த அரசருக்கு பல மனைவிகளும் நிறைய மகன்களும் இருந்ததால் அடுத்த பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்று நிறைய சிக்கல்கள் இருந்தன. அந்த சந்தர்ப்பத்தில் அரசவை ஆலோசகராக இருந்த காட்லாதான் தீர்வு வழங்கினார். பல வாரிசுகள் இருந்தாலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர் ஜோங்கிந்தாபா ஒருவரே. ஆதலால் அவரையே அரசராக்குவோம் என்று தீர்ப்பு வழங்க ஜோங்கிந்தாபாவை அரசராக்கினர். அன்றிலிருந்து அரசர் ஜோங்கிந்தாபா காட்லாவுக்கு நன்றிக்கடன்பட்டவராக இருந்தார். அதனால்தான் காட்லாவின் மரணச்செய்தி கேள்விப்பட்டதும், மண்டேலாவை தானே வளர்த்து பெரிய பதவியில் அமர வைப்பதாக கூறி மண்டேலாவின் அம்மாவுக்கு அழைப்பு விடுவித்தார். மண்டேலாவின் தாய் அவனை அரசர் ஜோங்கிந்தாபாவிடம் ஒப்படைத்துவிட்டு புத்திமதிகளும் கூறிவிட்டு கட்டியணைத்து கண்ணீர்விட்டழுதார். மகனே நீ பெரியோருக்கு அடிபணிந்து நீதி தவறாத நியாயவனாக வளரவேண்டுமென்று வாழ்த்தி முத்தமழை பொழிந்துவிட்டு சென்றுவிட்டார். மண்டேலா கண்களில் கண்ணீர் சிந்த திகைத்து நின்றான். தந்தையை இழந்த சோகம், தாயைப் பிரிந்த சோகம், குனுவை நண்பர்களை பிரிந்த சோகம் அவன் பிஞ்சு மனதை ஆட்டி வைத்தது. அரசர் ஜோங்கிந்தாபா அவனை ஆரத்தழுவி அணைத்துக்கொண்டார். அரசர் ஜோங்கிந்தாபாவுக்கு இரண்டு பிள்ளைகள். மகன் ஜஸ்டிஸ், மகள் நொமாஃபு. அரசர் ஜோங்கிந்தாபா தன் இரண்டு பிள்ளைகளுடன் மண்டேலாவையும் தன் சொந்த பிள்ளையாக நினைத்து வளர்க்கத்தொடங்கினர்.

**தொடர் 03**

அவரின் இரு பிள்ளைகளும் மண்டேலாவுடன் நெருக்கமானார்கள். அரசர் ஜோங்கிந்தாபா மூன்று பிள்ளைகளையும் ஒரே மாதிரியாகவே நடத்தினார். ஒரே அன்பு, ஒரே பரிவு, ஒரே பாசம், ஒரே கண்டிப்பு, ஒரே தண்டனை என ஓரவஞ்சனை இன்றி கவனித்தார். மண்டேலாவுக்கு வசதிக்கு குறைவில்லை. தைக்கப்பட்ட புதிய ஆடைகள், சுவையான ஆகாரம், பக்கத்தில் புதிய பாடசாலை விளையாட ஆடம்பர விளையாட்டுப் பொருட்கள், படுக்க பஞ்சு மெத்தை என ஆடம்பர வாழ்கையில் மூழ்கியிருந்தான். அவனது பழைய கிராமத்து வாழ்வும் தற்போதைய அரண்மனை வாழ்வும் மலையும் மடுவுமென மாறியது. கல்வி, வாழ்க்கைமுறை, பொழுதுபோக்கு, நடையுடை பாவனை அனைத்திலும் மேலை நாட்டு சாயல் மண்டேலாவிடம் குடிகொண்டுவிட்டது.

**(பயணம் தொடரும்)**



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# ஒளி விளக்கில் ஒரு ஒளிவு மறைவு

தமிழ் சினிமாவில் ஒரு பெரும் ஆளுமையாக இருந்தவர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர். அந்த ஆளுமையில் ஒரு எளிமை, அன்பு, பாசம், அக்கறை, சமூக சேவை என அனைத்தையும் வைத்து ஒட்டுமொத்த ரசிகர்களையும் தன் கட்டுக்குள் வைத்திருந்தார் எம்ஜிஆர்.

அதுவே பிற்காலத்தில் தமிழகத்தை ஆளும் நிலைக்கு தள்ளப்பட்டார். எம்ஜிஆர் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை ஒரு போதும் தவறவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அதே நேரம் அந்தக் காலத்தில் எம்ஜிஆர் முன்னாடி நின்று பேசவே சிலர் பயப்படுவார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதுவும் போக அவர் நடிக்கிற படங்களில் அமைந்த பாடல்கள் ஆகட்டும், சீன் ஆகட்டும் எம்ஜிஆரிடம் சென்று பரிசீலனை செய்த பிறகே திரையில் படமாக வெளியாகும். ஏனெனில் மக்களிடையே கொண்டு செல்கின்ற படம் வெறும் படமாக இல்லாமல் அவர்களுக்கு நல்ல கருத்துக்களை கொண்டு செல்கின்ற கருவியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே எம்ஜிஆரின் ஈடுபாடு அவரது படங்களில் கண்டிப்பாக இருக்கும்.

இந்த நிலையில் எம்ஜிஆரின் நடிப்பில் வெளிவந்த படம்தான் ‘ஒளிவிளக்கு’ திரைப்படம். இந்தப் படத்தில் சௌகார் ஜானகி, ஜெயலலிதா போன்றோர் முக்கியமான கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். அப்போது இந்த படத்தை ஆனந்தா பிக்சர்ஸ் நிறுவனர் லட்சுமணன் தான் வாங்கியிருந்தாராம்.

படத்தின் முதல் பிரதியை போட்டு பார்த்த அந்நிறுவனர் படத்தின் க்ளைமாக்ஸ் எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். படத்தின் இயக்குனர் எஸ்.எஸ்.வாசன். அதற்கு இயக்குனர் ‘ஏன்? எது பிடிக்கவில்லை’ என்று கேட்டிருக்கிறார். அதற்கு லட்சுமணன் ‘படத்தின் கதைப்படி சௌகார் இறந்து போக அவருக்கு எம்ஜிஆர் மாலை போடுகிறார், அதுவே தவறு, மேலும் சௌகார் ஏற்கெனவே வேறொரு கணவரால் கைவிடப்பட்ட பெண், அப்படி இருக்கும் போது எம்ஜிஆர் மாலையிடுவது என்பது சரியாக இருக்காது’ என்று கூறினாராம்.

உடனே எஸ்.எஸ். வாசன் எம்ஜிஆரிடம் இதைப்பற்றி பேசி எம்ஜிஆரும் லட்சுமணன் கருத்துக்கு உடன்பட க்ளைமாக்ஸ் காட்சியில் கொஞ்சம் எடிட் செய்து தான் வெளியிட்டார்கள். இப்ப கூட அந்தப் படத்தை பார்த்தாலும் சௌகார் மரணத்திற்கு எம்ஜிஆர், ஜெயலலிதா இருவரும் மாலையை கொண்டு செல்கின்ற மாதிரி காட்டியிருப்பார்கள், அடுத்த ஷார்ட் சௌகார் கழுத்தில் மாலை இருக்கிற மாதிரி காட்டியிருப்பார்கள், ஆனால் யார் மாலையை போட்டது என்பதை காட்டியிருக்க மாட்டார்கள். அப்படி ஒரு குழப்பத்தில் ஒளிவிளக்கு படம் திரையில் வெற்றிகரமாக ஓடியது.





எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை









# மிராக்கல் கிட்ஸ் ஆரம்ப பள்ளி மாணவர்களின் பட்டமளிப்பு விழா

கொழும்பு 15. மிராக்கல் கிட்ஸ் ஆரம்ப பள்ளி மாணவர்களின் பட்டமளிப்பு விழா கொழும்பு 10 மருதானை பஞ்சிகாவத்தை அல் ஹிதாயா கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ் பிரிவின் ஆலோசகர் ஹாஷிம் உமர் கலந்து கொண்டு பிள்ளைகளுக்கு பரிசுகளை வழங்கினார். ஆரம்பப் பள்ளி பாடசாலையின் அதிபர் ரிஸ்மினா மற்றும் பெற்றோர்கள் அருகில் காணப்படுகின்றனர்.














# எஸ்.இ.பி பாடசாலையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொழும்பு 12 வாழைத்தோட்டத்தில் சிறார்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் எஸ்.இ.பி ஆங்கில சிறார் பாடசாலையின் 8வது வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை (24) கொழும்பு 7 இல் உள்ள புதிய நகர மண்டப கேட்போர் கூடத்தில் நிறுவனத்தின் பொறுப்பாளர்களான ஆசிரியைகள் திருமதி நுவைரா அக்ரம் மற்றும் திருமதி எப்.எம்.எப்.ஸாக்கிரா ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது சிறார்களின் ஆங்கில திறமைகளை வெளிப்படுத்தும் போட்டிகள் மற்றும் சிறார்களின் ஆங்கில பாடல்களுடனான நடன நிகழ்வுகளும் மேடையில் இடம்பெற்றன. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக செலக்ட் ரேடிங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி எம்.எச்.நூறுல் ஹக், முன்னாள் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.ஐ. இக்பால் உள்ளிட்ட பல பிரமுகர்களும் சிறார்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது அதிதிகளால் எழுத்து உள்ளிட்ட போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய சிறார்கள், சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.